# கிரௌஞ்சப் பறவைகள்

சரித்திர நவீனம்



வ. அ. இராசரத்தினம்

வீரகேசரி
பிர





# கிரௌஞ்சப் பறவைகள்

5
ERLALAI WEST

வ. அ. இராசரத்தினம்

வெளியீடு
வீரகேசரி
த. பெட்டி 160.
கொழும்பு.

# கிரௌஞ்சப் பறவைகள்

என்ற கதை நிகழிடங்களும்
கதையிற் குறிப்பிடப்படும் இடங்களும்

காலம் கி.மு 237



ரகேசரி பிரசுரம்: 35

# கிரௌஞ்சப் பறவைகள்

5

வ. அ. இராசரத்தினம்

வ. அ. இராசரத்தினம்
EE 15
SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# "Kiraunja paravaikal"

by
A. V. RASARATNAM

*FIRST EDITION*
OCTOBER 1975

*COPY RIGHTS*
RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI PIRASURAM 35

PRICE Rs. 3/90

Published by
VIRAKESARI
P.O.Box 160, COLOMBO.

Sole Distributors:
EXPRESS NEWSPAPERS (Cey.) LTD.
185, GRANDPASS ROAD,
COLOMBO–14.

புத்தக விற்பனைத் துறையில்

ஒரு புதுமுயற்சி!

VINAYAGAR
SARLALAI WEST
CHUNNAKAM
EE15

# கேசரி-மித்திரன்
## புத்தகக் களஞ்சியம்

வீரகேசரி பிரசுரம், ஜன-மித்திரன் வெளியீடு வரிசையில் ஏற்கனவே வெளிவந்த நாவல்கள் அனைத்தையும் வாங்கிப் படிக்க வாசகர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

ஒவ்வொரு முக்கிய நகரத்திலும்
கேசரி--மித்திரன் களஞ்சியம்
உண்டு.

கேசரி---மித்திரன் புத்தகக்
களஞ்சியங்களின் விலாசங்களை
உள்ளே காணலாம் ☞

# கேசரி -- மித்திரன்
# புத்தகக் களஞ்சியங்கள்

எமது வீரகேசரி, ஜனமித்திரன் வெளியீட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் கீழ்க்காணும் எமது கேசரி—மித்திரன் புத்தக களஞ்சிய விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்:—

கொழும்பு:

- இராஜேஸ்வரி ஹோட்டல், 69 ஒல்கொட் மாவத்தை.

புறக்கோட்டை:

- வி. வடிவேல், மலர்விழி ஸ்ரோர்ஸ், 25 செக்கு வீதி.
- லீலா ஸ்ரோர்ஸ், 249 நொறிஸ் றோட்.

கொம்பனித்தெரு:

- ரத்னு ஸ்ரோர்ஸ், 130 மலே வீதி.

பம்பலப்பிட்டி:

- கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல், 3 A சிறபரி காடின்ஸ், காலி வீதி.

வெள்ளவத்தை:

- விஜயலக்ஷ்மி புத்தகசாலை, 248 காலி வீதி.
- ரிஸ்வீஸ், 114, காலி வீதி.
- டானியல் புத்தக நிலையம் 287, காலி வீதி

முகத்துவாரம்:

- எஸ். கருப்பையாபிள்ளை, 308, முகத்துவாரம் வீதி, கொழும்பு-13

தெமட்டகொடை:

- எம். கிருஷ்ணபிள்ளை, மொறயஸ் ஸ்ரோர்ஸ், 580 தெமட்டகொட றோட்.

நீர்கொழும்பு:

- திருமதி எம். நடராஜா, ஸ்ரீ கணேசன் கபே, நீர்கொழும்பு.

களுத்துறை:

- வி. ரி. சிவசுப்பிரமணியம், ரி..எஸ்.கே.வி.பிரதர்ஸ, 606 பிரதானவீதி, களுத்துறை தெற்கு

**யாழ்ப்பாணம்:**

- வீரகேசரி கிளைக் காரியாலயம்,
  82/2 ஸ்ரேஷன் றேட்.
- ராஜன் புத்தகசாலை 12 பஸ் ஸ்ராண்ட்.
- ராஜன் புக் சென்ரர்,
  57 / ஏ, மொடல் மார்க்கட்.
- ஸ்ரீலங்கா புத்தகசாலை, 234 K. K. S. றேட்
- எஸ். பொன்னம்பலம்,
  1, கஸ்தூரியார் றேட்.
- பூபாலசிங்கம் புத்தகநிலையம், பஸ் ஸ்டாண்ட்
- புகையிரதநிலைய புத்தகசாலை.
  புகையிரத நிலையம்.

**நல்லூர்:**

- கே. கிருஷ்ணனந்தன்
  ஸ்ரீ முருகன் ஸ்ரோஸ்
  254, பருத்தித்துறை வீதி

**பண்டத்தரிப்பு:**

- கே சுந்தரம்பிள்ளை, சைவானந்தா இளம்

**சாவகச்சேரி:**

- கே. கே. ஐயாத்துரை.
  சரஸ்வதி புத்தக நிலையம்.

**கைதடி:**

- ஏ. கந்தையா,
  சிவசக்தி ஸரோர்ஸ், கைதடி சந்தி

**பளை:**

- ஆர். பத்மநாதன்,
  டியூறே சொப்' கண்டிவீதி.

**மல்லாகம்:**

- வி. குமாரசாமி, கோர்ட் றேட்.

**மாவிட்டபுரம்:**

- திருமதி எம்.செல்லையா, ராஜா ஸ்ரோர்ஸ்.

**மானிப்பாய்:**

- கே. ரீ நாயகம், நாயக பாலன் ஸ்ரோர்ஸ்.

**பருத்தித்துறை:**

- எஸ் .கண்ணன்,
  வட இலங்கை புத்தகசாலை.

**நெல்லியடி:**

- லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், கரவெட்டி.

**வல்வெட்டித்துறை:**

- கே. அருட்சோதி,
  கலைச்சோலை புத்தக நிலையம்.

**சுன்னுகம்:**

- தனலக்ஷ்மீ புத்தக நிலையம், பிரதான வீதி.

கிழ்மாகாணம்:

திருகோணமலை:

- வி.ஏ. சிதம்பரம்பிள்ளை சன்ஸ்
  43, பிரதான வீதி

மட்டக்களப்பு:

- சக்தி நூல் நிலையம், 53 திருகோணமலை வீதி.

கல்முனை:

- மணமகள் புத்தகசாலை, 29 பிரதான வீதி

ஏறுவூர்:

- சிவநடராஜா ஸ்டோர்ஸ், 105 பிரதான வீதி.

அக்கரைப்பற்று:

- கே. கந்தசாமி
  பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், பாகாமம் றோட்.

களுவாஞ்சிக்குடி:

- வி. கந்தசாமி,
  ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

காத்தான்குடி:

- ஏ. கே. மொகமட்,
  டிவிஷன் இல: 6, 105. பிரதான வீதி

வாழைச்சேனை:

- கே. முத்துராஜா,
  நேசம் ஜுவல்லரீஸ், 540 பிரதான வீதி.

வவுனியா மாவட்டம்:

கிளிநொச்சி:

- குமரன் ஸ்ரோர்ஸ்,
  135, புகையிரத நிலைய வீதி

முல்லைத்தீவு:

- பி. குகதாசன்
  ரேணுகா ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

வவுனியா:

- ஏ. செல்வரத்தினம்,
  கவிதா ஸ்ரோர்ஸ் 5, B. பஸ் ஸ்ராண்ட்.

மன்னார்:

- ஏ. கதிரவேலு. கலாவதி கபே

மலையகம்:

இரத்தினபுரி:

- கே. வேலுப்பிள்ளை, 223 பிரதான வீதி.

பண்டாரவளை:

- ஆர். கே. செல்வத்துரை.
  பராசக்தி அம்மன் ஸ்ரோர்ஸ், 71 பிரதானவீதி.

பதுளை:

- மீனம்பிகா நியூஸ் ஏஜன்ட், 235 லோவர் வீதி.

நுவரெலியா:

- ஸ்ரீ ஜோதி விலாஸ், 12 மொடல் மார்க்கெட்.

ஹட்டன்:

● இம்பீறியல் பிரஸ், 96 பிரதான வீதி.

தலவாக்கெல்லை:

● பி. தங்கசாமி நாடார்,
22, பிரதானவீதி

நாவலப்பிட்டி:

● எஸ். பொன்னம்பலம்,
ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ், 1,கம்பளை ரோட்.

கம்பளை:

● ஏ. சுந்தரராஜா, 20 நுவரெலியா ரோட்.

மாத்தளை:

● எஸ். எஸ். அன்னலிங்கம்,
ஸ்ரீகாந்தா ஸ்ரோர்ஸ்,73 திருகோணமலைவீதி.

கண்டி:

● கலைவாணி புத்தக நிலையம்,
130 திருகோணமலை வீதி.
● வீரகேசரி கிளைக் காரியாலயம்,
இன்சூரன்ஸ் பில்டிங், 23/1, தலதா வீதி
● பொப்பியூலர் ஸ்ரோர்ஸ்,
முதலாம் மாடி, மத்திய சந்தை.
● யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ்,
51, யாட்டிநுவர வீதி.

ஆள்கரனோயா:

● எஸ். ரெங்கசாமி ரெட்டியார்,
ஸ்ரீ கிருஷ்ணு ஸ்ரோர்ஸ், 110, ருகலை பஸார்.

---


# ‘குமாரபுரம்’ (சமூக நாவல்)

## உழைப்பால் உயர்ந்த ஒரு பெண்ணின் வீரக் காவியம்!

‘‘உற்றவர் செய்த சதியால் காதலனைத் துறந்தாள்; இயற்கை செய்த கொடுமையால் கைப்பிடித்த கணவனை இழந்தாள்; இருக்க இடமின்றி, உண்ண உணவின்றித் தன் உடன்பிறப்புக்களுடன் உழைப்பையே தஞ்சமடைந்தாள்! அவளின் வளை குலுங்கும் கரங்கள் ஏர் பிடித்தன. அவள் சிந்திய வியர்வைத் துளிகளால் அந்த வரண்ட பூமியில் பொன் விளைந்தது! ஆனால், அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லையே அவளுக்கு.

குடும்பம் வாழ, சுற்றம் வாழ, ஊர் வாழ உழைத்த அந்தத் தியாகி என்னவானாள்?

**படிக்கத் தவறாதீர்கள்!** **விலை; 3/40**

## ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய

## அற்புத நாவல்

# 'காலங்கள் சாவதில்லை'

(சமூக நாவல்)

பிரபல நாவலாசிரியர் தெளிவத்தை ஜோசப் எழுதிய உள்ளத்தைத் தொடும் மலையக வாழ்க்கைச் சித்திரம்!

*உள்ளத்தை ஒப்படைத்தவனிடம் தன் பெண்மையையும் ஒப்படைக்கக் காத்திருந்தாள் ஒரு கட்டிளம் கன்னி. விதி சதிசெய்தது. மணம் வீசும் அந்த நறுமலரைக் கசக்கி முகர்ந்தார்கள் காமுகக் குண்டர்கள். பெண்மை இழந்த அந்தக் கன்னியை ஏற்றுக்கொண்டானா அந்தக் காதலன்?*

உயிர்த் துடிப்பான பாத்திரங்கள்! உணர்ச்சி வசமான நெஞ்சை அள்ளும் சோகக் கட்டங்கள்! வீறுகொண்டெழச் செய்யும் வீரமான கட்டங்கள்!- எல்லாவற்றுக்கும்மேல், மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய பரிதாப நிலையை அப்பட்டமாக எடுத்துக்காட்டி, சிந்தனையைத் தூண்டும் ஓர் அற்புத அனுபவத்தை, இனிய தமிழ்நடையில் எடுத்துக் கூறியுள்ளார் இதன் ஆசிரியர். படிக்கத் தவறாதீர்கள்!

245 பக்கங்கள். மலிவு விலை 3.90

# முன்னுரை

தேவனம்பிய தீசன் காலத்திலிருந்து சூரத்தீச மன்னன் வரையுள்ள சுமார் மூன்று தலைமுறைக் காலத்தில் நம்நாட்டிலே ஏராளமான விஹாரங்களும், தாதுகோபங்களும் கட்டப்பட்டன. ஆனல் அக்காலப் பகுதியில் குளங்கள் ஏதும் கட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இக்கால கட்டத்தின் இறுதியில் சேனன், குட்டகன் என்ற இரு குதிரை வியாபாரிகள் இலங்கை அரசைக் கைப்பற்றினர்கள்.

இச்சரித்திர நிகழ்வுகளினிடையேயுள்ள வெளியை என் கற்பனையால் நிரவி இந்நாவலைப் புனைந்துள்ளேன். என் கற்பனை நிரவலுக்கு பேராசிரியர் ராகுல் சங்கிருத்தியான் எழுதிய 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற நூலும், நேருஜி எழுதிய **Glimpsess of World History**யும், திரு. செ. குணசிங்கம் அவர்கள் எழுதிய 'கோணேஸ்வரம்' என்ற நூலும் பெருமளவிற்குத் துணைபுரிந்தன.

மகாவம்சத்தைச் சரித்திர நூல் எனக்கொள்பவர்கள் இதைச் சரித்திர நாவல் எனக் கொள்ளலாம். அல்லாதவர்களுக்கு 'ஆன்ற தமிழ்ப் புலவீர் கற்பனையே ஆனாலும்...' என்று பாரதி பாடி வைத்திருக்கிறன்.

என் சிருஷ்டியை, எனக்குப் பால்யவகுப்புகளில் ஆங்கிலமும், மேல் வகுப்புகளில் சரித்திரமும் கற்பித்தவரும், மூதூர் புனித அந்தோனியார் வித்தியாலயத்தின் முன்னைநாள் ஆசிரியருமான திரு. வே. கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கு அன்புக் காணிக்கையாகச் செலுத்துவதில் நான் பூரிப்படைகிறேன்.

இந்நாவலை அழகாக வெளிக்கொணரும் 'வீரகேசரி' ஸ்தாபனத்தாருக்கு என் நன்றி.

வணக்கம்!

திரிகூடம் — வ. அ. இராசரத்தினம்
மூதூர்.

# பதிப்புரை

வீரகேசரி பிரசுர வரிசையில் மூன்ருவது வரலாற்று நாவலாக ''கிரௌஞ்சப் பறவைகள்'' வெளிவருகின்றது.

அடுத்தடுத்து சமூக நாவல்களை வாசித்த எமது வாசகர்களுக்கு இது ஓர் மாறுபட்ட, புதிய அனுபவத்தை ஏற்படுத்துமென நம்புகின்ருேம்.

ஈழத்து இலக்கிய கர்த்தாக்களிடையே பல ஆண்டுகள் பிரபல்யமான ஓர் எழுத்தாளரின் புதியதோர் படைப்பை, எண்ணற்ற வாசகர்களின் ரசனைக்கு தருவதில் மகிழ்ச்சியடைகிருேம்.

சரித்திர நாவல்களை எழுதிப் புகழ்பெறுவது கடினம். தான் கைக்கொண்ட முயற்சியில், திரு. வ. அ. இராசரத்தினம் வெற்றியடைந்துள்ளார் என எண்ணுகின்ருேம். இதை ஈழத்து வாசகர்களின் மதிப்பீட்டுக்கு விட்டுவிடுகின்ருேம்.

—பதிப்பாளர்.


அடுத்த வீரகேசரி பிரசுரம்:

ஆசிரியர் இந்துமகேஷ் அளிக்கும்

"நன்றிக் கடன்"

(சமூக நாவல்)

வீரகேசரி பிரசுரம்: 36

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு ERLALAI WEST
சுன்னாகம் CHUNNAKAM

# கிரௌஞ்சப் பறவைகள்



## 1 வசந்தத்தில் ஓர் நாள்!

வசந்த காலத்தின் ஆரம்பம். காட்டு மரங்கள் புதுத் தளிரையும், கண்ணைப் பறிக்கும் வண்ணப் பூக்களையும் சுமந்துகொண்டு தென்றற் காற்றில் மெதுவாக அசைந்துகொண்டிருந்தன. தென்றலின் அசைவு கடம்பப் பூக்களின் நறுமணத்தைச் சுமந்துகொண்டு எங்கும் சுகந்தத்தை நிறைத்தது. கடம்ப நதியின் மேற்பரப்பிற் படிந்து, சீதளச் சூழ்களைச் சுமந்து வந்து மேனியைத் தீண்டும் இளந் தென்றல் தாயின் வாத்ஸல்யமான ஸ்பரிசத்தை நினைவூட்டிற்று.

கடம்ப நதிக்கரையின் ஓரத்தே நெடிதுயர்ந்து சடைத்திருந்த மருதமரத்தின்மீது சார்ந்து நின்றுகொண்டு அருகேயிருந்த கறையான் புற்றை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தான் பந்துல. அறிவின் விசாலத்தைப் பிரதிபலிக்கும் அவன் பரந்த நெற்றி, சிந்தனைகளின் தாக்கத்திற்குச் சுருக்கங் கண்டு கீறல்களைச் சுமந்துகொண்டிருந்தது. ஆயினும் நெற்றிச் சுருக்கங்களின் கீழே இடுங்கிக் கிடந்த அவன் தீட்சண்யமான கண்கள், கறையான் புற்றையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தன.

'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ' என்பது பழமொழியல்லவா? காலை நேரத்திற் கடம்ப நதிக்கரையின் நிர்மானுஷ்யத்தில் புத்திக் கூர்மையும், கட்டழகும் கொண்ட அவ்விளைஞன் ஏன் அந்தப் புற்றையே வெறித்து நோக்குகிறான்? பால்யப் பருவத்திலே வடக்கே தட்சசீலம் வரை சென்று தன் அறிவை வளர்த்துக்கொண்டவன் பந்துல. அறிவுக் கலைகளை மட்டுமல்ல; அழகியற் கலைகளிலும் ஈடுபட்டு அழகானவற்றையெல்லாம் ரசிக்கவும் பயின்றவன் அவன். தட்சசீலத்தின் ஞானிகளிடமிருந்து பெற்ற பயிற்சியினால் அவற்றைப் பசித்திருக்கவும், விழித்திருக்கவும் சிந்தித்திருக்கவும் முடியும். ஆனால், அவன் அந்தக் கறையான்புற்றையே வெறித்து நோக்கவேண்டிய தேவைதான் என்ன? சின்னஞ்சிறிய உயிர்கள் வருடக்கணக்காக உழைத்து எழுப்பிய புற்றிலே அவன் என்னத்தைக் கண்டானோ? மருதமரத்தில் சார்ந்து நின்றபடி பந்துல அந்தப் புற்றையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

அவன் முதுகுப்புறமாக ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள். அவ் வாலைக் குமரியின் கச்சையணிந்த மார்பின் பாரத்தைத் தாங்கமாட்டாத மெல்லிடையில், வரிந்து கட்டியிருந்த செம்பட்டின் தழுவலிற் பிதுங்கிய பிரிச்சதையின் பொன்னிறத்திற் காலைச் சூரியனின் இளங் கதிர்கள் சோபையிழந்து நின்றன. வசந்தகாலத்து மாந்தளிர் போன்ற தன் பாதங்களை மெல்லெனத் தூக்கி வைத்து அவள் நடந்துகொண்டிருப்பது, கடம்ப நதிக்கரையின் அழகைக் கண்டு ரசிக்க தேவ ரம்பையே பூவுலகில் இறங்கி வந்ததைப் போன்றிருந்தது.

நிறைந்த மன மகிழ்வோடு ஒய்யாரமாக நடந்து வந்த அப் பெண், தன்னை மறந்து, தன் சூழலை மறந்து கறையான் புற்றையே வெறித்து நோக்கிக் கொண்டிருக்கும் பந்துலனைக் கண்டதும் அதிர்ச்சியடைந்தவளாய் ஒரு கணம் திகைத்து நின்றாள்.

ஆஹா! வீட்டிலிருந்து அவள் புறப்படுகையில் எத்தனை ஆசைகள்? எத்தனை மகிழ்ச்சி? 'கடம்ப நதிக் கரைக்குத்

தனக்கு முன்னமேயே பந்துலன் வந்துவிடுவான். தான் இன்னும் வரவில்லையே என்ற ஏக்கத்தோடு, தான் வரும் வழியையே பார்த்தவனாக, அவ் வழியில் விழி வைத்துத் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பான். தூரத்தே தன் வருகையைக் கண்டதும் ஓடோடி வந்து அப்படியே தன்னைக் கட்டித் தழுவிக்கொள்வான்' என்றெல்லாம் கற்பனை பண்ணிக்கொண்டு வந்திருந்தாள் பிரபா.

ஆனால், பந்துலன்?

அவன் தன்னை எதிர்பார்த்துக் கொண்டா இருக்கிறான்?

பிரபாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. அந்த ஏமாற்றத்தில் 'ஓ'வென்று அழவேண்டும்போலத் தோன்றிற்று அவளுக்கு. ஆனாலும் சுதாரித்துக்கொண்டு சற்றுத் தொலைவிலேயே நின்றாள். விசுவாமித்திரரின் தவத்தைக் கெடுக்க மேனகை வந்துநின்ற நிலையா அது?

பொற் சிலையாகச் சில கணங்கள் நின்ற பிரபா, உயிர் பெற்ற சிலையாகக் குனிந்து காலடியிலே கிடந்த சிறு கல் ஒன்றை எடுத்து பந்துலன் நின்ற திக்கில் எறிந்தாள்.

எறியப்பட்ட கல் பந்துலனின் காலடியிலே விழுந்தும் அவன் 'நிஷ்டை' கலையவில்லை.

பிரபாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. வசந்தகால மாந்தளிர் வண்ணத்திலிருந்த அவள் வதனத்தில் முற்றிய இலையாகக் கருமை படர்ந்தது. அவள் அலுத்துக்கொண்டாள்.

'இளமைக் காலத்திற் குறும்பும் சிரிப்பும் கும்மாளமுமாக இருந்த இந்தப் பந்துலன் எவ்வளவு மாறிப்போய் விட்டான்? அதுவும் தட்சசீலம் சென்று வந்தபின்னால் அவன் போக்கே முற்றாக மாறிப்போய்விட்டது. கல்லுக்குக் கல் கலீர் கலீரெனக் குதித்துச் செல்லும்அருவிபோலச் சுறுசுறுப்பாக இருந்த பந்துலனின் போக்குத் தற்போது சமதரையில் பாயும் நதிபோல மந்தமாகிவிட்டதே; அது ஏன்?

சிந்தித்த பிரபாவுக்கு எதிர்காலம் பயங்கரமானதாகத் தோன்றிற்று.

ஈழ மணித் திருநாட்டில் புத்த சமயம் பரவிக்கொண்டிருந்த காலம் அது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னே, மிகுந்தலைக் குன்றுகளில் வேட்டையாட வந்த தேவனும் பிரியதீச மன்னனைச் சந்தித்த மஹிந்த தேரர், ஜீவ ஹிம்சை செய்யும் வேட்டைத் தொழிலை விடும்படி உபதேசித்ததையும், அவருடைய உபதேசத்தில் தேவனும்பிரியதீசர் புத்த பகவானின் சாந்தி மார்க்கத்தைத் தழுவியதையும், இந்த நாடு மும்மணிகளின் அருட் கடாட்சத்தைப் பெற்றதையும், பிரபாவினுடைய பாட்டனர் அவளுக்குக் கதை கதையாகச் சொல்லியிருக்கிறுர்.

அதுமட்டுமல்ல; அழகனுக, அதிலும் அரசகுமாரனுகப் பிறந்த சித்தார்த்தன், ஞானத்தைத் தேடி அடைவதற்காகத் தன் எழில் மனைவி யசோதரையையும், குழந்தை ராகுலனையும் துறந்து காட்டுக்குச் சென்று பரிநிர்வாணம் எய்திய கதையையும் அவள் அறிந்தே இருந்தாள்.

அந்தக் கதை பிரபாவின் ஞாபகத்திற்கு வந்தபோது அவள் அடிவயிறு பகீரென்றது. இளம் தென்றலில் விகஸித்து நெளியும் பசுந் தழைகளும், வண்ணப் பூக்களும் தம் சோபையிழக்க, வீசும் இளம்தென்றல் ஸ்தம்பித்து நிற்க, காலைச் சூரியனின் பொற் கிரணங்கள் எங்கோ மறைந்து உலகமே சூன்யமாகிவிட்டதுபோல அவளுக்குத் தோன்றிற்று.

பகவான் புத்தரின் தத்துவங்களையும் போதனைகளையும் ஓதியுணர்ந்த பந்துலன், அவரைப் போலவே தன்னை விட்டு விட்டுச் சீவர ஆடையைத் தஞ்சமடைந்து விடுவானே என்ற எண்ணம் அவள் மனதில் எழுந்தபோது, எதிர்காலம் அந்தகாரமான இருளைப் பாய்ச்சிற்று. அந்தக் கோரமான நினைவுகள் மனதை அலைக்கழிக்கவே, பிரபா பந்துலனை நோக்கி அடி வைத்தாள். அவனை அண்மியதும், ''பந்துல'' என்று குரல் கொடுத்தாள்.

தன் சிந்தனைகளிலிருந்து விடுபட்ட பந்துலன், "பிர பாவா? இப்போதுதான் வருகிருயா? ஓ! மன வேதனைப் பட்டிருக்கிருய்போல இருக்கிறதே. ஏன்? அனிச்சம் பூவி லும் மெல்லிய உன் பாதங்களை கற்களும் முட்களும் உறுத் தினவா?"

"பாதங்களை உறுத்தியமைக்காக யாரும் அழமாட் டார்களே!" என்று பட்டெனப் பதிலளித்தாள் பிரபா.

"மனதை உறுத்துபவைகளாற் சிந்தனைத் தெளிவு ஏற்படவேண்டுமே தவிர, அழுகை ஏற்படக் கூடாதே" என்ருன் பந்துல விட்டுக்கொடுக்காமல்.

"அத் தெளிவு தெளிந்தவருக்கு ஞானத்தையும், அவ ரது சீடர்களுக்கு ஒரு நல்ல மார்க்கத்தினையும் காட்டி யிருக்கலாம். ஆனுல், அவருடன் இரண்டறக் கலந்தவ ளுக்கு அழுகையைத்தானே கொடுத்தது?"

"பிரபா, நீ ஏதோ பூடகமாகப் பேசி, உனக்குள் ளாகவே குழம்புகிருய்."

"அப்படியெல்லாம் பேசுவதற்கும், குழம்புவதற்கும் நான் தங்களைப் போன்று தட்சசீலம்வரைச் சென்று ஞானத் தைப் பெறவில்லை."

"பிரபா, பூடகமாகவும், பொடி வைத்தும் பேசுவதற் குப் பெண்கள் எங்குமே சென்று கற்றுக்கொள்ளத் தேவையில்லை என்பதற்கு உன்னைவிட அருமையான உதா ரணம் கிடையாது. உண்மையாகவே நான் உனக்காகப் பெருமைப்படுகிறேன்" என்று பந்துலன் உணர்ச்சிவசப் பட்டுச் சொல்லிக்கொண்டே அவள் கைகளைப் பற்றினுன்.

"விடுங்கள் கையை" என்று நாணிக்கொண்டே சிணுங்கிய பிரபா, "அதனுற்ருன் இத்தனை நேரமும் இந்தக் கறையான் புற்றையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தீர்களாக்கும்" என்று மேலும் குழைந்தாள்.

பந்துலன் சொன்னுன்: "இந்த வட்ட வடிவமான புற்று என் பிரபாவின் பணைத்த முலைகளை ஒத்திருந்தது. அப் புற்றின் உச்சியிற் குவிக்கப்பட்டிருக்கும் புத்தம் புதிய ஈர மண் பணைத்த முலையின் உச்சிக் கருமையை நிகர்த்திருந்

தது. அதனாற்றான் அப் புற்றையே நான் வெறித்து நோக்கிக்கொண்டிருந்தேன் என்றால் நீ நாணம் மட்டுமல்ல கோபமும் அடைவாய்.''

''போதுமே! உங்களுக்கு தட்சசீலத்தில் காமக் கலையுந்தான் கற்றுத் தந்திருக்கிறார்கள். நீங்கள் சொல்லும் உவமானம் உங்களுக்கே அருவருப்பாயில்லையா?''

''பார்த்தாயா? பார்த்தாயா. நான் எண்ணியது போலவே நீ கோபிக்கிறாய். பிரபா! வேறோர் உவமானமே சொல்கிறேன். இந்த வட்ட வடிவமான புற்று நமது அனுரதபுர நகரின் மூலை முடுக்குகளிலெல்லாம் தோன்றிக் கொண்டிருக்கும் பௌத்த விகாரத்தைப்போல இருக்கின்றது. அதனாற்றான் அதனைப் பக்தியோடு பார்த்துக்கொண்டிருந்தேன்.''

பிரபாவின் மீன் விழிகள் மீண்டும் கலங்கின. ஆனால், அக் கலக்கத்தினை உணர்ந்துகொள்ளாத பந்துலன் மீண்டும் பேசினான்:

''சிற்றுயிரான வெள்ளெறும்புகள், தாம் சந்துஷ்டியாக வாழ்வதற்கெனக் குறுணி குறுணியாக மண்ணைக் குழைத்து, கூட்டாகச் சேர்ந்து சுதந்திரமாகவும் பிறர் கட்டுப்பாடுகளின்றியும் தமது புற்றாகிய மாளிகையைச் சிருஷ்டித்தன. ஆனால், இந்த நாட்டுச் சாதாரண பிரசைகள் அரசர்களின் கட்டுப்பாட்டுக்கு அமைந்து, நூற்றுக் கணக்கான விகாரங்களை அரசனின் இஷ்ட பூர்த்திக்காகக் கட்டியிருக்கிறார்கள், இன்னமும் கட்டுகிறார்கள். பிரபா, நான் உண்மையாகவே சொல்கிறேன். இந்தப் புற்றைப் பார்த்ததும் என் சிந்தனையில் இப்படியான ஓர் எண்ணமே மேலோங்கி நின்றது.''

பந்துலனின் ஆவேசமான பேச்சில் அவன் நெற்றி நரம்புகள் புடைத்து நின்றன. முகத்தில் செம்மை படர்ந்து வெயர்வை அரும்பிற்று.

அவனது போக்கும் பேச்சும் பிரபாவுக்குப் பிடிக்கவேயில்லை. அவளுக்கு எல்லாமே ஏமாற்றமாக இருந்தது. 'தன்னைவிட, தன் நினைவைவிட மேலானதாக ஏதோ

ஒன்று பந்துலனின் மனதிற் சமீப காலமாகக் குடிகொண்டு அவனிடம் தன்னையே மறக்கச் செய்திருக்கின்றது' என்பதை எண்ணும்போது பிரபாவின் உள்ளம் கூம்பிச் சாம்பியது.

அவளது மன ஓட்டங்களை அறிந்துகொண்ட பந்துலன் பின்வருமாறு கூறினன்:


''பிரபா! என்னென்னவோ எல்லாம் பேசிவிட்டேன். ஆனலும் இப்படியெல்லாம் பேசாமலும் இருக்க முடியவில்லை. நீ வீட்டிற்குள் அடங்கிக் கிடக்கும் பெண். அதனல் உனக்கு நாட்டு நடப்புகள் விளங்கவில்லை.''

''உங்களைத் தவிர எதையுமே விளங்கிக்கொள்ள நான் ஆசைப்படவுமில்லை'' என்றவாறு அவன் மார்பில் சாய்ந்தாள் பிரபா.

அவளது தலையை வருடியவாறே பந்துலன் கேட்டான்: ''வீட்டிலே உன்னைத் தேடமாட்டார்களா? உன் தந்தையாருக்கு என்னைப் பிடிக்கவில்லையாமே?''

''ஆனல் எனக்குப் பிடித்திருக்கிறதே'' என்று சொல்லிச் சிரித்தாள் பிரபா. தூரத்தே மாந்தளிரைக் கோதிய கருங் குயில்கள் நீளக்குரல் எடுத்துக் கூவிக்கொண்டிருந்தன.

★



## 2 இருநண்பர்கள்!

பந்துலன் கடம்ப நதிக்கரையோரமாக நடந்து கிழக்கே திரும்பித் தீசவாவியின் பக்கமாக நடந்துகொண்டிருந்தான். அனுரதபுர நகரின் தெற்கு மதிலுக்கு இப்பால் தீச வாவியின் பாய்ச்சலில் ஒரு காலத்தில் பொன் கொழித்த கழனிகள் காய்ந்து வெறிச்சோடிக் கிடந்தன. கடந்த நான்கு ஆண்டுகளாக அந்தக் கழனிகள் இப்படித் தான் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. நான்கு ஆண்டுகளுக்கு முன்னே பெய்த பெருமாரியின் நீரைத் தாங்கிக் கொள்ள முடியாத தீச வாவியின் அணை உடைப்பெடுத்தது. அந்த உடைப்பு இன்னமும் திருத்தப்படவில்லை. அதைத் திருத்துவதற்கு மக்களுக்கு நேரமே கிடைக்கவில்லை.

தீச வாவி செப்பனிடப் பட்டிருந்தால், வசந்த காலத்தின் ஆரம்பமான இந் நேரத்தில் அவ் வயல்களில் சாண் நீளமான நெற்பயிர்கள் தென்றற் காற்றில் அலையெற்றித் தரைதொட்டு நிமிரும். அந்த வெளி முழுவதுமே கண்வைத்த தொலைவுக்குப் பச்சைப் பசேலென்றிருக்கும். அந்தக் கண்கொள்ளாப் பசுமையைப் பார்த்துக்கொண்டே ஈர வரம்புகளில் நடந்து செல்வது எத்தனை குளுமையாகவும் ரம்மியமாகவும் இருக்கும்? ஆனால், இன்று காய்ந்து கலட்டியாகக் கிடக்கும் வயல் வரம்புகள் பந்துலனின் உள்ளங் கால்களை உறுத்தின. கால்கள் மட்டுமா? அவன் உள்ளமும் உறுத்தப்பட்டுக் கொண்டே இருந்தது. அந்த உறுத்தலிற் பந்துலன் நடந்துகொண்டே இருந்தான்.

அவன் தீச வாவியின் கரையை அடைந்தபோது, ''பந்துல, நெடுநேரமாக உன்னைக் காத்துக்கொண்டிருந்தேன்'' என்று சொல்லிக்கொண்டே அவனை எதிர்கொண்டு வந்தான் ஓர் இளைஞன்.

''பிரபாவுக்காகச் சிறிது தாமதிக்க வேண்டியிருந்தது. மன்னித்துக்கொள் காமினி'' என்றான் பந்துலன்.

''நானும் அப்படித்தான் நினைத்தேன். எவ்வளவுதான் இலட்சியம் பேசினாலும் அவைகளெல்லாம் ஒரு பெண்ணின் கண்ணீரின் முன்னால் பொருளற்றவைகள்தான்.''

''இலட்சியவாதிகள் பெண்களையும் சமுதாயத்தின் முக்கிய அங்கமாக—சமுதாயத்தின் பாதியாகக் கருத வேண்டுமே தவிர, அவர்களை ஒதுக்கிவிடக் கூடாது.''

''ஆனால், காதலிப்பதும் காதலியை நினைந்து உருகுவதும் நாம் எதிர்நோக்கி இருக்கும் மகத்தான காரியங்களுக்குக் குந்தகமாக அமையாதா?''

''அது காதல் கொள்பவனின் மனநிலையையும், சமுதாயத்தின்மீது அவன் கொண்டுள்ள பற்றையும் பொறுத்தது. 'தர்மம் வீட்டிலிருந்தே தொடங்க வேண்டும்' என்பதுதான் என் தத்துவம்.''

நண்பர்கள் இருவரும் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டே தீச வாவியின் அணைக்கட்டு வழியே நடந்தார்கள்.

உச்சிப் பொழுதாகியிருந்தது. காலையில் மெதுவாக அசைந்த தென்றல் தன் வலுவிழந்து, இலையாடாப் பம்மலிலும் பொருமலிலும் தன்னை அடக்கிக் கொண்டது. தன் கிரணங்களை மிக உக்கிரத்தோடு பூமிக்குச் செலுத்துவதற்காகத் தலைக்கு மேலே தன்னைச் சிறுப்பித்துக்கொண்டிருந்தான் சூரியன். அவனது கொடுங் கிரணங்களால் தீச வாவியின் அணைக்கட்டிலே நெடிதுயர்ந்து நின்ற மருத மரங்கள் தம் இலைகளைத் தரையை நோக்கித் தொங்க விட்டுக்கொண்டு சோம்பி நின்றன.

குளக் கட்டின் மேலே நடந்துவந்த பந்துலவும், காமினியும் பெரு வெள்ளத்தின் காரணமாக உடைப் பெடுத்திருந்த இடத்தை அடைந்ததும் தரித்து நின்றார்கள்.

தீச வாவியின் வடகிழக்கு மூலையிலே அந்த உடைப்பு நிகழ்ந்திருந்தது. சுமார் நூறு பாக தூரத்திற்கு கட்டு உடைந்து, அக் கட்டின் கல்லும் மண்ணும் வடக்கே அபய வாவி வரை பரந்துகிடக்கும் வயல்வெளிகளில் பரவிக் கிடந்தது.

அந்தப் பரிதாபக் கோலத்தைப் பார்த்துக்கொண்டே பந்துலன் கம்மிய குரலில் சொன்னான்: ''பார்த்தாயா காமினி, மகா மன்னர் தேவனும்பிரியதீச மன்னர் கட்டிய இந்தக் குளம்தான் நமது நாட்டிலே காலத்தால் மிகவும் பிந்திய குளம். இந்தக் குளத்தின் பின்னர், நமது நாட்டில் வேறு எந்தக் குளமுமே நிருமாணிக்கப்படவில்லை.''

''உண்மையாகவா?'' என்று அதிசயித்தான் காமினி.

''உண்மையாகத்தான். தேவனும்பிரியதீச மன்னர் இந்த நாட்டிற்குக் கடைசியாகச் செய்த நற்பணி இந்தத் தீச வாவி என்றுதான் நான் சொல்வேன். அவர் பௌத்த மதத்தைத் தழுவியதையிட்டு நான் கவலைப்படவில்லை. ஆனால், தம் மதமாற்றத்தின் பின்னால் விஹாரங்களையும், ஆராமயங்களையும் நிருமாணிப்பதில் கருத்துக்கொண்டு இருந்தாரே தவிர, தான் நிருமாணித்த இந்தத் தீச வாவியின் அணைக்கட்டை வருடாவருடம் புதுப்பிக்கத் தவறிவிட்டார். அவர் மட்டுமா? அவருக்குப் பின்னால் வந்த அவர் தம்பியர்களான உத்தியரும், மகாசிவனுருங் கூட அண்ணன் சென்ற வழியிலேயே சென்றார்கள். அதன் காரணமாக இந்தத் தீச வாவி, ஒரு பலத்த மாரியைத் தாக்குப் பிடிக்க முடியாதவாறு தன் கட்டுக்களை உடைத்துக்கொண்டது. கடந்த நான்கு ஆண்டுகளாக மக்களுக்கு எந்தப் பயனையும் அளிக்க முடியாததாய் வரண்டுகிடக்கும் இந்தக் குளத்தின் அணைக் கட்டைத் திருத்துவதுதான் நாம் தேவனும்பிரியதீச மன்னருக்குச் செய்யும் நன்றிக் கடனாக இருக்கும்.''

''அவருக்கு நன்றிக்கடன் செய்வது ஒருபுறம் இருக்கட்டும். இந்த வாவியின் அணைக்கட்டுப் புதுப்பிக்கப்பட்டு, அவ்வணை ததும்பத் தண்ணீர் நிரம்பி நின்றால்தான் நமக்கு உயிர்வாழ உணவே கிடைக்கும். அதற்காகவாவது நாம் இந்த அணையைத் திருத்தி முடிக்கத்தான் வேண்டும். ஆனால்......''

''என்ன ஆனால்...... சொல்லு காமினி.''

''ஆனால் நூறு பாக நீளத்திற்கும் மேலாக உடைந்து கிடக்கும் இவ்வணையைச் சீர்ப்படுத்த நூற்றுக்கணக்கான மக்கள் வாரக்கணக்காக வேலை செய்யவேண்டி இருக்குமே......?''

''ஆம். அதற்காக மக்களைத் திரட்டி அம் மக்களோடு மக்களாக நாமும் சேர்ந்து இந்த அணையைக் கட்டி முடித்தால்தான் நமக்கும் வாழ்வு உண்டு.''

''உண்மை. ஆனால், மக்களைத் திரட்டுவதென்பது இலகுவான காரியமாக இருக்காது. 'புண்ணிய பொக்கிஷம்' என்று மக்களால் விதந்துரைக்கப்படும் சூரத்தீச மன்னரின் ஆணையில் மக்கள் விஹாரங்களையே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மனதை மாற்றுவதென்பது சற்றுக் கஷ்டமான காரியந்தான்.''

''புண்ணிய பொக்கிஷம்! அரசர் புண்ணிய பொக்கிஷம். ஆனால், மக்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இது வேடிக்கையானதல்லவா?''

''ஆனால், பட்டினியால் வாடும் மக்களே விஹாரங்களையும், சைத்தியங்களையும் விருப்பத்தோடு கட்ட முன் வருகிறார்கள். பௌத்த தேரர்களின் உபதேசங்களும், புத்த மதமும் நாட்டு மக்களுக்கு ஓர் புதுமையான உத்வேகத்தைக் கொடுத்து அவர்களை வழி நடத்திக்கொண்டு வருகின்றது. அந்த வழியிலிருந்து மக்களைத் திருப்புவது சாத்தியமானதென்று எனக்குத் தோன்றவில்லை பந்துல.''

''நாம் அவர்களைத் திருப்பத் தேவையில்லை காமினி. பசி, இந் நாட்டு மக்களை] தம்மை நோக்கித் திருப்பும் வேலையைச் செய்துகொண்டே இருக்கின்றது. ஆனால், இந்

தப் பசியுணர்வு அபூதக் கற்பனைகளினாலும் புராணத் தன்மை வாய்ந்த புளுகுகளினாலும் திசை திருப்பப் பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தப் புளுகுப் புராணங்கள், அபூதக் கற்பனைகள் ஆகிய திரைகளைக் கிழித்தெறிந்து, மக்களுக்கு யதார்த்தமான உண்மைகளைக் காட்டாவிட்டால் இந்த நாடே உருப்படாமற் போய்விடும் காமினி.''

''அதை நான் உணர்கிறேன் பந்துல. நான் மட்டுமென்ன, இந்த நாட்டில் சிந்திக்கத் தெரிந்த இளைர்கள் எல்லாருமே அதை உணர்கிறார்கள். இந்த் யதார்த்தத்தை நாம் எடுத்துச் சொன்னால், நாம் எந்த மக்களுக்காக அனுதாபப் படுகிறோமோ, எந்த மக்களின் பசிப்பிணியைப் போக்கவென்று நாம் துடிக்கிறோமோ அவர்களின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ளவேண்டி இருக்கும் பந்துல.''

''எதிர்ப்பைக் கண்டு அஞ்சுபவன் மக்களுக்குச் சேவை செய்துவிட முடியாது. இன்னமும் ஒன்று. நாம் பௌத்த மதத்தின் எதிரிகளுமல்ல. என்னைப்பொறுத்தளவில் பௌத்த மதம் என் மதிப்பிற்கும், மரியாதைக்கும், வணக்கத்திற்கும் உரியது. செத்தபிறகு வரப்போகும் சொர்க்கத்தைக் கற்பனை பண்ணமல், மனிதன் இவ்வுலகத்திலேயே ஞானத்தைக் கண்டடைந்து நிர்வாண நிலையை எய்தலாம் என்ற புதிய கோட்பாட்டை உலகுக்கு அளித்தவர் மகான் புத்தர். புத்தருடைய தத்துவங்களை அவருடைய ஜனன பூமியான ஜம்பு துவீபத்தில் ஸ்தாபித்தவனான அசோக மன்னன், புத்த மதத்தை வெறும் பூஜைகளும், சடங்குகளும், பிரார்த்தனைகளும் மட்டும் கொண்டதாகக் கருதவில்லை. அசோக மன்னனைப் பொறுத்தளவில் அம் மதம் சமுதாய மேம்பாட்டுக்கான நற் செயல்களைப் புரியும் ஒரு சாதனமாகவே இருந்தது. அம் மதத்தைத் தழுவி, அதை வளர்க்க முற்பட்ட அசோக மன்னன் நாடெங்கும் வைத்தியசாலைகளையும், ஆதுலர்சாலைகளையும், தெருக்களையும், குளங்களையும், கிணறுகளையும், நந்தவனங்களையும் நிர்மாணித்தான். தட்சசீலம், நாலந்தா, உஜ்ஜயினி ஆகிய நக

ரங்களிலிருக்கும் கலாபீடங்கள் புத்த பகவானின் செய்தியை உலகெங்கும் பரப்புகின்றன. பாடலிபுரத்தில் எழுப்பப்பட்ட விஹாரங்கள் நாடெங்கும் கொல்லா விரதத்தை வளர்த்துக்கொண்டிருக்கின்றன. புத்த மதம் பரவிய பின்னர்தான் பிராமணர்களும் சத்திரியர்களும் மரக்கறி உணவை உட்கொள்ளத் தொடங்கியிருக்கிறுர்கள். ஆனல் இந்த இலங்காதுவீபத்திலே எல்லாமே தலைகீழ்ப் பாடமாக இருக்கின்றது. அஃறிணை உயிர்களுக்கு ஜீவகாருண்யம் காட்டுவது இருக்கட்டும். இந் நாட்டு மனித ஜீவன்களே கஞ்சிக்கு வழியின்றிக் கஷ்டப்படுகிறுர்கள். இந்தக் கஷ்ட நிலையை நீக்கிப் புத்த பகவான் உபதேசித்த புனித தர்மத்தை இந் நாட்டில் ஸ்தாபிக்க வேண்டும். அதற்கு நாம் வீடு வீடாகச் சென்று வது உண்மையை விளக்க வேண்டும்.''

''விளக்கத்தான் வேண்டும் பந்துல. ஆனல், நீ சற்று ஆத்திரப்படுகின்றுய். உணர்ச்சிவசப்பட்டு அவசரப்படுவதினல் நாம் பல சங்கடங்களுக்கு ஆளாக வேண்டும்.''

''அப்படியானல் அனுரதன் கட்டியெழுப்பிய இந்த அனுரதபுர நகரம் அழிந்துபோக வேண்டுமா? பந்துகாபயனும், தீச மன்னரும் கட்டிய குளங்கள், தூர்ந்துபோய் பஞ்சத்திலடிபட்டு அழியட்டும், என்கிறுயா?''

''யார் அப்படிச் சொன்னர்கள்? நாட்டு மக்களைப் பசிப்பிணியிலிருந்து காப்பாற்றத்தான் வேண்டும். அந்த நற்பணியினைச் செய்வதற்காக இளைஞர்களை ஒன்று திரட்டுவோம். அத்தோடு நமது முதியவர்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் நம் முயற்சிக்குப் பெற்றுக்கொள்வோம். பந்துல ஒன்று கேட்கிறேன். பிரபாவின் தந்தை யார் நாகதத்தர் உன்னையிட்டுக் குறைப்பட்டுக் கொள்கிறுராமே. நீ இப்போதெல்லாம் அவர் வீட்டிற்கே போவதில்லையாமே?''

''ஏன்? அவர் அப்படி உன்னிடம் சொன்னுரா?''

''அவர் ஒன்றும் என்னிடம் சொல்லவில்லை. ஆனல், வழக்கம்போல நீ அவர் வீட்டுக்குச் செல்வதால் என்ன

தவறு இருக்க முடியும் என்றுதான் நான் உன்னைக் கேட்கிறேன்.''

''ஏன், இன்று காலையிலும் பிரபாவைச் சந்தித்து விட்டுத்தான் வந்தேன்.''

''ஆனால், அவள் வீட்டிலல்ல.''

''எங்கானால் என்ன? அவள் வீட்டிற்கே போகவேண்டு மானாலும் எனக்குத் தடையில்லை.''

''அப்படியானால் இன்று மாலையே அங்கே நீ போவது நல்லதென நான் கருதுகிறேன். நான் பக்கத்துக் கிராமங்களுக்குச் சென்று நண்பர்களின் மனநிலையைத் தெரிந்து கொண்டு வருகிறேன்'' என்றான் பந்துலன்.

மதியம் திரும்பிவிட்டது. சூரியன் தீச வாவியின் குளக் கட்டிலே உயர்ந்துநின்ற மருதமரங்களின் கிளைகளுக்குட் சிக்கிக்கொண்டு தன் வலியைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருந்தான். பந்துலனும் காமினியும் தத்தம் வீடுகளை நோக்கி வெவ்வேறு பாதைகளில் நடக்கலானார்கள்.

★



## 3 தாயும் மகனும்...!

வெறிச்சோடிக் கிடக்கும் வயல் வெளிகளினூடாக வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தான் பந்துலன். காய்ந்து கருகிக் கிடக்கும் வயல் வெளிகளிலே தரையோடு ஒட்டிச் சுருண்டு கிடந்த புற் சருகுகளை மேய்ந்துகொண்டிருந்த

காராம் பசுக்களின் கண்களில் இழையோடிக் கிடந்த சோகம் அவனைப் பெருமூச்சுவிட வைத்தது. வடக்கே அபய வாவி ஓரமாகச் சென்றுகொண்டிருக்கையில் சற்றுத் தூரத்தேயிருந்த மகா விகாரையிலிருந்து வரும் ஸப்த ஸ்வரங்களின் பேதமற்ற பிரித் ஓதல் ஒலியிலும் ஓர் சோகம் இழையோடுவதையே அவன் காதுகள் கேட்டன. பக்கத்தே மகாமேக நந்தவனம் வசந்த காலத்தின் சோபையோடு பூத்துக் குலுங்கி நின்றது. சண்பகம், பாதிரி, இருவாட்சி மலர்களின் நறுமணத்தோடு தூபராம சமாதியிலிருந்தும், அதன் அயலிலே பிக்குணி சங்கமித்தையைத் தகனஞ் செய்த புனித தானத்திலிருந்தும் புகைந்துகொண்டிருந்த அகிலின் நறுமணமும் சேர்ந்து ஒரு தெய்வீக வாசனையே பரிமளித்தாலும் பந்துலனின் உணர்வுகளை அம்மணம் கவரவில்லை. தூய வெண் உடையணிந்து பூந்தட்டுக்களைக் கையில் ஏந்திய வண்ணம் மகா விஹாரையிலிருந்து தூபராம சமாதிக்கும், தூபராமவிலிருந்து மஹிந்த தேரரின் பாத கமலங்கள் அநுராதபுர நகரில் முதலிற் தோய்ந்த இடத்தில் அமைந்த பத்ம சைத்தியத்திற்கும் சாரி சாரியாகச் சென்றுகொண்டிருக்கும் பக்தர்களின் நடையிலும் ஓர் சோகம் இழைவதாகவே பந்துலனின் கண்களுக்குப் பட்டது.

பந்துலன், அநுராதபுர நகரின் கிழக்குப் புறமாக இருந்த தன் வீட்டை அண்மியபோது அஸ்தமன சூரியன் அடிவானத்தின் மேலே நான்கு முழ தூரத்தில் நின்றுகொண்டிருந்தான்.

அவன் வீட்டு முற்றத்திலே சண்பக மலர்கள் சொரிந்து கிடந்தன. மேய்ச்சலுக்காக வெளியே சென்றிருந்த பசுக்கள் தம் கன்றுகளைத் தேடி 'அம்மா' என்ற கதறலோடு வீடு திரும்பிக்கொண்டிருந்தன. அவனுடைய தாயார் சுவர்ணபாலி ஆட்டுக் குட்டி ஒன்றைத் தன் மடியிலே வைத்துக்கொண்டு அதன் முன்னங் கால்களில் ஒன்றை ஆதுரத்துடன் தடவிக்கொண்டிருந்தாள்.

முற்றத்தைத் தாண்டித் தாயிருந்த இடத்தை அடைந்த பந்துலன், ''இந்த ஆட்டுக்குட்டிக்கு என்னம்மா நடந்தது?'' என்று கேட்டான்.

வாத்ஸல்யத்தோடு தன் மைந்தனை நிமிர்ந்து பார்த்த ஸ்வர்ணபாலி, ''மகனே; மதிய போசனமும் இல்லாமல் எங்கேயடா அலைந்து வருகிறாய்? உனக்காக நானும் சாப்பிடாமற் காத்துக்கொண்டேயிருக்கிறேன். கை கால்களைக் கழுவிக்கொண்டு வா. சாப்பிடலாம்'' என்றாள்.

''சாப்பிடுவது இருக்கட்டும் அம்மா. இராஜரட்ட மக்கள் நாட்கணக்காகப் பட்டினி கிடக்கையில் நாம் ஒரு வேளைச் சாப்பாட்டைக் குறைத்துக் கொள்வதால் ஒன்றும் குடி முழுகிப் போய் விடாது. அது இருக்கட்டும். ஆட்டுக் குட்டிக்கு என்ன நடந்தது?''

''கற் குவியல்களில் ஏறித் துள்ளி விளையாடும்போது கல் ஒன்று சரிந்து வீழ்ந்து அதன் முன்னங்காலை முடமாக்கிற்று'' என்று அழாக் குறையாகச் சொன்னாள் ஸ்வர்ணபாலி.

''அம்மா உங்கள் அனுதாபத்தையும், ஆதுரத்தையும் பார்த்தால், எனக்கு முடமான இளமறியை முதுகிலே சுமந்து சென்ற புத்த பகவான்தான் ஞாபகத்திற்கு வருகிறார்'' என்று சொல்லிக்கொண்டே ஆட்டுக்குட்டியின் முறிந்துபோன முன்னங் காலைத் தடவிக் கொடுத்தான் பந்துல. ஆட்டுக்குட்டி வேதனையிற் தீனக் குரல் எடுத்து முனகிற்று.

''அம்மா. இதற்கு என்ன வைத்தியம் செய்யப் போகிறீர்கள்?''

''பச்சிலை மூலிகைகள் பறித்து வரச்சொல்லி ஆள் அனுப்பியிருக்கிறேன். ஔடதத்தைக் கட்டும்வரை இந்த ஆட்டுக்குட்டி என் அரவணைப்பிற் சுகங் கண்டு கொண்டிருக்கின்றது. அது சரி; உனக்குப் பசியே இல்லையா?'' என்று மீண்டும் கேட்டாள் ஸ்வர்ணபாலி.

''நான் இன்னமும் பச்சைக் குழந்தையா அம்மா. பசியெடுத்தால் நானே சென்று சாப்பிட்டுக் கொள்கிறேன். பசியெடுக்காவிட்டாலும் பஞ்சணையில் அமர்ந்து சாப்பிடும் அரசபோகத்தை நான் வெறுக்கிறேன்''.

''போதுமே உன் பேச்சு. சத்திரியனாகப் பிறந்த நீ எப்போதுமே அரசர்களைக் குறை கூறிக்கொண்டிருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நீ என்ன? ஏழேழு தலைமுறைகளுக்கும் சத்திரியர்களைக் கருவறுக்க வந்த பரசுராமன் அவதாரமா?'' என்று தன் மகனைக் கடிந்துகொண்டாள் ஸ்வர்ணபாலி.

இதற்குள் நடுத்தர வயதுடைய ஒருவன் பச்சிலை மூலிகைகளைத் தன் உள்ளங் கைகளில் வைத்துக் கசக்கிக் கொண்டே அங்கு வந்து சேர்ந்தான். வந்தவன் பவ்வியமாக ஒதுங்கி நின்றுகொண்டு, தான் கொண்டுவந்த மூலிகையைக் கீழே விழுந்து கிடந்த பலாச் சருகு ஒன்றில் வைத்துவிட்டுச் ஸ்வர்ணபாலியைச் சிரந்தாழ்த்திக் கரங் கூப்பிப் பணிந்து நின்றான்.

பந்துலன் வேண்டுமென்றே, ''எங்கே அம் மருந்தை எடுத்து என் கையிற் கொடு'' என்றான்.

''அது பாவம் சுவாமி. நான் சண்டாளன். தீண்டத் தகாதவன்'' என்று குழைந்தான் மருந்து கொடுக்க வந்தவன்.

பந்துலன் ஏளனமாகச் சிரித்தபடியே, ''சண்டாளன்? புத்ததர்மம் பரவியிருப்பதாகச் சொல்லப்படும் இந்த நாட்டில், இன்னமும் தீண்டாமை இருப்பது வேடிக்கைதான். பிராமண தர்மம் கூறும் தீண்டாமைக்கும், வர்ணாசிரம தர்மத்திற்கும் எதிராகப் போர்க் கொடி உயர்த்தியவர் புத்த பகவான் என்ற ஞானத்தை இந்த நாடு இன்னமும் அடையவில்லையே'' என்று சொல்லியவன், அந்தச் சண்டாளனிடம் சென்று, ''மித்திரா! எங்கே அம்மருந்தை எடுத்து என் கையிற் கொடு'' என்றுகொண்டே அவன் கைகளைப் பிடித்தான்.

''பந்துல!'' என்று ஆவேசமாகக் கூச்சலிட்டாள் ஸ்வர்ணபாலி.

நடுங்கிக்கொண்டு நின்ற மித்ரா அவள் பாதங்களில் வீழ்ந்து நெடுஞ்சாண் கிடையாகக் கிடந்து நமஸ்கரித்து,

''அம்மா என்னை மன்னியுங்கள்'' என்று நாக்குழற அரற்றினன்.

''சரி, எழுந்துபோ'' என்று வெறுப்போடு சொன்னாள் ஸ்வர்ணபாலி.

மித்ரா எழுந்து ஸ்வர்ணபாலிக்கு முகங் காட்டியபடி, கைகளைக் கூப்பிக்கொண்டே பின்வாங்கி நடந்தான்.


அவன் சென்றதும் ஸ்வர்ணபாலி தன் மகனிடம், ''உன் செய்கைகள் ஒன்றுமே நல்லாயில்லை. போய் ஸ்நானம் பண்ணிவிட்டு வா'' என்று எரிந்து விழுந்துவிட்டு, பச்சிலை மூலிகையை எடுத்து ஆட்டுக்குட்டியின் கால்களில் வைத்துக் கட்டத் தொடங்கினாள்.

தன் தாயிடம் இதற்குமேல் ஏதும் பேசுவது இச்சமயத்தில் உசிதமாக இராது என்ற மன உளைச்சலோடு, தன் இல்லத்தின் பின்புறமாக 'பொக்குண'வை நோக்கி நடந்தான் பந்துலன்.

கழனியிலும், காட்டிலும், வீட்டிலும் மாடாக உழைக்கும் கூட்டத்தினரை மனிதர்களாக மதிக்கத் தெரியாத இந்நாடு எப்படி உருப்படப் போகிறது? தர்மத்தை என் வீட்டிலேயே இப்போதே ஆரம்பிக்க வேண்டும்போலிருக்கிறதே என்று அவன் மனம் சொல்லிக்கொண்டது.

★

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு
சுன்னாகம்
ERLALAI WEST
CHUNNAKAM



# 4 லட்சியவாதி இளைஞன்

பந்துல ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பியபோது நன்றாக இருட்டிவிட்டது. ஆனாலும் விசாக மாதத்தின் அபர பக்கத்து முதுபிறை நிலவைப் பொழிந்துகொண்டிருந்தது.

வீட்டின் வாயிலில் அமைக்கப்பட்டிருந்த சந்திர வட்டக் கல்லிலே தன் கால்களைத் தட்டிக்கொண்டு கருங்கல் பரவிய கூடத்தில் ஏறியபோது அங்கே பிரபாவின் தந்தை நாகதத்தர் தன் தாயாரோடு பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான் பந்துலன்.

அவரைக் கண்டதும், ''நானே தங்கள் வீட்டுக்கு வர விருந்தேன் மாமா'' என்றான் பந்துலன்.

''உனக்கு எத்தனையோ வேலைகள் இருக்கலாம் பந்துல. அதனால் நீ என் வீட்டுக்கு வரச் சௌகரியப்படாமல் இருக்கலாம். ஆனால் தாரமிழந்த என் தங்கையைப் பார்க்க வர வேண்டியது என் கடமையல்லவா?'' என்றான் நாகதத்தன்.

ஐம்பதாட்டைக்கு மேலாகியும் இன்னமும் இளமையின் மிடுக்கோடும், கம்பீரத்தோடும் தோற்றமளிக்கும் அவர் முகத்திற் சிறிது அசூசையும் கடுகடுப்பும் காணப்பட்டது. ராஜகம்பீரத்தைப் பிரதிபலிக்கும் அவர் நெடிய மூக்கின் பொலிவிற்கும் மேலாக அவரது தடித்த உதடுகள் இரக்கமற்ற அவர் சுபாவத்தை வெளிப்படுத்திக்கொண்டிருந்தன. மலைபோன்ற மார்பிற் சந்தனப் பூச்சுப் பரிமளிக்க, மஞ்சத்திற் கம்பீரமாக அவர் வீற்றிருந்தார். ஆம் வீற்றே இருந்தார்.

"பிரபாகூடக் குறைபட்டுக் கொண்டாளாம். எதற்கும் நான் என் உணவை முடித்துக்கொண்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டே பந்துலன் கூடத்தைத் தாண்டி அப்பாற் சென்றான்.

அவன் பின்னால் ஸ்வர்ணபாலியும் எழுந்து வந்தாள். நாகதத்தன் அவளிடம் விடை பெற்றுக்கொண்டு போய் விட்டார் போலும்!

ஸ்வர்ணபாலி தன் மகனுக்கு உணவைப் பரிமாறிக் கொண்டே சொன்னாள்: "சாப்பிட்டு முடிந்ததும் நீ உன் மாமனார் வீட்டுக்குச் சென்று வா"

எதையோ யோசித்துக்கொண்டே சாப்பிட்டுக்கொண்டிருந்த பந்துலன், "சரியம்மா" என்றான் எந்த உணர்ச்சியுமற்று.

ஸ்வர்ணபாலி மனங் கவன்றவளாய்ச் சொன்னாள்: "சோமக் கிழங்கை இடித்துப் புத்தம் புதிய சோமபானம் தயாரித்து வைத்திருக்கிறேன். ஆனால் அதையெல்லாம் நீ நிராகரித்து எத்தனையோ நாட்களாகிவிட்டன. ஆனால் உன் சாப்பாட்டைக் கூடவா நீ கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்? உன் தந்தையார் சாப்பிடுவதிற் கால் பங்கைக் கூட உன்னால் சாப்பிட முடியவில்லையே. சத்திரியனாகிய நீ தபஸிபோல இலையையும் குழையையும் உண்பது எனக்கு வேதனையாகவும் வேடிக்கையாகவும் இருக்கிறது மகனே."

"என் தந்தையார் வாழ்ந்த காலம் வேறு; நான் வாழும் காலம் வேறு அம்மா. தற்காலம் இந்த நாடு புத்த பகவானின் அஹிம்சைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறது".

"ஆனால் சில புத்த சந்நியாசிகள் கூடப் புலால் உண்பதைத் தவிர்க்கவில்லையே?"

"நான் அவ்வாறான சந்நியாசி அல்ல அம்மா. சாதாரண கிரகஸ்தன். அதனால் போதிப்பதில்லை; சாதிக்கிறேன்."

"உணவைக் குறைத்துக் கொள்வதும் ஒரு சாதனையா? உயிர் வாழ்வதற்குப் பலம் வேண்டாமா?"

''பலம் என்பது சரீரத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. அது மனத்திலேதான் இருக்கிறது.''

''ஆனால் உறுதியான உடலிலேதான் உறுதியான மனமும் இருக்கும்.''

''யானைதான் நம் நாட்டிலே மிகவும் பலமுடைய மிருகம். ஆனால் அது புலால் உண்பதில்லை. உன் மகனும் யானையைப் போன்றவன் அம்மா'' என்று சொல்லிச் சிரித்தான் பந்துலன்.

ஸ்வர்ணபாலியும் சிரித்துக்கொண்டே மேலும் ஒரு கரண்டிச் சாதத்தை அவன் இலையிற் படைத்தாள்.

''இலையில் இருப்பதையே என்னால் சாப்பிட முடியாது. அதற்குள் இன்னமும் படைத்துவிட்டாயே அம்மா'' என்று கடிந்துகொண்டான் பந்துலன்.

''என் யானை எல்லாவற்றையும் ஒரு கை பார்த்துவிட்டுத்தான் மறுவேலை பார்க்கும்'' என்று சொல்லிச் சிரித்தாள் ஸ்வர்ணபாலி.

சாப்பிட்டானதும் தேனிற் தோய்ந்த பலாச்சுளைகளைத் தட்டு நிறையக் கொண்டுவந்தாள் ஸ்வர்ணபாலி.

அவற்றிலும் இரண்டொன்றைச் சாப்பிட்ட பந்துலன், கையை அலம்பிக்கொண்டு முன் கூடத்திற்கு வந்தான். வந்தவன் தன்னைப் பின் தொடர்ந்து வந்த தாயிடம், ''அம்மா, நான் பிரபாவின் வீட்டுக்கு இப்போதே செல்ல வேண்டுமா?'' என்று கேட்டான்.

''போனால் என்ன? கூப்பிடு தூரத்திற் தானே அவள் வீடு இருக்கின்றது. அத்தோடு நிலவு வேறு பால்போலக் காய்ந்துகொண்டிருக்கிறது. விசாக மாதத்தின் குளுமையான நிலவில் சற்று வெளியே உலவி வருவது மன நிறைவாக இருக்கும் அல்லவா?''

''அப்படியானால் நீங்களும் வருகிறீர்களா அம்மா.''

''நானா? நான் எதற்குப் பந்துல. மேலும் பூரணைக்கு இன்னமும் மூன்றே மூன்று நாட்கள்தான் இருக்கின்றன. பகவான் புத்தர் பரிநிர்வாணம் எய்திய அப்புனித தினத்தைக் கொண்டாடுவதற்காகப் பக்தர்கள் கூட்டம் இப்

போதே போதி மரத்தடியிற் குவிந்துவிட்டது. ஜம்புத் துவீ பத்திலிருந்து புதிதாக வந்த மகா தேரர்களின் தர்மோப தேசம் ஒவ்வோர் இரவும் நடைபெற்றுக்கொண்டிருக்கின் றது. நான் அங்கே போகிறேன். நீ உன் மாமனார் வீட்டுக் குத் தனியாகவே சென்றுவிட்டு என்னை மகா விகாரைக்கு வந்து சந்தி. பின்னர் இருவருமாகவே வீட்டுக்கு வரலாம்''.

''சரியம்மா'' என்று கூறிவிட்டுப் பந்துலன் வீட்டை விட்டு வெளியேறினான். வானத்திலே பாற் குடத்தைச் சரித்து விட்டதைப்போல நிலவு ஒளியைப் பொழிந்து கொண்டிருந்தது. நிலவின் ஒளியிலே அநுரதபுரத்து அர மயங்களும், சுதையூட்டப்பட்ட தாது கோபங்களும், அரண் மனைக் கட்டிடங்களும், அதைச் சுற்றி நெடிதுயர்ந்த மதில் களும் பாலாபிஷேகம் பண்ணப்பட்ட கற்சிலைகளாகக் காட்சியளித்தன. நகர வீதிகளில் வெண்ணுடை தரித்த பக்தர்கள், கைகளிலே பூக்குடலைகளை ஏந்திக்கொண்டு புனித தாது கோபங்களை நோக்கிச் சாரி சாரியாகச் சென்றுகொண்டிருந்தார்கள். மகா விகாரையிலிருந்து வரும் பிரித் பாராயண ஒலி தென்றலிற் தவழ்ந்து ஊரையே நிறைத்துக்கொண்டிருந்தது. குளுமையும் ரம்மியமுமான நிலவொளியில் பிரபாவின் முகார விந்தம் மனத்தை நிறைத்து நிற்க பந்துல அவள் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

நாகதத்தரின் அரண்மனைபோன்ற வீட்டை அவன் அடைந்தபோது வாயிலில் நின்ற வீரன், அவனைத் தலை வணங்கி வழிவிட்டான். செவ்விய இள நீர்க் குலைகளைச் சுமந்து நின்ற தென்னஞ் சோலையினூடே நடந்து நாகதத் தரின் வீட்டு வாயிலை அண்மியபோது, அவ்வீடே ஜனசந் தடியற்று வெறிச்சோடிப்போய்க் கிடப்பதாகப் பட்டது பந்துலனுக்கு.

ஓஹோ! இந்த வீட்டிலுள்ளவர்களும் மகா விகாரைக் குப் புறப்பட்டுப் போய்விட்டார்களோ என்றெண்ணிய பந்துலன், தலைவாயிலில் நின்றுகொண்டே ''பிரபா'' என்று அழைத்தான்.

''யாரது?'' என்று கேட்டுக்கொண்டே வந்த பிரபா, தலைவாயிலின் கபாடத்தைத் திறந்தாள். சர்வாலங்கார பூஷிதையாகக் காணப்பட்ட அவள், நிலவொளியில் ஓர் அப்ஸரஸியாகத் தோன்றினாள். பந்துலன் அவள் அழகைச் சில வினாடிகளுக்கு மௌனமாகப் பருகிக்கொண்டிருந்தான்.

''என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? நான் கறையான் புற்றல்ல.''—பிரபாவின் குரல் வீணையின் நாதமாக ஒலித்தது.

''நான் கரடியுமல்ல!'' என்று சொல்லிச் சிரித்தான் பந்துல. உள்ளே சென்று இருக்கையில் அமர்ந்துகொண்டே, ''அப்பா எங்கே பிரபா?'' என்று கேட்டான்.

''தங்கள் வீட்டுக்குப் புறப்படுகையிலேயே அவர், தான் மகா விகாரைக்குச் செல்லவேண்டியிருக்கும். வரச் சிறிது தாமதமாகலாம் என்று சொல்லியிருந்தார்.''

''உன் தாயார்?''

''அவரும் மகா விகாரைக்குப் போய்விட்டார்'' என்று சொன்ன பிரபா, உள்ளே சென்று பாற் கிண்ணத்தோடு வந்தாள்.

பாலைப் பருகிக்கொண்டே பந்துலன் சொன்னான்: ''பிரபா. நான் மாமாவைச் சந்திக்கவேண்டும் என்றுதான் வந்தேன்''.

''அப்படியானால் அவர் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் திரும்பிப் போயிருக்கலாமே.''

''ஏன்? அவர் வரும்வரை காத்துக்கொண்டும் இருக்கலாம்?''

''ஓ, மாமனாரிடம் அத்தனை பாசமும் பக்தியுமோ?''

''பக்தியில்லை. ஆனால் பாசம் இருக்கிறது.''

''ஆனால் அந்தப் பாசம் அவரை மகிழ்விக்கக்கூடியதாக இல்லை. அரண்மனையில் மகாலேகராகத் தங்களை அமர்த்த அவர் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனால் அதற்குத் தாங்கள் மறுத்துவிட்டீர்களாமே.''

''ஆம் பிரபா. நாடு இன்றுள்ள நிலையில் சூரத்தீச மன்னரின் அரண்மனையிற் சேவகம் புரிவது சரியானது என்று நான் நினைக்கவில்லை.''

''அப்படியானால் வேதம் ஓதவும், புராணங்களைப் படிக்கவும், புரோஹிதம் பண்ணவுந்தான் நீங்கள் தட்சசீலம்வரை சென்று கற்றீர்களா? என்னை உண்மையாகவே நேசிப்பீர்களானால் அரண்மனை உத்தியோகத்தை உடனடியாகக் கையேற்றிருப்பீர்கள்'' என்று குழைந்த பிரபா, பந்துலனின் அருகில் அமர்ந்து அவனது கைகளை எடுத்துத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள். அவளது சூடான கண்ணீர் பந்துலனின் கைகளைச் சுட்டுப் பொசுக்குவதுபோல இருந்தது!

தன் கைகளை விடுவித்துக்கொண்டு அவள் முதுகைத் தடவிக்கொண்டே பந்துலன் கேட்டான்: ''பிரபா, நான் அரண்மனை உத்தியோகத்தைக் கையேற்பதற்கும் உன்னை நேசிப்பதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது?''

''சம்பந்தமா? பந்துல, நீங்கள் அரண்மனை உத்தியோகத்தைக் கையேற்கும் வரைக்கும் நமது மணவினையும் நடைபெறாது. எனது தந்தையார் அதற்குச் சம்மதிக்கவே மாட்டார்.''

''அவர் சம்மதம் கிடைக்கும்வரை காத்திருக்க எனக்குப் பொறுமையிருக்கிறது பிரபா.''

''ஆனால் சத்திரிய குலத்துக் கன்னிகைகள் எவருக்காகவும் காத்து வைத்துக்கொண்டிருக்கப்படமாட்டார்கள்''.

''ஆம். அது எனக்குத் தெரியும். சமுதாய அமைப்பிலே எத்தனை மேற்தளத்தில் இருந்தாலும் ஒரு சாதாரணக் குடியானவப் பெண்ணுக்குள்ள சுதந்திரம் ஓர் சத்திரியப் பெண்ணுக்கு இருப்பதில்லை. அந்தச் சுதந்திரத்திற்காகப் போராடுவது உன் கடமையல்லவா?''

''எதற்கெடுத்தாலும் ஒரே போராட்டம். நீங்கள் போராட்டம், போராட்டம் என்று எதைத்தான் குறிப்பிடுகிறீர்களோ எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. வாழ்க்கை

யில் தங்களை அடைந்துகொள்ள முயல்வதுதான் எனக்குள்ள ஒரே போராட்டம்.''

''காதல் தரும் இன்பத்தைச் சரியாகச் சுகித்துக்கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையில் உன்னை அடைந்துகொள்வதற்கானதுதான் எனது போராட்டம். பிரபா! செல்வச் சூழ்நிலையில் வளரும் நீ உன்னைச் சுற்றியுள்ள உலகை—உலக மக்களின் அவல வாழ்வை என்றைக்காவது நிதர்சனமாகக் கண்டிருக்கிறாயா?''

''அதைக் காணவேண்டிய தேவை எனக்கென்ன இருக்கின்றது? நான் பெண்''.

''ஆம். நீ ஒரு பெண்ணென்பதால்தான் மக்களின் துன்பத்தை அதிகமாகக் காணவேண்டிய தேவை என்னைவிட உனக்கு அதிகமாக இருக்கின்றது. பிரபா! மனிதன் வன விலங்குகளைக் கொன்று ஊனை உணவாகக் கொண்டிருந்த வேட்டைப் பருவத்திற் பெண்ணே குடும்பத்தின் தலைவியாக இருந்தாள். தன் தலைமைக்குக் கீழ்ப்பட்ட சமுதாயத்தைப் போஷிப்பதும், வேட்டை கிடைக்காத பனிக் காலத்திற்கு உணவைச் சேர்த்து வைப்பதும் அவள் பொறுப்பாகவே இருந்தது. ஆனல் மனிதன் உழுது பயிரிடத் தொடங்கிய பின்னர் ஆணே உழைப்பவனுக மாறிவிட்டான். பெண்கள் அடிமைகளாகி விட்டார்கள். அதனுல் மனித சமூகமே அடிமைப்படுத்தப்பட்டுவிட்டது. இந்த அடிமைத் தனத்தை மாற்றுவதற்கு நீயும் உன்னுலானதைச் செய்யவேண்டும்.''

''உங்களுக்காக எதையும் செய்ய நான் ஆயத்தமாக இருக்கிறேன். ஆனல் என்ன செய்யவேண்டுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை.''

''விளக்கமாகவே சொல்கிறேன் பிரபா. புதிதாக நம் நாட்டிற் பரவிய புத்த மதத்தின் வளர்ச்சியில் ஈடுபட்ட நமது மன்னர்கள் விகாரைகளையும், அரமயங்களையும் நிர்மாணிப்பதில் தமது நேரத்தை விரயமாக்குகிறார்களே தவிர இந்த நாட்டின் மக்களைப்பற்றி எந்த அக்கறையும் இல்லாதிருக்கிறார்கள். நன்றாக யோசித்துப் பார் பிரபா. தேவனும்பிரியதீசன் காலத்திலிருந்து இற்றை வரைக்கு

மான மூன்று தலைமுறைக் காலத்தில் இந்த நாட்டில் நூற்றுக்கணக்கான விகாரங்களும், தாதுகோபங்களும் கட்டி எழுப்பப்பட்டிருக்கின்றன. ஏன், தற்போது அரசராக இருக்கும் * ஸ்வர்ணபிண்டதீசரே ஹத்திக் கண்டக, கோணக கிரிஹா, பாசீனப்பத்த, கொலம்ப ஹாலக, மக்குலக, அச்சாகலக, கிரிநெல் பாகனக என்று நூற்றுக் கணக்கான விகாரங்களைக் கட்டியெழுப்பியுள்ளார். ஆனால் தேவனும் பிரியதீசனுக்குப் பின்னால் உள்ள இந்த மூன்று தலைமுறைகளில் எந்தக் குளக்கட்டிலும் ஒரு கூடை மண்கூடப் போடப்படவில்லை. இதன் விளைவு என்னவென்று எப்போதாவது நீ சிந்தித்திருக்கிறாயா?''

''எனக்கென்ன தெரியும். நீங்களே சொல்லுங்கள்.''

''சொல்கிறேன் பிரபா. அரச ஆணைக்குப் பயந்து சாதாரண குடிமகன் தன் விவசாய முயற்சிகளை விட்டு விட்டு விகாரங்களைக் கட்டுவதற்கு மண்ணும் கல்லும் சுமக்கிறான். அவன் குடிசைகளில் நெருப்பே புகையாமல் இருக்கிறது. பிரபா, மக்கள் பசியால் வாடிக்கொண்டிருக்கும் போது இவ்வளவு அதிகமான மத பக்தி ஏன்''.

''பசி கொடுமையானதுதான் பந்துல. சென்ற ஆண்டு எசால பௌர்ணமிக்கு நாங்கள் * மிசாக பர்வதத்தில், மிகுந்த தேரர் இந்நாட்டில் முதன் முதலில் வந்திறங்கிய சீலகூட பர்வதத்திற்குச் சென்றிருந்தோம். உணவைக் கொண்டுவந்த எமது பரிவாரங்கள் சற்றுத் தாமதித்துவிட்டார்கள். உச்சி வெய்யிலின் அகோரத்தில் பசிக் களையில் நான் மயங்கி விழுந்துவிட்டேன் பந்துல.''

''பார்த்தாயா. ஒரு நேர உணவின்றி நீ மயங்கி வீழ்ந்துவிட்டாய். ஆனால் இந்த ராஜரட்டையிலுள்ள களி மண் குடிசைகளிலே குழந்தைகளும், இளைஞர்களும், விருத்

---

* சூரத்தீசன் பட்டஞ்சூட முன்னுள்ள பெயர்

* மிகுந்தலையின் முன்னைநாட் பெயர்

தர்களும் வாரக் கணக்காகப் பசியாற் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். நான்கு ஆண்டுகளின் முன்னர் பெய்த பெரு மழையால் தீச வாவியின் அணைக்கட்டு உடைப்பெடுத்துக் குளம் தூர்ந்துபோய் விட்டது. இந்த ஆண்டு மாரியும் பொய்த்துவிட்டது. இதனால் நாட்டில் எங்கும் பசியும் பட்டினியும். இந்த நிலையில் பட்டினியால் வாடும் மக்களைக் கொண்டு விகாரங்களைக் கட்டக் கல் சுமப்பிக்கும் சூரத்தீச மன்னனின் சேவகத்திலமர்ந்து, மக்களை மேலும் கொடுமைப்படுத்தச் சொல்கிறாயா பிரபா?''

''அப்படியானால் மக்களின் பசித் துன்பத்தைத் துடைக்க நீங்கள் கூறும் மாற்றுவழிதான் என்ன பந்துலன்?''

''வழி! உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! என்பதுதான் புத்த பகவானின் தத்துவம். மன்னனின் நிர்ப்பந்தத்தின் பேரில் விகாரங்களைக் கட்டிக்கொண்டிருக்கும் மக்களைத் தடுத்து, அம் மக்கள் சக்தியைத் தூர்ந்து கிடக்கும் குளங்களைக் கட்டவும், நாட்டிலே விவசாயத்தைப் பெருக்கவும் பயன்படுத்தப் போகிறோம். அம் மக்கள் சக்தியைத் திரட்டுவதற்காகக் கிராமம் கிராமமாக, வீடு வீடாகச் செல்லப் போகிறோம். இவ்விஷயத்தையிட்டு மாமாவிடமும் பேசவேண்டும் என்பதற்காகவே நான் வந்தேன்.''

''அப்பாவிடமா?'' பிரபா திடுக்கிட்டாள். நடுக்கத்தோடு பந்துலனின் கைகளைப் பற்றிக்கொண்டு அவள் கெஞ்சினாள். ''பந்துல, உங்களின் அன்பு இதயம் எனக்குப் புரிகிறது. ஆனால் இந்த விடயத்தை மறந்துபோய்க்கூட அப்பாவிடம் சொல்லவேண்டாம். அது பெரிய ஆபத்தாக வந்து முடியும்.''

''ஏன் பிரபா?''

''ஏனா? என் தந்தையாரின் குணம் எனக்கு நன்றாகத் தெரியும். இராஜாங்க விஷயங்களில் எவருமே அவரை அளவிட முடியாது. இந்த விடயம் அவர் காதுகளுக்கு எட்டினால் இராஜத் துரோகக் குற்றஞ்சாட்டித் தங்களைத் தன்

சகோதரியின் மகன் என்றும் பாராமல் சிறையில் அடைத்து விடுவார்.''

''பிரபா! பொது பணியில் ஈடுபடுபவன் சிறைச் சாலையை மட்டுமல்ல; சிரசைக்கூடக் கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும்''.

''அபச்சாரமாக என்ன பேச்சு வேண்டியிருக்கிறது. சிரசைக் கொடுத்துவிட்டால் செயலை நிறைவேற்ற முடியுமா? பந்துல! நீங்கள் செய்ய முற்பட்டிருக்கும் பணி வரவேற்கத் தக்கதே. காலமும் நேரமும் வரும்வரை மக்கள் சக்தியைத் திரட்டும் பணியை இரகசியமாகவே வைத்திருங்கள்? அந்தப் பணிக்கு என் மனப்பூர்வமான ஆதரவு என்றைக்குமே உண்டு.''

''உண்மையாகவா பிரபா!'' பந்துலன் உணர்ச்சிவசப் பட்டவனாக அவளை அரவணைத்துத் தழுவி அவளது அதரங்களில் முத்தமிட்டான். கரு முகிலினுள்ளே சூரியன் மறைய, தூரத்தே எங்கோ ஓர் மரத்திலிருந்த இணைக் கூகைகள் விட்டுவிட்டு, விட்டுவிட்டு உறுமிக்கொண்டிருந்தன.

★



## 5 அதிகாரமும், அந்தஸ்தும்...!

விடிந்தது.

நாகதத்தன் தன் ராஜாங்க உடைகளை அணிந்து கொண்டான். இடையிலே உடைவாளையும் தரித்துக் கொண்டு அரண்மனைக்குப் புறப்பட ஆயத்தமானான்.

தனது தந்தை வீட்டுக்கு எந்நேரம் வந்தாரென்பது பிரபாவிற்குத் தெரியாது. ஆனால், இரண்டாஞ் சாமத்தின் பின்னரே அவர் வந்திருக்க வேண்டும் என்று மட்டும் அவளுக்குத் தெரிந்திருந்தது.

இத்தனை காலமாக அவள் தன் தந்தையாரது இராஜாங்க அலுவல்களையோ, அல்லது அவரின் நடவடிக்கைகளையோ அறிவதில் ஆர்வம் காட்டியவளல்ல. அதற்கும் தனக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அது தனக்குத் தேவையுமில்லை என்றே அவள் எண்ணி வந்தாள்.

ஆனால், இன்று காலையில் அவளது எண்ணங்கள் வேறு மாதிரியாக இருந்தன. பந்துலனின் ஒவ்வொரு பேச்சும், அவன் பேச்சிலே இழையோடிய மனிதாபிமானமும், அவளுக்கு ஓர் உற்சாகத்தையும், இராஜரட்டை மக்களிடையே ஓர் அனுதாபத்தையும் இரக்க உணர்வையும் கொடுத்துக்கொண்டிருந்தன. அதற்கும் மேலாகப் பந்துலனின் அரவணைப்பும், தழுவலும் அவளுள்ளே இன்னமும் ஓர் இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. பந்துலனைப் பற்றி ஏதாவது தன் தந்தையிடம் பேச வேண்டும் என்று அவள் உள்ளுணர்வு சொல்லிக்கொண்டிருந்தது.

எனவே, இராஜ மாளிகைக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த தன் தந்தையிடம், ''அப்பா, இரவு பந்துல தங்களைத் தேடிவந்திருந்தார்'' என்றாள்.

''எனக்குத் தெரியும்'' என்றான் நாகதத்தன். அவனது பேச்சிலிருந்து பந்துலனிடம் தன் தந்தை அன்பாக இருக்கிறாரா? கோபமாக இருக்கிறாரா என்பதைப் பிரபாவால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தொடர்ந்து ''தங்களுக்காக அவர் நீண்டநேரம் காத்திருந்தாரப்பா'' என்றாள்.

''அதுவும் எனக்குத் தெரியும்.''

பிரபாவிற்கு அடுத்து என்ன பேசுவதென்று தெரியவில்லை. தன் தந்தை வழக்கத்திற்கு மாறாகத் தன்னோடு ஏன் இத்தனை அழுத்தலாகப் பேசுகிறாரென்று ஒரு கணம்

யோசித்தாள். நாகதத்தனும் அவளது மன ஓட்டங்களை அளவிடுபவன் போல மௌனமாகவே நின்றான்.

''நீங்கள் அவரைச் சந்திக்கவில்லையா அப்பா?''

''நானா? நான் ஏன் அவனைச் சந்திக்க வேண்டும்? உன்னைச் சந்திக்கவல்லவா அவன் வந்திருப்பான்'' என்று சொல்லிச் சிரித்தான் நாகதத்தன்.

''உங்களைப் பார்க்கவேண்டும் என்றுதான் அவர் வந்தார். வந்த இடத்தில் நீங்கள் இல்லாமையால் நான் பேசிக்கொண்டிருந்தேன்.''

''அப்படியா? அவன் ஏன் என்னைச் சந்திக்கவேண்டும்? அவன் ஏதாவது உன்னிடம் சொன்னானா?''

''நீங்கள் என்ன கேட்கிறீர்களென்றே எனக்கு விளங்கவில்லை அப்பா.''

''அவன் அரசாங்க விஷயமாக ஏதும் கதைத்தானா? என்று கேட்கிறேன்.''

''என்னிடம் ஏனப்பா அவைகளைக் கதைக்கிறார் அவர்?''

''அரசசேவகத்தில் அமர்வது பற்றி ஏதும் சொன்னானா?''

''அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் ..''

''ஆனால்... சொல்லு பிரபா.''

இதுவரை நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்த நாகதத்தன், பிரபாவின் மூலமாக எதையோ அறிந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டவன் போல இருக்கையில் அமர்ந்துகொண்டான்.

பிரபாவிற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தன் தயக்கத்தையே அடித்தளமாகக் கொண்டு, தன் தயக்கத்தின் பின்னாலுள்ள அத்தனை சங்கதிகளையும் எப்படியும் ஆராய்ந்து கண்டுகொள்ளும் தன் தந்தையின் சாமர்த்தியத்தையும் சாணக்கியத்தையும் பிரபா அறிவாள். ஆகவே சற்றும் கலவரமோ, சிந்தனையோ இல்லாதவளைப் போலச் சுதாரித்துக்கொண்டு ''அரண்மனைச்

சேவகத்துக்காக இப்போது ஏன் அவசரப்பட வேண்டு மென்று அவர் நினைக்கிறார்போல இருக்கிறது''என்றாள்.

''ஏனாம்?''

''ஏன் என்று நானும் அவரைக் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை அப்பா.''

''கெட்டிக்காரிதான். பிரபா, நீ ஏன் அதைக் கேட் காமல்விட்டாய்?''

''எனக்கு ஏனப்பா அந்த விவகாரமெல்லாம்?''

''உன் எதிர்காலத்தை முன்னிட்டாவது நீ அதை அறிந்திருக்க வேண்டும்.''

''அதை நீங்கள் கவனித்துக்கொண்டால் போதாதா அப்பா?'' என்று நாணிய பிரபா, அவ்விடத்தைவிட்டுப் போக அடியெடுத்து வைத்தாள். நாகதத்தனும் தன் இருக்கையை விட்டெழுந்து தன் புதல்வியின் தலையை வாத்ஸல்யத்துடன் தடவிக்கொண்டே, ''பிரபா, மனித வாழ்வு நிலையற்றது. விருத்தாப்பியனாகிக் கொண்டிருக்கும் நான், விரைவாகவே உன் திருமணத்தை முடித்துவிடத் துடித்துக் கொண்டிருக்கிறேன். அதற்காகத்தான் அந்தஸ் துள்ள அரண்மனை உத்தியோகத்தனாக பந்துலனை ஆக்கி விடவேண்டுமென்று கருதுகிறேன்.''

தன் தந்தையின் அரவணைப்பில் சுகம் கண்ட பிரபா வின் மனத்திரையில் தன் எதிர்காலம் பற்றிய இன்பமய மான கனவுகள் நெளிந்துகொண்டிருந்தன. தந்தையார் கூறுவது போலத் தனக்கும், ராஜாங்க உயர் உத்தியோ கத்தனான பந்துலனுக்கும் விவாகம் நடந்துவிட்டால் அதன் பின்னர் வாழ்க்கை எத்தனை சுகமாக இருக்குமென்ற கற் பனா சுகத்தில் பிரபா தன்னை மறந்திருந்தாள். நாகதத் தன் அவளை வருடிக்கொண்டே, ''பிரபா, பந்துல ஏன் இராஜசேவகத்தைத் தட்டிக்கழிக்கிறான் என்பதே எனக்கு விளங்கவில்லை. சூரத்தீச மன்னரின் அரண்மனையிற் பருமகராக இருக்கும் நான், என் மகளுக்கும், அதே அந் தஸ்திலுள்ள கணவனைக் கண்டுபிடிக்க முடியாதவனல்ல.

ஆனால், பந்துல என் மருமகன். சகோதரியின் புதல்வன். அதனால்தான்...''

''அப்பா, இந்த உறவு முறையினாலேயே அவருக்கும் அந்தஸ்து உண்டாகிவிட்டதே! அரண்மனைச் சேவகம் அவசியந்தானா?''

''பிரபா, தற்போது பந்துலன் கைக்கொள்ள இருக்கும் அரண்மனைச் சேவகம் என் எதிர்காலத் திட்டங்களுக்கான முதற்படியே. இன்னும் சில மாதங்களில்... பிரபா! உனக்கு இவைகள் எல்லாம் விளங்காது. அவனுக்கு இவைகளைத் தனியாக விளக்க வேண்டும் என்றுதான் விரும்பினேன். ஆனால் அவனோ, கைக்குள் அகப்படாத வரால் மீன் போல நழுவிவிடுகிறானே!'' என்றான் நாகதத்தன்.

உணர்ச்சி வசப்பட்ட பிரபா சொன்னாள்: ''அவர்கூட உங்களைப் போலத் திட்டம் போடுவார் போலிருக்கிறது அப்பா. பந்துல சொன்னார், மேற்கே தமனுநுவரையும், வடக்கே ஐம்முகோளமும், இந்த அநுராதபுர நகரும் மட்டும் இலங்காதுவீபம் அல்ல. தெற்கே மாகமம் வரையும், தென்மேற்கே களனி வரையும் இந்த நாடு பரந்து,விரிந்து கிடக்கின்றதாம். தட்சசீலம், காந்தாரம் எல்லாம் சுற்றிய தனக்கு இன்னமும் இலங்காதுவீபம் முழுமையுமே நன்கு தெரியாதாம். இந்நாடு முழுவதையும் ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிட்டு, அதன் பின்னர்தான் அரண்மனைச் சேவகத்தையும், விவாகத்தையும் பற்றிச் சிந்திக்க முடியுமாம் என்று சொன்னாரப்பா.''

''அந்தச் சுற்றுப் பயணத்தை அரண்மனைச் சேவகத்தில் அமர்ந்துகொண்டு அரண்மனைச் செலவிலேயேசெய்யலாம். அதைத் தெரிந்துகொள்ளாத மடையனாக இருக்கிறானே பந்துலன்.''

''அரசாங்கப்பணம் தனிமனிதர்களின் உல்லாசத்திற்கும், விருப்பு, வெறுப்புகளுக்கும் செலவிடப்படுவதை ஒரு சமயம் அவர் விரும்பாமலிருக்கலாம் அப்பா.''

''அரசன்! அரசாங்கம்! இவையெல்லாமே தனிமனிதனின் பலத்தினாலும் புத்தியினாலும் சிருஷ்டிக்கப்படுவது

பிரபா! அரச பதவிக்குத் தன்னைத்தானே உயர்த்திக் கொள்வதற்கு எதையும் அனுபவிக்கும் சுதந்திரம் இருக்கின்றது. இதுதான் பிரபா ராஜதர்மம்.''

''தன் ஆளுகைக்குட்பட்ட மக்களைத் தன்னாலும், தன் பரிவாரத்தாலும், பிறராலும் பாதிக்கப்படாமல் காப்பதுதான் இராஜ தர்மம் என்கிறார் அவர்'' என்றாள் பிரபா.

''மக்கள்...! யார் அந்த மக்கள்? மக்கள் இயல்பாகவே அரசன் ஆணைக்குப் பயந்து நடக்கவேண்டியவர்கள். மன்னன் என்ன செய்கிறான் என்று கேட்கவே மக்களுக்குச் சுதந்திரமில்லை. ஏனென்றால் ஒருவன் தன்னைத்தானே மன்னனாக்கிக் கொள்கிறானே தவிர, மக்கள் ஒரு போதும் மன்னனை ஆக்குவதில்லை. பிரபா, பந்துலனை நான் மன்னனாக்கவே முயல்கிறேன். அவனை அப்படி ஆக்கியே தீருவேன்.''

''என்ன பந்துலன் மன்னனா?''— பிரபா ஆச்சரியத்துடன் கேட்டாள்.

''ஏன் ஆச்சரியப்படுகிறாய் பிரபா? மந்தை மேய்த்து அலைந்து திரிந்த நந்தர்களைக் கௌடில்யன் மன்னனாக்கவில்லையா? ஏன் வியாபாரியாக அலைந்துவந்த விஜயன் * காலசேனனைக் கொன்று இந்நாட்டின் மன்னனாகவில்லையா? அவனுடைய நண்பனான உபத்தீசன் என்ற பிராமணன் இந்நாட்டின் மன்னனாகவில்லையா?''

''அப்பா நீங்கள் சொல்வதெல்லாம் எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது.''

''ஆச்சரியப்பட எதுவுமே இல்லை பிரபா. எவனிடம் பலம் இருக்கிறதோ, எவனிடம் ஆயுதங்கள் இருக்கின்

---

* திவ்யாவதான என்ற நூலில் வட இந்திய வியாபாரி ஒருவரின் மகனே விஜயன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. E. B. Cowell & R. A. Neil (Editors) The Divyavadana, a collection of early Budhist legurd (combridge 1880) Page 523.

றனவோ, எவனிடம் ஆயுதங்களைப் பிரயோகிக்க மூளை இருக்கின்றதோ, அவன் எந்த நாட்டிற்கும் அரசனாகலாம். அரசனான பின்னர் எந்தப் புரோஹிதனையும் கொண்டு அவன் வம்சாவழியை மக்கள் மனதில் பதியச் செய்யும்படியாகப் புராணங்களை எழுதி வைக்கலாம். விஜயனது சந்ததியினர் என்று தங்களைக் குறிப்பிடும் இன்றைய அரசர்கள், தங்களது பராக்கிரமத்தை மக்கள் மத்தியிற் பயங்கலந்த பக்தியோடு பதியவைப்பதற்காக விஜயனின் இரத்தத்திற் சிங்க இரத்தமும் கலந்திருக்கிறதென்று ஒரு கதையைச் சிருஷ்டித்திருக்கிறார்களே. அதை நீ நம்புகிறாயா?''

''பந்துல இந்தக் கதையை நிச்சயமாக நம்பமாட்டார் அப்பா.''

''ஆனால் அவன் தாய்— என் தங்கை அக்கதையை நம்புவாள். தன்னைச் சத்திரிய வம்சத்தவள் என்று சொல்லிக்கொள்வதில் அவளுக்குப் பெருமை அதிகம்.''

''நீங்களும்தானே அப்பா?''

''சூரத்தீச மன்னனின் வலதுகையாக இருக்கும் அந்தஸ்தில் நான் பெருமைப்படுகின்றேன். சத்திரியன் என்று வர்ணம் தீட்டுவதில் எனக்கு எந்தப் பெருமையுமில்லை. உண்மையைச் சொன்னால், என்னால் சத்திரியர்களை ஆக்க முடியும். பந்துலனை நான் சத்திரியனாக்குவேன். நீ அவனது பட்டத்து இராணியாவாய். பிரபா, பந்துலன் மீண்டும் உன்னைச் சந்திக்கையில் நீ இவ்விடயத்தை அவனிடம் சொல்.''

''இதெல்லாம் பெரியவிடயம். நீங்களே அவரிடம் சொல்லுங்கள் அப்பா!''

''நான் சொல்லலாம்தான். ஆனால் இவ்விடயத்தை நீ அவனிடம் சொல்வது இன்னம் உசிதமாக இருக்கும். ஆனால் பிரபா, இவ்விடயம் நீயும், நானும், பந்துலனும் மட்டுமே அறிந்த இரகசியமாக இருக்கட்டும். உன் அம்மாவிற்குக்கூட இது தெரியவேண்டாம்.''

''அப்பா உங்கள் திட்டத்திற்கு பந்துலன் ஒத்துவரா விட்டால்...''

''நீ அவனுக்கு மனைவியாக முடியாது. வேறு எந்தக்காரணத்தைக் கொண்டும் நீ அவனுக்கு மனைவியாக முடியாது.''

''என் காரணமாக அவர் தங்கள் எதிரியாக ஆகிவிட்டால்......?''


''எதிரியாகலாம்...... அதற்கு நான் பயப்படவில்லை! ஆனால் சதியும் செய்யமாட்டான். அதை நான் நம்புகிறேன். ஏனென்றால் அவன் என் தோளில் கிடந்து வளர்ந்தவன். என் தங்கையின் மகன். என் மருமகன்.''

''விசித்திரமானவர் அப்பா நீங்கள்!''

''சரி, எனக்கு நேரமாகிவிட்டது, நான்வருகிறேன்'' என்று சொல்லிக்கொண்டு நாகதத்தன் அரண்மனையை நோக்கிப் புறப்பட்டான்.

தன் தந்தையார் பேசிய வார்த்தைகளைச் சீரணிக்க மாட்டாதவளாக பிரபா மஞ்சத்திலே சிந்தனையில் மூழ்கிக் கிடந்தாள்.

★



## 6 பிச்சாண்டியாவிலிருந்து ஒரு பிராமணன்...!

புத்த விகாரங்களையும், அரமயங்களையும் தன் தொழிலாகக் கொண்டிருந்த சூரத்தீச மன்னரின் ஆலோசனை மண்டபம் அன்று சற்று கொந்தளிப்பாகக் காணப்பட்டது. தான்

ஆட்சிக்கு வந்த இந்த எட்டு வருட காலத்துள் சூரத்தீச மன்னர், அநுரதபுரியின் கிழக்கில் ஹத்திக்கண்டக, கோணக்கிரிஹ என்ற விகாரங்களையும், வங்குந்தரமலையின் மேல் பாசீனப்பத்த என்ற விகாரத்தையும், கொலம்பாஹலக விகாரத்தையும், அரித்தமலையில் மகுலக விகாரையையும், வடக்கே கிரிநெவாஹனக விகாரையையும் கட்டியிருந்தார். மேலும் பல்வேறு விகாரங்களை மகாவலிக் கங்கையின் கரைகளிற் கட்டவும் திட்டமிட்டிருந்தார். இந்த நற்செயல்களினால் மும்மணிகளின் ஆசியைப் பெற்று இந்நாட்டையே தம்மதுவீபமாக ஆக்கிவிடலாம் என்றெண்ணிய ஸவர்ணபிண்டத்தீசன், விகாரங்களைக் கட்டுவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்குமான விஷயங்களைக் கலந்தாலோசிக்கவே தன் மந்திர சபையை அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

ஆனால் இன்றோ, வேறு ஏதோவொரு நோக்கத்துக்காக அவர் மந்திர சபையைக் கூட்டியிருந்தார் என்று அவரது நடவடிக்கைகளிலிருந்து வெளியாயிற்று. இன்றைய மந்திர சபையிலே பிராமணர் ஒருவர் முக்கியமானவராகக் கலந்துகொண்டிருந்தார்.

அந்தப் பிராமணர் இராஜசபைக்கு வந்திருப்பதே நாகதத்தனுக்கு அருவருப்பை ஏற்படுத்தியது.

விஜயனின் பரம்பரையில் வந்துகொண்டிருக்கும் அரசர்களின் வலியைக் குறைத்து அரசைக் கைப்பற்றுவதாக இருந்தால் அதற்கு அரசர்களுக்கு ஆதரவாக, அவர்களது ஆலோசகர்களாக,ஏன் அவருடைய படைத்தலைவர்களாக இருக்கும் பிராமணர்களின் செலவாக்கு ஒழிக்கப்பட வேண்டும் என்று நாகதத்தன் நம்பினான். அரசர்கள், வியாபாரிகள், குடிமக்கள் என்ற முத்திறத்தாரின் மீதும் தமது அறிவினால் ஆட்சி செய்த பிராமணர்கள் சமூகத்தில் வலிமையும், செல்வாக்கும் பெற்றவர்களாக விளங்கினார்கள். விஜயன் தொட்டு ஆட்சிசெய்த ஒவ்வோர் அரசனும், ஒவ்வோர் புரோகிதனால் ஆட்டிவைக்கப்பட்டிருப்ப

தையும், நாகதத்தன் அறிவான். மாமன்மார் ஒன்பதின் மரையுமே தைரியமாக எதிர்த்து நின்ற பந்துகாபயனே வழிநடத்தியவன் ஒரு பிராமணனே என்பதையும், தேவ நம்பிய தீசன் அசோகனிடம் அனுப்பிய தூதுக்குழுவில் ஒரு பிராமணனே முக்கியஸ்தன் என்பதையும் நாகதத்தன் நன்கு அறிவான். ஜம்புகோளாததுறையில், இறக்கப்பட்ட வெள்ளரசு மரம் அநுரதபுரத்திற்கு எடுத்து வரப்படும் வழியில் தீவக்க என்ற பிராமணனின் தரிசனத்திற்காக அப்பிராமணனிடமே எடுத்துச் செல்லப்பட்டது என்பதையும் நாகதத்தன் அறிவான். பிராமணர்களின் செல்வாக்கும் அந்தஸ்தும் அரசர்கள் மத்தியில் எத்தனைதூரம் உயர்ந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்பதே நாகதத்தனுக்கு வேதனையாக இருந்தது.

ஐதரேயப் பிரமாணம் கூறுகின்றபடி அரசர்கள் யாகஞ்செய்வதற்காக அவர்களுக்குப் புரோகிதர் வேண்டும். யாகத்தைத் தீய சக்திகள் அழித்துவிடாமல் பிராமணர் மந்திர சக்தியினுல் காப்பாற்றுவார்கள். கெட்ட கனவுகள் மூலமோ, அல்லது தீய சகுனங்களின் மூலமோ ஏற்படவிருக்கும் ஆபத்துகளை விலக்குவதற்கு அரசர்கள் யாகஞ்செய்ய வேண்டியிருக்கின்றது. இந்த யாகங்களுக்காக மட்டுமல்ல, அரசர்களின் நாளாந்த வாழ்க்கையிலேயே பிராமணர் மிக முக்கியஸ்தராக அமைந்துவிட்டனர்.

அந்தப் பிராமணர்களின் செல்வாக்கை ஒழித்துக்கட்டும் ஒரு கருவியாகவே புத்தமதம் இருந்தது நாகதத்தனுக்கு. ஜம்புத்துவீபத்திலே புத்தபிரானது கருத்துக்கள், பிராமணர்களுக்கு எதிராக இருந்தமையையும், நாகதத்தன் அறிந்தே இருந்தான். அக்கருத்துக்களை இங்கேயும் பரவச் செய்ததினுல் ஏற்பட்ட பலாபலன்களையும் அவன் உணர்ந்தே இருந்தான்.

ஆம், இந்த நாட்டிலே மன்னர்கள் புத்தமதத்தைக் கடைப்[illegible]க்கத் தொடங்கிவிட்டார்கள். பௌத்த சமய அனு[illegible]னங்களில் யாகமேயில்லை. எனவே பிராமணர்

களின்உதவியும் அரசர்களுக்குத் தேவையற்றதாக ஆகிவிட்டது. மத சம்பந்தமாக அவர்களின் உதவி தேவையில்லாததினுல் அரசர்கள் பிராமணர்களை ஆதரிப்பதும் குறைந்துவிட்டது. ஒரு காலத்தில் மன்னர்களை ஆட்டிப் படைத்த பிராமணர்களிற் சிலர், அரசரின் ஆதரவைப் பெறுவதற்காகப் புத்தசமயத்தைத் தழுவிக்கொண்டிருக்கிறுர்கள். சிலர் புரோஹிதத் தொழிலையே விட்டுவிட்டுக் கிராமங்களில் வேறு தொழில்களைச் செய்து வாழ்க்கை நடத்துகிறுர்கள். அவர்களின் அதிகாரமும் அந்தஸ்தும் பறிக்கப்பட்டுவிட்டன.

'இப்படியாகப் பிராமணர்களின் செல்வாக்கு அடங்கி ஒடுங்கிக் கொண்டிருக்கையில் இந்தப் பிராமணன் ஏன் வந்தான்? அதுவும் இவன் சாதாரண பிராமணனல்ல. தேவனும்பிரியதீசரின் குருவாக இருந்த கோபூதியின் புத்திரன். ஏதோ மிக முக்கியமான காரணத்திற்காகத்தான் தம்பபண்ணுவிலுள்ள பிச்சாண்டியாவிலிருந்து பத்துக் காத வழிகள் நடந்து வந்திருக்கிறுன்.

'சூரத்தீச மன்னன் இவனுக்குக் கொடுக்கும் வரவேற்பு அவன் தன் குடும்பத்துக் குருவின் மைந்தன் என்பதினுலா? அல்லது இந்த இளைய கோபூதி, சூரத்தீசனுக்குக் குருவாகவும், அவன் செய்யவிருக்கும் யாகங்களுக்குப் புரோஹிதனுகவும் வந்திருக்கிறுனு? திடீரெனத் தான்கூட அறிந்துகொள்ளாதபடி இந்தப்பிராமணன் ஏன் வந்தான்?'

தன் மனத்தில் எழும் வினுக்களுக்கு விடைகாண முடியாதபடி நாகதத்தன் குழம்பினுன்.

அவன் குழம்பிக்கொண்டிருக்கையில் சூரத்தீச மன்னர், ''நமது குரு'' என்று கோபூதியை நாகதத்தனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

மனதிலே எவ்வளவுதான் குழப்பமாக இருந்தாலும் நாகதத்தன் தன் குழப்பத்தை வெளிக்காட்டிக்கொள்ளாமல் கோபூதியின் பாதங்களைத் தொட்டுத் த[illegible] ஒற்றி நமஸ்கரித்தான்.

''பருமகருக்கு என் ஆசிகள்'' என்று சொல்லி, கோபூதி அவனை ஆசீர்வதித்தார்.

அரசனுக்குச் சமதையான இருக்கையில், மார்பில் பூணூலோடு அமர்ந்திருந்த கோபூதியின் தேககாந்தியும், தீட்சண்யமான கண்களும் நாகதத்தனைத் திக்குமுக்காட வைத்தன. எனினும், கோபூதியின் வருகைக்கான காரணத்தைக் கண்டு பிடிக்கும் அவாவுடன், நாகதத்தன் அமைதியாகத் தன் இருக்கையில் அமர்ந்துகொண்டான். அம்மந்திர சபையிலே மொத்தமாக ஏழே ஏழுபேர்தான் இருந்தனர்.

சூரத்தீச மன்னர் சபையினரை விழித்துச் சொன்னார்: ''நமது நாட்டிலே ஒரு நூற்றாண்டு காலமாக முக்கியமான மாற்றம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை நாம் அறிவோம். அந்த மாற்றம் அநுரதபுர நகரத்தைச் சுற்றி மட்டும் அல்ல, பரந்து கிடக்கும் நம்நாட்டின் எல்லா இடங்களிலும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றது. அம்மாற்றத்திற்கு அறிவுக்களஞ்சியங்களான பிராமணர்களின் ஆதரவும் கிடைத்துக்கொண்டிருக்கிறது. அந்த ஆதரவையும், நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தவே கோபூதி அவர்கள் பிச்சாண்டியாவிலிருந்து இங்கு வருகை தந்திருக்கிறார்.''

நாகதத்தன் எழுந்து, ''அவரின் ஆதரவுக்கு நாம்நன்றியுடையவர்களாகவே இருப்போம். ஆனால் ஒன்று சொல்ல வேண்டும். மகாராஜா! தலைநகரிலும் அதைச் சூழ உள்ள இடங்களிலும் நூற்றுக்கணக்கான விகாரங்களும், சைத்தியங்களும் எழுந்துதான் இருக்கின்றன. சீவர ஆடைஅணிந்த பிக்குகளும், பிக்குணிகளும் பிச்சையேற்று உண்டு, கிராமம் கிராமமாகத் திரிந்து, கொல்லாமை உபதேசத்தை உபதேசித்துக்கொண்டுதான் இருக்கின்றனர். ஆனால் இன்னமும் நாடுபூராவும் புத்தமதம் பரவிவிட்டதென்று சொல்லிவிட முடியாது. ஸர்ப்ப வழிபாடும், மரவழிபாடும் இன்னமும் இந்த நாட்டிலிருந்து ஒழிந்துவிடவில்லை என்பன கோபூதி அடிகளார் தாம் வரும் வழியெல்

லாம் அவதானித்தே இருப்பார். ஆதிக்குடிகளின் இந்த வழிபாடுகளைத் தவிர, லிங்க வழிபாடும்— ஏன் யாகங்களும்கூட இன்னமும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. கோபூதி போன்றவர்கள் ஒத்துழைத்தால் நாட்டிலிருந்து இவையெல்லாவற்றையும் ஒழித்துவிடலாம்'' என்ருன்.

கோபூதி ஆசனத்தமர்ந்தவாறே மிகவும் அமைதியாகச் சொன்னுர். ''வழிபாடு என்பது அவரவர் மனோபீஷ்டத்தையும், மனோகர்மத்தையும் பொறுத்தது. மகான் புத்தர் ஓர் புதிய மதத்தைச் சிருஷ்டித்தார் என்பதே என்னுல் ஒப்புக்கொள்ள முடியாததொன்று. சாக்கியகுலத்தவரான புத்தரும், அவரின் முன்னேரும் வேதங்களின் வழிநின்றவர்களே! எல்லோரும் நிர்வாணம் அடையலாமென்றெண்ணிய சித்தார்த்தர், கர்மாவையும் மறுபிறப்பையும் நம்புகிருர். அந்தமட்டில் அவர் நம்மவரே. ஆகவே, பௌத்தமதம் நமது மக்களின் புராதனமான புனிதமான நம்பிக்கைகளையும், பழக்கவழக்கங்களையும் காலங்கடந்த பின்னர்கூட மாற்றிவிடாது. ஆனுல் பௌத்தமதம் பிரசாரத்தின் வேகத்தால் இந்த நாட்டின் வளர்ச்சி தடைப்படுகின்றது. அஹிம்சை என்ற தத்துவத்தில் எடுபட்டு, இந்நாட்டு இளைஞர்கள் படைக்களப் பயிற்சி பெறுவதற்கு மறுக்கப்படுகிருர்கள். நமது அரசரின் படையணியே சீரழிந்து, கட்டுக்கோப்பை இழந்துவிட்டது. இது நாட்டுக்கு நல்லதல்ல என்பதைச் சொல்வதும் என் கடமை. இதை அரசரிடம் எடுத்துச் சொல்லவே நான் பல காத தூரம் நடந்து அநுரதபுரிக்கு வந்தேன்.''

''ஆச்சாரியார் கோபூதியின் அபிப்பிராயத்தையிட்டு ஆலோசிக்கவே நாம் இச்சபையை அவசரமாகக் கூட்டினேம்'' என்ருர் சூரத்தீசர்.

''அந்த ஆலோசனைச் சபையில் நான் இருக்கவேண்டிய தேவையில்லையென்று நினைக்கிறேன்'' என்று எழுந்தார் கோபூதி.

சபையே எழுந்தது.

கோபூதியை அரசர் தடுத்து, ''எமது ஆலோசனைச் சபையிலும் தாங்கள் கலந்துகொண்டு எங்களை வழி நடத்த வேண்டும்'' என்று மன்றாட்டமாகக் கேட்டார் சூரத்தீசமன்னர்.

''நான் சொல்ல வேண்டிய ஆலோசனையைச் சொல்லி விட்டேன். படையணிகளைச் சீர்படுத்த வேண்டிய பணிகளையிட்டுச் சொல்ல எனக்கு என்ன தெரியும்? அதைச் சொல்லவும் நான் யார்? மன்னா! அநுரதபுர நகரின் புதிய விகாரங்களையும், அரமயங்களையும் நான் பார்க்க வேண்டும். எனக்கு வழிவிடு'' என்று நடந்தார் கோபூதி.

அரசரும் வேறு வழியின்றி அவரை அழைத்துக் கொண்டு அந்தப்புரம் சென்றார்.

''இப்பிராமணன் ஏதோ காரியமாகத்தான் வந்திருக்கிறான். இவன் பேச்சில் அரசன் எடுபடுவானாக இருந்தால் என் திட்டமெல்லாமே பிழைத்துவிடும்'' என்று எண்ணிக்கொண்டே நாகதத்தன் மட்டும் அரசனுக்காகக் காத்திருந்தான்.

★



## 7 கடம்ப நதிக்கரையில்!

தன் தந்தையோடு சம்பாஷித்த பின்னர் பிரபாவின் மனதிலே குழப்பம் ஏற்பட்டது. அவள் ஒரு பருமகரின் மகளாகப் பிறந்தவள். அரண்மனையிலும் இராஜாங்க அலுவல்களிலும் அரசனுக்கு அடுத்தவராக, செல்வாக்கிலும், அதிகாரத்திலும் பருமகரே முக்கியமானவராகக் கணிக்கப்பட்டார். ஏறத்

தாழ அரசனுக்கு இருக்கும் சகல மரியாதைகளும் பரு மகருக்கும் இருந்தன. அந்த ராஜபோகத்திலே வளர்ந்த வள்தான் பிரபா.

அவளுக்கென்றே குற்றேவல் செய்யப் பலர் இருந்த னர். அவள் காலடி நிலத்தில் படாதபடி அவளைச் சுமந்துசெல்லப் பல்லக்குத் தூக்கிகள் பலர் இருந்த னர். அரண்மனைபோன்ற வீடு. எல்லாப் போகங்களையும் இளமையிலிருந்தே சுகித்தவள் அவள்.

என்றாலும் இயல்பாகவே பிற உயிர்கள்மேல் இரங்கும் மென்மையான சுபாவம் படைத்தவள். அதனால்தான்அவள் மக்களின் கஷ்டங்களையும், அவலங்களையும் பந்துலன் எடுத் துச் சொன்னபோது, அவன் வார்த்தைகளினால் கவரப்பட் டாள். மேலும் பந்துலன்மேல் கொண்ட ஆராக் காதலினால் அவன் போகும் எந்த வழியானாலும் — அது எத்துணை கஷ்டமானதாயிருந்தாலும் கூடச் செல்வதற்கு ஆயத்த மாக இருந்தாள்.

ஆனால், தந்தையாரின் பேச்சு அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது.

'மக்களின் வறுமைப் பிணியைப் போக்கவேண்டும். அவர்கள் வயிறார உண்ணச் செய்ய வேண்டும்.' இது தானே பந்துலனின் விருப்பம். இதற்கு அரச உத்தியோ கத்தில் அமர்வது ஏன் தடையாக இருக்கவேண்டும்? என்று எண்ணமிட்டாள் பிரபா.

'மேலும் தந்தையார் அவரை அரசனுக்கிவிடத்தானே எண்ணுகிறார். தன் தந்தையாரதும் அரசரதும் விருப்பத் திற்கு எதிராகக் குறுக்கு வழியிலே சென்று மக்களை வாழ் விப்பதைவிட தனது தந்தையார் கூறுவதுபோல அரச பதவியையே அடைந்துகொண்டு அதை இலகுவாகச் சாதிக்கலாமே'— என்றவாறு அவள் சிந்தனைகள் ஓடின.

'ஆஹா! பந்துலன் அரச பதவியை அடைந்து, தான் அவன் பட்டமகிஷியானால் அது எத்தனை இன்பம்!' இயல் பாகவே அதிகாரத்தையும் சொகுசையும் சுகித்துப் பழ

கிய பிரபாவின் இளம் நெஞ்சம் அந்தக் கற்பனையின் சுகத்தில் தன்னை மறந்து முக்குளித்தது.

'வேலும் வாளும் ஏந்திய வீரர்கள் புடைசூழ, பட்டத்து யானையின்மேல் உயர்ந்த அம்பாரியில் வெண்கொற்றக் குடைநிழலில் வீற்றிருந்துகொண்டு, பெண்கள் சாமரம் வீச, பேரிகைகள் முழங்க, குழல்கள் கானம் பொழிய, அனுரதபுரத்து நகர வீதிகளிலே பவனி வருவதுதான் எத்தனை இன்பம்! அதிகாரத்தில் இருந்துகொண்டால் ஆயிரமாயிரம் குளங்களைக் கட்டலாம். வாய்க்கால்களை வெட்டலாம். மக்களின் பசிப்பிணியையும் போக்கலாம். மக்கள் அதனை வேண்டாமென்றா சொல்லப் போகிறார்கள்? அந்த இராஜபாட்டையை விட்டுவிட்டுக் காட்டிலும் கரம்பிலும் குடிசைகளிலும் புழுக்களாக நெளியும் சாதாரண குடிமக்களோடு சேர்ந்து, நாமும் புழுவாக நெளிந்துகொண்டா அவர்களை இரட்சிக்க வேண்டும்?'

'பார்க்கப்போனால் என் தந்தையாரும் பந்துலனும் ஒரே மாதிரித்தான் சிந்திக்கிறார்கள். ஆனால், இருவரும் போகும் வழிதான் வித்தியாசமானதாக இருக்கின்றது. எனது தந்தையாரோடு இவர் மனம்விட்டுப் பேசுபவராக இருந்தால், தந்தையின் வழிக்கே அவர் வந்தாலும் வருவார். பந்துலன் எதையாவது அடாவடித்தனமாகச் செய்யத் தொடங்குமுன்னர் அவரைத் தந்தையாரோடு பேச வைக்கவேண்டும்' என்று தீர்மானித்துக்கொண்ட பிரபா, பந்துலனிடம் தான் அனுப்பியிருந்த தன் தோழி அனுலாவை, வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

நெடுநேரமாக அனுலா வராமலிருந்தது பிரபாவுக்கு ஏக்கத்தைக் கொடுத்தது. தெற்கே மாகம வரைக்கும், மேற்கே தம்பபண்ணு வரைக்குமுள்ள மக்களையெல்லாம் சந்திக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தவர், தன் பிரமாணத்தை மேற்கொண்டு விட்டாரோ என்று அவள் எண்ணினாள்.

''வரமாட்டேன்.'' ஒரேயடியாகச் சொல்லிவிட்டாரோ என்று ஐயுற்ருள்.

நீண்ட நேரத்தின் பின்னுல் அனுலா வந்து சேர்ந்ததைக் கண்ட பிரபா ஆர்வத்தோடு, ''பந்துலனைக் கண்டாயா அனுலா?'' என்று கேட்டாள்.

''காணுமல் என்னம்மா. ஆனுல், நீங்கள் பதைக்கிற அளவுக்கு அவர் இல்லை. உணர்ச்சியற்ற சடம்போலப் பேசுகிருர்.''

''அப்படி என்னடி பேசினுர்?''

''பேசினுர், தனக்கு எவ்வளவோ வேலை இருக்கிறதாம்.''

''அப்படியானுல் அவர் என்னைத் சந்திக்கமாட்டேன் என்ருரா?''

''ஏன் பறக்கிருய் பிரபா. உன்னைச் சந்திக்கமாட்டேன் என்று அவர் என்னிடம் சொல்லவேயில்லை'' என்று சிரித்தாள் அனுலா.

''விளையாடாதே அனுலா. அவர் என்னதான் சொன்ஞர்? அதைச் சொல்'' என்று சற்றுக் கோபத்தோடே கேட்டாள் பிரபா.

''ஏன் என்னைக் கோபிக்கிருய் பிரபா? நீ சொல்லிய யாவற்றையும் ஒன்றும்விடாமல் பந்துலனிடம் சொன்னேன். அவர் குத்துக்கல்லைப்போல உட்கார்ந்து மௌனமாகக் கேட்டார்.''

''அதைத்தான் ஏற்கனவே சொல்லிவிட்டாயே. கடைசியாய் உன்னிடம் அவர் என்ன சொன்ஞர். அதைச் சொல்?''

''இன்னமும் நான் அதைச் சொல்லவில்லையா? சொல்லியே விடுகிறேன். இல்லாவிட்டால் என் தலைக்கே ஆபத்து வந்தாலும் வரும். இன்று அந்தி மயங்கும் நேரத்தில் தன்னைக் கடம்ப நதிக் கரையில் சந்திக்கும்படி சொன்ஞர். போதுமா?'' என்று சொல்லிச் சிரித்தாள் அனுலா.

''அப்பாவைச் சந்திப்பதைப்பற்றி ஏதும் கூறினுரா?''

''உன் அப்பாவை எதற்குப் பிரபா அவருக்கு? சந்திக்கவேண்டியவரைச் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார். நானும் கூட வருவதா? அல்லது நீ தனியாகத்தான்...'' என்று மீண்டும் சிரித்தாள் அனுலா.

''போடி'' என்று தன் தோழியை இடித்துவிட்டுப் பந்துலனைச் சந்திக்க ஆயத்தமானாள் பிரபா.

மேற்கு வானம் செம்பஞ்சுக் குழம்பைப் பூசிக்கொண்டு தகதகத்தது. மாலைச் சூரியனின் பொற் கிரணங்கள் அனுராதபுர நகரிலே உயர்ந்து நிமிர்ந்து நிற்கும் தாதுகோபங்களின்மீதும் அத் தாதுகோபத்தின்மீது அமைந்த பொற்கலசங்கள்மீதும் படிந்து நகரையே பொன்மயமாக்கிக் கொண்டிருந்தன.

முதுகின்மேல் அலைபாய்ந்து நெளியும் நீண்ட கருங்கூந்தல் நிறையப் பூச் சரங்களைச் சூடிக்கொண்டு பிரபா, தேவலோகப் பெண்போல மகாமேக நந்தவனத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தாள். அனுலாவும் அவளுடன் சேர்ந்தே சென்றாள்.

'மகாமேக வனத்திற்குச் செல்வதாகப் போக்குக் காட்டிவிட்டு, அங்கிருந்து கடம்ப நதிக்கரைக்குச் செல்ல வேண்டுமென்றெண்ணி, பொழுது கருகியபோது கடம்ப நதிக்கரையை அடைந்தாள்.

பந்துலன் நதிக் கரையிலே அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்ட பிரபா, ''நீண்ட நேரங் காத்திருந்தீர்களா?'' என்றாள்.

''இல்லை. இப்போதுதான் வந்தேன்'' என்றான் பந்துலன் உணர்ச்சியின்றி.

''ஏன் ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்?''

''இல்லையே! எப்போதும் போலத்தான் இருக்கிறேன்.''

''இல்லை. நீங்கள் என்றைக்கும்போல இல்லை. அப்படி இருந்தால் ஏன் இத்தனை யோசிக்கவேண்டும்? அப்பாவைக் காணத் தயங்கவேண்டும்?''

''பிரபா! நீ ஏதோ கற்பனை பண்ணிக்கொண்டு வந்திருப்பாய் போலத் தோன்றுகிறது. நான் ஏன் உன் தந்தையாரைக் காணத் தயங்கவேண்டும்?''

''உங்கள் பேச்சே ஏதேதோ வேண்டாவெறுப்பாகவும் சம்பந்தமில்லாதவரிடம் பேசுவதும் போல இருக்கிறதே. வாருங்கள், ஏன் நின்றுகொண்டே பேசவேண்டும். ஆற்றங்கரை மணலிலே போய் உட்காருவோம்''என்றுஅவன் கையைப் பிடித்தாள் பிரபா.

மந்திர சக்தியிற் கட்டுண்டவன்போலப் பந்துலனும் அவள் பின்னாற் சென்றான். ஆற்றங் கரையை அடைந்ததும் இருவரும் வெண்மணலில் அமர்ந்துகொண்டார்கள். பிரபா பந்துலனின் மார்பில் சாய்ந்துகொண்டே,பந்துல நீங்கள் அப்பாவோடு சில நாழிகைகள் மனம் விட்டுப் பேசினால் நன்றாக இருக்கும்போல எனக்குத் தோன்றுகிறது. அதைச் சொல்லத்தான் உங்களைத் தேடிவந்தேன்.''

''பிரபா! நீ இப்படிச் சொல்வாயென்பது ஏற்கனவே எனக்குத் தெரியும். உன் தந்தையாரிடம் நான் மனம் விட்டு எதைப் பேசுவது? இளமைக் காலத்திலிருந்தே அவரிடம் பயம் கலந்த ஒரு மரியாதை எனக்குண்டு. அவரை நேரிலேயே கண்டால் என்ன பேசுவதென்பதே எனக்குத் தெரியாமற் போய்விடும். மேலும் என்னிடம் பேசவேண்டியதையெல்லாம் அவர் உன்னிடம் சொல்லியிருப்பாரே. உன்னிடம் சொல்லிவிட்டால் அது எனக்குத் தெரிந்துவிடுமென்பதை விளங்கிக்கொள்ளாத அளவுக்கு என் மாமனாரை அறிவிலி எனவும் நான் கருதவில்லை.''

''அவரிடம் பயங்கலந்த மரியாதை உண்டு எனச் சொல்லும் தாங்கள் ஏன் அவர் சொல்வதைச் சிந்தித்துப் பார்க்கவும் மறுக்கிறீர்கள்?''

''அடடா! வீணாகப் பழி சுமத்துகிறாயே பிரபா என்ன சொல்கிறார் அவரென்பதைத் தெரிந்துகொள்ள முடியாமல் அதைப்பற்றி எப்படி நான் சிந்தித்துப் பார்க்க முடியும்? பிரபா! அவர் என்னதான் சொன்னார். அதைச்சொல் முதலில்.''

பிரபா, பந்துலனின் மார்பில் புரண்ட உத்தரியத்தை வருடிக்கொண்டே சொன்னாள்: ''பந்துல, நீங்கள் நாட்டு மக்கள் எல்லோருக்கும் வயிறார உணவும் அதைப்போன்ற பிற தேவைகளும் வேண்டுமென்றுதானே விரும்புகிறீர்கள்?''

''ஏன், அதிலே உனக்குச் சந்தேகமா?''

''அந்தச் சௌகரியங்கள் ஏதும் தற்போது மக்களுக்கு இல்லையென்பதுதானே தங்கள் குறை?''

''ம்...''

''அந்தக் குறையைப் போக்குவதுதானே தங்கள் இலட்சியம்?''

''...ம்''

''அந்த இலட்சியத்தை அடைய நீங்கள் சொல்வதை விட வேறு மார்க்கங்கள் இல்லையா?''

''ஏன், என் மார்க்கத்தில் நடப்பதற்கு உனக்குப் பயமாக இருக்கிறதா பிரபா?''

''நீங்கள் இருக்கும்போது நான் எதற்காகப் பயப்பட வேண்டும்? ஆனால், அனுபவம் மிக்கவரான அப்பா சொல்வதையும் கேட்டால்தான் என்ன?''

''பிரபா, நீ இன்னமும் அவர் என்ன சொல்கிறாரென்பதை என்னிடம் சொல்லவில்லையே.''

''சொல்லத்தான் முயல்கிறேன் பந்துல.''

''சரிதான். ஒருவர் சொன்னதைத் திருப்பிச் சொல்வதற்கு முயற்சி என்ன வேண்டிக் கிடக்கின்றது. நீ முயற்சி செய்வதில் இருந்தே அப்பா சொல்வது அத்தனை இதமானதாக இராதெனப் படுகின்றதே.''

''ஆரம்பத்திலேயே நீங்கள் இப்படி அபிப்பிராயங் கொண்டால் எப்படி நான் சொல்லமுடியும்? பந்துல, இந் நாட்டிலுள்ள குளங்களையும் கால்வாய்களையும் அரசர்கள்தானே நிர்மாணித்தார்கள்?''

''ஆம்... மக்களின் உடலுழைப்பைக் கொண்டு'' என்றான் பந்துல.

‘‘ஆனாலும் மக்களின் உடல் உழைப்புமட்டும் குளங்களாகவும் வாய்க்கால்களாகவும் ஆகியிருக்கமாட்டாது.’’

‘‘அரசர்களின் அதிகாரத்தினால் மட்டும் அவைகள் ஆகியிருக்கவும் முடியாது.’’

‘‘ஆம். அரசர்களின் அதிகாரமும் தேவை. மக்களின் உழைப்பும் தேவை. இரண்டும் சேர்ந்தால்தான் நாடு செழிப்படையுமென்கிறார் அப்பா.’’

‘‘அவை இரண்டும் சேர்ந்து தற்பொழுது விஹாரங்களாகவும் தாகபக்களாகவும் எழுந்துகொண்டிருக்கின்றன.’’

‘‘அதன் அர்த்தம் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மக்களின் நல்வாழ்வில் நாட்டமில்லை என்பதேயொழிய அதிகாரம் கூடாதென்பதல்ல. ஆகவே மக்கள் நலனில் நாட்டமுள்ளவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினால் நாடு நலமடையும்தானே...’’

‘‘அதிகாரத்தை மக்களே கைப்பற்றிக்கொள்ளுதல் இன்னமும் மேலானதல்லவா?’’ என்று கேட்டான் பந்துலன்.

‘‘மக்களா? மன்னன் இல்லாமல் மக்கள் இருக்க முடியுமா?’’ ஆச்சரியத்துடன் வினவினாள் பிரபா.

‘‘இருக்கலாம். இருக்கவேண்டும்! பார்க்கப்போனால் மக்கள் காலங் காலமாக இருந்தார்கள். மன்னன் பின்னரே தோன்றினான். அதிகாரம் அவனிடம் சேர்ந்தது. மக்களை விட மன்னன் மேலானவனாகிவிட்டான். இந்த நிலை மாற வேண்டுமென்றுதான் நான் சொல்கிறேன்.’’

‘‘நீங்கள்பேசுவதை என்னால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.’’

முடியாதுதான் பிரபா. அதிகாரத்தை அனுபவித்துப் பழகிவிட்டவர்களுக்கு இதை விளங்கிக்கொள்ள முடியாதுதான். உன் தந்தையார் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ள விரும்புகிறார். என்னோடு பழகிய குற்றத்தால் நீ அதிகாரத்தோடு மக்கள் நலனை இணைத்துப் பார்க்க

விரும்புகிறய். இது சாத்தியமற்றது, சத்தியமுமற்றது பிரபா.''

''ஏன் சாத்தியமற்றது? அதிகாரம் இருந்தமையாற்றனே பந்துகாபய மன்னர் அபயவீவாவைக் கட்டினர். அதிகாரம் இருந்ததினுற்றனே அநுரதன், இந்த அழகான நகரையே கட்டியெழுப்பினன். நம்மிடமும் அதிகாரம் வந்துவிட்டால் இந்த நாட்டு மக்களுக்கு எந்தக் குறைவும் இருக்காது பந்துல. தங்களுக்கு அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொடுக்கத்தான் அப்பா விரும்புகிருர்.''

''அதுதான் எனக்கும்அவருக்குமிடையிலுள்ளவேறுபாடு பிரபா. அவருடைய நோக்கு அதிகாரம். எனது இலட்சியம் மக்கள். இரண்டுமே எதிரெதிரான துருவங்கள். அத் துருவங்களை இணையச் செய்யும் முயற்சிதான் உன் சுயநலம்.''

''சுயநலமா? பந்துல, நான் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனல், என் சுயநலத்துக்காக இவைகளைச் சொல்கிறேன் என்றுமட்டும் எண்ணிவிடாதீர்கள். உங்களுக்கு இந்த வழியில் விருப்பமில்லாவிட்டால் விடுங்கள். நீங்கள் தேர்ந்தெடுக்கும் வழியிலேயே நானும் வரத் தயார்.'' பிரபா ஆவேசத்தோடு தன் இதயத்தைத் திறந்து பேசினள். அவள் பேச்சிலே பந்துலனின் மேல் அவள் கொண்டிருந்த பாசம் மின்வெட்டியது.

நன்றுக இருட்டிவிட்டது. நிலவு கிளம்ப இன்னமும் இரண்டு நாழிகைகள் இருந்தன. சில் வண்டுகளின் கீச்சுக் குரலையும், இலைகளின் சலசலப்பையும்விட வேறு சப்தமே இல்லை!

அந்தகாரமான இருளிலே ஆற்றங்கரை ஓரமாக யாரோ புதர்களினடியில் மறைந்து செல்வதுபோலிருந்தது. பந்துலன் தன் உடைவாளிற் கையை வைத்துக்கொண்டே, ''பிரபா, நாம் பேசிய அத்தனையையும் உன்னைக் கேட்காமலே உன் தந்தையார் தெரிந்துகொள்வார்'' என்றன்.

''எப்படி?''

''அவர் அனுப்பிய ஒற்றன்தானே அதோ போகிறவன்'' என்று சிரித்த பந்துலன், ''பிரபா, நேரமாகிறது வா போகலாம்'' என்றான்.

மணலிலிருந்து எழுந்த இருவரும், இருளிலே நெருங்கி நடந்துகொண்டே வருகையில் பந்துலன் சொன்னான்: ''அதிகாரத்தை மட்டுமே குறியாகக் கொள்பவர்கள், தம் போக்கை எப்படி எப்படியெல்லாமோ மாற்றவேண்டி இருக்கும். உன் தந்தையாரின் நடவடிக்கைகளை நீயும் கவனமாகப் பார்த்துக்கொள். மீண்டும் நாம் சந்திக்கும் போது அவைகளை என்னிடம் சொல் பிரபா.''

தூரத்தே அனுலாவைக் கண்ட பிரபா, பந்துலனுக்குப் பதிலே சொல்லாமல் நாணிக்கொண்டு அனுலாவிடம் ஓடினாள்.

பந்துலனும் தன் போக்கில் நடந்தான்.

★



## 8 ''செய்வோம் அல்லது செத்து மடிவோம்!''

பந்துலவும் அவன் நண்பன் காமினியும் தங்களைச் சுற்றிச் சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு விட்டார்கள். அந்த நண்பர்களில் பிராமணர்களும் இருந்தனர். விவசாயிகளும் இருந்தனர். வாழ்க்கையின் எல்லாத் தரங்களில் உள்ளவர்களும் இருந்தனர். எல்லாருமே கும்பிக் கொதிம்பின் கொடுமையினால் எதையுமே செய்யத் தயாராக இருந்தனர்.

மூன்று ஆண்டுகளாக மழை பொய்த்ததினுல் குளங்கள் பெரும்பாலும் வரண்டே கிடந்தன. அந்தக் குளங்களிலுள்ள சொற்ப நீரைப் பாய்ச்சிப் பயிரிடவும் மக்களுக்கு நேரமில்லாமலிருந்தது. மக்கள் சக்தி முழுமையும் விஹாரங்களைக் கட்டவே பயன்படுத்தப்பட்டதினுல் கிராமத்து அடுக்களைகளிற் பூனைகள் உறங்கின. இதனுல் உள்ளம் நொந்து உடலும் செத்துக்கொண்டிருந்த கிராமவாசிகள் அரச ஆணையை உதறித் தள்ளிவிட்டு வயல்களை விதைக்கவும், உடைப்பெடுத்த தீச வாவியின் கரையைக் கட்டவும் தயாராகவே இருக்கிருர்கள் என்ற செய்தியை இளைஞர்கள் பந்துலனுக்குக் கொண்டுவந்தார்கள்.

'செய்வோம்! அல்லது செத்து மடிவோம்' என்று துடித்துக்கொண்டிருந்த தன் நண்பர்களிடம் பந்துலன் சொன்னுன்: ''நண்பர்களே, உணர்ச்சி வேகத்தினுல் மட்டும் நாம் எதையும் சாதித்துவிட முடியாது. மன்னன் கடவுளின் அம்சம் என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்களை, அரச ஆணைக்கு எதிராகத் தொழிற்படச் செய்வதென்பது இலகுவான காரியமல்ல. மேலும் நம்மைப்போன்ற இளைஞர்கள் சிலர் மட்டும் சேர்ந்து எதையும் சாதித்துவிடவும் முடியாது.''

''தீச வாவியின் உடைப்பைக் கட்டி முடிக்க ஐநூறு பேர் இருந்தாலே போதுமானது. ஒரு வாரத்திற்குள் அவ் வேலையை முடித்துவிடலாம்'' என்ருன் மூத்த சிவா என்ற பிராமண இளைஞன்.

''அரச ஆணையை எதிர்த்து ஐந்நூறு பேர் குளத்தைக் கட்ட வரும்போது, அரசனும் அவன் பரிவாரங்களும் வெறுமனே அதைப் பார்த்துக்கொண்டு இருக்கமாட்டார்கள். அவ் வேலையைச் செய்பவர்களை ஒழித்துக்கட்ட அரசனின் படையே தீச வாவிக்கு வரும். அந்தச் சனியத்தை எதிர்க்க நம்மிடம் படைப்பலமும் வேண்டும்'' என்ருன் காமினி.

''ஆம். காமினி சொல்வதைக் கேட்டீர்களா? நிர்மாண வேலை நடந்துகொண்டிருக்கையில், நாம் தேவை

ஏற்பட்டால் அரச படைகளையும் எதிர்க்க வேண்டியிருக்கும். அதற்கு நமது தோழர்களுக்கு நாட்டு மக்கள் எல்லோரது ஆதரவும் வேண்டும்.''

''ஆனாலும் மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னமே நமது திட்டத்தை ஆரம்பிக்க வேண்டாமா'' என்றான் மகாதீச என்ற இளைஞன்.

''மழைக்காலம் தொடங்க இன்னமும் மூன்று அமாவாசைகள் கழிய வேண்டும். ஆகவே இன்றிலிருந்து இரண்டு அமாவாசைகள் முடியுமட்டும் நமக்குச் சரியான வேலை இருக்கிறது'' என்றான் பந்துல.

அவன் மேலும் என்ன சொல்லப்போகிறானென்பதைக் கேட்க அவனின் தோழர்கள் ஆயத்தமானார்கள்.. அன்று அமாவாசையாக இருந்தாலும் நிர்மலமான வானத்தில் தாராகணங்கள்மின்னிக் கொண்டிருந்தன. நட்சத்திர ஒளியில் எதிரே இருப்பவரின் முகங்களைத் தெரிந்துகொள்ளக் கூடியதாகவே இருந்தது.

அனுரதபுரத்திற்குத் தெற்கே ஒரு காத தூரத்தில் களத்து மேடு ஒன்றிலே ஓர் இலுப்பை மரத்தின்கீழ் அவர்கள் கூடியிருந்தனர். சற்றுத் தூரத்தே அமாவாசை இருளைக் குத்து குத்தெனக் குத்திக்கொண்டிருந்த தீச் சுவாலைகள் கிராமமொன்று அண்மையிலேயே இருக்கிறதென்பதைத் தெளிவுபடுத்திக்கொண்டிருந்தன. இலுப்பை மரத்துக்கு சற்றுத் தூரத்தே நான்கு திசைகளிலும் ஓங்கி வளர்ந்திருந்த நெடு மரங்களில் அமைந்துள்ள காவற்பரண்களில் யாராவது வந்தால் அறிவித்தல் கொடுப்பதற்காகத் தங்கள் காதுகளையும் கண்களையும் கூர்மையாக்கிக் கொண்டு காத்திருந்தனர் சில இளைஞர்கள்.

பந்துலன் சொன்னான்: ''நண்பர்களே! நமது கொள்கைகள் கிராமவாசிகளிடம் தெளிவாக எடுத்துச் சொல்லப்பட வேண்டும். அரச ஆணையைப் புறக்கணித்துவிட்டு இந்த நாடு அரசனே இல்லாமல் எப்படி இயங்குமென்பதை விளக்க வேண்டியதுதான் நமது முக்கிய கடமை. உணவு

உடை எல்லாவற்றிலும் தன்னிறைவுள்ள கிராமங்களே நமது இலட்சியமென்பது தெளிவுபடுத்தப்படல் வேண்டும். அனுரதபுரத்திலிருக்கும் அரசனின் ஆணையில் இந் நாட்டுக் கிராமங்கள் பாழடைகின்றன. நாம் உண்பதற்காக வயலை உழுவோம். குடிநீருக்காகக் கிணறு தோண்டுவோம். உடுப்பதற்காக ஆடை நெய்வோம். அப்படியாயின் அரச ஆணை நம்மைக் கட்டுப்படுத்தாது என்பதை விளக்கு வோம். கிராமத்தைச் சூழவுள்ள நிலங்கள் யாவும் பயிரிடப் படவேண்டும். அவ் வேலையைக் கிராம மக்கள் எல்லோருமே செய்யவேண்டும். நிலத்தில் இறங்கிப் பயிரிடாதவனுக்கு உண்பதற்கே உரிமையில்லை என்ற புதிய தத்துவத்தை மக்களிடம் சொல்வோம். வெறும் சொல்லால் மட்டுமல்ல, செயலாலும் அதை மக்களுக்குக் காட்டுவோம். அப்போதுதான் மக்கள் நாம் சொல்வதை ஏற்பார்கள். மக்கள் நம்மிடம் விசுவாசம் கொள்ளும்வரை நாம் எந்தக் காரியத்திலும் இறங்கக் கூடாது. இறங்கினுல் நெருப்புக் கொள்ளியால் தலையைச் சொறிந்து கொண்டதாகவே அது இருக்கும்.''

நீண்ட நேரம் விவாதம் நடந்தது. பந்துலன் முடிவாகச் சொன்னுன்: ''நாங்கள் எல்லாரும் பிரிந்து தனித்தனியாக அல்லது இருவர் இருவராக இணைந்துகொண்டு கிராமங்களுக்குச் செல்வோம். இரண்டு மாதங்களுக்கு மக்களோடு, மக்கள் மத்தியில் வாழ்ந்து நமது கொள்கைகளைத் தெளிவு படுத்துவதோடு ஆயுதங்களையும் சேர்ப்போம். இன்றிலிருந்து வரும் இரண்டாம் அமாவாசையில் நாம் மீண்டும் கூடி மேற்கொண்டு என்ன செய்யலாமென்பதைப் பரிசீலிப்போம்.''

''எல்லோருமே போகவேண்டுமா'' என்று கேட்டான் காமினி.

''ஆம். எல்லோருமே. நானும் உள்ளிட்டுஎல்லோரும் தான்'' என்ருன் பந்துலன்.

''இல்லை. அனுரதபுரியில் அரசமாளிகையில் ஏற்படும் மாற்றங்களைக் கவனித்துக்கொள்ளச் சிலர் தலைநக

ரத்திலும் இருக்கவேண்டும். முக்கியமாகப் பந்துலன் அங்கே இருக்கவேண்டும்'' என்ருன் காமினி.

''எனக்கு மட்டும் ஏன் அத்த விதிவிலக்கு? நானும் மக்களோடு கலந்துகொள்ளவே விரும்புகிறேன்'' என்ருன் பந்துலன்.

''இல்லை. நீங்கள் அனுரதபுரத்தையே பிறப்பிடமாகக் கொண்டவர். நீங்கள் அவ்விடத்தை விட்டுப் போவது சந்தேகத்திற்கிடமானதாக இருக்கும்.''

''ஏன் சந்தேகப்பட வேண்டும்? நான்தான் இந் நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, இரண்டு வருடங்களில் அரண்மனை உத்தியோகத்தை ஏற்கிறேன் என்று கதை கட்டிவிட்டிருக்கிறேனே'' என்ருன் பந்துலன்.

''அந்தக் கதையை யார் நம்பினுலும், பருமகர் நம்ப மாட்டார் பந்துல. ஆம், அரசர் அல்ல. உனது மாமனர் தான் நமது பிரதான எதிரியாக இருப்பாரென்பது என் எண்ணம்'' என்ருன் காமினி.

''உண்மை. அதற்காக நான் அனுரதபுரியிற் சுகமாகக் காலங் கழித்துக்கொண்டிருக்க வேண்டுமா?''

''அதுதான் சரியானதாக எங்கள் எல்லோருக்குமே படுகிறது'' என்றனர் பல நண்பர்கள்.


தன் நண்பர்கள் சொல்வதிலும் ஞாயமிருப்பதை உணர்ந்த பந்துலன் கடைசியாக அவர்கள் விருப்பத்திற்குச் சம்மதித்தான். சாதாரணமாக அனுரதபுரியிலேயே தாய் வீட்டில் வாழவேண்டும். மூன்று நாட்களுக்குமேற் படாமல் வேறெங்கும் போகக் கூடாதென்ற நிபந்தனையோடு.

நண்பர்கள் தங்கள் மந்திராலோசனையை முடித்துக் கொண்டபோது கிராமத்துக் கோழிகளெல்லாம் அவர்களது முடிவை வரவேற்பதுபோலச் சந்தோஷத்தோடு 'கொக்கரக்கோ' என்று கூவின. கோழிகளின் கொட்டு முழக்கத்தினூடே நண்பர்கள் எல்லோரும் சுட்ட கிழங்குகளையும், பலாச் சுளைகளையும் சாப்பிட்டனர்!

சாப்பிட்டு முடிந்ததும் விடிவதற்குள் எல்லோரும் நாலா திக்கிலும் பிரிந்து சென்றனர்.

அனுரதபுரத்தை அடைந்த பந்துலனுக்கு அதிர்ச்சி தரும் செய்திகள் காத்திருந்தன.

★



## 9 அரச மாளிகையில் மந்திராலோசனை..!

இராஜ சபையையே ஒத்தி வைத்துவிட்டுக் கோபூதியோடு சென்ற சூரத்தீச மன்னர் நீண்ட நேரமாகியும் திரும்பி சபைக்கு வரவில்லை. பருமகரும் மற்றைய பிரதானிகளும் அரசரின் வருகைக்காகக் காத்திருந்தனர். ஆனல் நண்பகல் நேரத்தில் தான் சபைக்கு வரமுடியவில்லை என்று அரசர் அவர்களுக்குச் செய்தி அனுப்பியிருந்தார்.

அந்தச் செய்தி நாகதத்தனுக்கு ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருந்தது. நேற்று வந்த பிராமணனுக்கு அரசர் இத்தனை மரியாதை காட்டுவது ஏன்? என்று அவன் தன் மனதுக்குள்ளேயே கறுவிக்கொண்டான்!

'கோபூதி ஏன் வந்தான்?' என்ற சிந்தனையிலேயே தன் முழுக் கவனத்தையும் செலுத்தி யோசித்துப் பார்த்தும் நாகதத்தனுக்கு ஏதும் வெளிச்சமாகவேயில்லை, அரசாங்க விவகாரங்கள் எதிலும் கலந்துகொள்ளாவிட்டாலும் அரசரின் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராகவே அப் பிராமணர் இருக்கிறர். அரண்மனையை அடுத்த ஓர் மாளிகையில் இராச மரியாதைகளோடு இருக்கிறர் என்பது மட்டுமே தெளிவாயிற்று.

நாட்கள் சில கடந்தன.

அரசர் மட்டுமல்ல, மக்களும் கோபூதியினிடத்து மரியாதை காட்டினுர்கள். அநுரத நகரின் பெருமக்கள் பலரும் அப் பிராமணரைத் தங்கள் வீட்டுக்கு இரகசியமாக வேனும் அழைத்துச் சென்று தம் வீடுகளில் லிங்க பூஜை செய்தனர். குளக்கட்டுகளின் மேலிருந்த காவற் தெய்வங்களுக்கு கோபூதி பூஜை செய்தபோது அவ்வழிபாட்டில் மக்கள் கூட்டங் கூட்டமாகக் கலந்துகொண்டனர்.

மக்களின் தேவைகளைப் புறக்கணித்து மத சிந்தனைகளிலே கண்மூடித்தனமாக அரசனை இழுத்துச் செல்வதன் மூலம், மக்களிடையே கொந்தளிப்பை உண்டாக்கி அரசனைப் பலவீனமடையச் செய்து தானே அரசைக் கைப்பற்றிக் கொள்ளத் திட்டமிட்டிருந்த நாகதத்தனுக்குக் கோபூதியின் செய்கைகள் எல்லாம் வேம்பாகக் கசந்தன. ஆயினும் அவனுல் கோபூதியின் செல்வாக்கைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தன் தங்கை ஸ்வர்ணபாலியே கோபூதியை அழைப்பித்து வீட்டிலேயே யாகம் செய்து பிதிர்க் கடன் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது நாகதத்தனுக்குப் பயங்கரமாகவே இருந்தது! அவன் தங்கை மட்டும் என்ன; அரசரே கோபூதியை அழைத்துக்கொண்டு மகாமேக நந்தவனத்திற்குச் சென்றுர்!

இப்படியே விட்டுக்கொண்டிருந்தால், அரசனே ஒரு சமயம் புத்த மதத்தைக் கைவிட்டு யாகங்களும் பூஜைகளும் செய்யத் தொடங்கிவிடுவானே என்று எண்ணிய நாகதத்தன், இதையிட்டு மகா விகாரையின் மகா நாமதேரரிடம் பேசலாமா என்று கூடச் சிந்தித்தான். ஆனுலும் அரசரின் போக்கை நிதானமாகவே கண்டறிந்து தக்க நேரத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தன்னை அடக்கிக்கொண்ட நாகதத்தனை, அன்று மன்னர் தனிமையாக அழைத்திருந்தார்!

தனது மெய்க்காப்பாளர்களைக்கூட அனுப்பிவிட்டு அந்தப்புரத்திலே நாகதத்தனுேடு மட்டும் இருந்த அரசர்

சொன்னார்: ''பருமகரே! நாம் இன்று சில முக்கியமான விஷயங்களைப் பேசவேண்டியிருக்கிறது''.

''அவ்வளவு முக்கியமான விஷயமாக இருந்தால் அது மஹிந்த தேரரைப்பற்றியதாகத்தான் இருக்கும். அந்த மகா தேரர் சமாதியடைந்து இருபதாண்டுகள் ஆகின்றன. அவர் நினைவினைப் பிரமாண்டமாகக் கொண்டாடவேண்டும் என்ற செய்தியை நானும் தங்களிடம் சொல்ல இருந்தேன்''.

''அதுவும் முக்கியமானதுதான். ஆனால் நான் அதைப் பற்றிப் பேசவரவில்லை. மத சம்பந்தமான அவ்விஷயத்தோடு நாம் வேறும் சில முக்கியமான விஷயங்களைப் பேச வேண்டியிருக்கின்றது.''

நாகதத்தன் ஏதும் பதில் பேசாமல் அரசர் என்ன சொல்லப்போகிறார் என்பதைக் கருத்தோடு கேட்க ஆயத்தமானான்.

அரசர் தொடர்ந்தார்: ''நாகதத்தரே! நான் ஆட்சியைக் கையேற்ற இந்த எட்டு வருட காலத்திலும் பகவானுக்குச் செய்யவேண்டிய பணிகளை மிகவும் பயபக்தியுடனும், பூஜ்யத்துடனும் செய்துள்ளேன். எனது தமையன்மாரான மகாசிவனையும், உத்தியனையும் விட மகாசங்கத்தாருக்குக் கூடுதலான சேவையையே நான் செய்திருக்கிறேன்''.

''அதனால்தான் மகாவிகாரைப் பிக்குகள் தங்களைப் 'புண்ணிய பொக்கிஷம்' எனப் புகழ்கிறார்கள்''.

''அவர்கள் புகழ்ச்சிக்கு நான் தகுதியானவனோ என்னவோ அது இருக்கட்டும். ஆனால் நாம் சற்று அரசாங்க சம்பந்தமான விஷயங்களையும் கவனிக்கவேண்டும்.''

''எனக்கு விளங்கவில்லை அரசே. நமது அரசியலில் என்ன குறை இருக்கிறது? தாங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?''

''பருமகரே! குடியும், படையும், சூழும் கொண்டதே அரசு என்பது தங்களுக்குத் தெரியாததல்ல. நம்மிடம் தற்

போது படை பலமே இல்லை என்பதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.''

''கலிங்கப் போரை வென்ற பின்னர் அசோக மன்னர் தம் படைகளையே கலைத்துவிட்டார். ஆனாலும் அவரது சாம்ராஜ்யத்திற்கு யாதேனும் ஊறு நேரிட்டதா? புகழுக்குத் தானும் ஏதும் களங்கம் நேரிட்டதா? அரசே நாமும் அசோக மன்னர் காட்டிய பாதையையே பின்பற்றுகிறோம். அதனால்தான் படையைப் பெருக்குவதைப்பற்றிச் சிந்தியாதிருக்கிறோம்.''

''அது மிகப் பிழையான காரியமாகவே எனக்குப் படுகின்றது. அசோகரின் சாம்ராஜ்யத்திற்கு இனிமேல் என்ன நடக்கப் போகின்றதோ அதை யார் கண்டார்கள்? நாமும் நம் படை பலத்தைப் பெருக்காவிட்டால் எதிர்காலம் நம்முடையதாக இராது என்றே எனக்குப்படுகிறது. ஆகவே நமது படை பலத்தைப் பெருக்க உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.''

''நானும் அதைச் சிந்தித்தே இருந்தேன் அரசே. தங்களுடைய மூத்த சகோதரர் மகாநாமனின் சந்ததியினர் மகாமத்தில் பலமான இராஜ்யத்தை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நமது அரசுக்கு ஆபத்து வருவது சாத்தியமானதே''.

''ஆபத்து அவர்களிடம் இருந்து மட்டுமல்ல. நமக்குள் இருந்தும் வரலாம்''.

''என்ன? நமக்குள்ளிருந்தா?'' நாகதத்தன் திகைத்துப்போய்க் கேட்டான்.

'இத்தனை காலமும் அரசனை எடுப்பார் கைப்பிள்ளை என்று எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் இவர் எத்தனையோ விஷயங்களை உணர்ந்திருக்கிறாரே. கோபூதியின் போதனைகளால் பிறந்த ஞானமா இது?' என்று தனக்குள்ளே சிந்தித்துக்கொண்டிருக்கையில் அரசர் மேலும் தொடர்ந்தார்:

''ஆம்! நமக்குள் இருந்துதான் மந்திரியாரே. ஜனங்கள் எல்லாரும் புத்தமதத்தை அனுட்டிக்கிறார்கள் என்று

தான் நாம் மேலோட்டமாக எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் உண்மையாக அவர்கள் தமது பழைய மதக் கொள் கைகளைவிட்டு இன்னமும் நீங்கவில்லை. விகாரைகளும், சைத்தியங்களும் கட்டப்படுவது அவர்களுக்கு எரிச்சலைக் கொடுப்பதாகக் கோபூதி அபிப்பிராயப்படுகிறார். அது மட்டுமல்ல; அந்த மக்களையே நமக்கெதிராகத் தூண்டிவிட ஒரு சதியும் நடக்கிறதாம். அதற்காகத்தான் நாம் நமது படையைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும்.''

''ஆனால் இந்தப் பிராமணர்களைப்பற்றியும் நாம் மிகக் கவனமாக இருக்கவேண்டும் அரசே. பௌத்த மதத்தின் செல்வாக்கினால் தங்கள் சமூக அந்தஸ்து கெட்டுக்கொண்டு வருவதை அவர்கள் உணர்கிறார்கள். இழந்துபோன செல் வாக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு கோபூதியைப் போன்றவர்கள் முயற்சியும் பண்ணலாம்.''

''அதுவும் சாத்தியமானதே. ஆனால் அந்தக் கோணத் திலிருந்து பார்ப்பினும் நமக்குப் படைபலம் அவசியமா னதே. அதுவும் படையினர் நமக்கு விசுவாசம் மிக உள்ள வர்களாகவும் இருக்கவேண்டும்.''

''அது மிகச் சரியானதே. இன்னும் சில நாள் அவ காசம் கொடுங்கள், நான் நமது படையணிகளைத் திருத்தி யமைக்கிறேன். அதன் ஆட் பலத்தையும் பெருக்குகிறேன். ஆனால் பிராமணர்களின் செல்வாக்கையும் நாம் கட்டுப் படுத்தவேண்டும். அதற்குப் பௌத்த மதத்தைத் தவிர வேறு வழி நமக்குக் கிடையாது. அதற்காக நாம் இரண்டு விஷயங்களைச் செய்யவேண்டும். ஒன்று, ஏற்கனவே நாம் திட்டமிட்ட நாகரங்கன விகாரையைக் கட்டி எழுப்பவேண் டும். அந்த விகாரத்தின் திறப்பு விழாவின்போதே மகிந்த தேரரின் இருபதாண்டு மறைவு தினத்தையும் கொண் டாடவேண்டும்.''

''விகாரையின் நிர்மாண வேலையை உடனடியாகச் செய்வது அவசியமென நினைக்கிறீர்களா?''

''மிக மிக அவசியம் மன்னரே. அதைவிட அவசியமா னது மகிந்த தேரரின் நினைவு விழா. இவ்விரண்டினையும்

மாரி காலம் ஆரம்பிக்க முன்னரே நாம் செய்து முடிக்க வேண்டும்''.

''அதற்கு முன்னர் உடைப்பெடுத்த தீச வாவியைத் திருத்தி அமைப்பதும் முக்கியமானதென நான் நினைக்கிறேன்'' என்றார் மன்னர்.

''அதையும் செய்யலாம். ஆனால் மக்கள் தம் தேவைகளை எப்படியும் பூர்த்திசெய்து விடுவார்கள். நாட்டிலே உணவுத் தட்டுப்பாடு என்ற புரளி பிராமணர்களாலேயே எடுத்துவிடப்பட்டிருக்கின்றது. ஆனால் உண்மையாக இந் நாட்டில் யாருமே பட்டினியால் செத்தனர் என்பதற்கு ஆதாரமே கிடையாது. மழை பொய்த்ததினால் சில கஷ்டங்கள் தோன்றி இருக்கலாம். அதற்கு மக்களின் மனப்போக்கைத் திருப்பக் கூடியதாக நாம் ஏதாவது செய்துவிட்டால் அவர்கள் தம் குறைகளைப்பற்றிச் சிந்திக்க நேரமேயிராது. அரசே! தங்கள் சகோதரர் உத்தியன் அவர்கள், நிர்வாணமடைந்த மகிந்த தேரரினதும், அவர் தங்கை சங்கமித்தையினதும் சடலங்களை பொன்மயமான பேழைக்குள் அடைத்து, அவைகளை விமானத்தில் எழுந்தருளச் செய்து மகாவிகாரைக்குக் கொண்டு வந்து, சுகந்த வர்க்கமிட்டு, வாரக் கணக்காக அச்சடலங்களைப் பூஜைப் பொருட்களாக்கி, அர்ச்சனையும் பூசனையும் செய்து தன் கையினாலேயே அச்சடலங்களுக்குத் தீயிட்ட வைபவம் இன்னமும் மக்கள் மனத்திலே பசுமையாகவே இருக்கின்றது. தனது பத்தாண்டு ஆட்சிக் காலத்திலும் செய்த எல்லாவற்றையும் விட, இக் கைங்கரியமே உத்திய மன்னருக்கு இன்னமும் புகழையும், பெருமையினையும் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. மேலும் தங்கள் மூத்த சகோதரர் தேவனும்பிரியதீசர் இந்த நாட்டில் புத்த மதத்தை பரப்புவதையே தமது வாழ்க்கை லட்சியமாகவும், நெறியாகவும் கொண்டிருந்தார். அந்த நெறி இந்த நாட்டில் சரியாக ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்னர், நாம் வேறு விடயங்களில் கவனத்தைச் செலுத்தினால் தேவனும்பிரிய தீசரது இலட்சியக் கனவே பாதியில் முடிந்துவிட்டதாக அமையும். ஆகவே அரசே!

நாம் நமது பாதுகாப்புக்காகப் படை பலத்தைப் பெருக்கிக்கொள்வோம். அதே நேரத்தில் தங்கள் மூத்த சகோதரர் தொடக்கிவைத்த பணியையும் எந்தச் சோர்வுமின்றிச் செய்வோம்''.

''உமது அபிப்பிராயமே மகா விகாரைக் குருக்களின் அபிப்பிராயமாகவும் இருக்கிறது. மேலும் மகிந்த தேரரின் நினைவைக் கொண்டாடுவதிலும் அவர்கள் மிகத் தீவிர முடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால்......'' என்று இடையிலே நிறுத்தினார் மன்னர்.

''ஆனால்......? எனக்குத் தெரியும் அரசே. கோபூதி உங்கள் மனத்தைக் குழப்புகிறார். இந்தப் பிராமணனின் தந்தையாற் கூட தீசர் புத்த சமயத்தைத் தழுவுவதையும், புத்த பகவானின் அருள் நெறியை இந்த நாட்டில் பரவச் செய்வதையும் தடுத்து நிறுத்த முடியவில்லை. தன் தந்தையால் சாதிக்க முடியாததை இந்தப் பிச்சாண்டியாவிலிருந்துவந்த பிராமணன், தேவனும்பிரிய தீசரின் இளைய தம்பியாரைக் கருவியாகக் கொண்டு சாதித்துவிடப் பார்க்கிறான். அவனையிட்டு மிகக் கவனமாக இருக்கவேண்டும் அரசே''.

''பருமகர் பேச்சில் அர்த்தம் இருப்பதாகவே எனக்குப் படுகின்றது. நாட்டில் ஏதோ ஒரு சிக்கலான — குழப்பமான சூழ்நிலை இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது. கோபூதியும் அதற்கு உடன்பாடாக இருக்கலாம் என்பதைத் தாங்கள்தான் எனக்கு விளக்கினீர்கள்'' என்றார் அரசர், நாகதத்தரைப் பார்த்து.

''என் கடமையல்லவா அது? வரும் பொருள் உரைத்தல் என் தொழில் அல்லவா? பிச்சாண்டியாவிலிருந்து கோபூதி வந்த அன்றே நான் அவர் வரவிற்கு ஏதோ உள்ளாந்தரங்கமான அர்த்தம் இருக்கும் என எண்ணினேன்! நிலைமைகள் மோசமாகிவிட்டால் அப்பிராமணனைச் சிறையிடவும் ஆயத்தமாக இருந்தேன்.''


''வேண்டாம்... படை பலத்தை மட்டும் சரியாக வைத்திருப்பதற்கு ஏற்பாடு செய்துகொண்டு மற்றக் காரியங்களை வழக்கம்போலவே செய்வோம்.''

''உத்தரவு மன்னவா. இன்னமும் ஒரு வாரத்திற்கிடையில் படையின் அமைப்பைப் பலப்படுத்துவேன். அதைச் செய்து முடித்ததும் நாகரங்கன விகாரையின் நிர்மாணத்தைத் தொடங்குவோம்'' என்றான் நாகதத்தன்.

''ஆம், அதை மீண்டும் படை திருத்திய பின்னர் கூடி ஆலோசிப்போம். அதையிட்டு மகாவிகாரைக் குருக்களோடும் ஆலோசிக்கவேண்டும்'' என்றார் சூரத்தீச மன்னர்.

இருவரும் ஆலோசனையை முடித்துக்கொண்டு வெளியே வருகையில் கோபூதியின் பல்லக்கு அரண்மனையை அடைந்து கொண்டிருந்தது.

*



## 10 உள்வீட்டில் யாகத் தீ!

வெண் புரவியில்ஆரோகணித்து வந்த பந்துலன், குதிரையிலிருந்து இறங்கி தன் வீட்டின் பின் புறமாக இருந்த தொழுவத்திற் குதிரையைக் கட்டிவிட்டு வந்தான். வீட்டிலே ஏதோ அசாதாரணமான சம்பவம் நடந்ததற்கான அறிகுறிகள் தெரிந்தன.

வீட்டு முற்றத்திலே புது மணல் பரப்பப்பட்டிருந்தது. அம் மணலிலே மனிதக் காலடிகள் தாறுமாறாகப் படிந்து கிடந்தன. புதிதாகப் பந்தர் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அவிழ்த்தெறியப்பட்ட தோரணங்களின் மிச்ச சொச்சங்கள் அதில் தொங்கிக்கொண்டிருந்தன. பந்தலின் மையத்தில் அமைக்கப்பட்டிருந்த யாக குண்டம் பிரிக்கப்படாமலே இருந்தது.

'இவைகள் எல்லாம் என்ன? எதற்காக?' என்ற கேள்விகளைத் தன்னுள் எழுப்பிக்கொண்டே நிற்கையில், ''பந்துல! இரவு எங்கே போயிருந்தாய்? எங்கெல்லாம் நான் உன்னைத் தேடினேன்'' என்றாள் ஸ்வர்ணபாலி. இயல்பாகவே செம்மை படர்ந்த செழுமையான அவளின் முகம் இரவு முழுக்கக் கண் விழித்ததினால் மேலும் உப்பியிருந்தது. கண்கள் சிவந்து இமைகள் கனத்து அழுத்திக்கொண்டிருந்தன.

''நான் இல்லாமலே நடக்கவேண்டிய காரியம் நடந்துதானே இருக்கிறது. இதெல்லாம் என்னம்மா?'' என்று கேட்டான் பந்துலன்.

''எல்லாம் உனக்காகத்தான். உன் நல் வாழ்வுக்காகத்தான். இரவு இங்கே 'அக்கினி பூஜை' நடத்தினோம். உன் நலத்திற்காகச் செய்யப்படும் அந்தப் பூஜையில் நீ இல்லாமல் இருப்பதே உசிதம் என்று கோபூதி சொன்னார்''.

''ஓ, கோபூதியா? என் நலத்திற்காகப் பூஜை செய்தாரா? அம்மா, உன் நம்பிக்கைகள் எல்லாமே விசித்திரமானவைகளாகவே இருக்கின்றன''.

''உனக்கு எதிலுமே அலட்சியம். கோபூதி எப்படிப்பட்டவர் என்று தெரியுமா? இக் கோபூதியின் தந்தையார் நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த சர்வகலா பண்டிதர். தேவனம்பிரிய தீசருக்குக் குருவாக இருந்தவர். மைந்தரும் தந்தையைப் போலவே சர்வகலா பண்டிதர்.''

''இருக்கலாம் அம்மா! ஆனால் அவரால் எனக்கென்ன நன்மை செய்துவிட முடியும்? இந்த யாகங்கள் எல்லாம் மனித அறிவு, குழந்தைப் பருவத்தில் இருக்கையில் அறியாமையில் தோன்றிய ஆசாரங்கள். இந்த ஆசாரங்களையெல்லாம் புத்தபகவான் ஒழிக்க முயன்றார். அவரைப் பின்பற்றுவதாகச் சொல்லிக்கொள்ளும் நீங்கள் யாகத்தை இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறீர்களே. அதுதான் அம்மா எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.''

''இதில் வேடிக்கை என்ன இருக்கிறது? புத்தபிரானின் நிஷ்டையைக்கூட மாரன் கலைக்க முயன்றதாகச் சொல்கி

ளுர்கள். அப்படியாயின் வேதம் கூறும் மாரன் என்ற தெய்வம் பொய்யில்லையல்லவா? வருண தேவனும், அக்கினி பகவானும், இந்திரனும் பொய்யெனப் பௌத்த மதம் கூறுவதாகவும் நான் அறியவில்லை. அத்தோடு சில நாட்களாக நான் உன்னைப்பற்றிக் கெட்ட கனவுகளைக் கண்டுகொண்டிருந்தேன்.''

''அது என்மேல் தங்களுக்குள்ள பாசத்தினல்-சதா தாங்கள் என்னைப் பற்றியே நினைத்துக்கொண்டிருப்பதினல் ஏற்படுவதாக இருக்கலாம். அதனை யாகங்கள் தடுத்து நிறுத்திவிடுமா?''

''இல்லை மகனே! கெட்ட கனவுகள் துர்த்தேவதைகளால் ஏற்படுகின்றன. அக்கனவுகள் நிகழவிருக்கும் தீமைகளுக்கான சகுனங்களாக இருக்கலாம். தேவதைகளைத் திருப்திப்படுத்தவும், நிகழவிருக்கும் தீமைகளைத் தவிர்க்கவும் யாகங்கள் செய்வது நாம் காலம் காலமாகக் கொண்டிருக்கும் மரபு. அது நமது நம்பிக்கை. கோபூதியடிகள் எத்தனை கச்சிதமாக இந்த யாகத்தைச் செய்தார் என்று தெரியுமா? பந்துல இந்த யாகத்தை நீ இருந்து பார்த்திருக்கவேண்டும். எவ்வளவு ஆனந்தப்பட்டிருப்பாய் தெரியுமா? பிரபா கூட விடிய விடிய இங்கேதான் இருந்தாள்.''

''என்ன... பிரபாவும் வந்திருந்தாளா? அவளும் பிராணிகள் பலியிடப்படும் கோரத்தைக் கண் குளிரப் பார்த்தாளா?''

''வந்திருந்தாள். ஆனல் ஆடு பலியிடப்படுகையில் அவள் கண்களைக் கைகளாற் பொத்திக்கொண்டு கோவென்று கதறினள். அதன் பின்னர் அவள் வீட்டுள்ளிருந்து வெளியே வரவில்லை, விடியற்காலந்தான் தன் வீட்டிற்குப் போனள்.''

''அப்படியா! அந்த மட்டிலாவது இந்த யாகங்களினதும், வேள்விகளினதும் கோரத்தை உணர்ந்துகொண்டாளே. அதற்காகச் சந்தோஷப்படுகிறேன். அது கிடக்

கட்டும். எதிர்காலத்தில் எனக்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறதாம். கோபூதி என்ன சொன்னர்? தன் மகளை அனுப்பிவைத்த மாமனர் தான் ஏன் நேரில் வரவில்லை?''

''நானே நேரிற் சென்று அவரை அழைத்தேன். ஆனல் தனக்கு ஏதோ அரசாங்க வேலைகள் இருக்கின்றதென்று சொல்லி பிரபாவை அனுப்பிவைத்தார். அவர் வராம லிருந்தாலும் யாகத்தை நடத்துவதற்கு வேண்டிய எல்லா உதவியும் செய்துகொடுத்தார்.''

''என்ன இருந்தாலும் அவர் உன் அண்ண அல்லவா?'' என்று குறும்பாகச் சிரித்தான் பந்துல.

அவனது சிரிப்பையும், அலட்சியத்தையும் ஸ்வர்ணபாலி யினல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவள் ஆத்திரத் தோடு சொன்னள்: ''பந்துல! நீ கடல் கடந்து சென்று பல கலைகளையும் கற்ற பண்டிதனக இருக்கலாம். ஆனல் நீ இன்னமும் உன் மேல் – உன் மாமன் மேல் வைத்திருக்கும் பற்றையும், பாசத்தையும் உணர்ந்துகொள்ள முடியாதவ னக இருக்கிருய்! உன் எதிர்கால வாழ்வையிட்டு அவர் எத் தனை மனக்கோட்டைகள் கட்டியிருக்கிருரென்று உனக்குத் தெரியுமா? அதற்காக அவர் எத்தனை முயற்சிகளை மேற் கொண்டிருக்கிருர் என்பதை நீ அறிவாயா? அது மட்டு மல்ல, நீ ஏதோ தகாத முறையில் சிந்தித்து உன் வாழ் வைப் பாழாக்கிக்கொள்ள இருக்கிருயென்று அவர் இதயம் குமுறியழுவதை நீ கண்டிருக்கிருயா?''

''ஏனம்மா இப்படிச் சொல்கிறீர்கள்? நான் தங்கள் சகோதரரிடம் வைத்திருக்கும் மதிப்பும், பாசமும் ஓர் இம்மி யளவு கூடக் குறையவில்லை. ஆனல் அந்தப் பாசமும் பற்றும் நமது சுயநலத்திற்காகவே இருக்கவேண்டுமென்பதை என் னல் ஒப்புக்கொள்ள முடியவில்லை.''

''சுயநலம்! அவர் மட்டும் இப்போது நினைத்தாலும் தன் மகளுக்கு அரச பரம்பரையிலே மணம் முடித்து வைப் பார். ஆனல் தமது மரபும், குலமும் விளங்கவேண்டு மென்றுதான் விரும்புகிருர். இதையா நீ சுயநலம் என்கி ருய்''

தாயின் கனல் கக்கும் பேச்சைக் கேட்ட பந்துலன், பதில் ஏதும் சொல்லமாட்டாமல் சிலைபோல் நின்றான். 'பிரபா தன்னிடமிருந்து பிரிக்கப்பட்டுவிடுவாளோ' என்ற நினைவு அவனுடைய இருதயம் முழுவதையும் – ஏன் உடல் முழுவதையுமே கசப்பாக்கிற்று. அவன் சிலையாகவே நின்றான்.

'மகன் தன் பேச்சில் மடங்கிவிட்டான்' என்றெண்ணிக் கொண்ட ஸ்வர்ணபாலி, மீண்டும் பேசினாள்:

''பந்துல நான் சொல்வதைக் கேள். அரசாங்கக் கடமைக்காகவும், அரசனுக்காகவும் அவர் புத்த மதத்தைப் பேணுகிறாரேயொழிய, அம் மதத்தில் அவருக்குப் பக்தியோ, அபிமானமோ கிடையாது. காலங் காலமாக இந் நாட்டு மக்கள் மனதிலே வேரூன்றியிருக்கும் நம்பிக்கைகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் அவர் தம் மனத்திலே மதிப்பளித்துக் கொண்டிருக்கிறார். எங்கிருந்தோ வந்த விஜயனின் வியாபாரக் கூட்டத்தினர் நம் நாட்டை அடிமைப் படுத்தி ஆண்டுகொண்டு வருவதும் அவர் மனதிலே நித்திய வேதனையாக இருக்கின்றது. அந்தக் கூட்டத்தினரோடு கலந்து நமது சுயத்தை இழந்துவிடாமல், நம் உரிமையை மீண்டும் ஸ்தாபிப்பதே தன் நோக்கமாகக் கொண்டிருக்கும் அவரைப் பாராட்டாமல் சுயநலக்காரன் என்று சொல்ல உனக்கு எப்படிப் புத்தி போகிறது? உன்னைப் பெற்ற தாய் ஆணையிட்டுச் சொல்கிறேன். உன் மாமனார் விரும்புவது போல அரண்மனை உத்தியோகத்தை உடனடியாக ஒப்புக்கொள். அதுவும் படைத் தலைவனாகவே உன்னை நியமிக்கப் போகிறாராம். கோபூதிகூட இதை ஆதரிக்கிறாராம்''.

தன் தாயின் நீண்ட பேச்சைக் கேட்ட பந்துலன் தணிந்த குரலில் அமைதியாகச் சொன்னான்: ''அம்மா! எந்த உத்தியோகத்தையும் ஏற்கமாட்டேன் என்று நான் சொல்லவில்லையே. இன்னமும் சில நாட்கள் போகட்டும், அதற்குள் இந்நாடு பூராவையும் ஒரு தடவை சுற்றிப் பார்த்துவிடலாம் என்றுதானே சொல்கிறேன்''.

''அதுதான் முடியாத காரியம். பதவிகளும், சந்தர்ப்பங்களும் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கமாட்டா. காற்றுள்ள போதோ தூற்றிக்கொள்ள வேண்டும் என்றுதான் உன் மாமனுர் அவசரப்படுகின்ருர். சில நாட்களுக்குள் நீ சுபமான முடிவு எடுக்காவிட்டால் அதற்காக நமது குடும்பமே காலங் காலமாகக் கண்ணீர் வடிக்க வேண்டியிருக்கும் என்று நேற்றுக்கூட அவர் என்னிடம் சொன்ஞர்.''

''நான் யோசிக்கிறேன் அம்மா'' என்றுவிட்டு அயர்வோடு மஞ்சத்திற் சாய்ந்தான் பந்துலன்.

அவனது உடல் ஓய்விற்காக ஏங்கினுலும் அவனது உள்ளம் ஓய்ந்திருப்பதாக இல்லை. அவன் நினைவிலே பல்வேறு சிந்தனைகள் சரக்கூடம் போட்டுக்கொண்டிருந்தன.

'அரசனைப் பிழையாக வழி நடத்திச் சென்று, அவனைப் பலவீனப்படுத்தி, அவனிடமிருந்து அரச பதவியையும், அதிகாரத்தையும் கைப்பற்ற எண்ணும் எனது மாமனுர்......'

'அதிகாரத்திலுள்ளவர்களின் விருப்புக்கும் வெறுப்புக்குமேயல்லாது சுயமாகச் சிந்திக்கவும் அதன்படி வாழவும் உரிமையற்ற மக்கள்......'

'உழைத்துப் பிழைக்கும் மக்கள் எல்லோரும் தீண்டத்தகாத புழுக்கள் என்றெண்ணும் பிராமண தர்மத்தின் பிரதிநிதியாக கோபூதி......'

'நாட்டின் நிலையை அறிந்துகொள்ளாமல் நாளும் பொழுதும் புத்த தர்மத்தையே போதித்துக்கொண்டிருக்கும் மகா விகாரைக் குருக்கள்......'

'அதர்மமான அரசியல் சித்தாந்தங்களுக்கும், கீழ்த்தரமான அரசியல் சூழ்ச்சிகளுக்குமிடையே தன்னையே நம்பி தன் எதிர்காலத்தைப் பலியிட்டுக்கொண்டிருக்கும் பிரபா......'

பிரபாவின் நினைவு அவன் மனதிலே கோரமும் பயங்கரமுமாக மோதியது. 'பிரபா அவள் விருப்பத்திற்கு மாருக மணவறைக்கு இழுத்துச் செல்லப்படுகிருள். இராஜ குலத்தவஞன ஒருவன் மணவறையிலே உட்கார்ந்திருக்கிருன்.

பலி ஆடுபோல இழுத்துச் செல்லப்பட்ட பிரபா அவனுக்கு அழுதுகொண்டே மாலையிடுகிறுள்......'

பந்துலன் மஞ்சத்திலிருந்து எழுந்து தன் நெற்றியைக் கையால் அமுக்கிப் பிடித்தபடியே சிந்தித்துக்கொண்டேயிருந்தான்.

'தன் உபதேசங்களை வேத வாக்காகக் கொண்டு காட்டிலும், கரம்பிலும், குடிசைகளிலும், வயல் வெளிகளிலும் பசியோடும், பட்டினியோடும் அலையும் காமினியும், மற்ற நண்பர்களும்......'

'ஆம்! அவர்கள் தமக்கிடப்பட்ட கட்டளையை ஆர்வத்தோடும் இதயசுத்தியோடும் நிறைவேற்றிக்கொண்டிருப்பார்கள். அவர்களின் உபதேசங்கள் குடிசைகளிலே பட்டினியால் வாடிக்கொண்டிருக்கும் நாட்டு மக்களுக்கு எதிர்கால நம்பிக்கையாக அமையும். கொடுமையற்ற, அடிமை நிலையற்ற, பிடுங்கலற்ற, இன்பகரமான வாழ்வுக்காகக் கிராம மக்கள் எல்லோரும் தங்களைத் தயாராக்கிக்கொண்டிருப்பார்கள்......'

'இதயத் தூய்மையுடைய அந்த நண்பர்களையும், அப்பாவிகளான நாட்டுமக்களின் எதிர்கால நலனையும் ஒரு பிரபாவிற்காக விட்டுவிடுவதா?......'

'சேனுதிபதி பதவியைக் கையேற்று மாமனுரின் சூழ்ச்சிக்கு உடந்தையாக இருப்பதா?......'

பந்துலன் தன் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கையில், ஸ்வர்ணபாலி, ''பந்துல! புறப்படு. நாம் இருவரும் உன் மாமனுரைச் சந்திக்கவேண்டும். புறப்படு சீக்கிரம்'' என்ருள்.

பந்துலன் அவளுக்குப் பதில் சொல்ல மாட்டாதவனுகத் திகைத்து நின்றுன்.

★



## 11 காதலியே பணயப் பொருளானுள்...!

படையணிகளைத் திருத்தி அமைக்கும்படி மன்னர் பணித்தபோது, அரசர் விழித்துக்கொண்டுவிட்டார் என்பதை நாகதத்தன் உணர்ந்து கொண்டான். மன்னனுக்குத் தெரியாமலேயே படைகளைத் திருத்தி அமைக்கவும், படைத் தளகர்த்தர்களாகத் தனக்கு வேண்டியவர்களை நியமிக்கவும் ஏற்கனவே நாகதத்தன் நினைத்திருந்தான். தற்போது அந்தக் கைங்கரியத்தை மன்னனே தனக்கு முதலில் செய்துவிடுவானே என்றெண்ணி நாகதத்தன் திகிலடைந்தான்.

தான் நினைத்தபடி பந்துலன் மட்டும் படைத்தலைவனுனால், அது எவ்வளவு நன்ருக இருக்குமென்று மீண்டும் யோசித்தான் நாகதத்தன். பந்துலனின் சீலத்தினுலும், ஒழுக்கத்தினுலும் மக்களிடையே அவனுக்கு நல்ல மதிப்பும் செல்வாக்கும் இருந்தது. அத்தோடு ஜம்புத்துவீபத்தின் வடக்கிலும், வடமேற்கிலும் திரிந்து கற்றதினுல் ஏற்பட்ட பரந்த அனுபவமும் அவனுக்குண்டு. போர்ப் பயிற்சியும், படைக்கலங்களைப் பிரயோகிக்கும் திறமையும் அவனுக்கிருந்தது. மேலும் ஜம்புத்துவீபத்தின் வடமேற்கு வரை படையெடுத்துவந்த யவனப் படைகளின் கட்டுக் கோப்பையும், அப்படையையே எதிர்த்து வெற்றி கொண்ட தட்சசீலம் படைகளது திறமையினையும் அறிந்திருக்கும் வாய்ப்பும் பந்துலனுக்கு இருந்தது. இத்தனைக்கும் மேலால் அவன் தன் மருமகன்.

அந்நிய நாடுகளோடு போர் புரியத் தேவையற்றிருக்கும் நம்படை, தன் மருமகனின் தலைமையில் இருந்தால் அப்படையினைக் கொண்டே இலகுவாக அரசனைக்கொன்று

ஆட்சியைக் கைப்பற்றலாமென்று திட்டமிட்டிருந்த நாக தத்தனுக்கு, எப்படிப் பந்துலனைப் படைத் தலைமையை ஏற்கும்படி செய்வது என்பது பெரிய பிரச்சினையாக இருந்தது.

அவனை ஜம்புத்துவீபத்துக்கு அனுப்பி வைத்ததே பிழை யான செயல் என்று அவனுக்குத் தோன்றிற்று. அங்கே பந்துலன் கற்ற கலைகளும், பெற்ற ஞானமும் தான் எதிர் பார்த்திராத வகையில், எதிர்பார்த்திராத ஒரு கோணத் தில் சென்று கொண்டிருப்பது நாகதத்தனுக்கு வேதனை யாக இருந்தது. மக்களாம், தன்னிறைவுள்ள கிராமங்க ளாம், கிராம சுயாட்சியாம் என்றெல்லாம் பந்துலன் உபதேசித்துக்கொண்டிருப்பதும், அவன் உபதேசத்தை நூற்றுக்கணக்கான வாலிபர்கள் ஏற்றுக்கொண்டு அவன் சொற்படி அலைவதும் நாகதத்தனுக்கும் பொறுக்கமுடி யாத கவலையாகவும், வேதனையாகவும் இருந்தது.

பிரபாவின் மீது அவன் கொண்டுள்ள காதலை விலைப் பொருளாக வைத்துக்கொண்டு, பிரபாவைக்கொண்டே அவனைத் தன் போக்குக்கு இழுக்கும் திட்டம்கூட வேற்று மையைத் தராது என்று இப்போது நாகதத்தன் திட மாக நம்பினான். ஆனாலும் அரசபோகத்தால் அவனைக் கவரமுடியாது. பொன்னும் பொருளும் அவனை அசைக் காது. அவன் மனதைச் சலனப்படுத்தத் தன்னிடமிருக் கும் ஒரேயொரு பொருள் பிரபாதான். அவளைக் கொண்டே பந்துலனைத் திசைதிருப்ப இன்னும் சற்றுக் கடுமையாக முயலலாம் என்று எண்ணிக்கொண்டான்.

''ஸ்வர்ணபாலியும், பந்துலனின் மனதைக் குழப்பியே இருப்பாள். அத்தோடு பிரபாவையும் தூண்டிவிட்டுப் பந்துலனை திசை திருப்ப முயன்றால்.........''

சிந்தித்துக் களைத்த நாகதத்தன், பந்துலனை அவன் போக்கிலிருந்து திருப்பப் பிரபாவாலும்முடியாது என்ற முடிவுக்கே வந்தான். ''குழந்தைப் பருவத்திலிருந்தே அவன் பந்துலனை அறிவாள். ஆரம்பத்திலிருந்தே பந்து லன் பிடிவாதக்காரன். வயது ஏற ஏறத் தனக்குச் சரி

யெனத் தோன்றும் எதனையும் தயங்காமல் செய்யும் ஆண்மை அவனிடம் குடிகொண்டுவிட்டது. அவனுடைய ஆண்மையை அழிக்க எவராலுமே முடியாது'' என்று எண்ணிய நாகதத்தனுக்கு மனம் சோர்ந்துபோயிற்று.

அந்தச் சோர்வோடு தன் முன்னிருந்த மதுக் கிண்ணத்தைச் சிறிது மாந்தினன். முதுவேனிற்காலத்து நண்பகல் அவனது அரண்மனையின் சுற்றுவட்டாரத்தைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருந்தது. மண்ணையும், புழுதியையும் வாரியடித்துக்கொண்டு வேகமாக வீசிய வரண்ட காற்று பகலவனின் வெப்பத்தை மேலும் கடுமையாக்கிற்று. அந்த வெப்பத்தில் உடல் புழுங்கிக் கொண்டதைப் போல நாகதத்தனின் உள்ளமும் புழுங்கிக்கொண்டிருந்தது.

கடைசியாக நாகதத்தன் ஒரு முடிவுக்கு வந்தான். கிறங்க வைக்கும் மதுவின் போதையோடு தன் முடிவை வாய்விட்டு பலமாகவே சொன்னான்:

''பிரபாதான் பணயப் பொருள்!''

தன் முடிவை உடனே நடைமுறைக்குக் கொண்டுவர விரும்பிய நாகதத்தன் பலத்த சப்தமாகக் கூப்பிட்டான்:

''பிரபா!''

''அப்பா'' என்று குழைந்து கொண்டே எங்கிருந்தோ ஓடிவந்தாள் பிரபா. மது போதையில் சிவந்திருந்த தன் தந்தையின் கண்களும், சிந்தனையின் கோரத்தில் வாடிக் கிடந்த அவர் கடுகடுத்த முகமும், அம்முகத்தில் தெறிக்கும் ஏமாற்றத்தின் வெறுப்பும், பிரபாவிற்கு அச்சத்தைக் கொடுத்தன.

வெருண்ட மான் பிணை போல அவள் பரிதவித்து நிற்கையில் நாகதத்தன் உறுமிக்கொண்டு சொன்னான்:

''இன்று தொட்டு, இந்தக் கணம்தொட்டு நீ வீட்டை விட்டு எங்குமே வெளிச்செல்லக் கூடாது!''

இந்த நிலையில் தன் தந்தையிடம் எதிர்த்துப் பேசாமலிருப்பதே புத்திசாலித்தனமென்றெண்ணிய பிரபா, ''சரியப்பா'' என்று மட்டும் சொன்னாள்.

''பந்துலனையும் மறந்துவிடு. அவன் என் எண்ணப் படி அரச பதவியைக் கையேற்காத வரை உனக்கும், அவ னுக்கும் திருமணம் நடக்கவே நடக்காது!''

பிரபா மௌனமாகவே நின்றாள்.

''திருமணம் செய்துகொள்ளாமல் சங்கத்திற் சேர்ந்து பிக்குணியாகலாம் என்று எல்லோரும் நினைப்பது போல வும் நீ நினைக்காதே!''

அதற்கும் பிரபா மௌனமாகவே நின்றாள்.

''விரைவில் உனக்கும், இராஜ குலத்தவன் ஒருவனுக் கும் திருமணம் நடக்கும்'' என்று மீண்டும் உறுமினான் நாகதத்தன்.

பிரபா அதிர்ச்சியடைந்தாள். கண்கள் பனிக்கத் தன் தந்தையைப் பரிதாபகரமாகப் பார்த்தாள்.

நாகதத்தன் மீண்டும் இடிபோன்ற குரலிற் சொன் னான்: ''இந்தச் செய்தியை நீ பந்துலனுக்கு அறிவிக்க வேண்டும் என்பதில்லை. ஏற்கனவே நான் அவனுக்கும், உன் மாமியாருக்கும் கூட இதனைத் தெரிவித்துவிட் டேன்!''

பிரபா தலையைக் குனிந்துகொண்டாள். கிரேக்கப் பதுமையைப் போன்று தலைகுனிந்து நின்ற பிரபாவின் கண்ணாடிக்கன்னங்களிலிருந்து வழிந்த கண்ணீர் தளத்திற் பரவப்பட்டிருந்த கருங்கல்லில் மோதிச் சிதறிற்று.

நாகதத்தன் தாடியைத் தடவிய வண்ணம் அங்கும் இங்கும் நடந்துகொண்டே மீண்டும் சொன்னான், ''ஆனால் எதற்கும் பந்துலனுக்கு இரண்டுவார அவகாசம் கொடுத் திருக்கிறேன். அதற்குள் அவன் தன்னை மாற்றிக்கொண்டு உனக்குக் கணவனாகலாம். அதுவரை நீ இவ்வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது. என் இஷ்டத்துக்கு மாறாக எதுவும் நடக்குமானால்......''

சற்றுத் தாமதித்து நாகதத்தன் மீண்டும் கனைத்துக் கொண்டு, ''என் விருப்பத்துக்குமாறாக ஏதும் நடக்குமா னால்— நடக்குமென்று எனக்குத் தோன்றினால்கூட நான் மனிதனாகவே இருக்கமாட்டேன், சரி போ!''

மெதுவாக அவ்விடத்தைவிட்டு நீங்கிய பிரபா, அந்த மண்டபத்தைத் தாண்டியதும் ஓவென்று அழுதுகொண்டே ஓடினாள். அந்தப்புரத்திலேயிருந்த தன் தோழி அனுலா வின் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விசித்து விசித்து அழுதாள்.

★



## 12 அதிகார போகமா, பந்தபாசமா...?

"அலுப்பாக இருக்கிறது. மதியம் திரும்பியபின் போகலாம்'' என்று தன் தாயை சமாதானப்படுத்திவிட்டு மஞ்சத்தில் சாய்ந்த பந்துலன், மீண்டும் கண் விழித்தபோது நண்பகலுக்கு மேல் வெகு நேரம் ஆகியிருந்தது. ஆனால் பொழுது சாய்ந்திருந்தா லும் இன்னமும் வெப்பம் தணியவில்லை.

சாதாரணமாகப் பகல் காலத்திலே தூங்கியறியாத பந்துலனுக்கு, இன்றைய பகல் தூக்கம் சோம்பலையும், அசதியையுமே மேலும் கொடுத்தது. பசியாக இருந்தா லும் உடனடியாக எழுந்து சென்று சாப்பிட வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை, படுக்கையிலிருந்து எழுந்து சென்று மண்குடத்திலிருந்த குளிர்ந்த நீரைக் கிண் ணத்திலூற்றி மடமடவென்று குடித்தான்.

சற்று நேரத்தில் வெயர்த்துக் கொட்டத் தொடங்கி யது. முதுவேனிற் காலமே விசித்திரமானதுதான். காற்று வேகமாக வீசும். ஆனால் அந்தக் காற்றுக்கு வெப்பத்தைத் தணிக்கும் சக்தியோ, குளுமையோ கிடையாது. மாறு

கக் கதிரவனின் கிரணங்களை, நெருப்புத் துண்டங்களாகப் பெயர்த்தெடுத்துக் கொண்டு வந்து நம்மீது சொரியும்!

பிரபாவின் அன்பு, இளந்தென்றல் என்ருல், தன்மேல் மிக்க பாசம் வைத்திருக்கும் தன் மாமனுரின் அன்பு இந்தக் கோடைக்காற்றைப் போல என்று தனக்குள் எண்ணிக் கொண்டே வெயர்த்துக் கொட்டும் தன் உடம்பைத்துவட்டிக்கொண்டு விசிறியை எடுத்து விசிறிக்கொண்டான்.

அப்போது அவன் மஞ்சத்தடிக்கு வந்த ஸ்வர்ணபாலீ "எழுந்துவிட்டாயா பந்துல. நான் கூட இரவு கண் விழித்தமையினுல் என்னை அறியாமலே நித்திரையாகிவிட்டேன். சற்று முன்னர் எழுந்துவந்து பார்த்தபோது நீ கட்டிலில் சுருண்டுகொண்டு ஒரு குழந்தையைப்போலத் தூங்கிக்கொண்டிருந்தாய். அப்போது உன்னைப் பார்க்கவே எனக்கு வேதனையாக இருந்தது. உன் தூக்கத்தைக் கலைக்காமலே சென்றுவிட்டேன். உன் மாமனுரின் புத்திப்படி அரசபோகத்தை சுகிக்காமல் ஏன் அங்கும் இங்கும் அலைந்து உடம்பைக் கெடுத்துக்கொள்ள வேண்டும். சீக்கிரம் வா. சாப்பிடலாம்" என்ருள்.

"எனக்குப் பசிக்கிறதுதான் அம்மா. ஆனுல் சற்றுப் பொறுங்கள். குளித்துவிட்டு வருகிறேன்" என்று வெளியே எழுந்து சென்ருன் பந்துல.

சாப்பிட்டுக்கொண்டிருக்கையிலும் ஸ்வர்ணபாலி பழைய சுலோகத்தையே பாடினுள். "பந்துல, உன் மாமனுருக்கும், உனக்கும் அரசியல் கருத்துக்களிலே அபிப்பிராய பேதமிருக்கலாம். அதற்காக அவரோடு முகம் கொடுத்துப் பேசுவது கூடத்தகாது என்பது உன் அபிப்பிராயமா?"

"நானும் அவரும் பேசிக்கொள்வது எங்கள்பாசத்தை வளர்ப்பதாக அமையாது. அதனுல்தான் நான் அவரோடு பேசுவதைக் கூடியவரையில் தட்டிக் கழித்துக்கொண்டிருக்கிறேன்."

''சரிதான், இன்று நீ அவரோடு பேசித்தான் ஆக வேண்டும். நீ அங்கு போகாவிட்டாலும் அவர் இன்று சாயந்தரம் உன்னைத்தேடி இங்கே வருவார். நீ எங்கும் கிளம்பிவிடாமல் இங்கேயே இரு!''

''அப்படியா?''

''ஏன் ஆச்சரியப்படுகிருய்?''

''அவரது ராஜகம்பீரம் எவருக்கும் தாழ்ந்து போவதை அனுமதிக்காதே அம்மா.''

''தான் பெற்ற மகளுக்காகக் கூடவா?''

''பந்தபாசங்கள் எல்லாம் அவருக்கு இரண்டாம் பட்சமான விஷயங்கள். அரசு என்ற தன் இலட்சியத்தையும், அதனால் ஏற்படும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் காப்பாற்ற மற்றவர்கள் எல்லாம் அவருக்கு வெறுங் கருவிகளே!''

''சரி சரி. உன்னோடு விவாதம் பண்ண என்னால் முடியாது. சாயந்தரமாகிவிட்டது. விளக்கேற்றுவதற்கு முன்னால் அவர் வருவார். நானும், நீ இங்கிருப்பதாகவும், உடனே வரும்படியும் அவருக்குச் சொல்லியனுப்பியிருக்கிறேன். நீ எங்கும் போகாமல் இங்கேயே இரு'' என்று பேச்சை முடித்துக்கொண்டாள் ஸ்வர்ணபாலி.

சாப்பாட்டை முடித்துக்கொண்டு கூடத்துக்கு வந்த போது அங்கே வந்தது நாகதத்தன் அல்ல, அநுலாதான் வந்தாள். அவள் முகம் பேயறைந்ததுபோல இருந்தது.

★



## 13 கனவு நனவாகியபோது!

இரண்டு தினங்கள் கடந்து விட்டன.

அநுலா மூலம் பிரபாவைப் பற்றிய செய்திகளை அறிந்துகொண்ட பந்துலன் குழம்பினான். பிரபாவைச் சந்தித்து ஆறுதல் சொல்ல விரும்பினான். ஆனால் அவளை எங்கே சந்திப்பது? முன்னர் போலப் பிரபா சுதந்திரப் பறவையாக இல்லாமல் கூண்டுக் கிளியாக ஆகிவிட்டாள். ஆற்றங்கரையிலோ, மகாமேக நந்தவனத்திலோ, வேறு எங்கேயுமோ அவளைச் சந்திக்க முயன்றாலும் அது ஆகக் கூடிய காரியமாக இல்லை.

அவளுடைய வீட்டிற்கே போக எண்ணினான். ஆனால் அந்த எண்ணத்தையும் யோசனையின் பின்னர் கைவிட்டு விட்டான்.

நாகதத்தன் தன்னையும், பிரபாவையும் தண்டம் என்ற கடைசி உபாயத்தைப் பிரயோகித்து வழிக்குக் கொண்டுவரவே இப்படிச் செய்திருக்கிறாரே ஒழிய, மேற்கொண்டு ஏதும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க மாட்டார் என நம்பினான்.

ஆனாலும் இந்தத் தண்டனையைப் பிரபா தாங்கிக் கொண்டிருப்பாளா என்ற ஏக்கம் அவனை வருத்தியது.

தன் தாயாரையே பிரபாவிடம் சென்று அவளுக்கு இதமாக இரண்டு வார்த்தைகள் சொல்லும் படி கேட்ட போது, ஸ்வர்ணபாலி அதற்குக் கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

“நான் சொல்ல வேண்டியவைகளையெல்லாம் உனக்குச் சொல்லிவிட்டேன். உன் எதிர்கால வாழ்வைப் பற்

றிய இவ்விவகாரத்தில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நீயே எடுத்துக்கொள். ஆனால் ஒன்று, பிரபாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணும் இந்த வீட்டுக்கு மருமகளாக வருவதைப் பார்த்துக்கொண்டு நான் உயிரோடு இருக்கமாட்டேன். அப்படி ஏதும் நடக்குமாயின் நான் உனக்குத் தாயாகவும் இருக்கமாட்டேன். நான் நாகதத்தன் என்ற பருமகரின் தங்கை. அவருடைய விருப்பத்திற்கு எதிராக நடப்பதை என்னால் கனவுகூடக் காணமுடியாது'' என்று வீராப்போடு பேசித் தன் பேச்சை அந்தமட்டோடு முடித்துக்கொண்டாள் ஸ்வர்ணபாலி.

பந்துலனைப் பயங்கரமான தனிமை வாட்டத் தொடங்கியது. வீடு நிரம்பிய பணியாட்கள், நாடு நிறைந்த நண்பர்கள், அன்பைச் சொரிந்து வளர்த்த தாய், அத்தனை பேரிருந்தும் அவன் தனக்குத்தானே ஒரு தனிமையைச் சிருஷ்டித்துக்கொண்டு அத்தனிமைச் சிறையில் பைத்தியம் பிடித்தவனைப் போல இயங்கிக்கொண்டிருந்தான்.

உணவும், பணமும் நஞ்சாகக் கசந்தன. அறநூல்களையும், லலித ஸாகித்தியங்களையும் கற்றதினால் ஏற்பட்ட ஞானம், அவன் குழப்பத்தைத் தீர்த்துத் தெளிவைத் தரச் சக்தியற்றதாயிருந்தது. மனத்தை ஒருநிலைப்படுத்தி நீண்டநேரம் சிந்தித்திருக்கப் பயின்ற பயிற்சியும் அவன் மனக் குழப்பத்தைத் தீர்க்கவில்லை. அரசியல் விஷயங்களிலும் மக்களின் வாழ்க்கையிலும், அவன் கொண்டிருந்த அக்கறைகூடப் பிரபாவின் சோகம் ததும்பிய முகார விந்தத்தின் தோற்றத்தில் அடியோடு இல்லாமல் போயிற்று.

இக்குழப்பநிலையிலிருந்து தன்னைத்தானே விடுவித்துக் கொள்ள முடியாத பந்துலன் மூன்றும் நாளன்று மதியம் திரும்பிய பின் வீட்டைவிட்டு வெளியேறினான். எங்கே போகிறேன் என்ற பிரக்ஞையேயின்றி, கால்போன போக்கில் அநுரதபுரத்தின் இராஜ வீதிகளில் நடந்துகொண்டிருந்தான்.

பௌர்ணமிக்கு இன்னமும் பல நாட்கள் இருந்தன. அதனால் நகர வீதிகளில் பக்தர்கள் கூட்டம் குறைவாகவே இருந்தது.

''ஆசையே துன்பங்களுக்கெல்லாம் காரணம். ஆசையை அகற்றுபவனே துன்பத்தைத் தவிர்த்தவனாகி றான்'' என்றார் புத்த பகவான்.

''மக்களின் துன்பத்தைத் தவிர்க்கும் மார்க்கத்தைக் கண்டுபிடிப்பதற்காக தன் அழகிய இளம் மனைவியையும், மைந்தனையும் பிரிந்த சித்தார்த்தர் அர்த்த இராத்திரியில் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டார். தானும் இந்நாட்டு மக்களின் துன்பத்தைத் துடைப்பதற்காக வீட்டைவிட் டுப் பிரிந்து வெளியேறும் காலம் வந்துவிட்டதா?'' என்ற சிந்தனையுடன் பந்துலன் நடந்துகொண்டே இருந்தான்.

இருண்டுவிட்டது. எனினும் அந்தகார இருள் அல்ல. வானத்திலே பிறைச் சந்திரன் வெட்டி எறியப்பட்ட நகத்தைப் போல அநாதரவாகக் கிடந்தான். பகல் முழுவதும் சீறியடித்த கோடைக்காற்று சற்றுத் தணிந்து இலை களின் பின்னால் மறைந்து அவைகளை மெதுவாக அசைத் துக்கொண்டிருந்தது.

இளம் பிறையின் மங்கலான வெளிச்சத்தில் கால் போன போக்கில் நடந்த பந்துலன் அபயசிரி விகாரை யைத் தாண்டி நகரின் வடக்கு எல்லையையும் கடந்து கொலம்பலக விகாரத்திற்குச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் ஒரு பாறைமேல் குந்திக்கொண்டான்.

எங்கும் அமைதி! சில் வண்டுகளின் இரைச்சல் அமைதியான இரவைக் கீறிக்கிழித்துக்கொண்டிருந்தது. பந்துலனுக்கு வழித்துணையாக வந்துகொண்டிருந்தபிறைச் சந்திரன் கூட மரக்கிளைகளின் பின்னால் ஒளிந்துகொண் டது. பாறைமேல் அமர்ந்திருந்த பந்துலனுக்குத் துணை யாக பிரபாவின் உருவவெளித் தோற்றமே கண் முன்னால் நின்றது.

பால் நிலவின் ஒளிக்கற்றைகளைப் பிழிந்து எடுத்து தை உருக்கிய தங்கத்தோடு சேர்த்துக் குழப்பிச்

சமைத்தது போல இருந்த அவளின் தேககாந்தியும், கைதேர்ந்த யவனத்துச் சிற்பி தன்னுட்டுப் பளிங்குக்கல்லைப் புறக்கணித்துவிட்டு லங்காதுவீபத்து யானைத் தந்தத்தைக் கொண்டு கடைந்தெடுத்தது போன்ற அவளின் புஜங்களும், மாரி காலத்திலே திடீரென முளைத்தும் படரும் தன் கொடியுடலின் அந்தத்தில் இரத்தச் சிவப்பாய் விகர்ஸித்துக்கொண்டிருக்கும் செங்காந்தள் போன்ற விரல்களும், ஒல்லிய இடையை வளைத்து வீழ்த்தி முறித்து விடுமோ என்று அஞ்சவைக்கும் கச்சணிந்த கொங்கைகளும், வெடித்த கொவ்வைக் கனியாய்ப் பிளந்திருக்கும் இதழ்களும், அந்த இதழ்க் கடைகளில் என்றைக்குமே மறையாத புன் சிரிப்பும், நீலக் கடலிலே வட்டப் பட கோட்டும் வண்ண விழிகளும்......

''நீங்கள் இங்கேயா இருக்கிறீர்கள்''' என்ற யாழின் ஓசை அவனின் கனவைக் கலைத்தது.

''யார்இது, பிரபாவா? தான் காண்பதுகனவா? அல்லது நனவா?'' பந்துலனுல் எதையுமே நிர்ணயித்துக் கொள்ள முடியவில்லை. ஆனுல் அந்தக் கனவு அவன் அருகில் அமர்ந்து அவனுடைய மார்பில் தன் தலையைச் சாய்த்தது. அக்கனவின் மென்மையான கூந்தலின் ஸ்பரிச சுகத்தில் அவன் தொடைகள் புளகாங்கிதமடைந்தன. முதுகைத் தடவிய அவனது கைகள் தாம் பிறந்ததின் பயனையே அடைந்துவிட்ட பெருமையில் தம்மை மறந்தன. நீலக் கடலிலே வட்டப்படகோட்டும் வண்ண விழிகளின் ஒளி அவன் நெஞ்சைத் தீண்டியபோது, ''பிரபா! இந்த நேரத்தில் இங்கே எப்படி வந்தாய்?'' என்ருன் பதைப்புடன்,

பிரபா பதில் சொல்லவில்லை. அவளின் நெஞ்சைத் தீய்த்துக்கொண்டிருக்கும் கண்ணீரால், ''ஏன் வந்தாய்?' என்ற கேள்விக்குப் பதில் சொல்பவள் போல அவள் அழுதுகொண்டே இருந்தாள்.

பந்துலனின் கண்களும் பனித்தன. பிரபா தன் அழு கையை ஒரு வழியாக முடித்துக்கொண்டு நிமிர்ந்தபோது பந்துலன் சொன்னான்: ''பிரபா! கவலைப்படாதே. நாம் அழுவதற்குப் பிறந்தவர்களல்ல.''

''இனிமேல் அழமாட்டேன்.''

''ஆம், அழுகை கோழைகளுக்குரியது. நெஞ்சில் வீர மும், துணிச்சலும் உள்ளவர்களுக்கே காதலிக்கவும் உரிமை இருக்கின்றது. பிரபா! என் கோழைத்தனத்திற் காக நான் வெட்கப்படுகிறேன். என்ன இருந்தாலும் நீ நாகதத்தரின் மகள். உனக்குள்ள துணிச்சல் எனக் கில்லை.''

''அப்பா வீட்டிலே இல்லை. அதுதான் எனக்குத்துணிச் சல் பிறந்தது.''

''இங்கே எப்படி வந்தாய்?''

''நகரத்து வீதிகளிலே உங்களைக் கண்ட நானும், அநுலாவும் சந்தடியின்றித் தங்களைப் பின் தொடர்ந் தோம்.''

''அநுலா எங்கே?''

''நீங்கள் இந்தக் கல்லில் குந்தியதுமே அவளும் வந்த இடத்திலேயே நின்று கொண்டாள்.''

''கட்டளையை மீறுவதை உன் தந்தையார் அறிந்து கொண்டால்...''

''என்றைக்காவது ஒரு நாள் அவரின் கட்டளையை நான் மீறவேண்டியவள்தானே! அவரும் அதைத்தெரிந்து கொள்ளத்தான் வேண்டியிருக்கும். அந்த என்றைக்காவது ஒருநாள், இன்றையாகவே இருக்கலாம் என்ற தைரியத் தோடுதான் வந்தேன்.''

''பிரபா!''

தன் இதயம் நிறைந்து நின்ற ஆசையை எல்லாம் ஒன்றுதிரட்டி அவளை இறுகத் தழுவிக்கொண்டே ''நான் பாக்கியசாலி பிரபா!'' என்றான் பந்துலன்.

''நானுந்தான்'' என்று எதிரொலித்தாள் பிரபா.

தன் தழுவலைச் சற்று நெகிழ்த்துக்கொண்டே ''என் எதிர்கால வாழ்க்கை இன்னும் சில மாதங்களுக்கு காட்டிலும் கரம்பிலும் துன்பம் நிறைந்ததாக அமையும். அந்த வாழ்க்கைக்கு உன்னையும் ஆட்படுத்திவிட்டேன் என்பதுதான் எனக்குத் துக்கத்தைத் தருகிறது'' என்றான் பந்துலன்.

''உங்களுக்கு ராமாயணக் கதை தெரியுமா?''

''தெரியாமலென்ன? காட்டிலே இன்பமாகக் குலவிக் கொண்டிருந்த கிரௌஞ்சப் பட்சிகளில் ஒன்றை வேடன் ஒருவன் அம்பெய்திக் கொன்றான். ஆணை இழந்த சோகத்தில் பெண் பறவை கூவியழுதது. அப்பெண் பறவையின் சோகக் குரல் கொடுத்த உள்ளுணர்வின் உந்துதலால், முற்றும் துறந்த மகாமுனிவனான வால்மீகி, மனித மனத்தின் சந்துபொந்துகளில் எல்லாம் பிரவாகித்துப் பாய்ந்து உணர்வூட்டவல்லதாய் எழுதிய அந்த அமர காவியத்தை நான் ரசித்துப் படித்திருக்கிறேன்.''

''அக்காவியத்தை நான் தொட்டுப் பார்த்ததுகூட இல்லை. ஆனால், அக்காவிய நாயகியான சீதைதன் நாயகனோடு காட்டுக்குச் சென்றாள் என்பது மட்டும் எனக்குத் தெரியும். வாருங்கள், இப்போதே போகலாம்.''

''எங்கே பிரபா?''

''நீங்கள் போகவேண்டிய இடத்துக்குத்தான்.''

''இன்னமும் அதற்குக் காலம் வரவில்லை.''

''அப்படியானால் இங்கேயே இருந்துவிடலாம்'' என்று சிரித்தாள் பிரபா.

அவள் சிரிப்பதைக் கண்ட பந்துலன் சொன்னான்: ''குழந்தை போலக் களங்கமற்றுச் சிரிக்கிறாய் பிரபா. ஆனால் நமது எதிர்கால வாழ்க்கையில் சிரிப்புக்கு இடமிருக்குமோ என்னவோ? நீ இங்கே வந்ததும், என்னைச் சந்தித்ததும் உன் தந்தைக்குத் தெரியவந்தால் என்ன செய்வாரென்று எவராலுமே சொல்லமுடியாது.''

''அவர் சொல்வதை நீங்கள் அங்கீகரித்தால் எந்தப் பிரச்சினையுமே ஏற்படாது. உங்கள் அங்கீகாரம் சிறிது

காலம் தாழ்த்தியும் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் அவர் உடனடியாக ஏதும் செய்யமாட்டார்.''

''இப்போது அவர் எங்கே போய்விட்டார்?''

''இத்தனை நேரமும் நானும் அதைச் சொல்ல மறந்துவிட்டேன். வடக்கே சேரநாட்டிலிருந்து இரண்டு வியாபாரிகள், மகா தீர்த்தக் கரையில் வந்து இறங்குவார்களாம். அவர்களை வரவேற்கத்தான் அப்பா சென்றிருக்கிறார்.''

''யார், வியாபாரிகளா? இராஜாங்க முறையிலா அவர்களை வரவேற்கச் சென்றிருக்கிறார்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. அவர் வருவதற்கு இன்னமும் நான்கு நாட்கள் ஆகும் என்பது மட்டும் தெரியும்'' என்றாள் பிரபா.

''அப்படியா?''

பந்துலன் சிந்தனையில் ஆழ்ந்தான். ''நாகதத்தரே நேரிற் சென்று வரவேற்க, அவ்வியாபாரிகள் அப்படி என்னமுக்கியத்துவம் பெற்றவர்கள்?''இவ்வினாவுக்கு விடையைத் தேடி பந்துலனின் மனம் குழம்பிக்கொண்டிருந்தது.

மரங்களின் இலைகளிடையே சிக்கிக்கொண்டிருந்த வான் பிறை ஆகாயத்தைவிட்டு முற்றாகவே மறைந்துவிட்டது.

பந்துலன் யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட பிரபா சொன்னாள்: ''அதிகமாகச் சிந்திப்பதனாலும் ஆக்கபூர்வமாக எதையும் சாதித்துவிட முடியாது. அப்பாவினுடைய அலுவல்கள் எப்படியிருந்தாலும் நமக்கென்ன? அவர்களுடைய செயல்கள் நம் பிணைப்பைப் பிளப்பதாக எப்போது எனக்குப்படுகின்றதோ அன்றே நான் வீட்டை விட்டுப் புறப்பட்டுத் தங்களை அடைந்துவிடுவேன்.''

''நீ துணிச்சல்காரிதான்!''

''நீங்கள்தானே சொன்னீர்கள், வீரமும் துணிச்சலுமற்றவன் காதலிப்பதற்கே தகுதியற்றவன் என்று!''

''நான் எப்போது எங்கே இருப்பேன் என்பது உனக்குத் தெரியவேண்டாமா?''

''அதைத் தெரிந்துகொள்ளத்தான் இப்போது வந்தேன். இந்தக் கணம்தொட்டு நீங்கள் எப்போது எங்கே இருக்கிறீர்கள் என்ற செய்தியை நான் தெளிவாக அறிந்துகொண்டே இருப்பதற்கு ஏற்பாடு பண்ணுங்கள். அந்த விஷயம் மட்டும் எனக்குத் தெரியுமானால் அப்பாவின் பிடியிலிருந்து என்னைக் காப்பாற்றிக்கொள்ள எனக்குத் தெரியும். இப்போது நான் செல்லவேண்டும்.''

பந்துலன் மீண்டும் அவளை இறுகத் தழுவிக்கொண்டான். இருவருக்குமே பிரிய மனமில்லை, விலக விருப்பமில்லை. ஆனால் அநுலா அந்தப் பக்கமாக வரவே, ''விடுங்கள் நான் போகவேண்டும்'' என்று எழுந்து நடந்தாள் பிரபா.

''நாளைக்கு நான் மகா நதிக்கரையோரமாக உள்ள கிராமங்களுக்குப் போகிறேன். புறப்படுமுன்னர் உனக்கு ..........''

''அநுலா மூலம் தெரிவியுங்கள்'' என்று கூறிவிட்டு இருளிலே மறைந்தாள் பிரபா.

களங்கமற்ற வானத்திலே ஆயிரமாயிரம் தாராக்கணங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. நட்சத்திரங்களின் ஒளியில் பந்துலனும் கைகளை வீசிக்கொண்டு வேகமாக நடந்தான். சொல்லிலே வடிக்க முடியாத இன்ப நினைவுகள் பிரபஞ்சத்தை நிறைக்கும் குழலின் நாதமாய் அவன் மனத்தை நிறைத்து நின்றன. ஆனால் அந்தநிறைவை ''யார் இந்த வியாபாரிகள்?'' என்ற வினா அலைக்கழித்தது.

''அவ்வியாபாரிகள் ஏற்கனவே இந்நாட்டுக்குப் பரிச்சயமான சேனனும், குட்டகனுமா? அப்படியானால் அவர்களைப் பருமகரே நேரிற் சென்று வரவேற்க வேண்டியதேன்? அவர்கள் சாதாரண வியாபாரிகளாக மட்டும் வருகிறார்களா? அல்லது படைக்கலங்களை விற்கவருகிறார்

களா?'' என்ற வினுக்கள் அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்தன.

★



## 14 லட்சியப் பயணத்தின் ஆரம்பம்...!

தன் நண்பன் காமினியும், மற்றவர்களும் ராஜரட்டையின் கிராமங்களிலே மக்களோடு மக்களாகச் சேர்ந்து கொண்டு, அம்மக்களிடையே புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான விதைகளை விதைத்துக் கொண்டிருப்பார்கள். அவர்களைச் சென்று காணவேண்டும் என்று பந்துலன் விரும்பினுன். பிரபாவைச் சந்தித்த பின்னர் அவன் மனதிலே புதிய தெம்பு பிறந்திருந்தாலும், வியாபாரிகளுக்கும், தனது மாமனுருக்கும் ஏற்படவிருக்கும் புதிய உறவை அறிந்துகொள்ள வேண்டும் என்பதிலும் நாட்டம் அதிகமாக இருந்தது.

ஜம்புத்துவீபத்தின் சமுதாய நிலையிலே வியாபாரிகள் பெற்றிருக்கும் செல்வாக்கு அவனுக்கு ஞாபகத்திற்கு வந்தது. கங்கைச் சமவெளிப் பிரதேசத்திலே நிலத்தை உழுது விவசாயம் செய்யும் நாகரீகம் நெடுங்காலமாகப் பரவியிருந்தாலும், சமவெளிக்குத் தெற்கேயும், வடக்கேயும் மந்தை மேய்க்கும் சமுதாயமும் அலைந்து திரிந்து வாழ்ந்து கொண்டிருந்தது. இந்த இரு சமுதாயத்தினருக்குமிடையில் பண்டமாற்றுச் செய்வதில் வியாபாரிகள் பொன் குவித்தார்கள். அத்தோடு வாரணுசி நகரத்துப்

பட்டையும், தெற்கே வெகு தொலைவிலிருக்கும் பாண்டி நாட்டு முத்தையும், மேற்கேயிருந்து வரும் யவனர்க்குப் பண்டமாற்றுச் செய்வதிலும், மேலும் செல்வந்தரானார்கள். இதன் காரணமாக அந்த வியாபார சமுதாயம், சாதாரணராகவும் சாமான்யராகவும் கருதப்பட்ட விவசாய சமூகத்தினருக்கும் மேலானவர்களாகவும் தங்களுக்கும் மேல்மட்டத்திலிருந்த சைத்திரியர்களுக்குச் சமானமானவர்களாகவும் தலையெடுத்திருந்தார்கள். பேரரசரான அசோகர் கூட வைசிய குலத்துப் பெண் ஒருத்தியை மணஞ்செய்யும் அளவுக்கு அவர்களின் சமுதாய நிலை உயர்ந்திருந்தது.

தம்மிடமிருந்த பொருள் காரணமாகவும் போருக்குத் தேவையான ஆயுதங்களையும், குதிரைகளையும் வியாபார நிமித்தம் சேர்த்து வைத்திருப்பதால் வியாபாரிகளின் உதவி அரசர்களுக்குத் தேவைப்பட்டது. பல்வேறு அரசர்கள் வியாபாரிகளினால் ஆட்டிப்படைக்கப்பட்டார்கள்.

சேனனும், குட்டகனும்கூட இப்படியான வியாபார கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்தான். தென்பாண்டிக் கடற்கரையிலுள்ள கொற்கையிலிருந்து கடல் கடந்து 'மகாதித்த'வில் இறங்குவார்கள். உள்நாட்டிலே குதிரை மூலம் பயணம் செய்து வியாபாரஞ் செய்வார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக அவர்கள் இந்த நாட்டோடு தொடர்புடையவர்களாக இருக்கிறார்கள். இலங்காதுவீபத்தில் இருந்து யானைத் தந்தங்களையும், முத்துக்களையும், மாணிக்கக் கற்களையும் அவர்கள் வாங்கிப் பாண்டி நாட்டுக்கும், அதற்கும் அப்பால் அங்கிருந்து யவனத்திற்கும் மிசிரத்திற்கும் அனுப்பினார்கள். தாமிர ஆயுதங்களைப் பாவித்துக் கொண்டிருந்த பிற்போக்கான சமூகத்தினரிடையே கூட அவர்களது வருகையினால் இரும்பு ஆயுதங்கள் தலையெடுத்துவிட்டன. இந்த மாற்றம் சமூகத்திலே மிகவும் முக்கியமானதாக இருப்பினும் அதைப் பலர் சரிவர உணர்ந்துகொள்ளவில்லை. ஆனால் அந்த வியாபாரிகளின்

பலமும் செல்வாக்கும் அவர்களின் ஆயுதங்களிலேயே தங்கியிருக்கின்றன என்பதைப் பந்துலன் உணர்வான். பொன்னும் பொருளும் அவர்களிடம் குவிந்திருந்தமையால் அவ்வியாபாரிகளுக்கு இந்த நாட்டிலே எடுபிடிஆட்கள் ஏராளமாக இருந்தனர். ஏன்? தேவையானபோது தேவையான ஆயுதங்களையும், ஆட்களையும் கொண்டுவர அவர்களிடம் ஏராளமான நாவாய்களும் இருக்கின்றன என்பதும் பந்துலனின் சிந்தனையை முடுக்கிக்கொண்டிருந்தன.

சாதாரண வியாபாரிகளாகவே அரசாங்கம் அவர்களை இதுவரை கருதிவந்தது. ஆனுல், இன்று அரசனின் உயர்ந்த உத்தியோகத்தரான பருமகரே அவர்களை வரவேற்க மகாதீர்த்தக் கடற்கரை வரை சென்றிருக்கிருர் என்பது இன்னமும் சற்று ஆழமாக யோசிக்கவேண்டிய தொன்ருகவே பந்துலனுக்குப்பட்டது.

* பாலாவி முந்தல் ஆற்றங்கரையில் அவ்வியாபாரிகளின் பண்டகசாலைகளும், கிடங்குகளுமிருந்தன. ஆனுல் அவர்கள் இந்நாட்டில் இருக்கும் போதெல்லாம் அநுரதபுரத்திலேயே அதிக நாட்களைக் கழித்தார்கள். அரச மட்டத்திலான உத்தியோகத்தர்களிடமும், ஏன்? அரசர்களிடமும்கூட அவர்களுக்குச் செல்வாக்கிருந்தது. அநுரதபுரத்தில் அவர்களுக்கென ஒரு மாளிகைகூட இருக்கின்றது. இந்த நிலையில் அவர்கள் அநுரதபுரம் வரும்வரைகூடக் காத்திராமல் பருமகர் ஏன் அவர்களைத் தேடிப் போகவேண்டும்? என்ற விஞவிற்கு விடை கண்டுபிடிக்கத்தான் அநுரதபுர நகரத்திலேயே இருக்க வேண்டுமா? என்று குழம்பிய பந்துலனுக்கு, அவர் திரும்புவதற்கு நான்கு நாட்கள் ஆகுமென்று பிரபா கூறியதும் ஞாபகத்திற்கு வந்தது.

* டொலமி பலேசிமுண்டு எனக் குறிப்பிடுவது இதனையே! (Tamils in Ceylon By C.S.Navaratnam)

இந்த நான்கு நாட்களுக்கும் தான் வீட்டிலேயே அடைந்துகிடப்பதா? அல்லது தான் ஏற்கனவே திட்டமிட்டபடி அநுரதபுர நகரின் தென் கிழக்காகச் சென்று பந்துகாபயன் தன் மாமன்மாருக்கு எதிராகப் படை நடத்தி வந்த பாதையில் மகாநதி தீரமாக இருக்கும் 'நொலுகம' வரைக்கும் சென்று நான்கு நாட்களுக்குள்ளாக மீண்டும் அநுரதபுரம் திரும்புவதா? என்று யோசித்தான். தன் தோழர்கள் கிராமம் கிராமமாக அலைந்துகொண்டிருக்கையில் தான்மட்டும் வீட்டிலே வாளாவிருப்பதையும் பந்துலன் விரும்பவில்லை.

பந்துலன் இவ்வாறு குழம்பிக்கொண்டிருக்கையில் காமினியிடமிருந்து செய்தி வந்தது. திட்டமிட்டபடி காரியங்கள் நடப்பதாகவும், பந்துலன் தற்போதைக்கு எங்கும் வரவேண்டிய தேவையில்லை என்றும் செய்திகொண்டு வந்திருந்த தூதன் அவனுக்குத் தெரிவித்தான். அந்தச் செய்தியைக் கேட்டதும், கடம்ப நதிக் கரைவழியே மேற்குமுகமாகச் சென்று மகாதித்தவரையுள்ள கிராமங்களுக்குச் செல்வது என்று இறுதியாகத் தீர்மானித்துக் கொண்டான்.

அவ்வழியிலே சேனனையும், குட்டகனையும் சந்திக்கலாம். அவர்களைச் சந்திக்காவிட்டாலும் அவர்களுக்கும் தன் மாமனுருக்கும் இடையிலுள்ள சந்திப்பின் நோக்கங்களையோ, பலாபலன்களையோ மோப்பம் பிடிக்கலாம் என்றெண்ணிக்கொண்டு பிரயாணத்திற்குத் தயாரானுன் பந்துலன்.

அவன் தயாராவதைக் கண்ட சுவர்ணபாலி கேட்டாள்:

''எங்கே புறப்படுகிருய்?''

''இந்தக் கேள்விக்கு எத்தனை தடவை விடை சொல்லிவிட்டேன். இந்த நாட்டின் மூலைமுடுக்குகளெல்லாம் சுற்றிப்பார்ப்பதுதான் இன்னும் சில தினங்களுக்கு என் வேலையாக இருக்கும்.''

''இப்படி அலைவதனால் உனக்கு என்ன பலன் உண்டாகப்போகிறதோ? எனக்கென்னவோ உன் போக்கு ஒன்றுமே விளங்கவில்லை'' என்று அலுத்துக்கொண்ட சுவர்ண பாலி மீண்டும், ''உன் பிடிவாதத்தினால் உன் மாமனார் கூட மனமுடைந்துவிட்டார். அதனால்தான் இங்கு வருகிறேன் என்று சொன்னவர்கூட வரவில்லை'' என்றாள்.

''அப்படியில்லையம்மா... மிக முக்கியமான அரசாங்க அலுவலாக அவர் வெளியூர் சென்றிருக்கிறார். உன் மனத் திருப்திக்காகவேனும் நான் அவரைச் சந்திக்கவேண்டும் என்பதற்காகத்தான், நான் அவரைத் தேடிக்கொண்டு அவர் போன திக்கிலேயே போகிறேன்'' என்றான் பந்துலன்.

''உண்மையாகவா?'' என்று முகம் மலரக் கேட்டாள் ஸ்வர்ணபாலி.

''உண்மையாகத்தான்அம்மா.அரண்மனைக்காரியமாக மாமா மகாதித்தவுக்குப் போகிறாராம். அவர் வர இன்னும் சில நாட்களாகலாமாம். அதனால் அங்கேயே சென்று நான் அவரைச் சந்திக்க விரும்புகிறேன். ஆனால் அவர் என்னோடு முகங்கொடுத்துப் பேசுவார் என்று நான் நினைக்கவில்லை. பிரபாவைக்கூட வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது, என்னோடு பேசவே கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறாராமே. இதெல்லாம் உனக்குத் தெரியாதா அம்மா?''

''இவைகளெல்லாம் உனக்குத் தெரிந்திருக்கிறதே, அதுவே போதும். உனக்கு இப்போதுதான் நல்ல காலம் பிறந்திருக்கின்றது. உடனே போய்வா மகனே! மகாதித்தக் கடலோரத்திலே இந்த நாட்டின் பழம்பெரும் லிங்கமும் கோயிலும் இருக்கிறது. அதையும் தரிசித்து அருள் பெற்றுக்கொள்'' என்று வழியனுப்பி வைத்தாள் ஸ்வர்ண பாலி.

பந்துலனுக்கு உள்ளூரவேதனையாக இருந்தது. பெற்று வளர்த்த தாயையே பொய் சொல்லி ஏமாற்றுகிறோமே என்ற எண்ணம் மனதில் முள்ளாக உறுத்திற்று.

ஆனாலும் சில விடயங்களில் பொய் சொல்வதுகூட தேவையானதுதானென்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு குதிரையில் ஏறிப்புறப்பட்டான்.

சற்றுநேரத்தில் அவன் சென்ற புரவி, அநுரதபுர நகரைக் கடந்து வடக்கே ஜம்புகோலாவிற்குச் செல்லும் ராஜபாட்டையில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது.

★

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு ERLALAI WEST
சுன்னாகம் CHUNNAKAM



## 15 கோபூதியின் எச்சரிக்கை!

சூரத்தீச மன்னர் மனம் குழம்பிப் போயிருந்தார். கோபூதியின் அநுராதபுர விஜயம் அவருக்கும் விளங்கிக் கொள்ளக் கூடாததாகவேயிருந்தது. நாகதத்தனின் வாதங்களினால், கோபூதி புத்த மதப் பிரசாரத்தையும் பௌத்த பிக்குகளுக்குத் தான் கொடுக்கும் ஆதரவையும் தடுப்பதையுமே நோக்கமாகக் கொண்டிருக்கிறானென்று அவர் நம்பினார்.

ஆனால் மகா விகாரைக் குருக்கள் தன்னைப் 'புண்ணிய பொக்கிஷம்' என ஏந்திப் புகழ்வது அவருக்குப் பிரியமான தொன்றாகவே இருந்தது. அந்த மகா விகாரைப் பிக்குகள் நாகரங்கன விகாரத்து வேலையை ஆரம்பிக்கும்படியும், மகிந்ததேரர் மறைந்த இருபதாண்டுப் பூர்த்தியைப் பிரமாதமாகக் கொண்டாடும்படியும் அவரை வற்புறுத்திக் கொண்டேயிருந்தனர்.

அவையிரண்டையும் கோபூதி மறைமுகமாக எதிர்க்கிறார் என்றே அரசருக்குத் தோன்றியது. மக்கள் கோபூ

தியை மதித்துப் பாராட்டுவதும், வேள்விகளையும், யாகங்களையும் அவரைக் கொண்டு செய்வதும் நாட்டிலே என்ன மாற்றத்தை ஏற்படுத்துமோ என்று மன்னர் பயந்தார். ஆனாலும் கோபூதி படைபலத்தைக் கூட்டித் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென வற்புறுத்துவதினால் அவர் தன்னிடம் அன்புள்ளவ்ராக இருக்கின்றார் என்றே அரசருக்குத் தோன்றிற்று. அவர் சொல்லுவதைப் போலப் படைபலத்தைப் பெருக்குவது நியாயமானதே என மன்னர் கருதினார். நாகதத்தனின் யோசனைப்படி பந்துலனைத் தளபதியாக நியமிப்பதற்கும் அவர் ஆயத்தமாக இருந்தார்.

எசாலப் பூரணை கழிந்துவிட்டது. அந்தப் பூரணை தினத்து வழிபாடுகளின்போது மகா விகாரையின் நாயக்க தேரர் நாகரங்கன விகாரையின் வேலைகளைத் தொடங்கும்படி மீண்டும் வற்புறுத்தினார். அன்னாரது வேண்டுகோளைப் புறக்கணிக்க முடியாத மனோநிலையில் சூரத்தீச மன்னர் யோசித்துக்கொண்டிருக்கையில் கோபூதி அரசரிடம் விடைபெற்றுக்கொள்ள வந்தார்.

''அத்தனை அவசரமாக ஏன் புறப்பட வேண்டும்? எனது அரண்மனையில் தங்கட்கு ஏதேனும் சௌகரியக் குறைவாக இருக்கின்றதா?'' என்று மன்னர் கேட்டார்.

''அடடா! அப்படி ஒன்றுமேயில்லை. மனைவி மக்களைப் பிரிந்து ஒரு மாதத்திற்கு மேலாக இங்கே இருந்துவிட்டேன். இன்னமும் இருக்கமுடியுமா அரசே?''

''என்றாலும் மகிந்த தேரர் மறைவின் இருபதாண்டுப் பூர்த்தி விழாவரையிலாவது தாங்கள் இங்கிருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்''.

''அவ்விழாவிற்கு மீண்டும் ஒரு தடவை இங்கே வந்தாற் போகிறது. ஆனால்......''

''என்ன ஆனால்... சொல்லுங்கள்''.

''சொல்லவேண்டியவைகளையெல்லாம் நான் சொல்லியே விட்டேன். மிக்க ஆடம்பரமான விழாக்கள் அனாவசியம் என்று நினைக்கிறேன்.''

''நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். நாகரங்கன விகாரையின் பூர்த்தி விழாவுடனேயே மகிந்த தேரரின் நினைவு விழாவையும் கொண்டாடிவிடலாம்''.

''ஆனல் விகாரங் கட்டத் தொடங்குகையில் நீ சில உண்மைகளைத் தெரிந்துகொள்வாய்.''

''என்ன புதிர் போடுகிறீர்கள் பிரபு!''

''புதிர் ஒன்றுமேயில்லை. உன் ஆட்சி நெடுங்காலம் தழைக்கவேண்டுமென்று நான் மனப்பூர்வமாக விரும்புகின்றேன்.''

''என் மனமார்ந்த நன்றி சுவாமி.''

''ஆட்சி தழைத்தோங்கப் படைபலம் அத்தியாவசியமானது. நாகதத்தனின் மருமகன் உன் படைத் தலைவனுக அமர்வான் என்று நான் நம்பவில்லை. அவன் சம்மதிப்பானுக இருந்தால் அது நல்லதுதான். அவன் மிக நேர்மையானவன்!''

''ஏன் சம்மதிக்கமாட்டான் என்று கருதுகிறீர்கள்?''

''என்னவோ அப்படிச் சொல்லத்தான் இப்போது எனக்குத் தோன்றுகிறது. நான் ஏற்கனவே கூறியதுபோல நாகரங்கன விகாரையைக் கட்ட ஆரம்பிக்கையில் உனக்கு அவைகள் எல்லாம் விளங்கும். அவசியம் ஏற்பட்டால் அப்போது நான் மீண்டும் இங்கே வருவேன். இப்போது எனக்கு விடை கொடு'' என்று முடித்தார் கோபூதி.

பல்லக்கு வரவழைக்கப்பட்டது.

கோபூதி பல்லக்கில் ஏறி அமர்ந்துகொண்டதும் அரசரே தனது மெய்க் காவலர்களும், சில பிரதானிகளும் புடைசூழ நகர வீதிகளிலே ஊர்வலமாக அவரை அழைத்துச் சென்ருர். நகரின் மேற்கு வாயிலைக் கடந்ததும் சூரத்தீசன் கோபூதியை நமஸ்கரித்து விடைபெற்றுக்கொண்டார். கோபூதி பல்லக்கில் இருந்தபடியே அரசரை ஆசீர்வதித்தார். பல்லக்கு பிச்சாண்டியாவிற்கு வழிகொண்டது.

கோபூதி அநுராதபுரத்தைவிட்டு நீங்கினுலும் அந்தப் பிராமணர் விதைத்த விதைகள் அரசர் மனத்திலே முளை

கொண்டு இலை விரித்துப் படர்ந்துகொண்டிருந்தன. பந்துலனைப் படைத் தலைமையை ஏற்கும்படி செய்ய நாகதத்தன் அவகாசம் கேட்பதும், அவன் படைத் தலைமையை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று கோபூதி சொல்வதும் அவரது சிந்தனைகளுக்கு இன்னமும் சிக்கலை ஏற்படுத்தின. பந்துலன் மகாமம் வரையுள்ள கிராமங்களைப் பார்க்கவேண்டுமென்று சொல்வதாகவும், அதுவரை தன் மணவினையைக் கூடத் தள்ளி வைக்கும்படி நாகதத்தனைக் கேட்பதாகவும் அரசரின் காதுகளுக்கு ஏற்கனவே எட்டிய செய்திகள் அவருக்குப் புதிய புதிய அர்த்தங்களைக் கற்பித்துக்கொண்டிருந்தன.

தனது மூத்த சகோதரர் தேவநம்பிய தீசரின் மனைவியினால் நஞ்சூட்டிக் கொல்ல முயற்சிக்கப்பட்ட இளைய சகோதரர் மகாநாகன், தெற்கே தன் குடும்பத்துடன் தப்பியோடிச் சென்றதைச் சூரத்தீசர் அறிந்திருந்தார். அந்த மகாநாகன், மாகம என்ற நகரத்தைக் கட்டியெழுப்பி அதன் வடக்கே மகா நதிதீரம் வரையுள்ள நாட்டை ஆண்டு வருவதையும், மகாநதியின் கரையில் மஹியங்கன என்ற இடத்திற் பெரிய விகாரையைக் கட்டியிருப்பதையும் அவர் அறிந்திருந்தார்.

மகா நாகனின் மைந்தன் யற்ருலதீசன் மேற்கே களனி நதி தீரத்திற் தனியரசு செலுத்துவதும் அவருக்குத் தெரிந்திருந்தது.

அப்புதிய ராச்சியங்களோடு இணைந்து பந்துலன் இராஜரட்ட இராச்சியத்தை வீழ்த்த முயல்கிருனு? என்ற சந்தேகம் சூரத்தீசரின் மனதிலே எழுந்தது.

அவனேடு சேர்ந்துகொண்டு அமைச்சன் நாகதத்தனும் என்னை வீழ்த்த முயற்சிக்கிருனு என்றும் யோசித்தார் சூரத்தீசர்.

கோபூதிக்கு புத்த மதம் பிடித்தமில்லாததாக இருக்கலாம். ஆனல் அவருடைய பரம்பரையே என் சகோதரர் தேவநம்பிய தீசனின் ஆதரவில் தழைத்து வளர்ந்தது. அந்த நன்றிக் கடனைக் கோபூதி குடும்பத்தினர்

எவருமே என்றைக்கும் மறக்க மாட்டார்கள். அந்த நன்றி உணர்வோடுதான் கோபூதி என்னை எச்சரிக்கை செய்தாரா? என்றெல்லாம் எண்ணிக் குழம்பினார் சூரத்தீசன்.

எதற்கும் ஒரு வாரத்துள் இவ்விஷயத்திற்கு முடிவுகட்ட வேண்டும் என்று தீர்மானித்துக்கொண்ட சூரத்தீசன், 'மாகமத்திலும், களனியிலும் வளர்ந்துகொண்டு வரும் ராச்சியங்கள் நம்மவரதே. அங்கும் புத்த மதமே அரச ஆதரவு பெற்று வளர்ந்துகொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் மகா விகாரைப் பிக்குகளே அவ்விரு ராச்சியத்தின் மீதும் செல்வாக்குடையவராக இருப்பதற்குத் தகுதி பெற்றவர்கள். மகா விகாரையே இந்த நாட்டின் பௌத்த தலைமைப் பீடமாக என்றென்றைக்கும் இருக்க முடியும். அந்த மகா விகாரைப் பிக்குகளின் ஆதரவு எனக்கு இருக்கும் வரையிலும், இலங்கா துவீபம் முழுவதற்கும் தலைவனாக இருக்கும் வாய்ப்பும் எனக்கே இருக்கும். ஆகவே மகா விகாரைப் பிக்குகளைத் திருப்திப் படுத்தவாவது நாகரங்கன விகாரத்தை உடனடியாகக் கட்டத் தொடங்கவேண்டும்' என்றும் தீர்மானித்துக்கொண்டார்.

அதன் கட்டு வேலைகளைத் தொடங்கினால்தான் கோபூதி கூறிய 'அதிர்ச்சி' களையும் கண்டுபிடிக்கலாம் என்றெண்ணிய சூரத்தீசன், நாகதத்தனையும் கூட ஆலோசியாமல் விகாரத்தைக் கட்டுவதற்காகத் தான் எடுத்துக்கொண்ட முடிபை மகா விகாரையின் மகா நாயக தேரரிடம் தெரிவித்தார்.


அச்செய்தியைக் கேட்ட மகாநாயக்க தேரர், மனம் நிறைந்து அரசனை வாழ்த்தினார். மும் மணிகளினதும் அருள் அரசனுக்குக் கிடைக்கவேண்டிப் பிரார்த்தித்தார்.

தன் பிரார்த்தனைகளை முடித்துக்கொண்ட நாயக்க தேரர், கட்டிட வேலைகளைத் தொடங்குவதற்கான சுப நேரத்தையும் கணித்துக் கொடுத்தார், அச்சுபநேரம், இன்னமும் பத்து நாட்களின் பின்னால், அமாவாசைத்

தினத்திற்கு இரு நாட்களின் முன்னராக மதிய நேரத்தில் அமைந்திருந்தது.

அரண்மனைக்குத் திரும்பிய சூரத்தீசன், நாகதத்தனின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார்.

★



## 16 காட்டுப் பாதையில் ஒரு முதியவர்.....!

வடக்கே ஜம்புகோளத்திற்குச் செல்லும் இராஜபாட்டையில் தன் புரவியைச் செலுத்திய பந்துலன், காததூரம் சென்ற பின்னர் மேற்கே செல்லும் கிளைப் பாதை வழியாகச் செல்லலானுன்.

சூரிய கிரணங்கள் பூமியைத் தீண்டாதபடி அடர்ந்து வளர்ந்திருக்கும் இருண்ட காட்டினூடே அவன் குதிரை சென்றுகொண்டிருந்தது. மேலும் இரண்டு காத தூரங்களுக்கு மேல் அந்தப் பயங்கரமான, நிர்மானுஷ்யமான காட்டுப் பாதையில் தான் செல்லவேண்டியிருக்கும் என்பதைப் பந்துலன் அறிந்தே இருந்தான். தமிழ் நாட்டுக் கொற்கையிலிருந்தும், பூம்புகாரிலிருந்தும் மாதோட்டக் கரையில் வந்திறங்கும் வியாபாரிகள் அந்த வழியாகத் தான் அநுராதபுரத்திற்கு வருவார்கள். சமீப காலமாக அந்தக் காட்டுப் பிரதேசத்தில் ஆறலைக் கள்வர்களின் அட்டகாசம் அதிகமாகவிருக்கின்றது என்பதையும் அவன் கேள்விப்பட்டேயிருந்தான். ஆனல் தன்னுடைய மடியிலே கனமில்லை. அதனுல் வழியிலே பயமுமில்லை என்று அலட்சியமாக எண்ணிக்கொண்டே அவன் பிரயாணித்துக்

கொண்டிருந்தான். எதிர்த்து வரக்கூடிய காட்டு விலங்கு களுக்கு அவன் பயப்படவில்லை. எதிரே வரும் மதயானை யின் மத்தகத்திலே தன் கைவேலைக் குறிபார்த்து எறிந்து அதனைக் கொல்லக்கூடிய மனோபலமும், திடகாத்திரமும் அவனுக்கு இருந்தது. ஆகவே பந்துலன் தனக்கென ஒரு வழித் துணையைக் கூடத் தேடிக் கொள்ளாமல் அந்த அடர்ந்த காட்டினூடே தன்னந்தனியனாகச் சென்றுகொண் டிருந்தான்.

தூரத்தே யானைகள் பிளிறுவது கேட்டது. புலிகளின் உறுமலும் அவன் காதுகளில் கேட்டன. சாலையைக் குறுக் கறுத்துக்கொண்டு ஓர் கரடிக் குடும்பமே ஓடிச் சென் றதை அவன் கண்கள் கண்டன. ஆனாலும் அவைகள் எதனை யுமே சட்டைசெய்யாமல் பந்துலன் தன் வெண் புரவியைச் செலுத்திக்கொண்டிருந்தான்.

அவன் அரையிலே உடைவாள். முதுகுப் புறமாக நெடுங்குறுக்கில் கூரிய முனைகொண்ட வேல் ஒன்று தொங் கிக்கொண்டிருந்தது. தண்ணீர் நிறைந்த தோற் பை ஒன் றும் முதுகிலே தொங்கிக்கொண்டிருந்தது.

நண்பகல் கடந்தபோது காட்டினூடே சிறிய கிராமம் ஒன்றிருப்பது அவன் கண்ணில் பட்டது.

அந்தக் கிராமத்தில் ஏழு அல்லது எட்டுக் குடிசைகளே இருந்தன. புற்களாலும், நாணல்களாலும் அவைகள் சமைக்கப்பட்டிருந்தன. அக்குடிசைகளைப் பார்த்தால் மனி தன் அங்கே நிரந்தரமாக வாழ்வதற்காக அவைகள் கட் டப்பட்டதாகத் தோன்றவில்லை.

பந்துலன் தன் குதிரையை விட்டிறங்கினான். ஓடிக் களைத்த குதிரை, வாயில் நுரை தள்ளிக்கொண்டு இளைத்து நின்றது. அதன் முதுகில் தட்டிக் கொடுத்த பந்துலன், தன் குதிரைக்கு நீர் காட்டவேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு குடிசையை நோக்கி நடந்தான்.

பசும் புற்களும், பற்றைக் காடுகளுமாக இருந்தது அந் தச் சுற்றுப்புறம். நெடிதுயர்ந்த மரங்கள் மிக அபூர்வமா

கவே அங்கு காணப்பட்டன. ஆங்காங்கே ஆடுகளும், மாடுகளும் சௌகரியமாகப் புல் மேய்ந்துகொண்டிருந்தன. வாகை மரம் ஒன்றின் நிழலிற் படுத்துக்கொண்டு சில கறவைகள் அசைபோட்டுக்கொண்டிருந்தன. இளங் கன்றுகள் அங்குமிங்கும் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன.

தான் பார்த்திருந்த அநுராதபுரிக் கிராமங்களுக்கும் அக்கிராமத்திற்கும் ஏதோ பாரதூரமான வித்தியாசம் இருப்பதைப் பந்துலன் உணர்ந்தான். அப்படியான ஒரு கிராமம் அப்பாதையில் இருப்பதாக அவன் கேள்விப்பட்டதேயில்லை. ஆனல் பாதை தவறித் தான் வந்துவிட்டதாகவும் அவனுக்குத் தெரியவில்லை.

முதலிலே இருந்த குடிசையை அண்மிய பந்துலன், அங்கே தன்னந்தனியாக இருந்த முதியவரிடம், ''தாத்தா என் குதிரைக்குத் தண்ணீர் காட்டவேண்டும். உதவிசெய்வீர்களா?'' என்று கேட்டான்.

''தண்ணீர்தானே! அதோ அங்கே ஒரு சுனை இருக்கிறது'' என்று கிழக்குப் புறமாகக் காட்டிய கிழவர், ''எங்கிருந்து வருகிறுய் தம்பி? களைத்துப்போய் இருக்கிறுயே'' என்று கேட்டார்.

''நான் குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு ஆறுதலாக வருகிறேன் தாத்தா'' என்று பதில் சொல்லிய பந்துலன், தன் தோற்பையை மட்டும் இறக்கி வைத்துவிட்டு குதிரையோடு கிழவர் காட்டிய திசையில் சென்றுன்.

சுனையிலே குதிரை தண்ணீர் குடித்ததும், அதைப் பக்கத்திலே இருந்த மரத்தில் நெடுந் தோலினுல் கட்டிவிட்டுச் சுனையில் இறங்கித் தன் முகத்தையும் கழுவி, உடலையும் துடைத்துக்கொண்டு கிழவரிடம் திரும்பி வந்தான். கிழவர் அவனுக்குச் சுடச் சுடக் காய்ச்சிய பாலை மண் சட்டியில் ஊற்றிக் கொடுத்தார். பாலைக் குடித்ததும் பந்துலனுக்கு ஆயாசமெல்லாம் தீர்ந்ததுபோல இருந்தது.

''எங்கிருந்து வருகிறுய் தம்பி?'' என்று கேட்டார் கிழவர்.

எதிரே இருந்த மரக் கட்டையில் வசதியாக அமர்ந்து கொண்ட பந்துலன், ''அநுரதபுரத்திலிருந்து வருகிறேன் தாத்தா'' என்று பதில் சொன்னான்.

''அநுரதபுரத்திலிருந்தா?'' என்ற கிழவரின் கேள்வியிலே அளவற்ற வெறுப்பும், அருவருப்பும் இருப்பதை பந்துலன் உணர்ந்தான். அவரது வெறுப்பின் அர்த்தத்தை விளங்கிக்கொள்ளாத பந்துலன், ''ஏன் தாத்தா! உங்களுக்கு அநுரதபுரமே பிடிக்கவில்லையா?'' என்று கேட்டான்.

கிழவர் சொன்னார்: ''தம்பி! மனிதன் ஓரிடத்தில் நிலையாக இருப்பதற்காகப் படைக்கப்படவில்லை. எங்கேயோ இருந்துவந்த ஒரு கூட்டத்தினர் அங்கே நிலையாக இருந்துகொண்டு தங்கள் உணவுக்காக நில மாதாவின் மேனியைக் கீறிக் கிழிக்கிறார்களாம். காற்றும், வெளிச்சமும் புகமுடியாதபடி மண்ணாலும், கல்லாலும் வீடுகள் கட்டிக் கொள்கிறார்களாம். வாழ்க்கை முழுவதுமே சவாரி செய்யக் கூடிய ஒரு குதிரையையோ, குடம் குடமாகப் பால் தரத்தக்க கறவையையோ நில மாதாவின் மேனியைக் கிழிக்க உதவும் ஒரு ஆயுதத்திற்காக விற்கிறார்களாம். அக் கூட்டத்தினரையே எனக்குப் பிடிக்கவில்லைத் தம்பி.''

''அப்படியா? தாத்தா! 'மனிதன் ஓரே இடத்தில் இருப்பதற்காகப் படைக்கப்படவில்லை' என்ற தங்களின் முதலாவது வாக்கியம் எனக்குப் பிடிக்கிறது தாத்தா. ஆனால் மற்றைய விஷயங்களில் ஏன் வெறுப்படைகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லைத் தாத்தா.''

''மகனே! மனிதன் முதல் நாள் அசுத்தப்படுத்திய இடத்திலோ, அல்லது சலம்விட்ட இடத்திலோ மறுபடியும் அதனைச் செய்தால் எவ்வளவு அருசியாக இருக்கும். எங்களைப் பாருங்கள். இங்குள்ள புற்கள் தீர்ந்துபோனதும் நாங்கள் இவ்விடத்தைவிட்டு எங்கள் மந்தைகளோடு புறப்பட்டுப் போய்விடுவோம். புதிய இடத்திலே புத்தம் புதிய காற்று, பூமி, தண்ணீர் இவைகளெல்லாமே பரிசுத்தமாக இருக்கும்.''

''அப்படியானால் உணவுக்கு என்ன செய்வது தாத்தா?''

''உணவு! ஏன் எமது மந்தைகள் தரும் பாலும், வெண்ணெயும் இல்லையா? நினைப்பட முடியாத மலட்டுப் பசு ஒரு மனிதனுக்கு ஒரு மாதத்திற்கு மேலே உணவாகுமே! மேலும் காட்டிலே காய் கனிகள் இல்லையா? கிழங்குகளுக்குப் பஞ்சமா? இயற்கை தரும் இந்தச் செல்வங்களை விட்டு விட்டு நிலமாதாவின் நெஞ்சை இரும்பினால் கீறிக் கிழிக்கும் அநியாயத்தினால் தேவதைகள் கோபமடைகின்றன. மழை பொய்க்கிறது. மனிதருக்கு அம்மையும், வெப்ப நோய்களும் உண்டாகின்றன. கல்லையும், மண்ணையும் கொண்டு காற்றுத்தானும் உட்புக முடியாத வீடுகளைக் கட்டி வாழ்வதால் வாயு பகவான் இந்த மக்கள் மேல் வன்மஞ் சாதிக்கிறான். இந்த மனிதர்கள் அக்கினி என்று வாயினால் சொல்வதல்லாது அவனை வழிபடுவதில்லை. அதோ பார் அங்கே எரிந்துகொண்டிருக்கும் அந்த அக்கினி என்றைக்குமே இங்கே அணைவதில்லை. இரவிலே அந்த அக்கினி தேவனே எங்களுக்குத் துணையாக இருக்கிறான். ஆனால் அக்கினி வழிபாட்டை மறந்த அநுரதபுர நகரம் விரைவிலே அழியப்போகிறது தம்பி.''

பந்துலன் கிழவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். மாறிக்கொண்டு வரும் சமுதாய அமைப்பினை, அது மாறிக்கொண்டே இருக்கவேண்டியதன் அவசியத்தை எப்படிக் கிழவருக்கு விளக்கலாம் என்று அவன் யோசித்துக்கொண்டிருக்கையில், கிழவர் மேலும் சொன்னார்:

''தம்பி! நீ வைத்துக்கொண்டிருக்கும் இந்த வேலாயுதத்தை எடுத்துக்கொள். இதன் முனையில் நஞ்சு பூசப்பட்டிருக்கின்றது. மனித உடலிலே இது பட்டதும் விஷம் உடல் முழுவதும் பரவி விடும். இந்த ஆயுதத்திற்காக நீ இரண்டு பசுக்களையோ, அல்லது ஐந்து ஆடுகளையோ கொடுத்திருப்பாய். இந்த ஆயுதங்களினால் என்ன பலனைக் கண்டீர்கள்? கொலையும் கொள்ளையும், சண்டையும் குழப்பங்களுந்தான்

மிச்சம். இவைகளுக்கெல்லாம் என்ன தண்டனை கிடைக்கப்போகிறது தெரியுமா?''

''ஆனால் தாத்தா! இந்த ஆயுதங்களைப் போரிலே மட்டுந்தானா உபயோகிக்க முடியும்? இரும்புக் கோடரி ஒன்றினால் ஒரு மரத்தை மிக விரைவாகத் தறிக்க முடியாதா? அதையும் நீங்கள் ஒப்புக்கொள்வதில்லையா?''

''உண்மைதான் மகனே! ஆனால் மனித குலத்திற்கு ஏன் இந்த அவசரம் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இரும்பு ஆயுதங்களைவிடக் கல்லினாலும், தாமிரத்தினாலும் செய்த ஆயுதங்கள் கூர்மையற்றவை என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அந்த ஆயுதங்களை வைத்துக் கொண்டே நாங்கள் வாழ்க்கை நடத்தவில்லையா? ஆனால் இப்போது மனிதன் எதையுமே விரைவாகச் செய்யவேண்டுமென்று துடிக்கிறான். இயற்கை நமக்களிக்கும் உணவைப் புறக்கணித்துவிட்டு விவசாயம் செய்கிறோம். இந்த விவசாயம் என்றால் என்ன? தம்பி, நீங்கள் பாடுபட்டுப் பயிரிடும் நெற் பயிர், இங்கே சில இடங்களில் தானாகவே முளைக்கிறது. எனது மந்தைகள் அவைகளை மேய்ந்து கொழுக்கின்றன. பார்க்கப்போனால் அந்தப் பயிர்கள் எல்லாம் மிருகங்களுக்காகவே படைக்கப்பட்டுள்ளன. அம் மிருகங்களே நமக்காகப் படைக்கப்பட்டிருக்கின்றன'' என்றார் கிழவர்.

''ஆனால் இந்த மிருகங்களுக்குப் பின்னால் அலைவதால் மனிதனும் மிருகமாகவே அலையவேண்டியிருக்கிறதல்லவா தாத்தா? இந்த இடத்திலே புல் இல்லாமல் போனாலும் நீங்கள் வேறிடத்துக்குப் போய்விடுவீர்கள். அது சிரமமானதாக இல்லையா தாத்தா?''

''அதில் என்ன சிரமம் இருக்கிறது? நான்தான் சொன்னேனே, மனிதன் ஓரிடத்தில் நிலையாக இருப்பதற்காகப் படைக்கப்பட்டவனல்ல என்று. நிலையாக இருக்கும் மனிதன் தனக்கென நிலத்தையும் பிரித்து வைத்துக்கொள்கிறான். ஒவ்வொரு துண்டும் தனக்குத் தனக்கென எல்லை போட்டுக்கொள்கிறான். இதனாலேயே மக்களிடையில் குழப்பங்களும், சண்டைகளும் ஏற்படுகின்றன. எல்லா நாடு

களும், எல்லாக் காடுகளுமே எங்கள் எல்லாருக்குமே சொந்தமானவை. இந்தப் பொதுவுடைமையினால்தான் எங்களிடையே ஏதும் பிணக்குகள் ஏற்படுவதில்லை. நிலத்துக்குச் சொந்தம் பாராட்டும் நீங்கள், ஒவ்வொருவருக்குள்ளும் பகைமை பாராட்டிக்கொண்டு காலகதியிலே மனித சாதியையே நிர்மூலமாக்கிவிடுவீர்கள். தம்பி! எனது பேரப்பிள்ளைகள் சிலர்கூட வயல்களையும், விவசாயத்தையும் நம்பி என்னைவிட்டுப் பிரிந்து போய்விட்டார்கள். ஆனால் பூமாதேவியின் மேனியைக் கீறிக் கிழிக்கும் அந்தக் கொடூரத்தை எங்கள் கண்ணினால் பார்க்கக்கூடாது என்ற வைராக்கியத்தோடுதான் என்போன்ற கிழவர்கள் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்'' என்றார் கிழவர்.

'கிழவரின் மனப்போக்குகளை மாற்றமுடியாது. மாறிக்கொண்டுவரும் நாகரீகத்தை அவரிடம் விளக்கவும் முடியாது' என்று தெரிந்துகொண்ட பந்துலன், பேச்சை மாற்ற விரும்பி, ''மகாதீர்த்தக் கடற்கரையோரத்திற்கு இன்னமும் நெடுந்தூரமா?'' என்று கேட்டான்.

கிழவர் சொன்னார்: ''உனது குதிரையைப் பார்த்தால் உயர்ந்த சாதிக் குதிரையாக இருக்கின்றது. அது உன்னைப் பொழுது அஸ்தமிக்கும் முன்னே உன்னை அங்கே கொண்டு போய்ச் சேர்த்துவிடும். ஆனால் எனக்கு அந்த இடமும் பிடிக்கவில்லை.''

''ஏன் தாத்தா?''

''அங்கேயும் நிலவுடைமை என்ற அரக்கத்தனம் வளர்ந்துகொண்டிருக்கின்றது. அங்கேயும் மனிதன் நிலத்துடன் கட்டி வைக்கப்பட்டிருக்கிறான். அந்தக் கோரத்தைக் கண்டு நான் அங்கே போவதேயில்லை. இவ்விடத்திற்குக் கூட ஏழு மழைக் காலங்களுக்குப் பின்னர்தான் வந்திருக்கிறேன். இவ்விடத்தைவிட்டு எத்தனை விரைவிற் போக முடியுமோ அத்தனை விரைவாகப் போய்விடவே எண்ணுகிறேன்.''

''ஏன் தாத்தா இவ்விடத்தில் புல் தீர்ந்துபோய்விட்டதா?''

''புல் இருக்கின்றது தம்பி. ஆனல் இந்த இடத்தை நான் விரும்பவில்லை. நிலம் என்ற மூளையிலே கட்டி வைக்கப் பட்ட சமுதாயம் படுவான் கரைப் பக்கமாக மாதோட்டத்திலும், எழுவான் பக்கமாக அநுரதபுரத்திலும் தோன்றிவிட்டன. அந்த இரண்டு சமுதாயங்களுக்குமிடையிலான போக்கு வரவு இந்த வழியாலேயே நடந்துகொண்டிருக்கின்றது. அவர்களின் நிழலையே நான் காண விரும்பவில்லை.''

''அப்படியா? தாத்தா, நேற்று இந்தப் பாதை வழியாக அநுரதபுர அரண்மனையிலிருந்து யாராவது வந்தார்களா?'' என்று கேட்டான் பந்துலன்,

''நேற்ரு?'' கிழவர் அப்பக்கமும் இப்பக்கமும் தலையை ஆட்டிக்கொண்டே, ''கடைசிப் பத்து நாட்களாக அரண்மனையிலிருந்து எவருமே இந்தப் பக்கமாகப் பிரயாணம் பண்ணவில்லை'' என்ருர்.

''அரண்மனையிலிருந்து என்பதை எப்படித் திட்டவட்டமாகச் சொல்கிறீர்கள்?''

''தம்பி, எனக்குத் தெரிந்த வரையில் இந்தப் பாதையில் இரண்டு விதமானவர்கள்தான் பிரயாணம் பண்ணுகிருர்கள். தங்கள் பொருட்களைக் கழுதைகளிலும், பொதி மாடுகளிலும் ஏற்றிவரும் வியாபாரிகள் ஒருவிதம், முன்னல் சங்குகளை முழங்கிக்கொண்டு வேலும் வாளும் ஏந்திய வீரர்கள் குதிரைகளில் செல்ல, அவர்களின் பின்னல் தேரிலோ, குதிரைகளிலோ வரும் அரண்மனை உத்தியோகத்தர்கள் இன்னேர் விதமானவர்கள். இவர்களில் எவருமே இந்தப் பாதையில் வரவில்லை.''

''அப்படியா?'' பந்துலன் சற்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

''ஏன் இந்தப் பாதையால் யார் சென்றிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிருய்?''

''அரண்மனையிலிருந்துதான் தாத்தா நேற்றுப் புறப்பட்டார்கள். அவர்களுடன் சேர்ந்துகொள்வதற்காகத்

தான் நான் வந்தேன்'' என்று சொல்லிய பந்துலன், மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான்.

தன் மாமனுர், பிரபாவிடம் பொய் சொன்னுரா? தன் மகளிடம் கூடப் பொய் சொல்லிவிட்டு அநுரதபுரத்திலேயே கரந்துறைகின்றுரா? அல்லது தனது திட்டங்களை உளவு பார்க்கத் தென் பக்கத்துக் கிராமங்களுக்குப் புறப்பட்டுவிட்டாரா?

அவர் அநுரதபுர நகரத்தில் இல்லையென்பதை மட்டும் அறிந்துகொண்ட தான், அவர் அநுரதபுரத்திலிருந்து எங்கே சென்றுர் என்பதைத் திட்டவட்டமாக அறிந்துகொண்டு வராத தன் தவறை எண்ணித் தன்னையே நொந்துகொண்டான். அவர் இந்தப் பாதையில் வந்த அடையாளங்கள் ஏதுமே அவனுக்கு இதுவரை தென்படவுமில்லை. அரண்மனையின் முக்கிய பிரதானி என்ற முறையில் அவர் புறப்பட்டிருந்தால் அவரோடு ஒரு பரிவாரமே வந்திருக்கும். அந்தப் பரிவாரத்தின் நடமாட்டத்திற்கான எந்த அறிகுறியையுமே வழியிற் காணவில்லை. ஆகவே, அவர் தனிமையாக வந்திருக்கிறுரா? என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான் பந்துலன்.

அவனது குழப்பத்தை அவதானித்த கிழவர், ''தம்பி! உன்னைப் பார்த்தால் அரண்மனையைச் சேர்ந்தவனைப் போல இருக்கின்றுய். நீ யாரைத் தேடிப் போகிறுய்? அரண்மனையைச் சேர்ந்த எவரும் இப்பாதையில் கூட்டமாகச் செல்லவில்லை. தனியாக எவரும் சென்றதையும் நான் காணவில்லை. என் கண் காணுமல் யார் சென்றிருந்தாலும் நான் கண்டுபிடித்து விடுவேன்.''

''அதெப்படிக் கண்டு பிடிப்பீர்கள்?''

''அந்தக் கலை உங்களுக்கெல்லாம் தெரியுமோ என்னவோ, தம்பி, பாதை இவ்விடத்திலே சற்று மணலும் புழுதியுமாகவே இருக்கின்றது. யார் இதன் வழியாகச் சென்றுலும், சென்றவரின் அடிச் சுவடு அதிலே துலாம்பரமாகப் பதிந்திருக்கும். அதைக்கொண்டு புதியவர் யாரும்

இவ்வழியால் சென்றிருக்கிறரா? என்பதைக் கண்டுபிடித்து விடலாம்.''

''வந்தவர் குதிரையில் சென்றிருந்தால்...?''

''அதுகூட என்ன பிரமாதம்? குதிரையின் அடியைப் பார்த்தே அது என்ன ஜாதிக் குதிரை என்று சொல்லிவிடலாம்'' என்ற கிழவர், கையிலே நீண்ட கழியொன்றை எடுத்துக்கொண்டு பாதையை நோக்கி நடந்தார். பந்துலனும் அவர் பின்னல் நடந்தான்.

பாதையை அடைந்ததும் கிழவர் குனிந்து அங்குள்ள சுவடுகளைக் கூர்ந்து அவதானித்தார். பாதையிலே பதிந்திருந்த மூன்று அடிச் சுவடுகளை அவதானித்து, ''இது என் பேரன் சுவேதனுடையது. இது அவன் தந்தை கிரிகண்டனுடையது. இது சாலியாவின் சுவடு'' என்றவர், குதிரைகளின் அடியையும் கூர்ந்து கவனித்துவிட்டு, சுவேதனுடைய மட்டக் குதிரை அல்லாமல் வேறு குதிரையே இந்தப் பக்கம் வரவில்லை'' என்று திட்டவட்டமாகச் சொன்ஞர்.

கிழவர் சொன்னதைப் பந்துலன் நம்பினன். நிச்சயமாகத் தன் மாமஞர் இந்தப் பக்கம் வரவில்லை. அவர் பிரபாவிற்குப் பொய் சொல்லியிருக்கிருர், நான் என் தாயாருக்குப் பொய் சொன்னதுபோல! அவர் சொல்லிய பொய்யின் பின்னணியில் தான் செய்யவிருக்கும் ஏதோ முக்கியமான காரியத்தை மறைத்திருக்கிருர் என்று எண்ணிக் கொண்டிருக்கையில், அவ்வழியில் குதிரையைப் படுவேகமாகச் செலுத்திக்கொண்டு ஒருவன் வந்தான். அவன் வந்த வேகத்தைப் பார்த்துப் பந்துலனுக்கே பயமாக இருந்தது.

*



## 17 மாறுவேடத்தில் ஒரு ராஜதந்திரி!

பந்துலனும் அவன் கூட்டத்தினரும் அரசாங்கத்துக்கு எதிராகக் கிராம மக்களைத் தயார் பண்ணுகிறார்கள் என்பதை ஊகித்துக் கொண்ட நாகதத்தன், அவர்களது பணி எந்த நிலையில் உள்ளதென்பதைக் கண்டுபிடிக்க விரும்பினான். அதற்காக அவன் மாறுவேடமிட்டுக்கொண்டு அனுரதபுரத்தின் தென் கீழ்க் கரையிலிருந்த கிராமங்களுக்குச் சென்றிருந்தான்.

சாதாரண கிராம மக்களிடையே துடிப்பும் உற்சாகமும் உள்ள இளைஞர்கள் சிலரை நாகதத்தன் கண்டான். அந்த இளைஞர்கள் சிலரோடு பேசினான். ''தீசவாவியின் உடைப்பைச் சீர்திருத்தமுன் அரசனுக்காகவோ அரசாங்கத்துக்காகவோ எந்த விஹாரமும் கட்டுவதில்லை; அரசன் விஹாரங்களைக் கட்டும்படி ஆணை பிறப்பித்தால், அவ்வாணையை மீறுவது'' என்று பல கிராமவாசிகள் முடிவு செய்துகொண்டிருப்பதையும் நாகதத்தன் அறிந்துகொண்டான்.

இந்தப் புரட்சிகரமான எண்ணங்களைக் கிராமவாசிகளிடையே விதைத்துக்கொண்டிருக்கும் இளைஞர்கள், கிராமத்தில் மக்களோடு மக்களாக வாழ்வதை நாகதத்தன் கண்டான். கோடைக் காலத்தின் பிற்பகுதியாதலால் கிராமங்கள் பெரும்பாலும் வரண்டே கிடந்தன. மாரிகால விதைப்புக்குத் தயாராகக் காட்டை அழித்து எரிக்கும் வேலையே கிராமங்களில் அதிகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த வேலையைக் கிராம மக்களோடு சேர்ந்து வெளியே இருந்து வந்த இளைஞர்களும் செய்தார்கள். மேலும் அவர்கள், வற்றிக் கிடந்த குளங்களிலே

கிராமவாசிகளுடன் சேர்ந்து மீன் பிடித்தார்கள். அதை நெருப்பிற் காய்ச்சி வற்றலாக்கினார்கள். தண்ணீர் தேடி வரும் மிருகங்களை அவர்கள் மறைந்திருந்து கொன்றார்கள். அந்த மிருகங்களின் இறைச்சியும் கால்நடைகளின் பயனுமே அக் கிராமவாசிகளின் கும்பிக் கொதிப்பை ஆற்றிக் கொண்டிருப்பதை நாகதத்தன் கண்டான். ஆனால், அத்தனை ஏழ்மை நிலையிலும் அரச ஆணையை மீறக்கூடிய மனோ வைராக்கியத்தைப் பந்துலனின் கூட்டத்தினர் கிராமவாசிகளிடையே ஏற்படுத்தியிருந்தது நாகதத்தனுக்கே பேராச்சரியமாக இருந்தது.

இப்படிக் கிராமம் கிராமமாக மாறுவேடத்தில் நிலைமைகளை அவதானித்துச் சென்ற நாகதத்தனை, சிவகுட்டன் என்ற கிராமத் தலைவன் அவதானித்துக்கொண்டு காமினிக்கும் அதைத் தெரிவித்தான். அதை அறிந்த மாத்திரத்திலேயே காமினி, பக்கத்துக் கிராமங்களான மகா அலகமுவ, தம்புல்லாகம, அவுக்கண ஆகிய கிராமங்களுக்கும், தொலைவிலுள்ள முதுகல, திம்புலாகல, கந்தேகமகந்த, நியந்தவனகல, ரஜகல ஆகிய கிராமங்களுக்கும் செய்தியைச் சொல்லியனுப்பி நண்பர்களை விழிப்புடன் இருக்கும்படி கேட்டுக்கொண்டான். அத்தோடு இந்தச் செய்தியைப் பந்துலனுக்குத் தெரிவிக்கும்படியாகவும் அவன் ஆலோசனையைப் பெறுவதற்காகவும் அனுரதபுரம் வந்தான். அங்கிருந்து கிடைத்த செய்திகளின்படி பந்துலனைத் தேடிக்கொண்டு வந்தான் காமினி:

அவனைக் கண்ட பந்துலன், கிழவரிடம் சொன்னான்: "நான் தேடிக்கொண்டு வந்தவர் இவர்தான். இப்போது தான் வருகிறார்."

தன் குதிரையை விட்டிறங்கிய காமினி, பந்துலன் கிழவருக்கு எதையோ மறைக்கிறானென்பதை விளங்கிக் கொண்டு பேசாமலேயே நின்றான். படு வேகமாகத் தன் குதிரையைச் செலுத்திக்கொண்டு வந்ததால் அவன் மிக்க களைப்படைந்தவனாகவும் காணப்பட்டான்.

மூவருமாக நடந்து கிழவரின் குடிசையை அடைந்தனர். கிழவர் தன் குடிசைக்கு முன்னால் கிடந்த மரக்குற்றியில் அமர்ந்துகொண்டதும், பந்துலன் காமினியையும் அழைத்துக்கொண்டு அவனின் குதிரைக்குத் தண்ணீர் காட்டுவதற்காகச் சுனையை நோக்கிச் சென்றான். சுனைக்குச் சென்றுகொண்டிருக்கையில் காமினி சொன்னான்: ''நாகதத்தனைத் தேடிக்கொண்டு இங்கேயா வந்தாய்? ஆனால், உன் மாமனார் பெரிய பேர்வழி! நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதை உளவறிவதற்காக அவர் அங்கேயே வந்துவிட்டார்'' என்றான்.

''என்ன? நீங்கள் இருந்த இடத்திற்கு வந்தாரா?''

''ஆம். அதுவும் மாறுவேடத்தோடு வந்தார். நாம் என்ன செய்யப்போகிறோம் என்பவைகளை அவர் ஓரளவுக்கு மோப்பமும் பிடித்திருப்பார்.'' பந்துலன் சற்றுநேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். காமினி தொடர்ந்து சொன்னான்: ''யோசிப்பதற்கு நேரமில்லை. நாம் உடனடியாக அனுரதபுரத்துக்குச் செல்லவேண்டும். சில இளைஞர்களைக் கைது செய்வதற்கான கட்டளைகளைப் பிறப்பித்தாலும் பிறப்பிப்பார். அதற்கு முன்னரேயே நாம் எமது திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும்.''

''நாம் ஒரு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான மக்கள் பலத்தைத் திரட்டியிருக்கலாம் தற்போது. ஆனால் ஒரு போராட்டத்தை நடத்துவதற்கான ஆயுதங்கள் நம்மிடம் இருக்கின்றனவா? அதனை யோசிக்க வேண்டும்.''

''தற்போது நாம் விரும்பாவிட்டாலும் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. கிராம மக்களிடையே சேமித்திருக்கும் ஆயுதங்களோடு மேலதிகமான சில ஆயுதங்களையும் பெற நான் வழி செய்திருக்கிறேன்.''

''என்ன செய்திருக்கிறாய் காமினி?''

''சேனனும் குட்டகனும் இப்போது மாதோட்டக் கரையிலே வந்து இறங்கியிருப்பார்கள். அவர்கள்கொண்டு வந்திருக்கும் ஆயுதங்களை வாங்க பருமகர் சிலரை அங்கே

அனுப்ப இருக்கிறார். ஆனால், அவ்வாயுதங்கள் நமக்கே பயன்படவிருக்கின்றன.''

''எப்படி?''

''ஆயுதங்களை வாங்கிவரச் செல்லும் படைவீரரிற் சிலர் நமது தோழர்கள்.''

''அப்படியா? நல்லதுதான். ஆனால், அவர்களைக் கண் காணிக்கவும் அப் படையிலே பருமகர் ஆள் வைத்திருந்தாலும் வைத்திருப்பாரல்லவா? எதற்கும் உடனடியாக நாம் அனுரதபுரம் செல்வோம்.''

''ஆம். புறப்படுவோம். ஆனால், இந்தக் கோலத்தில் அல்ல, மாறுவேடத்தில் செல்வோம். ஏனென்றால் நாம் செல்லும் வழியில் சேனன், குட்டகனிடமிருந்து ஆயுதங்களை வாங்க வரும் படையினரைச் சந்திக்கவேண்டியிருக்கும். மாறுவேடம் போட்டுக் கொள்வதற்கான உபகரணங்களையும் நான் கொண்டுவந்திருக்கிறேன்.''

காமினியின் குதிரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு அவர்கள் இருவரும் கிழவரின் குடிசைக்குத் திரும்பிக்கொண்டிருக்கையில், சுமார் முப்பது பேர் கொண்ட அரச படையினர் மாதோட்டத்தை நோக்கிக் குதிரைகளில்விரைந்து சென்றுகொண்டிருப்பதைக் கண்டனர். அதைக் கண்ட காமினி சொன்னான்:

''ஆயுதம் வாங்கச் செல்லும் படையினர் நான் எதிர்பார்த்ததைவிட வேகமாக வந்துவிட்டார்கள். அரண்மனையில் சம்பவங்கள் விரைவாக நடந்துகொண்டிருக்கின்றன என்பதைத்தான் இது காட்டுகின்றது. ஆகவே நாம் கணமும் தாமதிக்காமல் அனுரதபுரத்தை நோக்கிப் புறப்படவேண்டும்.''

''ஆம். படையினர் நம்மைத் தாண்டிச் சென்றுவிட்டாலும் நாம் மாறுவேடத்துடன் செல்வதே நல்லது.''

இருவரும் தங்கள் குதிரைகளுடன் கிழவரின் குடிசைக்குத் திரும்பினார்கள். கிழவர் நெருப்பிலே வாட்டப்பட்ட மலட்டுப் பசுவின் தொடை இறைச்சியை நறுக்கி அவர்

களுக்கு உண்ணக் கொடுத்தார். பந்துலன் பாலை மட்டுமே பருகினான். உணவை முடித்துக்கொண்டு இருவரும் கிழவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு தத்தம் குதிரையில் ஏறினர்.

கிழவரின் கண் மறைந்ததும், இருவரும் குதிரையை விட்டிறங்கி மாறுவேடமிட்டுக்கொண்டு மீண்டும் குதிரைகளில் ஏறினர்.

பகல் முழுவதும் பிரயாணம் செய்ததால் களைத்திருந்த குதிரைகளால் வேகமாக ஓட முடியவில்லை. இருட்டுமுன்னர் அனுரதபுரம் செல்வது சாத்தியமற்றதென இருவருக்குமே தோன்றியது. குதிரைகள் அத்தனை அசமந்தமாக நடந்துகொண்டிருந்தன. பிரயாணம் பண்ணிக்கொண்டிருக்கையில் காமினி சொன்னான்:

''நாகதத்தன் விழித்துக்கொண்டுவிட்டான்! அவன் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறானென்பதை அறிய வேண்டியது முக்கியமாக இருந்தாலும் நெருக்கடியான இந் நேரத்திலே அனுரதபுர நகரத்தில் இருளில் குதிரைச் சவாரி செய்வது நன்மையைத் தராது என்று நினைக்கிறேன்.''

''நானும் அதையேதான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நாம் அனுரதபுரத்திற்கு நேரே போகாமல் வடக்காக 'ஹந்தகல' கிராமத்திற்குச் சென்று அங்கே இராப்பொழுதைக் கழித்துவிட்டு விடிந்ததும் தெற்காகத் திரும்பி நிற்றிகல மார்க்கமாக அனுரதபுரியின் தெற்குப் பிரதேசங்களில் உள்ள நம் தோழர்களோடு சேர்ந்து கொள்வோம். ஆனால்......''

''என்ன ஆனால்...... பிரபாவைப் பற்றிச் சிந்திக்கிறீர்களா? போராட்ட காலத்திலே காதலியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பது கோழைத்தனத்துக்குத்தான் வழி வகுக்கும்.''

''காதலுக்காகவல்ல, பருமகரின் போக்குகளையும் அரண்மனையின் நடவடிக்கைகளையும் ஓரளவுக்காவது அறிந்துகொள்ள அவளைவிட்டால் வேறு நம்பகமான ஆட்

களுமில்லை. அதற்காகத்தான் அவளை ஒருதடவை சந்திப்பது நலமெனத் தோன்றுகிறது.''

''நன்ருகத்தான் தெரிந்துகொள்ளலாம். தன் தந்தையார் மாதோட்டத்திற்கு வியாபாரிகளைக் காணச் சென்றிருக்கிருரென்று தங்களைப் பிழையாக வழிநடத்தியவள் அவள்தானே. இதனுல்தான் மந்திராலோசனைகளில் பெண்களைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதென அரசியல் தெரிந்தவர்கள் ஏற்கனவே சொல்லி வைத்திருக்கிருர்கள்.''

''இளைஞர்களைக்கூட மந்திராலோசனையில் சேர்க்கக் கூடாதென்றும் அவர்கள் சொல்லி வைத்திருக்கிருர்கள். அது கிடக்கட்டும் காமினி, நீ பிரபாவின் இதயசுத்தத்தைச் சந்தேகிக்கிருயா?''

''இல்லை. சத்தியமாக இல்லை. ஆனுல் என்ன இருந்தாலும்அவள் பெண். அதிலும் உணர்ச்சிவசப்படக்கூடிய பெண். நிதானமாகக் காரியங்களைச் சிந்திக்கவோ செயலாற்றவோ மாட்டாள் என்றுதான் எண்ணுகிறேன். அதற்காக அனுரதபுரத்தில் நடக்கும் சங்கதிகளை உடனுக்குடன் அறிந்துகொள்ளவும், அதை நமக்குத் தெரிவிக்கவும் திஸ்ஸவைப் பணித்திருக்கிறேன்.''

''யார், அந்தப் பிராமணப் பையனையா?''


''அவனை நிழல் போலத் தொடருகிருன் என் ஒன்றுவிட்ட சகோதரன் மிகுந்தன்.''

பேசிக்கொண்டே பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்தவர்கள் தம் குதிரைகளை அனுரதபுரம் செல்லும் ராஜபாட்டையிலிருந்து திருப்பி ஹந்தகல செல்லும் கிளைப் பாதையில் செலுத்திஞர்கள்.

பொழுது மரங்களின் பின்ஞல் நன்ருகச் சாய்ந்துகொண்டுவிட்டது. சூரிய ஒளியிலேயே இருண்டு கிடக்கும் அந்தக் காடு மாலை மதியத்தின் ஊமை ஒளியில் மேலும் பயங்கரமாகிக்கொண்டிருந்தது. இன்னும் சற்றுநேரம் சென்ருல் பாதையையே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அந்தகார இருள் சூழ்ந்துவிடுமோ என்று அவர்களுக்குப் பயமாக இருந்தது. வன விலங்குகளின் உறுமலும் பிளி

றலும் மென்மேலும் பயங்கரத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன. ஆனாலும் ஹந்தகல கிராமத்தை இருட்டுமுன்னர் அடைந்துவிடலாமென்ற நம்பிக்கையோடு அவர்கள் இருவரும் தங்கள் பயணத்தைத் தொடர்ந்துகொண்டே இருந்தார்கள்.

★



## 18 நாகதத்தனின் சதித் திட்டம்!

நாகதத்தனின் வருகைக்காகக் காத்திருந்த சூரத்தீசர் அவனைக் கண்டதும், ''அடுத்து வரும் சோமவாரத்தன்று மதியம் நாகரங்கன விஹாரை நிர்மாண வேலைகளைத் தொடங்குவதற்கான சுப நேரமென்று மகாவிஹாரையின் மகாநாயக்க தேரர் நாட் குறித்துவிட்டார். நீர் அவ் வேலைகளைத் தொடங்குவதற்கு வேண்டிய மேல் நடவடிக்கைகளை இன்றைக்கே எடும்'' என்று சொன்னார். அவரின் குரலில் உறுதி தொனித்தது.

இத்தனை நாட்களும் சூரத்தீசன் எதற்கும் தன் ஆலோசனைகளைக் கேட்பவனாக இருந்தானேயன்றிக் கட்டளை இடுபவனாக இருக்கவில்லை. ஆனால், இன்று அதிகாரத் தோரணையிற் பேசுவது நாகதத்தனுக்கு வியப்பாக இருந்தது. அரசனின் அதிகாரக் குரலுக்குப் பின்னால் கோபூதியின் யோசனை ஒளிந்து கொண்டிருப்பதாக அவனுக்குப் பட்டது.

அவனது யோசனையைக் கண்ட அரசர் சொன்னார்: ''தயங்குவதற்கோ யோசிப்பதற்கோ இடமில்லை. மகா

நாயக்க தேரருக்கு நான் வாக்களித்துவிட்டேன். குறித்த தினத்தில் அவ் வேலையைத் தொடங்கியே ஆகவேண்டும்.''

''ஆனால் இன்னமும் நம் படையணி பலப்படுத்தப் படவில்லை. அதைத்தான் யோசிக்கிறேன்.''

''அதைப் பலப்படுத்தும் பணியை உம்மாற் செய்யவும் முடியாதென்பது எனக்குத் தெரியும். நீர் விரும்புகின்றபடி பந்துலன் படைத் தலைமையை ஏற்றுக்கொள்ளவும் மாட்டான். அவன் ஏற்றுக்கொள்ள முன்வந்தாலும் படைத் தலைமையை நான் அவனுக்குக் கொடுக்கவும் ஆயத்தமாக இல்லை.''

''நான்கூட அவனுக்குப் படைத் தலைமையைக் கொடுக்க இப்போது விரும்பவில்லை அரசே! தங்கள் சகோதரர் மகாநாகனின் மனைவியின் வழியில் வந்தவனை காமினியின் துர்ப்புத்தியினால் பந்துலன் நம்மிடம் சேவகம் செய்ய விரும்பவில்லை. காமினி தனது குடும்பத்தினரின் மாகம இராச்சியத்துக்கு விசுவாசமாக இருக்கிறான் போலத் தோன்றுகிறது.''

''காமினி பந்துலனைக் கெடுத்தானா? அல்லது பந்துலன் காமினியைக் கெடுத்தானா என்பதை மேலும் ஆலோசிக்க வேண்டியிருக்கும். ஆனால், மாகமத்திலும், கழனியிலும் தோன்றியிருக்கும் பௌத்த அரசுகளும் மகாவிஹாரரையைத்தான் தலைமைத் தானமாக ஏற்குமென்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. மகாவிகாரைக் குருக்களின் ஆதரவு நமக்கு இருக்கும்வரையில் நம்மை எவரும் அசைக்கவும் முடியாது.''

''மகாவிஹாரைக் குருக்களுக்குப் பணி செய்வதையும் அவர்கள் போதிக்கும் பௌத்த தர்மத்தைநாட்டில் பரவச் செய்வதையுமே என் வாழ்வின் இலட்சியமாகக்கொண்டு இத்தனை நாட்களும் செயற்பட்டு வந்திருக்கிறேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். தற்போது நாகரங்கன விஹாரத்தைக் கட்டத் தொடங்குவதற்கான நாளை மகாநாயக்க தேரர் குறித்துவிட்டார். அதற்கு எவ்வித தடையுமே

இருக்கக்கூடாது. இன்றைக்கே, இப்போதே அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறேன் அரசே.''

''மெத்தச் சரி. வேண்டிய நடவடிக்கைகளை எடும். மாரி காலத்து விதைப்பு வேலைகள் தொடங்க முன்னரே விஹாரம் பூர்த்தியடைந்துவிட வேண்டும்.''

''உத்தரவு மன்னவா'' என்று தலை வணங்கிவிட்டு வெளியேறினான் நாகதத்தன்.

விஹாரம் கட்டப்பட இருக்கும் விஷயம் மன்னனின் பேரால் மக்களுக்கு அறிவிக்கப்படும். அறிவித்தலைக்கேட்டு ஒவ்வொரு நாளும் குறிப்பிடப்பட்ட கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் விஹாரம் கட்டும் பணிக்காகத் திரள்வர்ர்கள். அப்படி வேலைக்கு வருபவர்கள் தங்களின் உணவையும் தாங்களே கொண்டுவரவேண்டியிருக்கும். கலிங்க, மௌரிய தேசங்களிலிருந்து வந்த சிற்பிகளின் தலைமையில் விஹாரங்கள் கட்டப்படும் மக்களே அப் பணியினைச் செய்வார்கள்: பறையறைந்து மக்களை அழைப்பதொன்றே அரசனின் பணியாக இருக்கும்.

ஆனால், இன்றைக்குப் பறைமுழக்கம் கேட்டதும், மக்கள் மண்வெட்டிகளையும் கூடைகளையும் தூக்கிக்கொண்டு நாகரங்கன விஹாரையைக் கட்டுவதற்கு வரவே மாட்டார்கள் என்பதை நாகதத்தன் அறிந்தேயிருந்தான். பறை அறிவித்தலைக் கேட்டதும் நாட்டிலே ஒரு குழப்பநிலை ஏற்படும், அக் குழப்பங்களுக்குப் பந்துலனே தலைமைதாங்குவான் என்பதையும் நாகதத்தன் தெளிவாக அறிந்திருந்தான்.

அந்தக் குழப்பநிலையைப் பயன்படுத்திக்கொண்டு அரசனை எப்படித் தொலைப்பது? பந்துலனுக்கு எதிரியாக வரக்கூடிய காமினியை எப்படித் தொலைப்பது? என்பதே இப்போது நாகதத்தனின் யோசனையாக இருந்தது.

அக் கொலைகளுக்குப் பந்துலனை அனுசரணையாகச் சேர்த்துக்கொள்வதைக் கனவுகூடக் காணமுடியாதிருந்தது.

அந்தக் குழப்பங்களில் பந்துலன் வெற்றியடைந்தாற் கூட அவன் மன்னனாகிவிட விரும்ப மாட்டான். வரவும் அவனால் முடியாது. ஏனென்றால் அவன் இலட்சியக் கனவு காண்பவன். அதே இலட்சியக் கனவு காணும் இளைஞர்களும், தங்களுக்கு விடிவுகாலம் வரப்போகிறதென்றெண்ணும் பஞ்சைக் கிராமவாசிகளும் அவனுக்கு ஆதரவாக இருக்கிறார்களே தவிர, கட்டுப்பாடான படையினரோ நல்ல படைக்கலங்களோ பந்துலனிடம் இல்லையென்பதும் நாகதத்தனுக்குத் தெரிந்தே இருந்தது.

மேலும் இப்படியான ஒரு குழப்பநிலை ஏற்பட்டால் கோபூதி என்ன செய்வாரென்பதையும் நாகதத்தன் ஆலோசித்தான். அவருக்கு நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் வாழும் பூர்வ குடிகளின் ஆதரவு பரிபூரணமாக இருக்கின்றது. அரசரும் அவர்பேரில் மிக்க மதிப்பு வைத்திருக்கின்றார். ஏன், அவரது யோசனையின் பேரில்தானே பந்துலனுக்குப் படைத் தலைமையைக் கொடுக்க மாட்டேனென்று மன்னர் சொல்கிறார்.

''அப்படியானால் கோபூதியின் ஆதரவு மன்னருக்கே நிரந்தரமாக இருக்குமா?''

நாகதத்தன் யோசித்து யோசித்துத் தன் மூளையைக் குழப்பிக்கொண்டேயிருந்தான்.

'பந்துலன் மட்டும் விரும்பினால், அவனுக்கு இருக்கும் மக்களாதரவைத் துணைகொண்டு எவ்வளவு இலகுவாக அரசைக் கைப்பற்றலாம்' என்ற நினைவு அவனுக்கு ஆறாத் துயரத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

'இளமையிலேயே தந்தையை இழந்துவிட்ட அவனை அந்தத் துயரம் அவனுக்குத் தெரியாதவாறு என் தோள் மேலும் மார்புமேலும் சுமந்து எத்தனை பாசத்தோடு வளர்த்தேன். பெரியவனானதும் அவன் சகல கலைகளும் கற்ற பண்டிதனாக விளங்கவேண்டும் என்பதற்காக என் செல்வாக்கைப் பயன்படுத்தி தட்சசீலம்வரை அனுப்பி வைத்தேன். எல்லாவற்றிலுமே என் சொல்லைத் தட்டாது

எனக்கு மரியாதை செலுத்திவந்த அவன், இந்த ஒரு விஷயத்திற்கு மட்டும் பிடிவாதமாக மறுக்கிறனே. ஆ! அவன் தட்சசீலத்தில் கற்ற கல்வியின் ஞானத்தினுல், நான் அவன் மதிப்பிலே எத்தனை தூரம் தாழ்ந்துவிட்டேன்! ஆசையோடும் பாசத்தோடும் வளர்த்த என் மருமகனை அரசனுகவே ஆக்கிவிட என்னுல் முடியாதா? நான் விரும்பியிருந்ததற்கு மாருக. இலங்காதுவீபத்தின் மணி முடியைஅணியவேண்டிய அவன் தலை-குழப்பங்களின்போது தரையிலே பனங்காயாக உருளப் போகிறதா?'

'கூடாது! பந்துலனின் தலை உருளவே கூடாது. அவன் இரத்தம் மண்ணிலே சிந்தப்படுவதை என் கண்கள் காணவே கூடாது!'

'நாட்டிலே குழப்பமேற்பட்டதும் நானும் பந்துலனேடு சேர்ந்துகொண்டு அரசனை எதிர்ப்பதே என்னுல் இப்போது செய்யக்கூடிய காரியம்...'

கட்டுமீறும் பாச உணர்வுகளினுல் நாகதத்தனின் கண்கள் குளமாகிக்கொண்டு வந்தன.

சுதாரித்துக்கொண்ட நாகதத்தன் தன் கண்களைத் துடைத்துக்கொண்டு ஒரு கிண்ணம் மது அருந்தினன்!

மது கொடுத்த இளம் போதையில் மீண்டும் அவன் சிந்தனைகள் தொடர்ந்தன.

'கோபூதி என்னதான் அரசனேடு உறவுகொண்டாடினுலும் நாட்டிலே புத்தமதம் வளர்வதை உள்ளூர எதிர்ப்பவனுகத்தானே இருக்கிறன். புதிதாக நாட்டிலே பரவிக்கொண்டிருக்கும் புத்த மதத்தை அழிப்பதற்காகவும், அனுரதபுரியின் அரசபரம்பரையைத் தொலைக்க வேண்டுமென்பதற்காகவும் அவனது ஒத்துழைப்பைக் கோருவோமா?' என்ற புதிய சிந்தனை அவன் மனதில் கிளைவிட்டது.

'ஆம், நானும்கூட அனுரதபுரத்தில் நிலைநாட்டப்பெற்ற விஜயனின் பரம்பரையைத் தொலைப்பதற்காகத் தானே புத்த மதத்தைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ளேன் என்பதைக் கோபூதி அறியாமலா இருப்பான்? ஏன், என் சகோதரி வீட்டில் யாகம் நடத்தவும், குளக்கட்டுக்களிலே

அமைந்துள்ள காவல் தெய்வங்களுக்கும் பூஜை பண்ண வும் அவனுக்கு அனுசரணையாக இருந்ததைக் கோபூதி அறிந்துதானே இருக்கிறன். நாட்டிலே சனுதனதர்மத்தை நிலைநாட்டுவதிற்கூட இருவரும் ஒத்த கருத்துள்ளவர்களா கத்தானே இருக்கிறேம். ஆகவே அரசனைத் தொலைப்பதில் அவன் ஆதரவையும் பெற்றுக்கொண்டால் என்ன?'

'கோபூதியை நாம் ஏன் எதிரியாக வைத்துக்கொண் டிருக்கவேண்டும்?' என்பதற்கான காரணங்களை நாகதத் தன் கண்டுபிடிக்க முடியவேயில்லை. கோபூதியுடன் ஒரு தடவைபேசிப் பார்க்கலாம் என்று எண்ணிய நாகதத்தன் மீண்டும் குழம்பினுன்.

'கோபூதியை நம்பலாமா? தானுகவே அவனிடம் சென்று பேச, அதை அவன் அரசனுக்குத் தெரிவித்து விட்டால்......'

நீண்ட நேரமாக யோசித்து யோசித்துக் குழம்பிய நாகதத்தன் கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்தான். கோபூதியின் மனநிலையை நம்பிக்கையான வேறு ஒருவர் மூலம் அறியவேண்டும். அதே நேரத்தில் அப் பிராமண னது நடவடிக்கைகளையும் ஒற்றன் மூலமாக ஆராயவேண் டும். நிலைமை மோசமாக வருமிடத்து ஆதரவுக்கு வேறு இருவர் இருக்கவே இருக்கிறர்கள்.

இப்படியாக முடிவு எடுத்துக்கொண்ட நாகதத்தன், நாகரங்கன விஹாரையைக் கட்டுவதற்கு எதிராக வரும் சோமவாரம் தொட்டு ஒருமாத காலத்திற்கு ஒவ்வொரு நாளும் ஐநூறு பேருக்குக் குறையாதவர்கள், எந்த எந் தக் கிராமங்களிலிருந்து எந்த எந்த நாட்களில் வர வேண்டுமென்பதனை அட்டவணைப்படுத்தி, அம் மக்கள் விஹாரங் கட்டுமிடத்திற்கு வருவதற்கான கட்டளையைப் பிறப்பித்தான்.

கட்டளை ஓலையைத் தன் கீழ்ப் பிரதானியிடம் கொடுத் துச் சகல மக்களுக்கும் தெரிவிக்கும்படியும், குறிப்பாக அடுத்த சோமவாரத்திலிருந்து முதல் பத்து நாட்களுக்கும் வேலை செய்யவேண்டியவர்களின் கிராமங்களுக்கும் உட

னடியாகப் பறையறையும்படியும் பணித்துவிட்டுத் தன் அரண்மனையை அடைந்தான்.

அங்கே சென்றபோது அவனுக்குப் பேராச்சரியம் தரத்தக்க செய்தியொன்று காத்திருந்தது. கோபூதி தன் கைப்படவே எழுதியஓலையுடன் ஒரு தூதன் அங்கே காத்திருந்தான்.

அந்த ஓலையை வாசித்த நாகதத்தன், அவசரமாகத் தன் ராஜீய உடைகளைக் களைந்துவிட்டுச் சாதாரண கிராமவாசியைப்போல மாறுவேடமிட்டுக்கொண்டு புறப்பட்டான்.

★



## 19 அரசகட்டளை அறிவிப்பு

ஹந்தகல கிராமத்தில் அன்றிரவைக் கழித்த பந்துலனும் காமினியும் விடிந்ததும் தெற்கு நோக்கி நிற்றிகல கிராமத்துக்கு வழிகொண்டார்கள்.

வரும் வழியிலே அடர்ந்த காட்டின் நடுவே இரண்டு குக்கிராமங்கள் இருந்தன. அந்தக்கிராமங்களும் கோடையின் வெப்பத்தால் வரட்சியடைந்தே இருந்தன. ஆற்றங் கரையை அண்டிய இடங்களிலே பந்துலனின் நண்பர்கள் கிணறு தோண்டியிருந்தனர்.

பொதுவாக அக்கிராமங்கள் பட்டினியால் வாடிக் கொண்டிருந்தாலும் அக்கிராம மக்கள் பந்துலனையும் காமினியையும் உணவு கொடுத்து உபசரிக்கத்தவறவேயில்லை.

தங்களின் நிரந்தர வறுமையிலிருந்தும் தங்களைக்காப்பாற்றும் தெய்வமாகவே அக் குக்கிராமமக்களுக்குப் பந்துலன் தோற்றமளித்தான். அறியாமையிலும், அஞ்ஞானத்திலும் பட்டினியிலும், வெப்பநோயிலும் அழுந்திக் கொண்டு, ஒளியையும் சுபீட்சத்தையும் தேடும் இந்த மக்கள் கூட்டத்தை எப்படி வழிநடத்தப்போகிறேன். என்ற ஆழ்ந்த சிந்தனையோடும் பொறுப்புணர்ச்சியோடும் பந்துலன் மௌனமாகவே பயணம் பண்ணிக்கொண்டிருந்தான்.

அதிகாலை நேரத்திலே, அடர்ந்த காட்டின் குளுமை அவன் உடலுக்கும் உள்ளத்துக்கும் இதமாகவே இருந்தது. காட்டுச்சேவல்களின் கூவலும் குயில்களின் இன்னிசையும் அவன் காதுகளில் அமிர்தகானமாக ஒலித்தன. தன்தோழர்கள் கடந்த இரண்டு மாத காலங்களில், கிராமத்து மக்களை மிக நேர்த்தியாகவே தயார் பண்ணி வைத்திருக்கிறார்கள் என்ற மனநிறைவோடும், ஆனால் ஆழ்ந்த சிந்தனையோடும் பந்துலன் பயணம் பண்ணிக்கொண்டிருந்தான்.

மதியமானபோது அவர்கள் நிற்றிகல கிராமத்தை அடைந்தனர். அந்தக்கிராமம் சற்றுப் பெரிய கிராமமாக இருந்தது. சிவகுட்டன் என்பவன் அக்கிராமத்துக்குத் தலைவனாக இருந்தான்.

காமினி நேராகச் சிவகுட்டன் இல்லத்திற்கே பந்துலனை வழிநடத்திச் சென்றான். பௌத்தமதத்தின் செல்வாக்கு அக்கிராமத்திலே பரவியிருந்தாலும், கிராமவாசிகளிற் பலர் இன்னமும் லிங்கவழிபாடு உடையவர்களாகவே இருந்தனர், என்பதைப்பந்துலன் அவதானித்துக்கொண்டே வந்தான்.

கிராமத்தலைவனான சிவகுட்டன் பந்துலனை முகம் மலர்ந்து வரவேற்றான். காமினி பந்துலனை அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

''நீங்கள் நாகதத்தரின் மருமகனா? எத்தனையோ தடவை நான் நாகதத்தரைச்சந்தித்திருக்கிறேன். அப்படியிருந்தும் நான் முதற் தடவையாக இன்று தான் உங்களைச் சந்திக்கிறேன்'' என்றான் சிவகுட்டன்.

''நீண்ட காலமாக ஜம்புத் துவீபத்திலே வாழ்ந்தவர். சில மாதங்களுக்கு முன்னர்தான் நம் நாட்டுக்கு வந்தார். அதனுற்தான் தாங்கள் அவரைச் சந்திக்க முடியவில்லை'' என்ருன் காமினி.

''நானும் கேள்விப்பட்டேன். நாகதத்தரே தம்மரு மகனைப்பற்றி என்னிடம் பலதடவைகள் சொல்லியிருக் கிருர்''

''அப்படியா? என்னைப்பற்றி நல்லதாக ஒன்றும் சொல் லியிருக்கமாட்டார்'' என்று சிரித்தான் பந்துலன்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? உங்களைப் பற்றி மிக உயர்வான அபிப்பிராயம் தங்கள் மாமனுருக்கு, ஆனு லும் உங்கள் கொள்கைகளையும் இலட்சியங்களையும் அவர் விளங்கிக்கொள்ளவில்லை என்று தோன்றுகிறது எனக்கு'' என்ருன் சிவகுட்டன்.

''விளங்கவில்லை என்பதல்ல விளங்கிக்கொள்ள விரும்ப வில்லை என்பது தான் உண்மை. அதிகாரம் ஒரே இடத்திற் குவிந்திருப்பதை விரும்புபவர் அவர்''

''உண்மை அதனுற்தான் எனக்குக்கூடஅவரைப்பிடிக்க வில்லை. ஆனுல் அதிகாரம் ஓரிடத்திற் குவிந்திருப்பதை எதிர்த்து நாம் நடாத்தும் போராட்டத்தில் இறுதியாக அவர் நம்மோடுதான் சேர்ந்து கொள்வார் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு'' என்ருன் சிவகுட்டன்.

''அப்படியா? ஆனுல் அவரது அதிகாரத்திமிர் அதற்கு இடங்கொடுக்க மாட்டாது என்பதுதான் என் எண்ணம்'' என்ருன் பந்துலன்.

இதற்குள் பந்துலன் வந்ததைக் கேள்வியுற்ற பல் வேறு இளைஞர்கள் சிவகுட்டனின் இல்லத்திலே கூடிவிட் டார்கள். அவ்விளைஞர்களின் உற்சாகத்தையும் நல்லெண் ணத்தையும் கண்டபோது பந்துலனுக்கு மனநிறைவாகவும் பெருமையாகவும் இருந்தது. காமினியும் அவனுடையதோ ழர்களும் கிராமங்கள் தோறும் நன்ருகத்தான் செயற்பட் டிருக்கிருர்கள் என்பதை அவனுல் நேரடியாக உணர முடிந்தது. எந்த நேரமும் செயலுக்கு ஆயத்தமாகிக்

கொண்டிருக்கும் ஒரு இளைஞர் அணியும், அவ்வணிக்குப்பின்னணியாகக் கிராமவாசிகளின் ஆதரவும் இருக்கின்றது என்பதைத்தெரிந்து கொண்டு பந்துலன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான்.

பந்துலனுக்கும் காமினிக்கும், மற்றைய இளைஞர்களின் அனுசரணையோடு பெருவிருந்து ஒன்றுக்கே தயார் செய்தான் சிவகுட்டன். இளைஞர்களும் அதற்காக உற்சாகத்தோடு ஒத்துழைத்தனர். விருந்து தயாராகிக்கொண்டிருந்தது.

வெளியே வள்ளுவனின் பறைமுழக்கம் கேட்டுக்கொண்டிருந்தது. முழவு அதிர்ந்து முடிந்ததும் வள்ளுவன் வாயால் முழக்கினான். ''இத்தாற் சகலருமறிவது, நாகரங்கன விகாரத்து நிர்மாண வேலைகள் அடுத்து வரும் சோமவாரத்தன்று மதியத்தில் உள்ள சுபநேரத்திற் தொடக்கப்பட இருக்கின்றது. அந்தப்பணிக்கு நிற்றிகல கிராமத்திலிருந்து இருநூறுபேர் சோமவாரத்தன்று அதிகாலையில் நிர்மாணம் நடக்கும் இடத்துக்கு வரவேண்டும் என்பது இராஜ கட்டளை இது இராஜ கட்டளை...''

இந்த அறிவித்தலைச் சொல்லி முடித்த வள்ளுவன் மீண்டும் முரசத்தை அறைந்தான். அதன் அதிர்வு முடிவுற்ற பின்னர் மீண்டும் அதே வாசகங்களைத் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

இந்த அறிவிப்பைக் கேட்ட காமினி ''நம் போராட்டத்திற்குச் சூரத்தீசனே நாட்குறித்து விட்டான்'' என்றான் மகிழ்ச்சியோடு.

''இந்த அறிவித்தலிற் கூட ஓர் புதுமை இருக்கிறது பந்துல'' என்ற சிவகுட்டனிடம், ''என்ன புதுமை'' என்று ஆர்வத்தோடு கேட்டான் பந்துலன்.

சிவகுட்டன் விளக்கினான். ''இதுபோன்ற அறிவித்தல்கள் இத்தனை காலமும் அரண்மனையிலிருந்து என் போன்ற கிராமத்தலைவர்களுக்கே முதலில் அனுப்பப்படுவது வழக்கம். கிராமத்தலைவர்களே மக்களிடையே இதனை அறிவிப்பார்கள். ஆனால் இந்த அறிவிப்பே வழமைக்கு முற்

றிலும் மாருக இருக்கிறது. இவ்வறிவித்தலின் பலனுக கிராமத்தலைவர்கள் பலர் அரசனேடு விரோதித்துக்கொள் வார்கள்''

''அது கூட நமக்குச் சாதகமாகத்தானே அமையும்'' என்ருன் காமினி.

ஆம், நமக்குச்சாதகமான ஒரு சூழ்நிலையை இந்த அறி வித்தல் மூலம் தங்கள் மாமனுரே நமக்கு உண்டாக்கித்தந் திருக்கிருர். நான் ஏற்கனவே சொன்னேனே, குழப்பம் உண்டாகும்போது அவர் நமக்குச் சாதகமாகவே இருப் பார் என்று''

''அதை என்னுல் ஒத்துக்கொள்ள முடியவில்லை. அதி காரத்தைக்கைப்பற்றும் சதுரங்க விளையாட்டிலே நம்மைப் பகடைக்காயாக உருட்டுவாரே தவிர, எவருக்கும் அவர் சாதகமாக இருக்கமாட்டார்'' என்று அமைதியாகச் சொன்னுன் பந்துலன்.

''அந்த விவாதம் நமக்குள் வேண்டாம். அடுத்த தாக என்னசெய்ய வேண்டும் என்பதை ஆலோசிப்போம்'' என்ருன் காமினி.

இதற்குள் அடுத்த அடுத்த நாட்களில் எவ்வெவ்கிராமங் கள் சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கின்றன என்ற பட்டி யலோடு வந்து சேர்ந்தான் இளைஞன் ஒருவன். பந்துலன் எதிர்ப்பார்த்திருந்தது போலவே அந்தப்பட்டியலிற் தென் பகுதிக்கிராமங்களான அவுக்கண, திம்புல்லாகல, யாங்கல்ல பிதுருகல ஆகியன சேர்க்கப்பட்டிருந்தன.

''இக்கிராமங்கள் எதுவுமே அரச கட்டளைக்குப்பணி யாது'' என்ருன் காமினி.

''இந்தக்கிராமங்கள் மட்டும் என்ன, நாட்டின் எந்தக் கிராமமுமே இக்கட்டளைக்குப்பணியாது'' என்ருன் சிவ குட்டன்.

''ஆகவே அடுத்த சோமவாரத்திலிருந்து ஐந்து நாட் களுக்கு நாட்டிலே என்ன நடக்கின்றது என்பதை அவ தானித்துக்கொண்டு நாம் நடவடிக்கைகளை எடுப்போம்'' என்ருன் பந்துலன்.

''அதுவரை சோம்பிக் கிடப்பதா? அரசகட்டளைக்குப் பணியவில்லை என்ற காரணத்திற்காக அரசன் தன் சைனியத்தை அனுப்பிக் கிராமம் கிராமமாக மக்களைப் பயமுறுத்தினால் அதனை நாம் பார்த்துக் கொண்டேயிருப்பதா?'' என்று ஆத்திரத்தோடு கேட்டான் காமினி.

''ஆம், அரசன் தன் சைனியத்தை அனுப்பலாம். சேனனதும், குட்டகனதும் பத்து நாவாய்களிற் புதிய படைக் கலங்கள் வருகின்றனவாம். அவை இராஜ சைனியத்திற்கே கொண்டு வரப்படுவதாகப் பருமகரே என்னிடம் சொல்லியிருக்கிறார். அந்தப்போர்க்கலங்கள் கூட இப்போது அனுரதபுரம் வந்திருக்கும்'' என்றான் சிவகுட்டன்.

''இது நான் ஏற்கனவே அறிந்தது தான். அறிந்து அதற்கான ஏற்பாடுகளும் பண்ணியிருக்கிறேன். அரண்மனைக்கு வர இருக்கும் படைக்கலங்களில் ஒரு பகுதி நமக்கும் வந்து சேரும்'' என்று உற்சாகத்தோடு சொன்னான் காமினி.

''அவை நமக்கும் வரலாம், வராமலும் விடலாம். போராயுதங்களைச்சேகரிக்கும் பொறுப்பு உன்னுடையதல்லவா? ஆனாற் போராயுதங்கள் மட்டும் முக்கியமானதல்ல. மக்கள் சக்தியும், அவர்கள் ஆதரவும், அனுதாபமும் இல்லாவிட்டால் நாம் தோற்று விடுவோம்'' என்றான் பந்துலன்.

''அந்த மக்கள் அனுதாபம் நமக்கிருக்கின்றது என்பதை அவர்களோடு பழகும்போது கண்டு கொள்வாய் பந்துல. இந்த நிற்றிகல கிராம மக்கள் உன்னை ஆதரிப்பார்கள் என்பதை நீ எதிர்ப்பார்த்தாயா? இந்தக் கிராமத்தைப்போலவே இந்நாடு முழுவதும் நமக்கு ஆதரவாக இருக்கிறது பந்துல'' என்றான் சிவகுட்டன்.

உணவு முடிந்துவிட்டது. பெருவிருந்தாக ஏற்பாடுபண்ணப்பட்டிருந்த மதிய உணவு பறையறிவிப்பைக் கேட்டதும் சுருங்கிவிட்டது. பந்துலனும் நண்பர்களும் அவசர அவசரமாகச் சாப்பிட்டார்கள். சாப்பாடு முடிந்ததும் தமது இயக்கத்திலீடுபட்டவர்களை உசார்ப்படுத்தி வைத்துக்

கொள்ளுவதற்காகத் தென்பகுதிக் கிராமங்களை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார்கள்.

சிவகுட்டன் சொன்னான்: ''சோமவாரத்திற்கு இன்னமும் ஐந்து நாட்கள் இருக்கின்றன. ஆகவே நானும் உங்களோடு வருகின்றேன்''

''ஆம், அது மிகவும் நல்லதே. எங்களை விடக்கிராமத்து மக்களை நீங்கள் அதிகமாகத் தெரிந்திருப்பீர்கள். பாதைகளும் குறுக்கு வழிகளும் கூடத் தங்களுக்கு நன்கு தெரிந்திருக்கும்'' என்று பந்துலன், சிவகுட்டன் தங்களோடு இணைந்து வருவதை மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.

''நான் வருவதற்கு அதுமட்டும் காரணமல்ல. அதற்கு ஒரு வழிகாட்டியை அனுப்பிவிட்டு இருக்கலாம். ஆனால் சோமவாரம் கழிந்த மூன்றாம் நாள் அரச ஆணைக்கு எதிராகத்தீசவாவியின் திருத்த வேலையையும் நாம் ஆரம்பிக்க வேண்டும். அந்தச்செய்தியைக் கிராமந்தோறும் எடுத்துச் சொல்லவுந்தான் நான் வருகிறேன்'' என்றான் சிவகுட்டன்.

''அத்தனை அவசரமாக அதனைச்செய்ய வேண்டுமா?'' என்று பந்துலன் கேட்டான்.

''ஆம், ஒரு முனையிலிருந்து போர்க்குரல் ஒலித்துவிட்டது. மறுமுனையில் உள்ள நாம் மௌனமாகவே இருந்தால் எதிரிகளிடம் சரணாகதியடைந்து விட்டோம் என்று தான் அர்த்தம்'' என்றான் சிவகுட்டன்.

''ஆம், சிவகுட்டன் சொல்வது மிகவும் பொருத்தமானது. நாகரங்கன விகாரையின் நிர்மாணம் நமக்கொரு அறை கூவலாகவே அமைந்துவிட்டது. அதற்கு நாம் எதிர் நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்கள் நம்மை மதிக்கமாட்டார்கள். அவர்களிடையே மூன்று மாதங்களாகப்போதித்துக்கொண்டிருக்கும் நம்மைக்கிராமங்களைவிட்டே கலைத்து விடுவார்கள்'' என்றாள் காமினி.

''அத்தோடு நமக்கு நாகதத்தரும் சாதகமாக இருப்பார் என்றே நான் கருதுகிறேன். ஆகவே நாம் போராட்டத்திற்குத் தாமதிக்கக்கூடாது'' என்றான் சிவகுட்டன்.

அன்று சாயந்தரம் வரையும் அவர்கள் ஆலோசித்தார்கள்!

அரசனின் ஆணைக்குப் பணிய மறுக்கும் முதற் கிராமங்களுக்கு என்ன நடக்கும்? அரசன் படைபலம் கொண்டு அக்கிராமங்களை அடக்க முயன்றால் என்ன செய்வது? தீசவாவியின் உடைப்பைச் சீர்திருத்த எந்தக்கிராமங்களிலிருந்து மக்களைத்திரட்டுவது? என்றெல்லாம் விரிவாக ஆராய்ந்தார்கள்.

கடைசியாய்த் தீசவாவியின் உடைப்பைச் சீர்படுத்தும் வேலையைப் பந்துலன் நேரடியாகத்தலைமை தாங்கி நடத்துவது எனவும், அம்முயற்சியை எதிர்க்க அரசபடைகள் முயன்றால் அப்படையை காமினியின் தலைமையில் எதிர்ப்பது எனவும், போராட்டத்தை நீளவிடாமல் சிவகுட்டன் தலைமையிலான கிராமத்தலைவர்கள் அரசனிடம் சமாதானம் பேசுவது எனவும், சுதந்திரமான கிராம ராச்சியங்களுக்கு மன்னனைச்சம்மதிக்க வைக்க நிர்ப்பந்திப்பது எனவும், அதற்கு மன்னன் சம்மதித்தால் சமாதானம் செய்து கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்திற்குக் காமினியை இணங்க வைக்கப் பந்துலன் பெருமுயற்சி பண்ணவேண்டியிருந்தது.

அவர்கள் அந்தத் தீர்மானத்திற்கு வந்தபோது ஏறத்தாழ இருட்டியேவிட்டது. ஆகவே அவர்கள் தம்பயணத்தை ஒத்திவைத்து விட்டு அங்கேயே இரவைக்கழிக்க வேண்டியிருந்தது!

எல்லோரும் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கையிற் பந்துலன் மட்டும் விழித்துக் கொண்டேயிருந்தான். அவன் நினைவுகளிற் பிரபா தோன்றி அவனை அலைக்கழித்துக் கொண்டிருந்தாள்.

★



## 20 வெள்ளாடுகளும்! ஓநாய்களும்!!

மாறு வேடத்திலே சாதாரண குடிமகனின் உடையில் சென்ற நாகதத்தன், அநுரத புரிக்குச் சற்று வடக்காக இருந்த பில்லாவெலக் குகையை அடைந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. கிராமத்திற்கு ஒதுக்கமான இடத்திலே காட்டினுள் அமைந்திருந்த அந்தக் குகையிலே, கோபூதி, நாகதத்தனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். தன்னோடு வந்த இரண்டு வீரர்களையும் குகைக்கு வெளியே நிறுத்திவிட்டு நாகதத்தன் உள்ளே சென்றான்.

கோபூதியைக் கண்டதும் நாகதத்தன் அவரின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்தான். அவனை ஆசீர்வதித்து விட்டு எதிரேயிருந்த கல்லாசனத்தைக் காட்டினார் கோபூதி.

அந்தக் குகை இருளடைந்ததாகவும், காற்றோட்டம் இன்றியும் இருந்தது. சிறிய தீவட்டி வெளிச்சத்திலே அக் குகையிலே இருந்த பொருட்களை நோட்டம் விட்டான் நாகதத்தன். அப்பிராமணரின் கமண்டலம், மான் தோல் ஆசனம், சமித்துக்கள் இவைகளைத் தவிர வேறு ஏதுமே இல்லை.

கோபூதி நாகதத்தனை மீண்டும் அமரும்படி கேட்ட போது நாகதத்தன் அமர்ந்துகொண்டான். அவன் அமர்ந்துகொண்டதும் கோபூதி கேட்டார்:

''நாகரங்கன விகாரையின் வேலைகளைத் தொடங்க முடிவு செய்து விட்டீர்களா?''

"ஆமாம் சுவாமி! இன்றைக்குத்தான் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மகா விகாரைப் பிக்குகளுக்காக அதைச் செய்யவேண்டியிருக்கிறது."

"ஏன்? தங்களுக்கு அதிலே இஷ்டமில்லையா பருமகரே" என்று கேட்டுச் சிரித்தார் கோபூதி.

இதற்கு என்ன பதில் சொல்வதென்றே நாகதத்தனுக்குத் தெரியவில்லை. மௌனமாக இருப்பதுவே நலம் என்றெண்ணிக் கொண்டவன், "சுவாமி! அவசரமாக வரும்படி ஓலையனுப்பிருந்தீர்கள்" என்று பேச்சை மாற்றினான்.

"ஆம்! மிக மிக அவசரமானதுதான். நாகதத்தரே! விகாரத்தைக் கட்டுவதற்கு மக்கள் ஒத்துழைப்புத் தருவார்கள் என நீர் எதிர்பார்க்கிறீரா?"

"நான் அரச கட்டளையை நிறைவேற்றவேண்டும்."

"நாகதத்தரே! எதையும் என்னிடம் மறைப்பதில் பயனில்லை. உமது மனதிலே என்ன இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் உமது திட்டம் வெற்றியடையும் என்று நான் நம்பவில்லை. ஆனால் அத்திட்டம் வெற்றியடையவேண்டுமென்று விரும்புகிறேன்."

நாகதத்தன் அதிர்ந்துபோய் "சுவாமி" என்று மட்டும் குழறினான்.

"நாகதத்தா! ஆச்சரியப்படாதே. எங்கோ இருந்து வந்த ஒரு கூட்டத்தினர் இந்த நாட்டின் அரசினைக் கைப்பற்றி அட்டகாசம் செய்கின்றனர். அந்தக் கூட்டத்தினர் புதிதாகக் கொண்டு வந்த பௌத்த மதம் நமது சனாதனக் கட்டுப்பாடுகளை அழிக்க முயல்கிறது. அம்மதத்தினால் எமது புராதன நம்பிக்கைகள் நகைப்புக் கிடமாக்கப்படுகின்றன. இவைகளையெல்லாம் சகித்துக்கொண்டு அரசனை ஆதரிப்பேன் என்று எதிர்பார்த்தாயே; அது தவறென்றே உனக்குத் தோன்றவில்லையா?"

"சுவாமி! நான்கூட என் மனதால் புத்த மதத்தை நேசிக்கவில்லை."

"அது எனக்குத் தெரியும்! அம்மதத்தைத் தீவிரமாக ஆதரிக்கச் செய்வதன் மூலம் அரசனைப் பலவீனப்

படுத்தி, மீண்டும் இந்நாட்டிலே காலசேனனின் பரம்பரையை ஆட்சிக்குக் கொண்டு வரவேண்டும் என்ற உன் திட்டத்தை நான் நன்ருக அறிவேன். ஆனுல் உன் மருமகன் பந்துலனை அரச பதவியில் அமர்த்த எடுத்துக்கொண்ட முயற்சிதான் அபத்தமானது. இன்னமும் நீ அதனையே நினைத்துக்கொண்டிருந்தால் உன் திட்டம் படுதோல்வியாகவே அமையும்.''

''இப்போது அந்த எண்ணத்தையே விட்டுவிட்டேன் பிரபு.''

''அதுவும் எனக்குத் தெரியும். ஆனுல் என்ன இருந்தாலும் பந்துலன் உன் தங்கையின் மகன். அந்த இரத்த பாசம் உன் மனதைக் குழப்பும் என்றுதான் எண்ணுகிறேன்.''

''அரசியல் சூழ்ச்சிகளிலே பந்த பாசங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லையே!''

''ஆம் உண்மை! ஆனுல் பந்துலன் தட்சசீலத்திலே பெற்ற ஞானம் அவனைப் பிழையாக வழி நடத்திவிட்டது. முட்டாள்! இன்னமும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு அப்பாலும் ஏற்பட முடியாத தன்னிறைவுள்ள சுதந்திரமான கிராமங்களை அவன் கனவு காணுகிருன்! அவன் நடாத்த இருக்கும் குழப்பங்களின் முடிபு மாகமத்தில் இருக்கும் மகாநாகனின் சந்ததியினரை அநுரதபுரி ஆட்சி பீடத்தில் அமர்த்துவதாகவே இருக்க முடியும்.''

''சுவாமி! பந்துலன் மாகமத்து அரசரோடு சேர்ந்து கொண்டான் என்பதிற் சற்றும் உண்மையில்லை.''

''நான் அப்படிச் சொன்னேனு? மாகமத்து அரசனுக்கும் அவனுக்கும் எந்தத் தொடர்பும் இல்லையென்பது எனக்குத் தெரியும். ஆனுல் அவனது முக்கிய கூட்டாளியான காமினிக்கு அந்தத் தொடர்பு உண்டு. அதைத்தான் நான் சொல்கிறேன்.''

''இருக்கலாம் சுவாமி.''

''ஆம். அதனுல்தான் நாம் விழிப்பாக இருக்கவேண்டும். உன்னுடைய இலட்சியமும் என்னுடைய விருப்பமும்

அநுரதபுரத்திலே பௌத்த மதத்திற்கு விரோதமான, இந்நாட்டுப் பழங்குடி மக்களின் ஆட்சி நடக்கவேண்டும் என்பதல்லவா?''

நாகதத்தன் மௌனமானன்.

கோபூதி எழுந்து அவன் தோளில் தட்டிக்கொடுத்து, ''பயப்படாதே நாகதத்தா! விஜயன் பரம்பரையினரின் அரசைத் தூக்கியெறிந்து, காலசேனனின் அரசைத் தூக்கி நிறுத்த நீண்ட காலமாகத் திட்டமிட்டுக்கொண்டிருக்கும் நீ, அதே இலட்சியத்தைக் கொண்டிருந்த என்னைச் சந்தேகப்பட்டுக்கொண்டிருந்தாய். காலம் வரும் வரையும் நானும் காத்துக்கொண்டிருந்தேன். இப்போது காலம் வந்துவிட்டது. அதனுல்தான் என்னை நாஞகவே உனக்கு வெளிப்படுத்தி, உனக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்வதற்காக உன்னை அழைத்தேன்.''

''உண்மையாகவே நான் நேற்றுக்கூட இது விடயமாகத் தங்களிடம் உதவி பெறலாமா என்று யோசித்தேன்.''

''ஆம்! நீ ஒரு கிண்ணம் மதுவை அருந்திவிட்டுச் சிந்தித்ததையும் நான் அறிவேன்.''

நாகதத்தன் திடுக்கிட்டான். கோபூதி தொடர்ந்தார்: ''ஆச்சரியப்படவேண்டாம். அரண்மனையிலேயே எனக்கு ஒற்றர்கள் இருக்கிறுர்கள். அது போகட்டும். நாகரங்கன விகாரத்தை நிர்மாணிக்க மக்கள் எவருமே வரமாட்டார்கள். அரசன் அம்மக்களைத் தண்டிக்கத் தன் படையினை அனுப்புவான். அப்படையைக் காமினியும், அவன் தோழர்களும் எதிர்ப்பார்கள். அவர்களுக்கு ஆதரவாக மாகமத்து அரசு இருக்கும். இந்தப் போரிலே அரசன் தோல்வியடைந்தாலும், இந்த நாட்டிலே மீண்டும் ஒரு பௌத்த அரசே ஆட்சிக்கு வரும். இதை நீ விரும்புகிறுயா?''

''என் விருப்பத்தைத் தாங்கள் அறிந்தே இருப்பீர்கள்.''

''ஒரு வேளை அரசன் தோல்வியடைந்தால் உன் மருமகன் பந்துலன் அரசஞகலாம் என்று நீ கனவு காண்பாய். ஆனுல் அது கனவாகவே இருக்கும் என்று நான் சொல்கி

றேன். அந்தப் போர் நடந்துகொண்டிருக்கையிலேயே அவன் தலை உருளும்!''

நாகதத்தன் அதிர்ந்தே போனான்! உறுதி படைத்த அவன் உள்ளமும், மலையொத்த அவன் உடலும்கூட நடுங்கின. அந்தக் குறிப்பை யுணர்ந்த கோபூதி சொன்னார்: ''பார்த்தாயா! பந்துலன் மேலுள்ள பாசத்தால் அதிர்ந்து போய்விட்டாய்! இப்படிப் பந்தபாசங்களில் சிக்கிக் கொண்டவர்களால் உண்மையைத் தரிசிக்க முடிவதில்லை. ஆம். உண்மையாகவே நான் சொல்கிறேன். வேள்விகளிலே வெள்ளாடுகள் பலியிடப்படுகின்றனவே தவிர காண்டாமிருகமும், ஓநாய்களும் பலியிடப்படுவதில்லை. பந்துலன் வெள்ளாடு போன்ற அப்பாவி! அவனுக்காக நான் பரிதாபப்படுகிறேன்.''

நாகதத்தன் மீண்டும் மௌனமானான். கோபூதி தொடர்ந்து சொன்னார்: ''ஒருவேளை அரசன் தோற்கடிக்கப்பட்டு பந்துலனே வெற்றியடைந்தவர்களுக்குத் தலைவனாக ஆகிவிட்டாலும், அவன் தலைமையிலும் நாம் விரும்பும் ஆட்சியமைப்பு ஏற்பட்டுவிட முடியாது. இந்த நாட்டின் பழமையான மத நம்பிக்கைகளையும், சமூகக் கட்டுக்கோப்பையும் முற்றிலும் அழிப்பதாகவுள்ள ஓர் அமைப்பையே பந்துலன் ஏற்படுத்துவான். இதை நீர் விரும்புகிறீரா?''

''அதற்காக நான் இதுவரை திட்டம்போட்டுக்கொண்டிருக்கவில்லை என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.''

''ஆகவே நாம் பந்துலனையும், காமினியையும், அவர்களுக்கு ஆதரவாகவுள்ள கிராமங்களையும்—சிலவேளை மாகமத்து அரசையும் வெற்றிகொள்ள வேண்டியிருக்குமல்லவா?''

''அதிலே எனக்குச் சந்தேகமேயில்லை.''

''ஆனால் அரசனது படைகள் இவர்களை எதிர்த்து வெற்றிகொள்ளுமென்று நினைக்கிறாயா? அரசனை உள்ளிருந்தே தொலைத்துவிட்டு, வெற்றி பெறும் எந்தப் பக்கமாவது சேர்ந்துகொண்டு சிம்மாசனத்தைக் கைப்பற்றலாம்

என்றுதானே எண்ணுகிருய்? காமினி கடைசிவரை இதற்கு விடவேமாட்டான்.''

''இப்பிரச்சினைக்குத் தங்களின் ஆலோசனை என்ன சுவாமி?''

''அதைச் சொல்லவே உன்னை அழைத்தேன். நாக தத்தா! அரசனை வீழ்த்துவதற்கு உதவியாக, அவனுக்கு மக்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொடுக்க நீ இது வரை கையாண்டவைகள் முற்றிலும் சரியே. ஆனல் அரச னின் வீழ்ச்சியை நம் எழுச்சியாகப் பயன் படுத்திக்கொள் ளத்தான் நீ தவறிவிட்டாய். அது உன் பிழையுமல்ல. பந்து லன் மேல் வைத்த பாசத்திரை உன் கண்களை மறைத்துவிட் டது. நாகதத்தா! கவனமாகக் கேள்! நாட்டிலே குழப்பம் ஏற்பட்டதும் அரசனை வீழ்த்தவேண்டும். ஆனல் அரசனின் வீழ்ச்சிக்குப் பின்னரும் அரசு நம் கையிலேயே இருக்க வேண்டுமென்ருல், அரசனின் படைகள் நம் கையில் இருக்கவேண்டும். அதுவும் அப் படை குழப்பக்காரர்களை விடப் பலமுடையதாகவும் இருக்கவேண்டும்! இந்த நிலையில் நமது முக்கிய எதிரி அரசன் அல்ல; பந்துலனும், அவன் கூட்டமுமே.''

''நானும் அப்படியே அபிப்பிராயப்படுகிறேன்.''

''அதைவிட வேறு அபிப்பிராயங் கொள்ள முடியவே முடியாது. ஆனலும் உமது பராக்கிரமத்தை மட்டும் நம்பி அவர்களைச் சமாளித்துவிடலாம். நிற்றிகல கிராமத் தலை வன் சிவகுட்டனும் உதவுவான் என்றும் நம்புகிறீர்.''

'எல்லா விஷயங்களையும் ஒன்றுவிடாமல் இப் பிராம ணர் அறிந்திருக்கிருரே' என்று ஆச்சரியப்பட்ட நாகதத் தன், ''இச் சிக்கல்களுக்குத் தாங்கள் சொல்லும் வழி என்ன?'' என்று மீண்டும் கேட்டான்.

''குதிரை வியாபாரிகளான சேனனையும், குட்டகனை யும் படைத் தலைமையை ஏற்கச் செய்வதுதான் வழி.''

''அவர்களையா? அவர்களை அந்நியர் என்று......''

''அந்நியர்! நாகதத்தா! இந்த நாட்டின் பழங்குடி மக்களான உன்னையும், என்னையும் தவிர மற்றெல்லாரும்

அந்நியரே. இந்த உண்மையை எவரும் உணர்ந்துகொள்ளாமல் இத்தீவிலே காலையில் அடியெடுத்து வைத்தவன் மாலையில் வந்தவனை அந்நியன் என்கிறான். சேனனும், குட்டகனும் வடக்கே வெகு தொலைவிலிருந்து வந்தவர்களைவிட நமக்கு மிகவும் நெருங்கியவர்கள்.''

''ஆனால் அரசன் இவர்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால்......''

''அதை நான் பார்த்துக்கொள்ளுகிறேன். அதனை என் பொறுப்பில் விடு. நாகரங்கன விகாரையைக் கட்ட எவருமே வரமாட்டார்கள். அன்றே சேனன் அரசனின் படைத் தலைவனாக நியமிக்கப்படுவான்.''

''அதனால் நாம் அடையும் லாபம்......?''

''லாபம்! இன்னமும் விளக்கமாகச் சொல்லவேண்டுமா? நாகதத்தா! அரண்மனையிலே சூரத்தீசனின் தலை உருளும். சேனன் இந்நாட்டின் மன்னன் ஆவான். உன் மகள் அவன் பட்ட மகிஷி ஆவாள். பின் குட்டகன் படைத் தலைவன்! நீர் பருமகர்! நான் ராஜகுரு!''

''நீங்கள் சரியாகவே சிந்தித்திருக்கிறீர்கள். நான் தங்கள் திட்டத்தை ஏற்றுக்கொள்கிறேன்'' என்ற நாகதத்தன், எழுந்து கோபூதியை வணங்கி நின்றான்.


''உனக்கு மங்களம் உண்டாகுக'' என்று வாழ்த்திய கோபூதி, விடயங்கள் எல்லாம் திட்டப்படி நடப்பதற்காக நான் அநுரதபுரச் சுற்று வட்டாரத்திலேயே இருப்பேன். அவசியம் ஏற்படும்போது உன்னைச் சந்திப்பேன். இப்போது எவரும் காணாதபடிக்கே கிளம்பு'' என்று கூறிவிட்டு, அவனுடன் வெளியே வந்தார்.

வெளியில் வந்ததும் சொன்னார்: ''நாகதத்தா! நீ ஆயுதங்கள் கொண்டு வருவதற்காக மாதோட்டத்திற்கு அனுப்பியிருக்கும் படைவீரர் சிலரில் எனக்கு நம்பிக்கையில்லை. அவர்களை நான் பார்த்துக்கொள்கிறேன்.''

பிராமணரின் வாக்குகள் எல்லாமே நாகதத்தனை மந்திரம் போல் மயக்கின. தனது நீண்டகால ஆசைக்கு ஓர்

விடிவு உண்டாகிக்கொண்டிருக்கிறது என அவன் மனம் திருப்தியடைந்து கொண்டிருந்தது. நட்சத்திரங்களின் தெளிவான ஒளியிலே அவன் அநுரதபுரத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

★



## 21 எதிர்ப்பு அணி திரண்டது!

அதிகாலையிலேயே நிற்றிகல கிராமத்தை விட்டுப் புறப்பட்ட பந்துலனும், காமினியும், சிவகுட்டனும் தெற்கு நோக்கி விரைவாகத் தங்கள் குதிரைகளைச் செலுத்திக்கொண்டிருந்தனர். நாகரங்கன விகாரைக் கட்டு வேலைகள் தொடங்க இன்னமும் நான்கு நாட்களே இருந்தன. அதற்குள் அவர்கள் தென் திசையில் இருக்கும் அத்தனை கிராமங்களையும் தரிசித்து, தங்கள் திட்டத்தை அறிவித்துவிட்டு சோமவாரத்தன்று மீண்டும் நிற்றிகலைக்குத் திரும்பி விடவேண்டும் எனத் திட்டமிட்டிருந்தனர்.

சிவகுட்டனும், காமினியும் கலகலப்பாகப் பேசிக்கொண்டு சென்று கொண்டிருந்தனர். பந்துலன் சிந்தனையில் ஆழ்ந்தவனாகக் காணப்பட்டான்.

காமினி அவனை வேண்டுமென்றே வம்புக்கிழுத்தான். அவன் சொன்னான்: ''நாங்கள் ஏதோ முக்கியமான கருமத்திற்காக இந்தப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் பந்துலனோ பிரபாவைப் பற்றியே நினைத்துக் கொண்டு வருகிறான் போல இருக்கிறது''.

''பிரபாவைப் போல அழகான பெண்ணொருத்தி உனக்குக் காதலியாகக் கிடைத்திருப்பாளானால் நீயும் அப்படித்தான் இருப்பாய். பேசாமல் வா'' என்றான் சிவகுட்டன்.

''பிரபாவை உங்கட்குத் தெரியுமா?'' என்று கேட்டான் காமினி.

''தெரியுமா என்று கேட்கிறாய்? பல ஆண்டுகளாக நாகதத்தருக்கும் எனக்கும் அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் தொடர்பு உண்டு. நான் அநுரதபுரம் செல்லும் போதெல்லாம் அவர் வீட்டுக்குப் போவேன். அதனால் அவளை எனக்கு இளமைப் பருவத்திலிருந்தே தெரியும். ஐந்து வருடங்களுக்கு முன்னே அவளுக்கு ஒரு மான் குட்டிகூடக் கொண்டுபோய்க் கொடுத்தேன். அவள் அழகி என்பது மட்டுமல்ல; பேரழகி.''

''சரிதான்! நான்கு குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்ட தாங்களே இப்படி வருணிக்கும்போது அவள் பேரழகியாகவே இருப்பாள். பாவம்! அந்தப் பேரழகியை விட்டுப் பிரிந்து பந்துலன் நம்மோடு அலைகிறான்.''

''அவளுக்கும் மேலாகச் சில இலட்சியங்களை நேசிக்கிறேன் என்பது இப்போதாவது உனக்குத் தெரிகிறதல்லவா காமினி'' என்றான் பந்துலன்.

''ஆனால் முழுமனதோடு அல்ல. இப்போதுகூடப் பிரபாவிற்கு ஏதாவது ஆபத்து என்றால் எங்களையெல்லாம் இடையிலே விட்டுவிட்டு ஓடிவிடுவாய்'' என்றான் காமினி.

அவனது விஷமத்தனமான பேச்சை பந்துலனால் இரசிக்க முடியவில்லை. காமினியைச் சற்றுக் கோபத்தோடு முறைத்துப் பார்த்தான் பந்துலன்.

''பிரபாவிற்கு எந்தக் கெடுதியுமே நேரிடாது. நமது போராட்டம் முடிந்தவுடனேயே பிரபாவையும், பந்துலனையும் மணக்கோலத்திற் காணத்தான் போகிறோம். அதுவரை பிரிவுத் துயரைப் பொறுத்துக்கொள்ளும் வலிமை பிரபாவிடம் இருந்தே தீரும்'' என்று சமாதானம் செய்ய முயன்றான் சிவகுட்டன்.

அவர்கள் பிரயாணம் தொடர்ந்துகொண்டேயிருந்தது. அன்று சாய் பொழுதுக்குள்ளே அவர்கள் மகா அலகமுவ, தம்புல்ல, பிதுருகல, யாங்கல்ல என்ற கிராமங்களைக் கண்டு சென்றனர். விகாரம் கட்டும் பணிக்கு எவருமே போவதில்லையெனக் கிராமவாசிகள் உறுதி கூறினார்கள். அத்தோடு தீசவாவியின் கரையைக் கட்ட வருவதாகவும் அவர்கள் உறுதியளித்தார்கள். அந்தப் பணிக்கு ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் மக்களைத் திரட்டி வரும் பணியைக் கிராமத் தலைவர்களே ஏற்றுக்கொண்டார்கள். அத்தோடு அவ்வேலையில் ஈடுபடுவர்களைப் பாதுகாக்கும் ஆயுதப் பிரிவுக்கும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் இளைஞர்கள் நியமிக்கப்பட்டார்கள்!

தான் எதிர்பார்த்திருந்ததற்கும் மேலாகக் காரியங்கள் செம்மையாக நடந்துகொண்டிருப்பதைக் கண்டு பந்துலனுக்குத் திருப்தியாக இருந்தது. காமினி, திஸ்ஸ ஆகிய நண்பர்களின் கட்டுப்பாடான அமைப்பையும், இளைஞர்களின் உற்சாகத்தையும், கிராம வாசிகள் அவர்களுக்குக் கொடுக்கும் ஆதரவையும் கண்டு அவன் மனம் புளகாங்கிதமடைந்துகொண்டிருந்தது.

சாயந்தரமானபோது அம் மூவரும் தென் கிழக்காகத் திரும்பி மகாநதியின் கரையில் அமைந்திருக்கும் திம்புலாகல என்ற இடத்தை அடைந்தபோது சூரியன் அஸ்தமித்தேவிட்டது.

திம்புலாகல கிராமத்தில் இராப் பொழுதைக் கழித்த மூவரும், விடியற் கருக்கலிலேயே எழுந்து மகாநதிக் கரையோரமாகப் பயணம்பண்ணி 'கந்தேகமகந்த', முதுகல ஆகிய கிராமங்களைத் தரிசித்து தமது திட்டத்தை விளக்கி ஏற்ற ஒழுங்குகளைச் செய்துவிட்டு அன்று அஸ்தமிப்பதற்குள் நிற்றிகலையை அடைந்துவிடவேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

மகா நதியின் கரையோரக் கிராமங்களிலுள்ளவர்களே இச் செய்தியைத் தென் பகுதிக்கு எடுத்துச் சென்றால் போதுமானது எனப் பந்துலன் எண்ணினான். ஏனென்றால்,

தெற்கே தூரத்தில் உள்ளவர்களால் இப்போராட்டத்தில் நேரடியாகப் பங்குபற்ற முடியாது. அநுரதபுரமும், அதைச் சூழவுள்ள கிராமங்களுமே நேரடியாகவும், உடனடியாகவும் பங்குபெறும்; பங்குபெற வேண்டுமென்பது பந்துலனின் கருத்தாக இருந்தது.

சிவகுட்டனும் அவன் கருத்தை ஆதரித்தான்.

''இன்று இரவோடிரவாக நிற்றிகலையை அடைந்து, இடையிலே இருக்கும் ஒரு நாளில் நகரையும் அதன் சுற்றுப் புறங்களையும் உஷார்படுத்தவேண்டும்'' என்று சிவகுட்டன் கூறினன்.

''ஆமாம்! தங்களுக்கும் மனைவியைக் காணவேண்டும் போல இருக்கிறது. பந்துலனும் பிரபாவைக் கண்டு கொள்ளலாம்'' என்று சிரித்தான் காமினி.

''அப்படித்தான் வைத்துக்கொள்ளேன். நாம் யாருக்காக இப்போராட்டத்தை நடத்துகிறோம். நமது சமுதாயத்திற்காக—நமது எதிர்கால சந்ததிக்காக அல்லவா இதனை வலிந்து வரவேற்கின்றோம். பெண்களே இல்லாத சமுதாயம் இருக்க முடியுமா? அவர்கள் இல்லாமல் எதிர்கால சந்ததிதான் தோன்ற முடியுமா?'' என்று கேட்டான் சிவகுட்டன்.

''அவைகள் உண்மையாகவே இருக்கலாம். ஆனல் பெண்கள் இல்லாமலே போராட்டங்களை நடத்தலாம். இன்னமும் யோசித்தால் பெண்களால் போராட்டத்திற்கு இடைஞ்சலும், இன்னலும் ஏற்படுமே தவிர, நன்மை ஏற்படாது. அதைத்தான் நான் சொல்கிறேன்'' என்றான் காமினி.

''அனுபவம் இல்லாததினலும், சரித்திரம் தெரியாததினலும் இப்படிச் சொல்கிருய். காலசேனனின் அரசைக் கவிழ்க்கக் குவேனி எவ்வளவு துணையாக இருந்தாள் என்பதை நீ அறிவாயா?'' என்று கேட்டான் சிவகுட்டன்.

காமினி சற்று அடங்கிப்போனன்!

மூவரும் திட்டமிட்டிருந்ததற்குச் சற்றுக் காலந் தாழ்த்தி சூரியன் அஸ்தமித்து மூன்று நாளிகைகளின் பின்னால் நிற்றிகலையை அடைந்தனர்.

சிவகுட்டனின் வீட்டையடைந்தபோது, கிராமத்திலே முகாமிட்டிருந்த இளைஞன் ஒருவன் அதிர்ச்சிதரும் செய்தி ஒன்றைக் கொண்டு வந்தான். 'சேனனிடம் ஆயுதம் வாங்கச் சென்ற படையிலிருந்த நமது தோழர்களில் ஏழு பேர் வழியிலே யாரோ இனந் தெரியாதவர்களினால் மறைந்திருந்து அம்பெய்து கொல்லப்பட்டார்கள்' என்ற செய்தி அம் மூவருக்கு மட்டுமல்ல, அக்கிராமத்தினர் சகலருக்குமே அதிர்ச்சியைக் கொடுத்தது.

★



## 22 சதியில் சிக்கிய மன்னன்!

நாகரங்கன விகாரத்தின் கட்டு வேலைகளைத் தொடங்க இடையிலே இன்னமும் ஒரே ஒரு நாளே இருந்தது. ஏற்கனவே கருங்கற்களால் தளம் அமைத்து, முன்னூறு பாகச் சுற்றளவிற்கு ஒரு முழ உயரத்திற்கு சுவர்கள் எழுப்பப்பட்டு இடையிலே கைவிடப்பட்டிருந்த அவ்விகாரத்தின் முன்னால் பிக்குகள் தங்கியிருந்து பிரித் பாராயணம் பண்ணுவதற்காகப் பிரமாண்டமான பந்தர் ஒன்று அமைக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அந்தப் பணியினை நாகதத்தனே மேற்பார்வை செய்துகொண்டிருந்தான். மகா விகாரையிலிருந்து அந்தப் பந்தர் வரைக்கும் அலங்கார

வளைவுகளும், தோரணங்களும் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கட்டிட வேலையைச் செய்வதற்கு ஆரியவர்த்தத்துச் சிற்பிகள் இருபது பேர் ஆயத்தமாக இருந்தனர். கட்டு வேலைக்குச் 'சித்தாளாக' உதவவும், இரண்டு முழ அகல மானகட்டு உயர எழும்ப எழும்ப, அச்சுவருள்ளேவட்டமாக அமையும் வெற்றிடத்தை மண்ணையும், கல்லையும் உடனடியாகக் கொட்டி நிரப்புவதற்காகவும், சாரங்கட்டுவது போன்ற பணிகளுக்கும் முதலாம் நாள் நிற்றிகல கிராமத்தையும், அநுரதபுர நகரையும் சூழ உள்ள இடங்களிலிருந்தும் எதிர்பார்க்கப்படும் பொதுமக்கள் வரவே மாட்டார்களென நாகதத்தனுக்குத் தெரிந்தே இருந்தாலும், அதனை எவருக்குமேவெளிக்காட்டிக்கொள்ளாமல் வழக்கம் போல எவ்விதக் கலவரமும் அமைதியின்மையும் இன்றி நாகதத்தன் அவ்விடத்தினைச் சுற்றிக்கொண்டிருந்தான்.

கடுமையாக வீசிக் கடம்ப நதிக் கரையின் ஜம்புக் கனிகளை வீழ்த்தி அவைகளைத் தரையில் உருட்டிக்கொண்டிருந்த கோடைக்காற்று, மதியம் திரும்பியபோது அசமந்து தூங்கிற்று. தென்னோலைகளின் நுனிகள் கூட இலேசாகவும் அசையவில்லை. ஒரே புழுக்கமாகவும் வெப்பமாகவும் இருந்தது. கோடை முடிந்து தலைமாரி விரைவிலேயே பெய்யலாம் என்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. மகாவிகாரையிலிருந்து வந்த பிக்கு ஒருவர் மாரிக்காலம் தொடங்குவதற்கு முன்னரே விகாரை வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியதன் அவசியத்தை நாகதத்தனிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

சாயந்தரமான போது நாகதத்தனை அரசன் அழைப்பதாகச் செய்தி வந்தது.

அச்செய்தியைக் கேட்டு நாகதத்தன் அரண்மனைக்கு வந்தபோது, அங்கே கோபூதி அரசனோடிருக்கக் காணப்பட்டார்.

நாகதத்தனைக் கண்ட கோபூதி, ''வாருங்கள் நாக தத்தரே! தங்கள் வரவுக்காகவே காத்திருக்கிறோம்'' என்று முகமலர்ந்து வரவேற்றார்.

''என் பாக்கியம் சுவாமி...'' என்று அவர் பாதங்களை தொட்டு நமஸ்கரித்தான் நாகதத்தன்.

''நாகரங்கன விகாரத்து வேலைகளைத் தொடங்க இருக்கும் புனிதமான தினத்திலே கோபூதியாரும் நம் மோடிருப்பது நமக்குப் பெருமையல்லவா?'' என்றான் சூரத்தீசன்.

''நிச்சயமாக! அந்த புனித தினத்தையொட்டி அவர் மீண்டும் இங்கே வருவார் என்ற நம்பிக்கை எனக்கு எப் போதுமே இருந்தது'' என்றான் நாகதத்தன்.

''நீங்கள் இருவருமே என் வருகைக்காக ஆனந்தப் படுகிறீர்கள். அதற்காக நான் நன்றி பாராட்ட வேண் டியவன். ஆனால் உண்மையாகவே என்னால் மகிழ்ச்சி அடைய முடியவில்லை.''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

''நான் சென்ற தடவை வந்தபோதே நான் உன்னி டம் சொன்னேன் சூரத்தீசா. உனக்கும், உன் அதிகாரத் திற்கும் எதிராகப் பெரிய சதி ஒன்று நடக்கிறதென்று. இராஜரட்டைக் கிராமத் தலைவர்கள் பலரும் அச்சதியிலே பங்கெடுக்கிறார்கள். மகாமத்து அரசின் பக்கபலமும் அவர்களுக்குண்டு. நாகரங்கன விகாரையைக் கட்டத் தொடங்கும்போது அதிர்ச்சிதரும் சம்பவங்கள் நடக்கு மென்பதை மீண்டும் சொல்லிவைக்கிறேன்.''

''அவைகளை நாங்களும் உணர்ந்தே இருக்கிறோம். பந்துலன்கூட இச்சதிக்கு உடந்தை என்று தெரிந்து கொண்டுதானே நாகதத்தர் படைக்குத் தானே தலைமை தாங்குகிறார்'' என்றான் சூரத்தீசன்.

''ஆனால் தற்போதிருக்கும் படைகளினிடையே கூடத் துரோகிகள் இருக்கின்றனர். நாகதத்தர், சேன னிடம் ஆயுதங்கள் வாங்கிவர அனுப்பிய வீரர்களில்

சிலர் படையினராலேயே கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஆயுதங்கள் கூட கடத்தப்பட்டிருக்கின்றன.''

''என்ன?'' சூரத்தீசன் இடிந்துபோய்க் கேட்டான்.

''உண்மையாகத்தான் சொல்கிறேன். சூரத்தீசா! என்னை அநுரதபுர நகரத்தைவிட்டு நீ வழியனுப்பி வைத்தபோது, ''தேவை ஏற்பட்டால் மீண்டும் வருவேன்'' என்று சொன்னேன். இப்போது அந்தத்தேவை ஏற்பட்டேவிட்டது. அதனால்தான் நான் வந்திருக்கிறேன்.''

''எங்கள் பாக்கியம் சுவாமி'' என்றான் அரசன்.

''இரண்டு மூன்று நாட்களில் உனக்கெதிராக மிக மோசமான காரியங்கள் நடக்கப்போகின்றன. நாகரங்கன விகாரையைக் கட்டுவதற்கு மக்கள் எவருமே வரமாட்டார்கள். ஆகவே நிர்மாண வேலை தொடங்குகையில் உன் படை பலமுடையதாக இருக்க வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் இன்றைய நிலையில் இருக்கிறது. அதைச் செய்வாயா?''

''தாங்கள் சொன்னால் அதைச் செய்யாமல் இருப்பேனா? சொல்லுங்கள் என்ன செய்யவேண்டும்?'' என்று படபடப்போடு கேட்டான் சூரத்தீசன்.

''மன்னா! உன்னுடைய எதிரிகள் பந்துலனும், அவனோடு சேர்ந்த இளைஞர்கள் சிலருமட்டுமல்ல, அவர்களுக்கும் மேலாக வளர்ந்துகொண்டே இருக்கும் மாகமத்து அரசே உன் எதிரி. வலிமையுள்ள இவ்வணியை எதிர்க்கக் கைவசமுள்ள படையினர் போதவே போதாது. ஏழு எட்டு ஆண்டுகளாக நீ உன் படைகளை அலட்சியமாக வைத்திருக்கிறாய். அதைத் தெரிந்து கொண்டே நான் எச்சரித்தேன். அப்போதும்கூட நிலைமை திருந்தவில்லை. ஆனால் உன் சகோதரர் தேவநம்பியதீசரின் உப்பைத் தின்று வாழ்ந்த எம் குடும்பமும், நானும் உன் ஆபத்துக் காலத்தில் உதவுவதற்காக விழிப்பாகவும், ஆயத்தமாகவுமே இருந்தோம். இப்போதும் இருக்கிறோம்.''

''தாங்கள் சொல்வது......?''

''சூரத்தீசா! நீ விரும்பினால் நான் சொல்வதை ஏற்கலாம். அல்லது விடலாம். ஆனால் அதற்கான பலாபலன்களை அனுபவிக்கும் போது என்னை நொந்துகொள்ள வேண்டாம்.''

''நீங்கள் சொல்வது படியே செய்யச் சம்மதிக்கிறேன் சுவாமி! என்ன செய்ய வேண்டும்? அதைச் சொல்லுங்கள் சுவாமி!''

''சூரத்தீசா! சொல்கிறேன். உனக்கிஷ்டமானால் மட்டும் செய். ஆனால் நான் வற்புறுத்தமாட்டேன். குழப்பத்தையும், குழப்பக்காரரையும் அடக்கும் வரையாவது சேனனை உன் படைத் தலைவனாக நியமித்துவிடு. அவனிடம் ஆயுதங்களும் படைகளும் இருக்கின்றன.''

சூரத்தீசன் பதட்டமடைந்தவனாய்த் தன் பெருமகர் நாகதத்தனைப் பார்த்தான்.

''நாகதத்தருக்கு வயது போய்விட்டது. படைத் தலைமைக்கு இளைஞனும், பராக்கிரமமுள்ளவனே தேவை. நாகதத்தர் தன் வழக்கமான மந்திரிமாருக்குள்ள கடமைகளையே கவனித்துக்கொண்டிருக்கட்டும். குழப்பங்களை அடக்கும் வரையும்— அது மிஞ்சிப்போனால் ஒரு மாத காலமாகவே இருக்கும்— சேனனை படைத் தலைவனாக ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். இதற்குப் பெருமகரும் சம்மதிப்பார் என்றே எண்ணுகிறேன்'' எனக் கோபூதி மீண்டும் வற்புறுத்தினார்.

''அரசின் நலத்திற்கும் நாட்டின் பாதுகாப்புக்கும் அவசியமாக இருப்பதால் நான் கோபூதி அடிகள் சொல்வதை ஏற்றுக்கொள்கிறேன்'' என்று தன் உடைவாளைக் கழற்றி அரசனின் பாதத்தில் வைத்துப் பணிந்தான் நாகதத்தன்.

''உங்கள் யோசனையைப் பெருமகரும் ஏற்றுக்கொண்டு விட்டார். நானும் சம்மதிக்கிறேன்'' என்றான் சூரத்தீசன்.

''மகிழ்ச்சி மன்னா! இனி நாகரங்கன விகாரை வேலையைப் பயமின்றித் தொடங்கலாம். அதனை எதிர்ப்ப

வரை அடக்கியேவிடலாம். நான் வருகிறேன்'' என்று சொல்லி எழுந்தார் கோபூதி.

''எங்கே போகிறீர்கள்? சோதனை மிகுந்த இக் காலத்தில் எங்களோடு இராமல்'' என்றான் சூரத்தீசன்.

''எங்கும் போகவில்லை. சேனனை அழைத்துவர வேண்டாமா? அவனது பரிவாரங்கள் மட்டும் அல்ல, விற்பயிற்சியிலும், வேல் வீசுவதிலும், வாளைச் சுழற்றுவதிலும் வல்லவர்களான எமது தம்பபண்ணைப் பகுதி ஆயிரம் வீரர்களையும் கூட உனக்கு உதவியாகக் கொண்டுவருவேன்'' என்ற கோபூதி அரசனிடம் விடைபெற்று அவ்விடத்தை விட்டு நீங்கினார்.

அன்றிரவே சேனனும், அவன் பரிவாரங்களும் அரண்மனைக்கு வந்து சேர்ந்தனர். நாகதத்தன் கௌரவத்தோடும் மிக்க நட்புரிமையோடும் சேனனை வரவேற்றான்.

★



## 23 கடமையும் காதலும்!

பந்துலனும் அவன் தோழர்களும் பிரயாணத்தினால் அலுத்துக் களைத்திருந்தனர். அவர்கள் சடலங்கள் படுக்கையில் தங்களைக் கிடத்தும்படி கெஞ்சின. கண் இமைகள் கனத்து அழுத்தின; ஆனால் அன்று அவர்கள் படுக்கைக்குப் போகவேயில்லை.

தமது நடவடிக்கைகளுக்கு எதிர் நடவடிக்கைகள் எடுக்க அரசன் முந்திக்கொண்டுவிட்டான். நமது திட்டங்

கள் எல்லாம் அவனுக்குத் தெரிந்துவிட்டன. மேற்கொண்டும் ஏதும் நடவடிக்கை அவன் எடுப்பான். அதை நாம் எப்படி எதிர்கொள்வது? என்று அவர்கள் நீண்ட நேரம் ஆலோசித்துக்கொண்டிருந்தனர்.

''நமது கையாட்களைக் கொன்றவன் நிச்சயமாக நாகதத்தனாகவே இருப்பான்'' என்றான் காமினி.

''அது யாராகவும் இருக்கலாம். ஆனால் நமது திட்டங்கள் அரசனுக்குத் தெரிந்திருக்கும் என்பதே நமது ஆலோசனைக்குரியது'' என்றான் பந்துலன்.

''ஆனால் நமது திட்டங்களை ஒத்திவைக்கவோ, தள்ளிவைக்கவோ காமினியும், சிவகுட்டனும் விரும்பவில்லை. அப்படிச் செய்தால் மக்கள் நம்மீது நம்பிக்கை இழந்துவிடுவார்கள். பின்னால் அவர்களைச் சேர்த்தெடுப்பதே சிரமமானதாக இருக்கும். மேலும் நமது திட்டங்களை ஒத்திவைப்பதை மக்களுக்கு அறிவிக்க நமக்கு அவகாசமும் இல்லை. அத்தோடு சூரத்தீசன் படையைப் பலப்படுத்திக்கொள்ள முன்னர் நாம் செயலில் இறங்கிவிடவேண்டும். ஏன் தீசவாவியைக் கட்டுவதன் மூலம் நாம் அரசனுக்குக் காட்ட இருக்கும் எதிர்ப்பை ஒரு நாள் முன்னரே தொடங்கிவிடுவதே நலம். அதைக் கிராம வாசிகளுக்கு எடுத்துச் சொல்ல இன்னமும் மூன்று நாட்கள் அவகாசம் இருக்கிறது'' எனத் தீவிரமாக வாதித்தான் காமினி.

சிவகுட்டனும் அவனை ஆமோதித்தான்.

மற்றைய இளைஞர்களும் அக்கருத்தையே கொண்டிருந்தார்கள்.

பந்துலனும் மற்றவர்களுக்காக அதற்கு ஒத்துக்கொள்ளவேண்டியிருந்தது!

நள்ளிரவும் கடந்துவிட்டது. அவர்கள் ஆலோசித்துக்கொண்டே இருந்தார்கள்! அநுரதபுரத்திலிருந்து எந்தச் செய்தியுமே வரவில்லை.

''நாங்கள் அநுரதபுரத்திற்கு உடனடியாகச் சென்றால் என்ன?'' என்ற கேள்வியை எழுப்பினான் காமினி.

ஆனுல் சிவகுட்டன் அதை விரும்பவில்லே. விடியும்வரை காத்திருப்போம் என்ருன் தீர்மானமாக.

சிந்தித்துக்கொண்டே இருந்த பந்துலன் சொன்னுன்: ''என் மாமனுரை அவருக்கும் மேலான இன்னெருவர் ஆட்டிப் படைக்கலாம் என எண்ணுகிறேன்.''

''அது யாராக இருக்கலாம்?'' என்று கேட்டான் சிவகுட்டன்.

''எனக்குக் கோபூதியின் மேல் சந்தேகமாக இருக்கின்றது. அந்தப் பிராமணனுடைய நடமாட்டம் சமீபகாலமாக அநுரதபுரியிலே அதிகமாக இருக்கின்றது'' என்ருன் பந்துலன்.

''தேவனும்பிரியதீசனிடம் உண்டு கொழுத்த அவன், அரசனிடம் எதையாவது யாசிக்க வந்திருப்பான்'' என்று ஏளனமாகச் சொன்னுன் காமினி.

''தன் மாமனுரின் மூளேயை அத்தனே மட்டமானதாகப் பந்துலன் மதிப்பிடுவதை என்னுல் ஒத்துக்கொள்ள முடியாது. இந்தப் பக்கமாக அவரே மாறுவேடத்துடன் வந்து உளவு பார்த்தது நாம் எல்லோரும் அறிந்ததே. நமது திட்டங்களேயெல்லாம் அவரே அறிந்திருப்பார். அவரது மதியூகத்தையும், சாணக்கியத்தையும் நம்மால் அளவிடவே முடியாது'' என்ருன் சிவகுட்டன்.

சாமக் கோழிகள் கூவத் தொடங்கின. வானத்தில் விடிவெள்ளி தோன்றிற்று. கிழக்கு வெளுத்துக்கொண்டிருந்தது. ''சற்று நேரமாவது சாயவேண்டும்'' என்று சொல்லிக்கொண்டே காமினி தன் உடைகளேக் கையிற் பிடித்தபடி அவ்விடத்திலேயே சாய்ந்தான்.

பந்துலனேயும் சிறிது சாயும்படி கேட்டுக்கொண்ட வாலிபர்கள், கையில் படைக் கலங்களேத் தாங்கிக் கொண்டு கண் இமைக்க மறுத்தவர்களாய்க் காவல் நின்றனர்.

வெளியே குதிரைக் குளம்பொலி கேட்டது!

''அநுரதபுரத்திலிருந்துதான் செய்தி வருகின்றது கவனியுங்கள்'' என்று கட்டளேயிட்டான் பந்துலன்.

சிவகுட்டனும், காமினியும் கூட எழுந்து உட்கார்ந்து கொண்டனர்.

குதிரையை விட்டிறங்கிய வீரன், இளைக்க இளைக்க ஓடி வந்து பந்துலனிடம் சொன்னான்: ''சேனன் என்ற வியாபாரி அரச படைகளுக்குத் தலைவனாக நியமிக்கப்பட்டிருக்கிறான்''.

''என்ன உளறுகிறாய். அந்தத் திராவிடனை சூரத்தீசன் சேனைத் தலைவன் ஆக்குவானா? இதை நம்பவே மாட்டேன்'' என்றான் காமினி.

''இல்லை. மாதோட்டத்திலிருந்து ஆயுதங்களைப் பெறச் சென்ற நாங்கள், அங்கிருந்து திரும்பி வந்துகொண்டிருந்தோம். எங்களுக்குப் பின்னால் பல கோவேறு கழுதைகளிலும், பொதி மாடுகளிலும் ஆயுதங்கள் வந்துகொண்டிருந்தன. ஆனால் அநுரதபுரத்தை அண்மியபோது எமது கூட்டத்தினரின் மேல் எங்கிருந்தோ அம்புகள் பறந்துவந்தன''.

''அது எவ்விடம் என்று சொல்ல முடியுமா?'' எனப் பந்துலன் கேட்டான்.

''பில்லாவெல குகைக்குச் சமீபமாக இருக்கலாம்'' என்றான் வந்தவன்.

''பிறகு?''

''அந்த அம்பு வீச்சிலே நம் தோழர்களில் நால்வர் சரிந்தனர். படையணியிலே அதனால் குழப்பம். எல்லோருமே தறிகெட்டு ஓடினோம். காட்டிலே ஒளிந்துகொண்ட நாங்கள், பொதிக் கழுதைகளையும், மாடுகளையும் 'ஏறுபொத்தான' மார்க்கமாகத் திருப்பிவிட்டுக் காட்டிலே பதுங்கி நடக்கையில் சேனனும், குட்டகனும் இருநூறுக்கு மேற்பட்ட படையினரோடு அநுரதபுரத்தை நோக்கிச் சென்றதைக் கண்டோம்.''

''அதை மட்டும் வைத்துக்கொண்டு, அரசன் சேனனைப் படைத் தலைவனாக ஆக்கிவிட்டான் என்று சொல்லுகிறீர்களா?'' என்று கேட்டான் காமினி.

''இல்லை. இரவோடிரவாக அநுரதபுரம் வந்தபோது நகரிலே அச்செய்தியைக் கேள்விப்பட்டோம். மகா விகாரைப் பிக்குகளில் சிலர்கூட அச்செய்தியை வரவேற்றுப் பேசுகிறார்கள்.''

பந்துலன் அவன் சொல்வதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ஆனால் காமினி படபடப்பாகச் சொன்னான்: ''இப்போதே நமக்கு வெற்றி கிடைத்துவிட்டது. அந்த வியாபாரக் கூட்டத்தை அரண்மனைக்குள் அனுமதித்ததை நாட்டு மக்கள் எவருமே விரும்பமாட்டார்கள். ஏன்? நாகதத்தன் கூட அதை விரும்பமாட்டான். இன்னமும் நாம் ஏன் தாமதிக்க வேண்டும்? நேரடியாக அரண்மனையை நோக்கியே படையெடுக்கலாம்.''

பந்துலன் அமைதியாகச் சொன்னான்: ''பதட்டப்படாதே காமினி. வியாபாரம் என்ற வர்ணம் பூசிய வார்த்தையின் மறைவில் மக்கள் சொத்தை உறிஞ்சிப் பொன் குவிக்கும் சேனனும், மக்களை மாக்களாகவே நினைத்துக் கொண்டு, அவர்களை என்றைக்கும் அடிமைகளாக வைத்துக்கொள்ள நினைக்கும் அதிகார வெறிபிடித்த நாகதத்தனும், இந்த இருவரது சுரண்டலுக்கும், அதிகார வெறிக்கும் உடந்தையாகச் சனாதன தர்மத்தைக் கட்டிக்காக்க எண்ணும் கோபூதியும் ஒன்றாக, ஓரணியிலேயே சேர்ந்திருப்பார்கள்! இந்த வைசிய, சத்திரிய, பிராமண முக்கூட்டு கடந்த தலைமுறையின் தவிர்க்கமுடியாத நியதி! அதனை எதிர்த்து வெற்றிகொள்ள வேண்டியதே நமது தலைமுறையின் தவிர்க்கமுடியாத நியதி.''

''தத்துவம் பேசிக்கொண்டிருக்க இப்போது நேரமில்லை. அடுத்ததாக நாம் என்ன செய்யவேண்டும்? அதைக் கட்டளையிடு'' என்று துடித்தான் காமினி.

''பதட்டப்படாதே காமினி. முதலில் நாம் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் இருக்கின்றது. அதிகாரப் பிரியரான நாகதத்தர், பிரபாவைச் சேனனுக்கு நிர்ப்பந்த

மாக மணம் முடித்து வைக்கவும் நினைப்பார். முதலில் நாம் அவளை மீட்கவேண்டும்'' என்றான் சிவகுட்டன்.

''நன்றி! ஆனால் அது வேண்டியதில்லை சிவகுட்டரே. பிரபா இந்த மட்டிலேயே வீட்டைவிட்டு வெளியேறினாலும் வெளியேறியிருப்பாள். அப்படியில்லாவிட்டாலும் என்னைத் தவிர வேறு எவராலும் அவளது பிணத்துக்கே மாலையிட முடியும்! அவளுடைய நினைவுகளை சமகால மகா விகாரைப் பிக்குகள் சரித்திரத்தில் எழுதிவைக்கா விட்டாலும், எதிர் காலப் புலவன் ஒருவன் காவியமாகவே தீட்டிவைப்பான்'' என்றான் பந்துலன். அவன் கண்கள் பனித்தன!

''கலங்காதே பந்துல. எப்படியும் நான் அவளை மீட்டு உன்னிடம் கொண்டுவருவேன். மற்றவர்கள் அடுத்தவை களைக் கவனியுங்கள்'' என்றான் சிவகுட்டன்.

''ஏற்கனவே திட்டமிட்டதற்கு ஒரு நாள் முன்னதாகவே மீண்டும் எல்லாரும் தீசவாவிக் கரையில் சந்திக்க வேண்டும். அங்கு சந்தித்த பின்னரே அடுத்த முடிவு எடுக்க வேண்டும்'' என்று பந்துலன் இறுதியாகக் கட்டளையிட்டான்.

பந்துலன் கைப்பட எழுதிய ஓலைகளை எடுத்துக்கொண்டு நண்பர்கள் ஆளுக்கொரு திக்காகக் கிராமங்களை நோக்கிப் புறப்பட்டனர்.

சிவகுட்டன் அநுரதபுரத்தை நோக்கிப் புறப்பட்டான். பந்துலன் நிற்றிகல கிராமத்திலேயே தங்கினான்.

★



## 24 காதலனைத் தேடி ஒரு காரிகை!

சில நாட்களாக பந்துலனிடமிருந்து எதையுமே அறிய முடியாததினுல் பிரபா கவலைப் பட்டுக்கொண்டிருந்தாள். கடைசியாக சந்தித்தபோது அவன் தன்னிடம் சொல்லியிருந்ததுபோலத் தான் எங்கிருக்கிறேன் என்பதையாவது தெரிவிக்காதது அவளுக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது.

இந்த ஏமாற்றத்தினிடையேயும் பிரபா அரண்மனையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்களை அவதானித்துக்கொண்டேயிருந்தாள். தன் தந்தையாரிடமிருந்து எதையுமே அறிந்துகொள்ள முடியாமலிருந்தது. சில நாட்களாகத் தன் தந்தையாரை வீட்டிலேயே காணமுடியவில்லை. இரவிலே நெடுநேரங் கழித்த பின்னரே வீட்டுக்கு வருகின்றார்.

வெளியே செல்லக்கூட அவளால் முடியவில்லை. அனுலா மட்டும் இடைக்கிடை திஸ்ஸவைச் சந்தித்து ஏதாவது அறிந்து வந்தாள்.

அவள் கொண்டுவந்த செய்திகளிலிருந்தும், பந்துலன் இருக்குமிடத்தைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனுல் நாகரங்கன விகாரம் கட்டப்படத் தொடங்குகையில் அசம்பாவிதங்கள் நடக்கும். அன்றைய தினம் எப்படியும் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப் பந்துலனோடு சேர்ந்துகொள்ளவேண்டும் என்று முடிவு எடுத்துக்கொண்டாள்.

தன் தந்தையாரை நம்பவே முடியவில்லை. அவர் கூறுவது எல்லாம் ஏறத்தாழப் பொய்யாகவே இருந்தன.

அவர் வார்த்தைகளின் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மைகளைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

வீட்டைவிட்டு ஓடிவிடவேண்டும் என்பதைத் தவிர மற்ற எல்லாமே அவளுக்கு அந்தகார இருளாகவே இருந்தது.

அன்றிரவு முதற் சாமம் கழிந்த பின்னர் நாகதத்தன் வீட்டுக்கு வந்தான். அன்று தன் தந்தையார் சமீப காலமாக என்றைக்குமில்லாதபடி மிகவும் குதூகலமாக இருப்பதாகப் பிரபாவுக்குப் பட்டது. வந்தவர் தன் இராஜாங்க உடையைக் களைந்துவிட்டுத் திண்டிலே சாய்ந்தார். சாய்ந்தவர் மீண்டும் எழுந்து உயர்ந்த ரக யவனத்து மதுச் சாடியை எடுத்துக்கொண்டு வந்து மீண்டும் அங்கே அமர்ந்துகொண்டார்.

இன்று ஏதோ முக்கியமான காரியம் நடந்திருக்கின்றது என்று அனுமானித்துக்கொண்ட பிரபா, ''அப்பா, நீங்கள் சாப்பிடவில்லையா? நானும் உங்களுக்காகச் சாப்பிடாமலேயே இருக்கின்றேன்'' என்று குழைந்துகொண்டே கூறிக்கொண்டு அவரின் பக்கத்தில் அமர்ந்துகொண்டாள்.

அவள் தலையை வருடியபடியே நாகதத்தன் சொன்னான்: ''இன்றைக்கு மட்டுந்தானே! இனிமேலும் எனக்காகக் காத்துக்கொண்டிருக்க உன்னால் முடியாது'' என்று சொல்லிக்கொண்டே கிண்ணத்தில் மதுவை ஊற்றி ஒரு மிடறு அருந்தினான்.

''ஏனப்பா? நான் என்றைக்குமே தங்களோடுதான் இருப்பேன்'' என்றாள் பிரபா.

''நடக்கக்கூடிய காரியமா இது பிரபா? நீ பெண். நாளைக்கே ஒருவனுக்கு மாலையிட வேண்டியவள் நீ.''

''இன்னமும் ஓராண்டு காலம் ஆகுமென்று சொல்கிறாராமே அவர்'' என்று நாணினாள் பிரபா.

''எவர்?'' நாகதத்தன் இடிமுழக்கமாகக் கர்ச்சித்தான். அதைக் கேட்டு மனம் ஒடுங்கிய பிரபா தன் தந்தையின் அரவணைப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள். நாகதத்தன் மீண்டும் அதே குரலில் கர்ச்சித்தான்: ''அந்

தக் கையாலாகாத பந்துலனையா நீ இன்னமும் கனவுகண்டு கொண்டிருக்கிறாய். முட்டாள்! அவனை இந்த நாட்டின் சேனாதிபதியாக்கி—இல்லை மன்னனாகவே ஆக்க நினைத்தேன். ஆனால் அவனுக்கு அதிர்ஷ்டமில்லை. கழுதை...''

பிரபாவின் கண்கள் பனித்தன. ஆனாலும் வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, ''அப்பா, தாங்கள் அதை விரும்பாவிட்டால் எனக்கும் அதிலே இஷ்டமில்லை'' என்றாள்.

மீண்டும் ஒரு மிடறு மதுவை மாந்திய நாகதத்தன் ''அவனுக்கு அரசனாவதற்கும், அதிகாரத்தை அனுபவிப்பதற்கும் விதி இல்லை. ஆனால் நீ அரசியாகவே இருப்பாய். நிச்சயமாக ராணியாகவே இருப்பாய்'' என்றான் உறுதியோடு.

''அப்பா'' என்று திகைப்புடன் கேட்டாள் பிரபா.

''ஆம்! நான் முடிவுசெய்துவிட்டேன். நாளைக்கே உனக்கும், சேனாதிபதி சேனனுக்கும் திருமணம் நடக்கும். இன்னும் சில நாட்களில் நீ இந்த நாட்டின் பட்டத்து ராணி'' என்று தன் இருக்கையின் கைப்பிடியில் அடித்துச் சொன்னான் நாகதத்தன்.

பிரபாவுக்குத் தலை சுற்றுவதுபோல இருந்தது. ஆனாலும் பதட்டமடைந்தவளாகக் காட்டிக்கொள்ளவில்லை, இந்தச் செய்தியைத் தாங்கிக் கொள்ளும் மனோவலிமை அந்தக் கொடியுடலில் எப்படித்தான் ஏற்பட்டதோ. மிக்க அலட்சியமாகச் சொன்னாள்: ''அப்பா! பந்துலன் உங்களையும், என்னையும் ஏமாற்றியேவிட்டான். அவனுக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான். நீங்கள் காட்டும் வழியை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்'' என்று உறுதியாகச் சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டு வெளியேறினாள்.

''ஆம். இப்போதுதான் நீ நாகதத்தனின் மகள். அந்தப் பந்துலனுக்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டாய். பிரபா! இங்கே வா'' என்று அவளை அழைத்தான் நாகதத்தன்.

பிரபா கண்களைத் துடைத்துவிட்டுத் திரும்பித் தலையைக் குனிந்துகொண்டு நின்றாள். நாகதத்தன் மீண்டும் சொன்னான்: ''பிரபா! நாளை இரவு மிகவும் இரகசியமாக இந்த வீட்டிலே உன் திருமணம் நடக்கும். கோபூதி இத் திருமணத்தை ஆசாரப்படி நடத்திவைப்பார்'' என்று விட்டு, மீண்டும் ஒரு கிண்ணம் மதுவை மாந்தினான். மதுவை அருந்திவிட்டு, ''பிரபா! இன்று நிச்சயதார்த்தம் பண்ணிவிட்டேன். நிச்சயதார்த்தத்தின்போது சேனன் உனக்குத் தந்த பரிசு இது. பாண்டி நாட்டு முத்துமாலை இன்றைக்கே இதை நீ அணிந்துகொள்' என்று ஒரு முத்து மாலையை அவளிடம் நீட்டினான்.

''மிகவும் அழகாக இருக்கிறதப்பா'' என்று சொல்லிக் கொண்டே அதனை ஆர்வத்தோடு வாங்கிக் கொண்டு அந்தப்புரத்துக்கு ஓடினாள் பிரபா!

தன் மகள் திருமணத்திற்குச் சம்மதித்துவிட்டாள் என்று மதுவின் போதையில் எண்ணிக்கொண்ட நாகதத்தன் அட்டகாசமாகச் சிரித்துக்கொண்டே, ''மடையன்! எதையுமே அனுபவிக்க முடியாத முட்டாள்!'' என்று திட்டிக்கொண்டு மீண்டும் மீண்டும் மதுவை மாந்தினான்.

அந்தப்புரம் சென்ற பிரபா, தோழியிடம் அழுது கொண்டே சொன்னாள்: ''அனுலா! இன்று விடியுமுன்னர் வீட்டைவிட்டு வெளியேறிவிடவேண்டும்''

''எங்கே போவது? அதுவும் இந்த அமாவாசை இருளில் எங்கே, எப்படிப் போவது? பந்துலன் எங்கிருக்கிறான் என்பதுகூட நமக்குத் தெரியாதே பிரபா'' என்று அவளைத் தாங்கிக்கொண்டே சொன்னாள் அனுலா.

''இந்த வீட்டிலே இனி ஒரு கணமும் இருக்கவே கூடாது. இருந்தால் ஆபத்தாகவே இருக்கும். நீ வராவிட்டால் இரு. நான் போகிறேன்'' என்று விம்மினாள் பிரபா.

அவளை அணைத்துக்கொண்ட அனுலா, ''ஆத்திரப் படாதே பிரபா. நாளை இரவு வரை இந்த வீடு நமக்குப் பாதுகாப்பானதாகவே இருக்கும். விஷயம் நம்மை மிஞ்சிப் போகாதிருக்கும். நாம் வீட்டிலேயே இருப்பதுதான் நமக்கு

வலிமை. அதுதான் புத்திசாலித்தனமும்கூட. மேலும் பொழுது விடிந்தால் எத்தனையோ வழிகள் பிறக்கலாம். இப்போது இந்த இருளிலே நாம் இருவரும் இலக்கே இல்லாமல் போவது புத்திசாலித்தனமாக இராது.''

''இந்த வீட்டில் அடைந்துகொண்டு மனம் வெம்பிச் சாவதைவிட, வெளியே சென்று சுதந்திரமாகச் சாவதே மேல். சிலவேளை இன்றைக்கே சேனனை அப்பா அழைத்திருந்தால்...... ஏற்கனவே அவன் ஒரு முத்து மாலையைக் கொடுத்திருக்கிறான். அனுலா! அப்படியாக ஏதும் நடந்தால்......'' பிரபா மனம் இடிந்து தேம்பி அழுதாள். அழுது கொண்டே சொன்னாள்: ''அனுலா! இந்த மோதிரத்துள்ளேயே எனக்கு விடுதலை இருக்கின்றது''.

''பைத்தியக்காரி! கையாலாகாத கோழைகள்தான் சாவதைப்பற்றிச் சிந்திப்பார்கள். 'வீரமும் துணிச்சலும் அற்றவர்களுக்குக் காதலிக்கவே தகுதியில்லை எனப் பந்துலன் சொல்வார்' என்று பல தடவை என்னிடம் சொல்லி இருக்கிறாயே. இப்போது ஏன் இத்தனை கோழையாகிவிட்டாய்?''

''ஆம்! நான் கோழையாக மாட்டேன். பந்துலனைத் தவிர வேறு எவனாவது என்னைத் தீண்டினால்...'' பிரபா தன் பெட்டகத்தைத் திறந்து ஒரு குத்துவாளை எடுத்தாள். நெய் விளக்கின் மங்கலான ஒளியில் அந்தக் குத்துவாள் பளபளத்து மின்னிக்கொண்டிருந்தது. பிரபா அதைத் தன் இடுப்பிலே செருகிக்கொண்டாள்.

அன்றிரவு அவர்கள் இருவருக்கும் விடியாப் பொழுதாக நீண்டுகொண்டேயிருந்தது. ஆந்தைகளின் பயங்கரமான அலறலும், நகரின் புற வாயில்களைக் காவல் பண்ணும் வீரர்கள் தமது விழிப்பை அறிவிப்பதற்காக முழங்கும் சங்கொலிகளும் அவர்களுக்குக் கேட்டுக்கொண்டேயிருந்தன. எங்கிருந்தோ ஒரு சேவலின் கூவலும் கேட்டது.

அந்தக் கூவலைக் கேட்டதும் பிரபா சொன்னாள்: ''அனுலா! தலைக்கோழி கூவிவிட்டது! எழும்பு. நாம்

விடிந்து நிலம் தெரியுமுன்னமே வீட்டைவிட்டுப் போய்விடுவோம்''.

''பைத்தியக்காரி! சாமக் கோழியா இது? உன்னைப் போலத் தனிமையில் வாடும் சேவல் ஒன்று காலந் தெரியாமல் கூவுகின்றது. அடுத்த வீட்டிலிருக்கும் பேட்டுக்கோழியை அணைந்துகொள்ள இன்னமும் விடியவில்லையே என்று அதற்கு ஏக்கம். தலைக்கோழி கூவ இன்னமும் நான்கைந்து நாழிகைகள் இருக்கின்றன. நீ சற்றுத் தூங்கு'' என்றாள் அனுலா.

பிரபா நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டே சொன்னாள்: ''அனுலா! அப்பா மதுவின் போதையில் படுத்திருக்கிறார். நாளை சூரியோதயத்தின் பின்னர் காலந் தாழ்த்தியே அவர் எழுவார். நாம் விடியற் காலையிலேயே வீட்டைவிட்டுப் புறப்படவேண்டும். இருவரும் அணிந்துகொள்ள வேண்டிய மாறு வேஷத்திற்கான உடைகளை எடுத்துவைத்துக்கொள்வோம்.''

''அவைகளையெல்லாம் நான் தயாராகவே எடுத்து வைத்திருக்கிறேன்! ஆனால் எங்கே போவது என்பதைத் தான் இன்னமும் யோசித்துக்கொண்டிருக்கிறேன்'' என்றாள் அனுலா.

''தென் பகுதிக் கிராமங்களுக்கே அவர் சென்றிருப்பார். நாம் நகரின் தெற்குப் பக்கமாக மகாமேக நந்தவனத்தைக் கடந்து வெளியேறுவோம்.''

''அந்தப் பக்கம் மக்கள் நடமாட்டம் அதிகமாகவே இருக்கும். இன்னமும் ஒன்று, நாகரங்கன விகாரையைக் கட்டும்படிக்கு முதல் நாளில் வரவழைக்கப்பட்டவர்கள் நிற்றிகல கிராமத்து மக்களே. பந்துலனும் அதிகமாக அந்தக் கிராமத்திலேயே இருப்பான் என்று எனக்குத் தோன்றுகிறது. எதற்கும் நாம் நகரின் வடக்குப் பக்கமாகச் சென்று, கொலம்பகல விகார வழியாகச் செல்வோம். இப்போது கொஞ்ச நேரமாவது தூங்கு.''

அவர்கள் இருந்த அறைக்கு வெளியே மனித சந்தடி கேட்டது. நாகதத்தனே தங்களை ஒட்டுக் கேட்கலாம் என்

றெண்ணினுள் அனுலா. மெதுவாக அச் சந்தடிகளைக் காது கொடுத்துக் கேட்டாள். பிரபாவும் எழுந்தாள். யாரோ ஒருவர் தன் தந்தையோடு பேசுவதுபோல இருந்தது அவளுக்கு. மெதுவாகத் தாழ்ப்பாளைத் திறந்தாள். வெளியே இருளோடு இருளாகச் சுவரிலே மறைந்துகொண்டு மங்கிய விளக்கொளியிலே தன் தந்தையோடு பேசிக்கொண்டிருப்பவர்களை நோட்டம் விட்டாள். அவர்கள் அரண்மனைச் சேவகர்கள்போலவும் இருந்தது. ஆசனத்திலிருந்து பேசிக்கொண்டிருப்பவரை யாரென்றே மட்டிட அவளால் முடியவில்லை. ஆனுல் அந்தக் குரல் மட்டும் எங்கோ கேட்டது போல இருக்கின்றது!

எங்கே கேட்டிருக்கலாம்?

தன் மாமியார் வீட்டிலே யாகம் நடந்தபோது மந்திரங்களை உச்சாடனம் பண்ணிய குரலா அது?

சற்று நேரத்தில் தன் தந்தையார் அங்கு வந்தவர்களுடன் வீட்டைவிட்டு வெளியேறினுர்.

மூன்ரும் சாமத்தின் அந்திம தசையை ஊர்ச் சேவல்கள் எல்லாம் பறையடித்துக்கொண்டிருந்தன.

தந்தையார் சென்ற சற்று நேரத்திற்கெல்லாம் பிரபாவும் அனுலாவுடன் வீட்டைவிட்டு வெளியேறினுள்.

★

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு ERLALAI WEST
சுன்னாகம் CHUNNAKAM

## 25 அரசன் கொல்லப்பட்டான்!

'நேராக நாகதத்தன் அரண்மனைக்கே போவோம். தன் வருகைக்கான காரணத்தைக் கேட்டால் நாகரங்கன விகாரத்தைக்கட்ட மக்களை அழைக்கும்படியான கட்டளை கிராமத்தலைவர்களுக்கு அனுப்பப்படாததால் கிராமத்தலைவர்கள், அவ்வேலைக்கு மக்களைத் திரட்டி வருவதிற் சிரத்தை இல்லாமல் இருக்கிறார்கள். அதனைத் தெரிவிக்கவே வந்தேன் என நாகதத்தனிடம் சொல்வோம். நெடுங்காலமாக நட்புரிமையோடு அவ்வீட்டிலேபழகுவதினாற்பிரபாவோடு பேசுவதிலும் எந்தத்தடையுமே இராது. நேராக இல்லாவிட்டாலும் குறிப்பாகவேனும் பிரபாவுக்கு விஷயத்தைத் தெளிவுபடுத்தி அவளை அழைத்து வரவேண்டும்!' என்று எண்ணமிட்டவாறே சிவகுட்டன் அனுரதபுரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

மனோகரமான காலைப்போதுதான் அது! பறவைகளின் காலை இசை மனதுக்கு மகிழ்வைக் கொடுத்துக்கொண்டிருக்கத் தக்கது தான்! ஆனால் பழுத்துக்குலுங்கியிருந்த ஜம்பு விருட்சங்களிலே தலைகீழாகத் தொங்கும் பழந்தின்னி வௌவால்களே சிவகுட்டன் கண்களிற் தோன்றின. அவைகளில் ஒன்றிரண்டு பறந்து தம் சிறகுகளை அடித்துக்கொள்ளும் சப்தத்தையே அவன் காதுகள் கேட்டன.

சூரியன் கிழக்கிலே ஒரு விற்கிடை தூரத்திற்கு எழுந்திருந்தான். அவனது கிரணங்கள் கடுமையாகிக்கொண்டு வந்தன. இன்னமும் அனுரதபுரிக்கு அரைக்காத தூரமே

இருந்தது. வழியிலே யவன வியாபாரிகளைப்போல விசித்திர மான உடையணிந்த இருவர் தன்னைக்கூர்ந்து அவதானிப் பதைக்கண்ட சிவகுட்டன் தன் குதிரையின் வேகத்தைச் சற்று தணித்துப் பின்திரும்பி அவர்களைப்பார்த்தான்.

சிவகுட்டன் அவர்களைப் பார்த்ததும், தரித்து நின்ற இருவரும் மீண்டும் தம்வழியில் நடக்கத்தொடங்கினர்கள். 'அவர்கள் யாராகவாவது இருந்துவிட்டுப்போகட்டும், நாம் நமது அலுவலைப் பார்ப்போம், என்றெண்ணிக்கொண்ட சிவகுட்டன் மீண்டும் தன் குதிரையைச் செலுத்தினன்.

சூரியோதயமாகி எட்டு நாழிகைகளின் பின்னர் அவன் அனுரதபுர நகரத்தை அடைந்தான்.

நகரின்வடக்கு வாயிலைக்கடந்து நகரினுட் பிரவேசித்த போது அவனுக்குப் பேராச்சரியமாகவும் திகைப்பாகவும் இருந்தது. நகரவீதிகளிலே மக்களைக்காணவில்லை. வெறிச் சோடிக்கிடக்கும் அவ்வீதிகளிலே ஆயுதந்தாங்கிய சேன வீரர்கள்காவல் நின்றனர். குதிரைப்படை வீரர்கள் ஆயுத பாணிகளாக நகரவீதிகளில் வலம் வந்து கொண்டிருந் தார்கள். இத்தனை குதிரைப்படை வீரர்கள் அரச சைனி யத்திலிருக்கிறர்களா என்று அவனுக்குத் திகைப்பாக இருந்தது. நகரத்துவீதிகளிலே குதிரையிற் செல்ல அவனுக் குப்பயமாகவே இருந்தது.

அவன் குதிரையை விட்டிறங்கி அதை வழிநடத்திக் கொண்டு தன் தூரத்து உறவினர் வீட்டை அடைந்தான். அவர்கள் சொன்ன செய்திகள் மேலும் அவனைத்திகைக்க வைத்தன.

'சூரத்தீச மன்னன் யாரோ சதிகாரர்களால் கொலை பண்ணப்பட்டு விட்டாராம். கொலைகாரர்கள் இருவரை அரண்மனைச்சேவகர் பிடித்திருக்கிறர்களாம். அவர்களை விசாரித்ததில் இந்தச்சதியிலே சம்பந்தப்பட்டவர்கள் பலர் பல கிராமங்களிலும் இருக்கிறர்களாம். அவர்களைப் பிடிக் கப்படைகள் அனுப்பப்பட்டிருக்கிறதாம்'

இந்தச் செய்திகளைக்கேட்டுச் சிவகுட்டன் ஆச்சரியப் பட்டுக்கொண்டிருக்கையில் பறைமுழக்கம் கேட்டது!

''விடிந்ததிலிருந்து இவ்விரண்டு நாழிகைக்கு ஒரு தடவை அறிவிப்புகள் வந்துகொண்டேயிருக்கின்றன. நீயே உன் காதாற் கேள்'' என்றார் வீட்டுக்காரர்.

பறை முழக்கம் முடிந்ததும் வள்ளுவன் ஓலையை வாசித் தான். ''இத்தாற் சகலருமறிவது, இலங்கா துவீபத்து மாமன்னர், தேவநம்பியதீசரின் இளைய சகோதரர், இந்த நாட்டின் புண்ணிய பொக்கிஷம், மகா மன்னர் சூரத்தீசர் கடந்த இரவு சதிகாரர்கள் சிலராற் கொல்லப்பட்டார். அவர்கள் இருவர் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். பிடிபட்ட வர்களிடமிருந்து தெரிந்து கொண்டதன்படி இந்தநாட் டின் அரசுக்கும் பௌத்த தர்மத்திற்கும் விரோதமான ஒரு சதிக்கூட்டம் நாட்டின் பலஇடங்களிலும் இருப்பதாகத் தெரிகின்றது. அந்தச்சதிகாரர்களை முற்றாக அழிக்கும்படி யாக அரசபடை பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டிருக் கின்றது. நகரிலும், கிராமங்களிலுமுள்ள மக்கள், சந்தே கத்துக்கிடமானவர்களையும், புதியவர்களையும் தம் வீடு களில் வைத்துக் கொள்ளாதிருக்கும்படியும் படையினருக்கு உதவி புரியும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அரசனின் தகனக்கிரியைகள் நாளை நடைபெறும். அவர் மறைவிற்காக நாட்டிலே ஒரு வாரத்திற்குத் துக்கம் அனுஷ்டிக்கப்படும். அதுவரை எல்லா ராஜகாரியங்களும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மக்கள் எல்லாரும் அமைதி யாக இருக்கும்படி கேட்கப்படுகின்றனர்.''

மீண்டும் பறை முழக்கம் கேட்டது. தொடர்ந்து அதே செய்தி.

''இப்போது நாட்டின் தலைவர் யார்?''

''அது அதிகாலையிலே தெரிவிக்கப்பட்டாயிற்று. சூரத் தீச மன்னனுக்குப் புத்திரர்கள் இல்லை. அரச பதவி அவர் சகோதரர் மகாசிவனின் மகனாகிய அசேலருக்கே உரிமை யானது. இளைஞரான அவர் அரசைக் கையேற்கும் வரை

பருமகர் நாகதத்தரே அரசுக்குப் பொறுப்பாக இருப்பாராம்.''

''அப்போ படைத்தலைவன்?''

''அதுதான் பார்க்கிறாயே. எங்கிருந்தோ ஆயிரக் கணக்கான குதிரை வீரர்களைச் சேனன் கொண்டு வந்து சேர்த்திருக்கிறான். இன்று காலையில் வழக்கம் போல மகா விகாரைக்குச் சென்ற நான் அவ்விகாரைப்புறத்தை இரு நூற்றுக்கும் மேற்பட்ட குதிரைவீரர்கள் காவல் புரிவதைக் கண்டேன். குதிரை வியாபாரியான சேனனே படைத்தலைவனாகவும் இருக்கின்றான்.''

''சிவகுட்டன் அதற்குமேலும் அனுரதபுரத்தில் இருக்க விரும்பவில்லை. நாகதத்தனைசந்திப்பதோ முடியாத காரியம். அவன் வீட்டுக்குச் செல்வதோ ஆபத்தானது. பிரபாவைப் பற்றிக்கவலைப்படுவதோ, அதற்காக அனுரதபுரத்திற் தரித்திருப்பதோ மற்றவர்களுக்குப்பேராபத்தாக இருக்க முடியும். நடந்த விஷயங்களை நண்பர்களுக்குத் தெரிவிப்பதே முக்கியமானது என்று தீர்மானித்துக்கொண்டு வந்தவழியே திரும்பினான் சிவகுட்டன்.

★

நிற்றிகல செல்லும் வழியிலே, காத தூரம் பயணம் பண்ணிய பிரபாவும், அனுலாவும் களைத்துச்சோர்ந்து விட்டனர். மேலே ஓரடியேனும் எடுத்து வைக்க முடியாத நிலையிற் தள்ளாடி நடந்து கொண்டிருந்தவர்களின் பின்னால் வேகமாக வந்த குதிரையிலிருந்து குதித்தவன் அவர்களுக்கு முன்னால் நின்று ''யார் நீங்கள்?'' என்றான்.

குதிரையில் வந்தவன் சிவகுட்டன் என்பது பிரபாவிற்குத் தெரிந்திருந்தது. ஆனாலும் இன்றைய நிலையில், அவன் தனக்கு நண்பனா?எதிரியா? என்பதை அவளால் அனுமானிக்கத்தானும் முடியவில்லை. சற்று நேரத்திற்கு முன்னால் இவ்வழியே சென்றவன் மீண்டும் ஏன் திரும்பிவந்திருக்கிறான்? என்னைத் தேடித்தான் அவன் சென்றானா? பந்துலன் தான் அவனை அனுப்பி வைத்தாரா?

அல்லது தந்தையைத் தேடிப்போனவனை தந்தையாரே என்னைத் தேடிப்பார்க்கும்படி திருப்பி அனுப்பி விட்டாரா? அப்படி இருந்தாலும் இருக்கும். இவன் தந்தையின் நண்பன் அல்லவா? என்றெல்லாம் எண்ணிக்குழம்பிக்கொண்டிருக் கையில் அனுலா சொன்னாள்:

''நாங்கள் யாராயிருந்தாலும் உனக்கென்ன?'' அவள் குரலிலிருந்த பதட்டமும், மென்மையும் சிவகுட்டனின் சந் தேகத்தை மேலும் வலுப்படுத்திற்று.

''உங்களை கைது செய்யும்படி'' உத்தரவு என்று அவன் நெருங்குகையிலே பிரபா தன் குத்துவாளைக்கையில் எடுத்து ஓங்கினாள். ஓங்கிய கையைப் பலமாகப்பிடித்துக்கொண்ட சிவகுட்டன், அக்கரத்தின் மென்மையை உணர்ந்ததுமே அது பெண்ணேதான் என்பதைத் தெரித்து கொண்டு அடுத்த கையினால் அவள் தலைப்பாகையை தட்டிவிட்டான். பாகை வீழ்ந்ததும் வேஷம் வெளிப்பட்டது.

''பிரபாவா? உன்னைத்தேடிக்கொண்டுதான் வந்தேன் பிரபா. பந்துலனிடம் உன்னைச்சேர்ப்பது என் பொறுப்பு. அனுரதபுரத்திலிருந்து எப்போது கிளம்பினாய்? பந்துலன் சொன்னது போலவே நீ துணிச்சற்காரிதான்'' என்று ஆனந்தத்திலும் உவகையிலும் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டிருந்தான் சிவகுட்டன்.

''நான் தங்களை எப்படி நம்புவது?''

அவள் கையை விட்டு விட்டுத் தன் மடியை அங்குமிங் கும் தடவிய சிவகுட்டன் கடைசியாய் பந்துலன் தன்கைப் பட எழுதிய ஓலையை எடுத்து அவளுக்குக் காட்டினான்.

''புறப்படு. விரைவாகப் புறப்படு. பந்துலன் என் கிராமத்திலே நிற்றிகலையிலே தான் இருக்கின்றான். வா உடனே போக வேண்டும்.''

''நாங்கள் இருவர் இருக்கிறோம் என்றாள் பிரபா''

''ஏன் கட்டாரிகள் இரண்டோடு சேர்த்து நால்வர்'' என்று சிரித்த சிவகுட்டன். ''இப்பாதையில் நின்று பேசு வதே ஆபத்து, அரண்மனைப்படைகள் எந்த நேரமும் இவ் வழியிலேயே வரும்'' என்று கொண்டே பாதையிலிருந்து

விலகிக் குதிரையையும் கடத்திக்கொண்டு காட்டினுள்ளே நுழைந்தான். பிரபாவும், அனுலாவும் அவன்பின்னல் நடந்தனர்.

நடுக்காட்டை அடைந்ததும் சிவகுட்டன் பிரபாவிடம் ஓர் ஓலைநறுக்கை நீட்டி ''பிரபா பந்துலனுக்கு செய்தியைத் தெரிவிக்க வேண்டும். காட்டிலே ஒற்றையடிப் பாதை வழியாக நிற்றிகலைக்கு நாம் மூவரும் வந்துகொண்டிருக்கிறேம் என்ற செய்தியைப் பந்துலனுக்கு உன் கைப்படவே எழுது''

''ஓலையை யார் கொண்டு போவது?''

''நீ எழுது பிரபா, ஓலையை என் குதிரையே கொண்டு போகும்'' என்முன் சிவகுட்டன்.

பிரபா யோசித்தாள். தன் கட்டாரியினுல் கம்பொன்றை எழுத்தாணியாகச்சீவி நீட்டினுன் சிவகுட்டன். பிரபா செய்தியை எழுதினுள்!

ஓலையைத் தன் குதிரையின் சேணத்தோடு சேர்த்துக் கட்டி வைத்த, சிவகுட்டன் தன் குதிரையிடம் ஏதோ கூறவும், மின்னல் வேகத்திற் குதிரை நிற்றிகலையை நோக்கிப் பறந்தது.

★

பிரபா வீட்டை விட்டு வெளியேறி விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்ட நாகதத்தன் வெறிபிடித்தவன் போலானுன். அதனைக்கண்ட கோபூதி, நையாண்டியாகச் சிரித்துக்கொண்டே சொன்னுர்: ''கூண்டுக்கிளி பறந்து விட்டதா? பருமகரே! போகட்டும், ஆனுல் நீரும் பறந்து விடாமல் இருந்தாற் போதும். நான் சொல்லும் அரசாங்க அறிக்கைகளை எழுதுவதற்கும் அவைகளைக்கையெழுத்திட்டுப்பிரகடனப் படுத்துவதற்குமாக நீர் இந்த அரண்மனையிலேயே சிறையிருக்கவேண்டும்.'' நாகதத்தனுல் எதுவுமே பேச முடியவில்லை.

அன்றுமதியத்தின்போது பறையறைந்து முழக்கப்பட்ட செய்தியில், சதிக்கூட்டத்துக்குத் தலைமை வகிப்பவன்

பந்துலன் என்றும் அவனைப்பிடித்துக் கொடுப்பவருக்கு ஆயிரம்பொன் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

★



## 26 சக்தி சேர்ந்தது!

நிற்றிகல கிராமத்திலே விடப்பட்ட பந்துலன் தனித்திருந்து ஆற அமரச் சிந்தித்தான்.

'சேனன் சேனாதிபதியாக்கப்பட்டதினால் அரசனின் வாழ்வு மிக மிகக் குறுகியதாகவே இருக்கும். திரைமறைவிற் கோபூதி சூத்திரதாரியாக இருந்துகொண்டு எல்லாரையுமே ஆட்டிப் படைப்பான். சேனனையும், குட்டகனையும் மட்டுமல்ல; அரசைக் கைப்பற்றவேண்டுமென்று திட்டமிட்டுக் கொண்ட தன் மாமனாரைக் கூட மட்டந்தட்டுவான். அந்தக் கோபூதி நமது திட்டத்தையும் அறிந்துகொண்டு, நாம் தொழிற்பட முன்னர் அவனே முன்னேறி நம்மைத் தாக்குவான்' என முடிவு கட்டிக்கொண்டான் பந்துலன்.

அம்முடிவைத் தொடர்ந்து, 'அரச படைகள் கிராமத்துள்ளே புகுந்தால் அப்பாவியான கிராம மக்களுக்கு—பெண்கள், கிழவர்கள், குழந்தைகள் என்ற பேதமின்றி ஹிம்சை நடக்கும். அது நடக்கு முன்னர், கிராமத்தில் படைக்கலங்கள் ஏந்தத் தெரிந்தவர்கள் எல்லாரும் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு கிராமத்தை விட்டு வெளியேற வேண்டும். வெளியேறி அநுரதபுரத்திற்குச் செல்லும் பாதையிலுள்ள

காடுகளில் மறைந்திருந்துகொண்டு எதிர்த்துவரும் அரச படைகளைத் தாக்கவேண்டும்' என்று திட்டமிட்டான்.

நன்ருகச் சிந்தித்துத் தன் திட்டம் சரி என்று முழுதாக நம்பிக்கொண்டு தன் திட்டத்தை உடனடியாகச் செயற் படுத்தினன் பந்துலன். முந்நூறுக்கும் மேற்பட்டவர்களைத் திரட்டிக் கொண்டு நிற்றிகலையை விட்டு அரைக் காத தூரம் முன்னேறி அநுரதபுரத்திற்குச் செல்லும் வழியிலே காடுகளில் பதுங்கியிருந்தான். அவனது தோழர்களுக்கு அம்பும் வில்லுமே முக்கிய படைக் கலங்களாக இருந்தன.

தனது திட்டத்தை மற்றைய கிராமங்களில் இருக்கும் தோழர்களுக்கும் அறிவிக்க அவன் தவறவில்லை. அதைத் தன் கைப்படவே எழுதித் தென் பகுதிக் கிராமங்களுக்கெல் லாம் தெரிவித்தான்.

'சேனனின் படைத் தலைமையைப் படையினரில் ஒரு பகுதியினர் ஏற்கவே மாட்டார்கள். மக்களிற் பலரும் விரும்பமாட்டார்கள். ஏன்? மகா விகாரைப் பிக்குகளும் கூட அதனை வன்மையாக எதிர்ப்பார்கள். அநுரதபுரத் திலே படையினரில் ஒரு பகுதியும், மக்களும், மகா சங்கமும் எதிர்க்கும்போது, நாம் சுலபமாக வெற்றியடைந்துவிட லாம்' எனப் பந்துலன் நம்பினன்.

அவன் எதிர்பார்த்தபடியேதான் காரியங்கள் நடக்கும் போலத் தோன்றியது. நண்பகல் கழிந்து ஆறு ஏழு நாழி யானபோது நிற்றிகல கிராமத்தை நோக்கி சுமார் நூற் றைம்பது குதிரை வீரர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

அவர்கள் செல்லும் திக்கையும், அவர்களின் தொகை யையும் உயர்ந்த மரக் கிளை ஒன்றிலிருந்து சரியாக அறிந்து கொண்ட பந்துலன், தன் தோழர்களுக்கு ஆணையிட்டான்.

தோழர்களின் அம்புகளிலிருந்து சரங்கள் பறந்தன!

குதிரைகளிற் சென்றுகொண்டிருந்தவர்களுக்கு எங் கிருந்து அம்புகள் வருகின்றன என்பதே தெரியவில்லை!

ஒரே திகைப்பு!

'ஐயோ' என்ற தீனமான அலறல்!

குதிரைகள் பயங்கரமாகக் கனைத்தன!

அம்புகள் பாய்ந்துவரும் விர்ரென்ற ஓசை!
நாண்களின் ரீங்காரம்!
சில விநாடிகளில் ஒரே ஹதம்!
இரத்த ஆறு ஓடிற்று!

குதிரை வீரர்கள் பலர் தரையில் உருண்டனர். எஞ்சியவர்கள் தப்பினேம் பிழைத்தோம் என்று பின்வாங்கி ஓடினர். அவர்களைத் தொடர்ந்து அம்புகள் பாய்ந்து கொண்டேயிருந்தன.

காட்டினிடையே கேட்ட அவலத்தையும், ஓலத்தையும், அம்புகளின் விர்ரென்ற ஓசையையும், விற்களின் நாணொலியையும் காது கொடுத்துக் கேட்ட சிவகுட்டன், 'ஏதோ நடந்துகொண்டிருக்கிறது பிரபா. நிச்சயமாகப் பந்துலன் இங்கேதான் இருப்பான்'' என்றான் பிரபாவிடம்.

பிரபா, தன் குத்துவாளைக் கையில் பிடித்துக்கொண்டு மரத்தோடு மரமாக ஒன்றி நின்றாள்.

கேட்டுக்கொண்டிருந்த அவலக் குரல்களும், நாணோசையும் அடங்கிய பின்னர், சிவகுட்டன் காட்டுப் புதர்களிடையே, மிருகங்கள் சென்றிருந்த அதர்களிற் பதுங்கிப் பதுங்கி நிற்றிகலையை நோக்கி முன்னேறினான்.

பந்துலனும் அவன் தோழர்களும், வீழ்ந்து கிடந்த அரச சைனியத்தின் ஆயுதங்களையும், நிராதரவாக நின்ற குதிரைகள் சிலவற்றையும் கைப்பற்றிக்கொண்டு மீண்டும் காட்டினுள் புகுந்தார்கள்.

கைப்பற்றப்பட்ட குதிரைகளில் ஒன்று சிவகுட்டனின் குதிரையாக இருந்தமை பந்துலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. நண்பன் சிவகுட்டன்கூட எதிரியாகிவிட்டானா? என்ற எண்ணம் அவனுக்குத் திகிலைக் கொடுத்தது.

ஆனால், முன்னங் காலிலே அம்பு பட்டுவிட்ட காயத்தினால் பரிதாபகரமாக முனகிக்கொண்ட அந்தப் பிராணி, தன் முகவாய்க் கட்டையினால் அடிக்கடி சேணத்தை இடித்திடித்து ஏதோ சொல்ல முயன்றதையும் பந்துலன் அவதானித்துக்கொண்டான்.

அதன் சைகையை உணர்ந்துகொண்ட பந்துலன், அக் குதிரையின் சேணத்தை ஆராய்ந்தான். சேணத்தினுள்ளே ஓர் ஓலை! பிரபா எழுதிய ஓலை! அந்த ஓலையை ஆவலோடு வாசித்த பந்துலன், ஆதூரத்துடன் அக் குதிரையைத் தடவிக் கொடுத்தபோது, அவன் கண்கள் குளமாயின.

அக் குதிரையை மெதுவாக நடத்திக்கொண்டே காட்டு வழியே சென்றவன், சிவகுட்டனைக் கண்டதும் அவனைக் கட்டித் தழுவி, ''நண்பா! முதற் கட்டத்தில் நமக்கு வெற்றி'' என்ருன் உணர்ச்சியோடு.

''எனக்கும் வெற்றிதான்! பிரபாவையும் கொண்டு வந்துவிட்டேன்'' என்ருன் சிவகுட்டன்.

''என்ன... பிரபாவையா...? இந்தப் போர்க்களத்திற்கா?'' என்று திகைப்போடு கேட்ட பந்துலனின் கேள்விகளுக்கு விடையளிக்காமலே, ''பந்துலன் வா என்னோடு'' என்று சொல்லிக்கொண்டே முன்னே நடந்தான்.

பந்துலனும் மந்திர சக்தியிற் கட்டுண்டவன் போல அவன் பின்னே நடந்தான்.

ஓங்கி வளர்ந்த பாலை மரம் ஒன்றிலே சாய்ந்து கொண்டு நின்ற பிரபாவிற்குப் பந்துலனைக் கண்டதும் சிரிக்கவேண்டும் போலத் தோன்றியது. அழவேண்டும் போலவும் இருந்தது.


அவள் அழுதாளா சிரித்தாளா என்பதைப் பந்துலனுற் கூடப் புரிந்துகொள்ள முடியவில்லை. பாய்ந்து சென்று அவளைத் தழுவிக்கொண்டு, ''பிரபா! நீ வருவாயென்பது எனக்குத் தெரியும். நீ வந்த சுப நேரத்திலே வெற்றித் தேவதையும் என்னை அணுகி வந்துவிட்டாள். ஆனல் இந்தப் போர்க்களத்திற்கு ஏன் வந்தாய்? நான் இன்னமும் போராட வேண்டியிருக்கின்றது. என் போராட்டம் முடியும் வரை நீ சிவகுட்டன் வீட்டிலல்லவா இருந்திருக்கவேண்டும். இங்கு ஏன் வந்தாய்?'' என்ருன்.

''எங்கேயும் அடைக்கலப் பொருளாக இருக்க நான் விரும்பவில்லை. எனக்கும் வில்லேந்தத் தெரியும்'' என்ருள் பிரபா அவன் தழுவலிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு.

''பிடிவாதம் பண்ணுதே பிரபா! நீ திரும்பிச் சிவகுட்டன் வீட்டுக்கே போய்விடு. உன்னை நான் பத்திரமாக அனுப்பிவைக்கிறேன்'' என்று கெஞ்சினுன் பந்துலன்.

ஆனுல் பிரபாவைத் திருப்பியனுப்ப அவனுல் முடியவில்லை. வேறு வழியின்றி அவளையும் தன்னணியிற் சேர்த்துக்கொள்ளவேண்டியதாயிற்று. பந்துலன் தன் அணியைத் திரட்டிக்கொண்டு காட்டினூடாகத் தெற்கே சென்றுகொண்டிருக்கையில், பிரபாவும் ஆயுதபாணியாக அவனேடு இணைந்து போய்க்கொண்டிருந்தாள்.

*



## 27 செங்குருதி பாய்ந்தது!

அவுக்கண, தம்புலாகல, மகா அலகமுவ, யாங்கல ஆகிய கிராமப்பகுதிகளில் இருந்தவர்கள் பந்துலனின் ஏற்பாட்டை வரவேற்ருர்கள்.

ஆனுல் தம்புலாகலவிலிருந்து காமினிமட்டும் ''இவனுக்கென்ன பைத்தியமா? அடிக்கடி திட்டத்தை மாற்றிக்கொண்டு புதுப்புதுக்கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டிருக்கிருனே. ஏற்கனவே நான் இதைத்தானே சொன்னேன். முன்னேறிச்சென்று ஆறு மாதங்களுக்கு முன்னரே அனுரதபுரியை அகப்படுத்தியிருக்கலாமே'' என்று அலுத்துக்கொண்டான்.

என்ருலும் சக இளைஞர்கள் ஒன்று திரண்டார்கள். சேனன் தம்பி குட்டகனை பென்னம் பெரிய குதிரைப்படை

யோடு இங்கே வருகிறுன் என்றசெய்தி அவ்விளைஞர்களுக்கு ஆத்திரத்தையும், ஆவேசத்தையும் கொடுத்துக்கொண்டிருந்தது.

ஆனல் காமினி அவர்களுக்கு உற்சாகம் தர முன்வரவில்லை. அவன் சொன்னுன்: ''நம் எதிரிகளிடம் நம்மிடம் இல்லாத குதிரைப்படை இருக்கிறது. வாயுவேகத்திற் செல்லும் சக்திவாய்ந்த அக்குதிரைப்படைகளை வைத்துக் கொண்டு நம்மிலும் விரைவாகக் கிராமம் கிராமமாகச் சென்று மக்களைக் கலங்க அடிப்பார்கள். எதற்கும் நாம் மாகமத்திலிருந்து நமக்கு உதவி வரும்வரையிலும் பொறுத்திருப்பதே நல்லது.''

அவனது போக்கினை விளங்கிக்கொள்ள நண்பர்களால் முடியவில்லை. தேவனும்பிரிய தீசனின் தம்பியின் வழிவந்த மாகமத்து அரச பரம்பரையை அவன் ஆட்சியிலிருத்த முயல்கின்றுனு? அப்படியாயின் இதுவரை பந்துலன் போதித்த தன் நிறைவு பெற்ற கிராமங்களில் அவனுக்கு நம்பிக்கையே இல்லையா? என்று அவர்கள் சந்தேகித்தனர்.

இதற்குள் குட்டகன் தலைமையிற் பந்துலனைப்பிடிப்பதற்காக வந்த குதிரைப்படை, பல்வேறு கிராமங்களிற் கிராமமக்களாற் திசை திருப்பி அலைக்கழிக்கப்பட்டது.

கடுமையான எதிர்ப்பை அப்படையினராற் சந்திக்க முடியாவிட்டாலும், 'பந்துலன் பிடிக்கப்பட்டு விட்டான்' என்ற செய்தியை அப்படையினர் திட்டமிட்டுப்பரப்புவதில் வெற்றி கண்டனர். அச்செய்தி கிராமமக்களிடையே காட்டுத்தீயாகப்பரவி அவர்களிடமிருந்த உற்சாகத்தை குலைத்து மனவுறுதியை இழக்கச்செய்து கொண்டிருந்தது.

அச்செய்தியைக் கேள்வீப்பட்ட காமினி தன் தோழர்களைக்கைவிட்டு விட்டு மாகமத்துக்கு ஓடிவிட்டான்.

★

கிராம மக்களின் குழப்பத்தினிடையேயும், பயத்தினிடையிலும் மேற்கே தன்னை மறைத்துக்கொண்டு இருளுக்கு வழிவிட்டான் பகலவன். ராஜரட்டை முழுவதையுமே அந்தகார இருள் இழுத்து மூடிக்கொண்டது.

ஆனால் இருட்டிச்சில நாழிகை சென்ற பின்னர் பந்துலன் அலகமுவவிற்கு வந்துசேர்ந்த செய்தியைக்கேட்டு அவ்வூரும் அதன் சுற்றுப்புறங்களும் மீண்டும் உயிர்த்துடிப்புப் பெற்றன. அவனது வெற்றிச் செய்தியைக்கேட்டு கிராமமக்கள் புதுத்தெம்பு பெற்றனர். இரவோடிரவாகக் கிடைக்கக் கூடிய படைக்கலங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு இளைஞர்களும் ஏன் முதியவர்களும் கூட அலகமுவவிற்கு வந்து சேர்ந்தார்கள்! எதையும் செய்ய அவர்கள் ஆயத்த மாக இருந்தார்கள்.

ஆனால் அலகமுவவிற்குப் பின்னாலுள்ள கிராமங்களிற் குட்டகனின் படைகள் இருப்பது பந்துலனுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது! தான் முன்னேறிச்சென்று அப்படை யினரைத் தாக்குவதா? என்று அவன் யோசித்தான்!

ஆனாலும் 'தான் தான் அனுரதபுரத்திற்கு முன்னேறிச் செல்வதை அவர்கள் கேள்விப்பட்டால், அவர்கள் தன்னைத் தொடர்ந்து வருவார்கள். அதனாற் கிராமமக்களின் தொல்லை நீங்கும். ஆகவே அனுரதபுரத்தை நோக்கி முன் னேறுவது தான் சரி' என்று திட்டமிட்டுக் கொண்டுத் தன் அணியைத்திரட்டிக்கொண்டு அனுரதபுரத்தை நோக்கிச் சென்றான்.

எத்தனை தடுத்தும் பிரபாவும் அவனோடுதான் சென் றாள்!

ஒரு காத தூரம் நடந்ததும் நடுநிசியானபோது, பந்துலன் தன் அணியினரைக்காடுகளிற் பதுக்கிவைத்தான். பதுக்கி வைத்தவன் ''பாதையின் வடக்கிலிருந்தோ, தெற் கிலிருந்தோ எந்நேரமும் எதிரிப்படைகள் வரலாம். வரும் போதுநான் சமிக்ஞை தருவேன், ஆயத்தமாக இருங்கள்'' என்று அவர்களுக்கு கட்டளையிட்டான்.

வீரர்கள் பதுங்கியிருந்தார்கள். பந்துலனின் பக்கத்திற் பிரபாவும் ஓர் மரத்தடியின் வேரில் குந்தியவண்ணம் காத் துக்கொண்டிருந்தாள்.

அவளது சிரமத்தைக் கண்ட பந்துலன் சொன்னான்: ''நான் சொன்னபடியே நீ கேட்டிருக்கலாம் பிரபா.''

''இது போர்க்களம். புலம்பவே கூடாது.''

''போர்க்களத்தைக் காதல் நந்தவனமாகக்கருதவும் கூடாது.''

''பெண்கள் காதலிக்கவும் காதலிக்கப்படவும் மட்டுமே பிறந்தவர்களுமல்ல''

இந்த இக்கட்டான நிலையிலுமே இருவரும் வாய் விட்டுச் சிரித்தார்கள். அவர்களின் சிரிப்பொலி காலைப்புட்களின் கானத்தோடு சேர்ந்து காட்டை நிறைத்தது.

விடிந்தது!

அனுரதபுரத்திலிருந்து எதிரிப்படைகள் வருகின்றன என்பதை அறிவிக்கும் முகமாக வட அந்தத்திலிருந்தவன் தன் முரசத்தை இருமுறை அதிர வைத்தான்.

தூரத்தே புழுதிப்படலம் தோன்றியது.

சந்தேகமேயில்லை! குதிரைப்படைகளே தான்!

சமீபமாக வரட்டும் எனக்காத்திருந்த பந்துலன், சமிக்ஞை தெரிவிப்பதற்காக வில்லை வளைத்து நாணின் அருகே விரலை வைத்துக்கொண்டிருந்தான்!

அவன் படையணியினரும் ஆயத்தமாக இருந்தார்கள்

ஆனால் வட அந்தத்திலுள்ளவன் முந்திவிட்டான். அவன் வில்லிலிருந்து விடுபட்ட அம்பு எதிரிப்படையைத் தரிக்க வைத்தது!

கணந்தான்!

அதற்குட் பாதையிலே தரித்து நின்ற அரசபடைகளின் அணியிலிருந்து சோனு வாரியாகப் பறந்த அம்புகள் குருட்டாம்போக்கிற்காடுகளை ஊடுருவிச்சென்றுகொண்டிருந்தன

வேறு வழியே இல்லை என்பதைக் கணத்திற் புரிந்து கொண்ட பந்துலன், ''குதிரைகளுக்கு இலக்குவையுங்கள்'' என்று கட்டளையிட்டான்.

காட்டுக்குள்ளிருந்த அவனது படையினரும் அம்புகளைச் செலுத்தினர்.

குதிரைகளின் கனைப்பு –பிளிறல்.

குதிரைகளை விட்டிறங்கிய சேனனின் படையினர் காடுகளிடையே அம்புகளைச் செலுத்திக் கொண்டேயிருந்தனர்.

அம்பு பட்ட குதிரைகள் தலைதெறிக்க அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தன.

குதிரைப்படையணி சிதறியதைக் கண்ட பந்துலன், ஒளிந்திருந்து தாக்காமல் வெளியேறித்தாக்க நினைத்தான்.

''காட்டுக்கு வெளியே செல்லாதீர்கள்'' என்று அவன் கைகளைப்பிடித்துக்கொண்டு பதறினாள் பிரபா. அவள் பிடித்த பந்துலனின் முன்னங்கையிலே அம்பொன்று இலேசாகச்சிராய்த்துக் கொண்டு சென்றதால் இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அவ் இரத்தம் பிரபாவின் கைகளிலும் படிந்தது.

''விடு கையை'' என்று உதறிவிட்ட பந்துலன், 'முன்னேறுங்கள்' என்று கோஷித்துக்கொண்டே வெளியே வரத் துடித்தான்.

எங்கும் அம்புகள் பறக்கும் விர்ர்... விற்களின் ரீங்காரம்... தூரத்தே குதிரைகளின் கனைப்பு... ஐயோ... அம்மா என்ற தீனக் குரல்கள்.

''உங்களோடு நானும் வருகிறேன்'' என்ற பெண்மைக்குரலின் ஓங்காரம்.

''இங்கே தான் இருக்கிறாள்'' என்ற கர்ணகடூரமான ஓர் குரல் அரச படைகளினிடையே இருந்து கேட்கிறது.

பெண்குரல் வந்த திக்கை நோக்கி நூற்றுக்கணக்கான அம்புகள் பறந்தன.

''பந்துல'' என்ற தீனக்குரல் காற்றிலே மிதக்கிறது.

''பிரபா'' என்ற ஆண் குரலும் அக்குரலோடு இணைகின்றது.

சுதந்திரமான கிராமங்களைக் கனவு கண்ட இளைஞர்களின் செங்குருதி இலங்கா துவீபத்தைச் செந்நிறமாக்கிற்று!

☆

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புகள் மாதா மாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவறுமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் "குடும்ப நூல் நிலையத்தை" ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கினுல், ஏழாவது புத்தகம் இனமாக அனுப்பி வைக்கப்படும். இப்பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் இனமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

076038

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு
சுன்னாகம்
ERLALAI WEST
CHUNNAKAM

ஏழாலை முன்னேற்ற மன்றம்
ERLALAI MUNNETRA MANRAM
ஏழாலை மேற்கு ERLALAI WEST
சுன்னாகம் CHUNNAKAM

ஈழத்தின் அரசியல் வரலாற்றில் புத்தசமயம் பரவிய காலப்பகுதியை இந் நாவல் கண்முன் கொண்டுவருகின்றது. வெண்சாந்து பூசிய தகோபாக்கள், விகாரங்கள், நாட்டின் நாலாபுறமும் கம்பீரமாக எழுகின்றன. மெல்லென வீசும் காற்றில் பௌத்த சந்நியாசிகளின் 'பிரித்' ஒலி தவழ்ந்து வருகின்றது. ஆனால், மணிமுடி தாங்கும் மன்னனின் மனதில் அமைதியில்லை. வஞ்சகமும், சூழ்ச்சியும் அரண்மனையை முற்றுகையிட்டபோது, போர்க்களத்திலே புரட்சி வீரர்களின் சிவந்த இரத்தம் பாய்ந்து வானத்தைச் செம்மையாக்குகின்றது!